D
V211,31'P03
P02.33.1
225508

31-10-2002

உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் — xiii - xvii

Governor and Council of Ministers — xix - xxii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் — xxiii - xxvi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) — xxviii - xxxvii

**வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (எட்டு மற்றும் ஒன்பதாம் பட்டியல்கள்) — 1 - 71

**கவன ஈர்ப்பு—**

விதி 55—இன்கீழ் அனுமதிக்கப்பெற்று, அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்புகள் (1 முதல் 4 வரை) — 71 - 78

**தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 78, 79 - 80

(ஆ) சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக ஊர்வலத்தின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணை கமிஷன் அறிக்கை — 79, 97, 98

பக்க


**3. தகவல் கோரல்—தொடர்ச்சி**

(இ) பேரவைக் கூட்டத்தை மாலையில் நடத்தக் கோருதல் — 209, 2

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு — 78-79, 80-

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 80 - 8

திரு. மு.பெ. சாமிநாதன் — 8

திரு. ஜி.கே. மணி — 8

திரு. கே.சி. கருணாகரன் — 85 - 88, 9

திரு. வை. சிவபுண்ணியம் — 88 - 8

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் — 89 -

**5. அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

(இ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2002 — 97, 98 -




225508 ... 008

பக்கங்கள்


**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி**

(ஆ) தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 99 - 100

**7. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 99

(ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 252

(இ) ஓய்வுபெறும் சட்டமன்றப் பேரவை அலுவலர்களுக்குப் பாராட்டு — 346

**8. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதி 33—ஐத் தளர்த்தல் — 100

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132—ஐத் தளர்த்தல் — 317

(இ) தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழுவின் காலவரையினை நீட்டித்தல் — 345 - 346

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 346 - 347

பக்கங்கள்

**9. விதி 110-ன்கீழ் அறிக்கை-**

கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் குறித்து மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் அறிக்கை — 101 - 102

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-**

(அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை சட்டமுன்வடிவு, 2002 — 102 - 208

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 103, 111-112, 113 - 114, 115, 121, 124, 126, 127, 129, 148-149, 157, 171,183, 184, 192, 193, 194

திரு. ஜி.கே. மணி — 103, 138 - 141, 208

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 103, 114, 125-127, 128-129, 134, 135, 136, 137, 142-145, 146, 151, 158, 159, 162, 163, 165, 169, 170, 191, 193, 194, 195, 208

* மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 104, 112, 113, 114, 123, 124, 127, 132, 133-134, 139, 140, 145, 147-148, 151, 164, 184 -190

திரு. இ. புகழேந்தி — 105 - 110, 145, 156, 159

* திரு. அ. அன்வர் ராஜா — 110-111, 115- 121, 145



பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி**

திரு. கு. ஜெயக்குமார் — 121-122, 127-129, 180

*செல்வி க. பாலபாரதி — 129 - 137

திரு. ஜி. பழனிசாமி — 130, 141-142, 145 - 147, 149-153, 157

டாக்டர் தே. குமாரதாஸ் — 153-163, 172-175

திரு. எச். ராஜா — 166 - 168, 175 -182

(ஆ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 — 209, 210 - 211, 212

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 209, 212

(இ) தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற (திருத்தச்) சட்டமுன்டிவவு, 2002 — 213 - 222

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 213, 215, 220, 221

டாக்டர் க. பொன்முடி — 213 - 215

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 214

திரு. சி. ஞானசேகரன் — 215 - 216

திரு. ஐ. கணேசன் — 216 - 219

பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**–தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒளிவுமறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 222 - 224

*மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 222, 223

(உ) தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 — 224 - 236

* மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 224, 229-235, 236

திரு. சி. ஞானசேகரன் — 224 - 225

திரு. என். நன்மாறன் — 225

திரு. வை. சிவபுண்ணியம் — 226

திரு. ஜி.கே. மணி — 226-227, 231-232

திரு. இ. புகழேந்தி — 228

(ஊ) சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 237 - 238

*மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 237, 238

(எ) திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 239 - 240

*மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை — 239, 240



பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**–தொடர்ச்சி

(ஏ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002 — 241 - 252

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 241, 249-250, 252

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 241 - 242

திரு. இ. புகழேந்தி — 242-243, 251

திரு. ஜி.கே. மணி — 243 - 244

திரு. சி. ஞானசேகரன் — 244 - 248

திரு. வை. சிவபுண்ணியம் — 248 - 249

(ஐ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 253 - 262

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி — 253, 259 - 261, 262

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 253-255, 260

திரு. சி. ஞானசேகரன் — 256 - 257

திரு. கோ. இரவிராஜ் — 257

திரு. வை. சிவபுண்ணியம் — 258 - 259

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் — 259

பக்கங்கள்

10. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**–தொடர்ச்சி


| | |
|---|---|
| (ஒ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 | 262 - 278 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 263 |
| திரு. ஜி.கே. மணி | 263, 272 |
| *மாண்புமிகு திரு. ப. தனபால் | 263, 272-276, 278 |
| திரு. கு. பிச்சாண்டி | 264-265, 276 |
| திருமதி எஸ். மகேஸ்வரி | 265 - 266 |
| திரு. தி. வேல் முருகன் | 266 - 268 |
| திரு. கே.சி. கருணாகரன் | 268 - 269 |
| திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 269 - 270 |
| *திரு. ப. அரசன் | 270 - 272 |
| (ஓ) தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 278 - 280 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 279, 280 |
| (ஔ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 281 - 282 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 281, 282 |




பக்கங்கள்

10. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**–தொடர்ச்சி


| | |
|---|---|
| (அஅ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 283 - 288 |
| திரு. ஜி.கே. மணி | 283 |
| மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி | 283, 286, 288 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 284 - 285 |
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 285 - 286 |
| (ஆஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 288 - 308 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 289, 304 |
| திரு. ஜி.கே. மணி | 289 - 293 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 290, 302-306, 307, 308 |
| திரு. வி.கே. லட்சுமணன் | 293 - 296 |
| திரு. கே.சி. கருணாகரன் | 296 - 298 |
| திரு. கு. பிச்சாண்டி | 298 - 299 |
| திரு. ஜி. பழனிசாமி | 299 - 301, 306 |
| திரு. கு. ஜெயக்குமார் | 301 - 302 |

பக்கங்கள்

10. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(இஇ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 308 - 310

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 309, 310

(ஈஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 310 - 312

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 311, 312

(உஉ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002 — 312 - 314

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 313, 314

(ஊஊ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 314 - 316

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 315, 316

(எஎ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2002 — 318 - 339

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 318-319, 320 - 326

திரு. ஜி.கே. மணி — 327 - 328

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் — 319, 325, 336-337, 338 - 339



பக்கங்கள்

10. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் — 324, 331

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 326, 332, 335

திரு. இ. புகழேந்தி — 328 - 332, 331 - 333

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 333 - 335

(ஏஏ) தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 339 - 345

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் — 339, 343, 344

திரு. ஜி.கே. மணி — 340 - 341

திரு. மு.பெ. சாமிநாதன் — 341

திரு. சி. ஞானசேகரன் — 342

திரு. கே.சி. கருணாகரன் — 342

திரு. வை. சிவபுண்ணியம் — 343

11. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 348 - 354

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**<br>பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**<br>பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள். |
| 3. **நிதி அமைச்சர்** | .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**<br>நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. **கல்வி அமைச்சர்** | .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**<br>கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர். |

5. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

9. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

10. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



11. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

12. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

13. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல், குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

15. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. உள்ளாட்சி,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

கால்நடை பராமரிப்பு.

19. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்:**

பிற்படுத்தப்பட்டோர்,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

20. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வ.து. நடராசன்:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

— — —

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works & Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| 3. **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies |
| 4. **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| 5. **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |

| | |
|---|---|
| **6. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |
| **7. Minister for Health** | .. **The Hon. Thiru S. Semmalai:** Health: Medical Education and Family Welfare. |
| **8. Minister for Co-operation, Food, Civil Supplies & Consumer Protection** | .. **The Hon. Thiru P. Dhanabal:** Co-operation. Food. Civil Supplies. Price Control and Statistics. |
| **9. Minister for Revenue** | .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Revenue. District Revenue Establishment. Deputy Collectors. Registration. Stamp Act. Stationery and Printing. Government Press. Bhoodhan & Gramdhan and Passports. |
| **10. Minister for Agriculture** | .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives. Horticulture. Sugarcane Cess and Sugarcane Development. |
| **11. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare. Nutritious Noon Meal. Welfare of the Disabled. Beggar Homes. Orphanages and Correctional Administration. |
| **12. Minister for Adi-Dravidar Welfare** | .. **The Hon. Thiru S. Karuppasamy:** Adi-Dravidar Welfare. Hill Tribes. Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | |
|---|---|
| **13. Minister for Transport** | .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport. Nationalised Transport. Motor Vehicles Act and Ports. |
| **14. Minister for Electricity, Industries and Rural Industries** | .. **The Hon. Thiru Nainar Nagendran:** Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals, Electronics, Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi and Village Industries Board. |
| **15. Minister for Commercial Taxes** | .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| **16. Minister for Forests and Environment** | .. **The Hon. Thiru P. Mohan:** Forests & Environment and Pollution Control. |
| **17. Minister for Local Administration, Housing & Urban Development** | .. **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority. |
| **18. Minister for Animal Husbandry** | .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Animal Husbandry. |

| | | |
|---|---|---|
| 19. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru K. Sudarsanam:**<br>Backward Classes, Most Backward Classes and De-notified Communities. |
| 20. **Minister for Labour** | .. | **The Hon. Thiru Va. Thu. Natarajan:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment. Census and Wakfs. |
| 21. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S.Ramachandran:**<br>Milk and Dairy Development. |
| 22. **Minister for Information and Publicity** | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control |
| 23. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| 24. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| 25. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. அ. பாப்பா சுந்தரம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. லா. சந்தானம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

### முதன்மைச் செயலாளர்

*திரு. செ.சு. ஜானகிராமன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 25—10—2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |

- - -



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ... சாத்தூர்
32. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை
33. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. - அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
49. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி. சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120 தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. - காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
134. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி



136. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
137. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி - போளூர்
141. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி. க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
180. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை



181. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
182. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
183. மில்லர், திரு. அ. - கூடலூர்
184. முரளிதரன், திரு. கே.வி. - தளி
185. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
186. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
187. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
189. மோகன், திரு. ப. - சின்னசேலம்
190. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
191. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
192. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
193. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
194. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
195. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜ *, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

| | | |
|---|---|---|
| 205. | லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 206. | லியாவுதீன் சேட், திரு. இ.எ. | அரவக்குறிச்சி |
| 207. | வடிவேல், திரு. ஆர். | வாணியம்பாடி |
| 208. | வளர்மதி, திருமதி பா. | ஆலந்தூர் |
| 209. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | மதுரை மேற்கு |
| 210. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 211. | வாசுதேவன், திரு. பெ. | மதுராந்தகம் |
| 212. | விசுவநாதன், திரு. இரா. | நத்தம் |
| 213. | வில்வநாதன், திரு. இரா. | சோளிங்கர் |
| 214. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | பூங்கா நகர் |
| 215. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | புதுக்கோட்டை |
| 216. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | பனமரத்துப்பட்டி |
| 217. | வீரபாண்டியன், திரு. ஜெக. | மயிலாடுதுறை |
| 218. | வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 219. | வெங்கடாஜலம், திரு. செ. | சேலம்-I |
| 220. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | வேதாரண்யம் |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | பல்லடம் |
| 222. | வேலு, திரு. எ.வ. | தண்டராம்பட்டு |
| 223. | வேல் முருகன், திரு. தி. | பண்ருட்டி |
| 224. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | தாம்பரம் |
| 225. | வைத்திலிங்கம், திரு. ஆர். | ஒரத்தநாடு |
| 226. | ஜீவானந்தம், திரு. இரா. | நாகப்பட்டினம் |



| | | |
|---|---|---|
| 227. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | ஆரணி |
| 228. | ஜெயக்குமார், திரு. கு. | நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயக்குமார், திரு. டி. | இராயபுரம் |
| 230. | ஜெயராமன், திரு. வி. | பொள்ளாச்சி |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | ஆயிரம் விளக்கு |
| 233. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | மதுரை மத்தி |
| 234. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 15, சித்ரபானு – திருவள்ளுவர் ஆண்டு – 2033

## 2002 அக்டோபர் 31, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அறவிழுக்கா தல்லவை நீக்கி மறவிழுக்கா
மானம் உடைய தரசு"

அறநெறி தவறாமலும் குற்றம் ஏதும் இழைக்காமலும் வீரத்துடனும், மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்***

**(எட்டாம் பட்டியல்)**

1–

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா 25–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், சடைச்சிபாளையம் சாலை 0/0 – 2/2 மிகவும் பழுதடைந்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் பழுதுபார்த்து சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

---

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையானது இதர மாவட்டச் சாலையாகும். சடைச்சிபாளையம் சாலை கி.மீ. 0/0 – 2/2, 1993–94 ஆம் ஆண்டில் கிராமச் சாலைகள் திட்டத்தினால் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் இச்சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரிசெய்து மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.11.50 இலட்சம் தேவைப்படும். மேற்கூறிய சாலையை, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப சரிசெய்து, மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்சமயம் இச்சாலையில் ஏற்பட்டுள்ள குழி பள்ளங்களுக்கு தார் நொடிகள் போட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது.

**2—**

## விடு கட்ட நிலம்

**வினா 9872—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகரத்தில் பொதுப் பணித் துறையில் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற 17 நபர்கள் வீடுகள் இல்லாமல் உள்ளதால், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலத்தை வீடு கட்டிக்கொள்வதற்கு நிலம் ஒதுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பொதுப் பணித் துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற 20 அரசு ஊழியர்களுக்கு, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான மேட்டூர் நகரிய பிளாக் எண் 36, நகர் புல எண் 2—ல் வீடு கட்டிக்கொள்வதற்கான கருத்துரு திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரால் அரசுக்கு அனுப்பப் பட்டது. இது ஓர் உகந்த கருத்துரு அல்ல என்று அரசு நிராகரித்து விட்டது.



**3—**

## பாசனத்திற்குத் தண்ணீர்

**வினா 16943—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் இடதுகரை மற்றும் வலதுகரை வாய்க்கால்கள், சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நீர் நிறுத்தத்தினால் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெற முடியாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வாய்க்காலில் நீர்விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் இடதுகரை மற்றும் வலதுகரை வாய்க்கால்கள் மூலம் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள பதிவுபெற்ற ஆயக்கட்டு நிலங்களின் பாசனத்திற்காக 1–8–2001 முதல் 15–1–2002 வரை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதுபோன்று பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கும் செயல் ஒவ்வோர் ஆண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**4—**

## நவீன கலையரங்கம்

**வினா 17222—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மத்திய சிறை அமைந்துள்ள நிலப்பரப்பில் காலியாக உள்ள பகுதியில் தன்னார்வ நிறுவனம் ஒரு நவீன கலையரங்கம் கட்டிக்கொள்ள அரசு அனுமதியளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பாதுகாப்பை முன்னிட்டும், சிறை காலி நிலங்களைப் பிற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்வதற்கு அரசின் தடை ஆணையுள்ளதாலும், கோயம்புத்தூர் மத்திய சிறை அமைந்துள்ள நிலப்பரப்பில் காலியாகவுள்ள பகுதியில் தன்னார்வ நிறுவனம் ஒரு நவீன கலையரங்கம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்க இயலாது.

5—

## அரசு அலுவலகங்களுக்குக் கட்டடம்

**வினா 18522—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இயங்கி வந்த வகுப்பறைக் கட்டடங்கள் காலியாக உள்ளதால் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களை அங்கு இயக்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

ஒட்டப்பிடாரம் அரசு மேல்நிலைப் பள்ளி இரண்டு இடங்களில் செயல்பட்டு வந்தது. கடந்த கல்வியாண்டில் நகருக்குள் இருக்கும் வகுப்புகள் அனைத்தும் காலிசெய்யப்பட்டு அவை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பள்ளிக்கு மாற்றப்பட்டதால், பள்ளிக் கட்டடங்கள் கடந்த கல்வி ஆண்டிலிருந்து காலியாக உள்ளன. மேலும் கூரை வேய்ந்த இக்கட்டட கூரை பல இடங்களில் ஒழுகுவதுடன் பனை விட்டங்கள் சேதமடைந்துள்ளன. பள்ளியின் தரைமட்டமும் தெரு மட்டத்தைவிட *1* அடி தாழ்ந்து பள்ளமாக உள்ளது. தரை மட்டத்தை உயர்த்தி கூரைகள் பழுதுபார்க்க ரூ.10 இலட்சம் ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி அரசின் நிதி நிலைமைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே இக்கட்டடத்தில் அரசு அலுவலகங்கள் இயங்கிட தற்போது அனுமதிக்க இயலாது.





6—

## பள்ளிக் கட்டடங்கள் செப்பனிடல்

**வினா 1357—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பழைய கட்டடங்கள் பழுதுபட்டுள்ளதை அரசு செப்பனிட்டுத்தர ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பழைய கட்டடங்கள் செப்பனிடும் பணிக்கு ரூ.*1,40,000*/– மதிப்பில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு *31–3–2002*–இல் முடிக்கப்பட்டது. இப்பணிக்கான செலவின் மதிப்பு ரூ.*1,32,919*/– ஆகும்.

7—

## தலைமை ஆசிரியர் அறை, அலுவலகம் புதுப்பித்தல்

**வினா 3397—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் *2*—வது தொகுதி, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் அறை மற்றும் அலுவலகம் மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதுப்பிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் *2*—வது தொகுதியில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள தலைமை ஆசிரியர் அறை மற்றும் அலுவலகக் கட்டடம் பெற்றோர்–ஆசிரியர் கழகத்தால் *2000–2001* ஆம் கல்வி ஆண்டில் சுமார் ரூ.*15,000*/– செலவில் பழுதுபார்க்கப்பட்டது.

[2002 அக்டோபர் 31

8—

## தனி நீதிமன்றங்கள்

**வினா 19645—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் தடா சட்டத்தின்கீழ் இயங்கும் தனி நீதிமன்றங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) சேலத்தில் இத்தகைய நீதிமன்றம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையில் உள்ள முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் தடா சட்டத்தின்கீழ் இயங்கும் தனி நீதிமன்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

9—

## மருந்துப் பொருட்கள் கிடங்கு

**வினா 23824—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் சேலம் மற்றும் 4 இடங்களில் உலக வங்கி நிதி உதவியுடன் கட்டப்படும் மருந்துப் பொருட்கள் சேமித்து வைக்கப்படும் கிடங்கு கட்டும் பணி முடிக்கப் பட்டுள்ளதா?*

*(ஆ) இல்லையெனில், எப்போது இந்தக் கிடங்கு கட்டி முடிக்கப்படும்?*



2002 அக்டோபர் 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மைய அரசு மூலம் பெறப்பட்ட உலக வங்கி நிதியுதவி ரூ.6.43 கோடியைக் கொண்டு, சேலம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் மருந்துப் பொருட்கள் சேமித்து வைக்கப்படும் கிடங்குகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் 2001–2002 இல் கட்டிமுடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

10—

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 11335—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சி, தாசிப்பனூர் நியாய விலைக் கடையிலிருந்து தகரகுப்பத்திற்குக் கூடுதல் பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்படுத்தித் தர இவ்வரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், தாசிப்பனூர் நியாய விலைக் கடையில் 614 குடும்ப அட்டைகளிலிருந்து 224 குடும்ப அட்டைகளைப் பிரித்து தகரகுப்பம் பகுதியில் பகுதி நேரக் கடை திறப்பதற்கு 4–6–2002 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

11—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா 16909—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி. கந்திலி ஒன்றியம், பெரியகரம் கிராமத்திற்குட்பட்ட புதூர் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி. கந்திலி ஒன்றியம், பெரியகரம் நியாய விலைக் கடையிலிருந்து 147 குடும்ப அட்டைகளைப் பிரித்து புதூரில் ஒரு பகுதி நேரக் கடை செயல்பட்டு வருகிறது. ஊர் மக்கள் இலவச கட்டட வசதி செய்து கொடுத்தால் மட்டுமே பகுதி நேரக் கடை அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. அவ்வாறே புதூர் பகுதி நேரக் கடை ஊர் மக்களால் கட்டப்பட்ட பொதுக் கட்டடத்தில்தான் செயல்படுகிறது. எனவே அரசு நிதி உதவி பெறும் திட்டங்களின்கீழ் இந்தப் பகுதி நேரக் கடைக்கு கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**12—**

## பயிர்க் கடன்

**வினா 17059—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 2000–2001ஆம் ஆண்டு விவசாயக் கடன் அட்டை திட்டத்தின்கீழ் எவ்வளவு நபர்களுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் சுற்று வட்டாரத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துப் பயிர்க் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. தவிரவும் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச்



சங்கத்திலும் மற்றும் அதன் கொங்கணாபுரம் கிளையிலும் விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டும் விவசாயிகளுக்குத் தேவையான நகைக் கடன் வழங்கியும் செயல்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகப் பயிர்க் கடன் வழங்கப்படுவதால் விற்பனைச் சங்கத்தில் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்கு வழிவகை இல்லை.

**13—**

## நியாய விலைக் குடிமைப்பொருள் கட்டடம்

**வினா 19603—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வடுகப்பட்டி பஞ்சாயத்து, புத்தூர் பகுதிக்கு நியாய விலைக் குடிமைப்பொருள் கட்டடம் (Public Distribution System Building) கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சி, புத்தூர் நியாய விலைக் கடை தற்போது ஊர்ச்சாவடி இலவசக் கட்டடத்தில் இயக்கப்படுவதால், தனியே கட்டடம் கட்டும் அவசியம் ஏற்படவில்லை.

**14—**

## நியாய விலைக் கடை திறத்தல்

**வினா 20196—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியில் உள்ள குப்பதாசன் காட்டுவளவில் ஒரு நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை நடத்திவரும் மந்தையன் வளைவு நியாய விலைக் கடையிலிருந்து 312 குடும்ப அட்டைகளைப் பிரித்து குப்பதாசன் காட்டுவளவில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை 9–9–1998 முதல் செயல்பட்டு வருகிறது.

**15—**

## கொதுவைக் கடன்

**வினா 21265—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கிளை கொங்கணாபுரத்தில் அங்கத்தினர்களுக்கு பருத்தி, பஞ்சு, வத்தல், மல்லி போன்ற விவசாய விளை பொருட்களின்பேரில் 2001ஆம் ஆண்டில் கொதுவைக் கடன் வழங்கப்பட்டதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கிளையில் 2001ஆம் ஆண்டில் 903 அங்கத்தினர்களுக்கு ரூ.9,00,000/– அளவில் பருத்தியின்மீது கொதுவைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**16—**

## நியாய விலைக் கடை கட்டடம்

**வினா 22632—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், பழையனூர் கிராமத்தில் ஒரு நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியம், விரியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பழையனூர் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் 579 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு பொது நிதியில் தற்போது நிதி இல்லை. சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டால் கட்டடம் கட்ட இயலும்.

**17—**

## பொருட்கள் விநியோகம்

**வினா 26481—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கி வரும் நியாய விலைக் கடைகளில் எந்தெந்தப் பொருட்கள் எந்தெந்த நாட்களில் விநியோகம் செய்யப்படும் என்பதை அட்டவணைப்படுத்தி நெறிப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இயங்கிவரும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அனைத்து வேலை நாட்களிலும் அனைத்து

இன்றியமையாப் பொருட்களும் பொது மக்களுக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றி வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட பொருள், குறிப்பிட்ட சில நாட்களில் மட்டுமே, அதாவது சுழற்சி முறையில் விநியோகம் செய்வது பொது நலனுக்கு உகந்ததல்ல.

**18–**

## தொழில்நுட்ப இயந்திரங்கள்

**வினா 11434–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 2000–2001ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரியில் உருவாக்கப்படும் தொழில்நுட்ப இயந்திரங்களை வெளி மாநிலங்களுக்கு அரசு அனுப்பியுள்ளதா?

(ஆ) அந்தக் கருவிகள் தனியாருக்கு விற்கப்படுகின்றனவா?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரியில் 2000–2001ஆம் நிதியாண்டில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பக் கருவிகள்/பண்ணை இயந்திரவியல் கருவிகள், தேவையான அளவில் வெளி மாநிலங்களுக்கும் (ஆந்திரா, கேரளம் & கர்நாடகம்), விவசாயிகளுக்கும் மற்றும் தனியாருக்கும் விற்கப்பட்டுள்ளன. 17 வகையான கருவிகள் 125 எண்ணிக்கையிலும், 4 வகையான பண்ணை இயந்திரவியல் கருவிகள் 9 எண்ணிக்கையிலும், ஆக மொத்தம் ரூ.6,88,926/– மதிப்புள்ள கருவிகள் விற்கப்பட்டுள்ளன.

**19–**

## தோட்டங்கள் அமைத்தல்

**வினா 14415–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–



(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் தரிசு நிலங்களில் பசுமைப் பகுதி தோட்டங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 38, வேளாண்மை, நாள் 27–11–01இல் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை 10 மாவட்டங்களில் 2001–2002இல் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் திருநெல்வேலி மாவட்டமும் சேர்ந்ததாகும். மானூர், பாளையங்கோட்டை, மேலநீலிதநல்லூர், ஆலங்குளம் வட்டாரங்களில் 8000 எக்டேரில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், முதல் கட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே வரும் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள பாப்பாக்குடி ஒன்றியம் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், முந்திரி அபிவிருத்தித் திட்டம், வெப்ப பிராந்திய பழ அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்கள் இப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு பழத் தோட்டங்களை அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**20–**

## தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்

**வினா 14426–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் தோட்டக் கலை பயிர் அறுவடைக்குப்பின் கையாளும் தொழில்நுட்பங்களை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலை பயிர் அறுவடைக்குப்பின் கையாள வேண்டிய தொழில்நுட்பங்கள் அவ்வப்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவியுடன் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் 50 பேர் கொண்ட விவசாயிகள் குழு இத்தொழில்நுட்பங்களைக் கையாளும் விவசாயிகளின் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அந்நுட்பங்கள் நேரிடையாக விளக்கப்படுகிறது. மேலும் தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மூலம் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக விவசாயிகள் சங்கங்களுக்கு குளிர்சாதன வசதி, சேமிப்பு கலங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களுக்கான மானியம் வழங்கப்படுகிறது.

**21—**

## விவசாயிகளுக்கு உதவி

**வினா 17107—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தென்னை உற்பத்தித் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி உட்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தென்னை உற்பத்தித் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் 2001-2002ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன:



| | | |
|---|---|---|
| (1) | நெட்டை கன்றுகள் விநியோகம் | 22,000 எண்கள் |
| (2) | நெட்டை X குட்டை கன்றுகள் விநியோகம் | 14,000 எண்கள் |
| (3) | ஒட்டுண்ணிகள் மூலம் கருந்தலைப்புழு கட்டுப்பாடு | 83 ஹெக்டேர் |
| (4) | மைய அரசின் செயல்திட்டம் (மானியம் வழங்குதல்)<br>(1) உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு<br>(2) ஊடுபயிர் சாகுபடி<br>(3) நுண்ணூட்டச்சத்து விநியோகம் | 50,000 மரங்கள்<br>200 ஹெக்டேர்<br>4,000 மரங்கள் |
| | மொத்தம் மானிய ரூபாய் செலவு | ரூ.5,04,000/— |
| (5) | தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி நிதி உதவித் திட்டம்<br>(1) நோயுற்ற மரம் அகற்றுதல்<br>(2) செயல்விளக்கம் அமைத்தல்<br>(3) இயற்கை உரம் அளித்தல் | 3,000 எண்கள்<br>3 ஹெக்டேர்<br>1 எண் |
| | மொத்த மானியம் வழங்கியது | ரூ.8,23,500/— |

**22—**

## நவாப்ரா திட்டம்

**வினா 20149—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் நவாப்ரா திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம் என்ன?

(ஆ) பயன்பெற்ற விவசாயிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் நவாப்ரா திட்டத்தின்கீழ் திருமயம் வட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்:

1. அடிப்படைப் பணிகள்

2. சாகுபடி நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள்

3. வீட்டுத் தோட்டம் அமைத்தல்

[2002 அக்டோபர் 31

4. வீட்டு உபயோக உற்பத்தித் திட்டம்

5. கால்நடை பராமரிப்பு

6. சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்களில் திட்டப் பணிகள்

7. வடிகால் மேம்பாட்டுப் பணிகள்

(ஆ) 1. அடிப்படைப் பணிகள் திட்டத்தில் காரீப்/ராபிமித்ரகிசானி பயிற்சிப் புத்தூட்டப் பயிற்சி, விவசாயிகள் பயிற்சி மற்றும் கருத்தரங்கு வகையில் 12 எண்கள் நடத்தப்பட்டதில் 310 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2. ஒருங்கிணைந்த பண்ணை ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சிப் பணிகளில் 480 பேர் பயனடைந்துள்ளனர்.

3. சாகுபடி நிலங்களில் திட்டப் பணிகள் திட்டத்தின்கீழ் சிறு குட்டைகள் அமைத்ததில் 11 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

4. உற்பத்திப் பணிகள் திட்டத்தின்கீழ் ஊடுபயிர் செயல் விளக்கம், வேளாண் காடுகள் மற்றும் மானாவாரி தோட்டக்கலை அமைத்ததன்கீழ் மரக் கன்றுகள் வழங்கிய வகையில் 850 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

5. வீடுகள் சார்ந்த திட்டத்தில் 160 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

6. கால்நடை பராமரிப்பு திட்டத்தின்கீழ் 48 குடும்பங்களுக்கு தீவனப்புல் விதைகள் மற்றும் தீவன மரக் கன்றுகள் வழங்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் நவாப்ரா திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

7. வீடுகளில் நடுவதற்கு மரக் கன்றுகள் மற்றும் காய்கறிகள், விதைகள் 200 விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

8. சாகுபடிக்குத் தகுதியில்லாத நிலங்களில் சிறு குட்டைகள், புல் விதைகளுடன் பயறுவகை விதைகளை மேலாக விதைத்தல் மற்றும் மரங்கள் நடுதல் ஆகியன இலவசமாகச் செய்யப்பட்டுள்ளன.

9. வடிகால் மேம்பாட்டுப் பணிகள் 18 பண்ணைக் குட்டைகளில் இலவசமாகச் செய்யப்பட்டுள்ளன.



2002 அக்டோபர் 31]

**23–**

### மரக் கன்றுகள்

**வினா 25146—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளில் வேளாண்மைத் துறை மூலம் மரக் கன்றுகள் வைக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு எவ்வளவு மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலம் நகர்ப்புறப் பகுதிகளில் தென்னங்கன்றுகள் கீழ்க்கண்ட மாநகரங்களில் விநியோகம் செய்யும் திட்டம் செயல்படுகிறது:

1. சென்னை
2. கோயம்புத்தூர்
3. மதுரை
4. திருச்சி
5. சேலம்

(ஆ) கடந்த ஆண்டில் மேற்கண்ட திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்ட தென்னங்கன்றுகள் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. சென்னை | 20,218 எண்கள் |
| 2. கோயம்புத்தூர் | 12,550 எண்கள் |
| 3. மதுரை | 15,580 எண்கள் |
| 4. திருச்சி | 20,000 எண்கள் |
| 5. சேலம் | 18,975 எண்கள் |
| | 87,323 |

[2002 அக்டோபர் 31

24–

## மாதாந்திர ஊதியம் மற்றும் உணவு

**வினா 12538—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் சத்துணவுத் துறையில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியம் மற்றும் உணவுக் கட்டணம் சரியாக வழங்கப்படாததை உடனே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு பிப்ரவரி 2002 வரையிலான (4-ம் காலாண்டு) சம்பளம் மார்ச் 2002 வரையிலான உணவு மானியம் வழங்கப்பட்டு விட்டது. மேலும் 30-6-2002 வரையிலான முதலாம் காலாண்டிற்கு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து முன்மானிய கருத்துருக்கள் பெறப்பட்டு வருகின்றன. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் முதலாம் காலாண்டு மானியம் விடுவித்து ஊதியம் மற்றும் உணவுக் கட்டணம் வழங்கப்படும்.

25–

## ஆயாக்கள் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 14690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்களில் காலியாகவுள்ள ஆயாக்களின் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக அரசின் தடை ஆணை உள்ளதால் அரசின் தடை நீக்கி ஆணை பிறப்பிக்கப்பட்ட



2002 அக்டோபர் 31]

பின்னரே, அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள பணியிடங்களை நிரப்பிட இயலும்.

26–

## பெண்கள் விடுதி அமைத்தல்

**வினா 14756—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் பணிபுரியும் பெண்கள் தங்குவதற்கு ஏதுவாக பெண்கள் தங்கும் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டத்தில் மத்திய அரசு நிதியுதவி பெற்று 6 பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசால் புதிதாக பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்த வேண்டுமெனில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். ஆனால் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசால் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், புதிய பணியிடங்கள் இன்றி பணிபுரியும் மகளிர் விடுதி அரசால் அமைக்க இயலாது. மேலும் எடப்பாடி தொகுதியில் மத்திய அரசு மானிய உதவியுடன் பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்க தகுதிவாய்ந்த தொண்டு நிறுவனம் ஏதேனும் முன்வந்தால் தகுதியின் அடிப்படையில் அந்நிறுவனத்தின் விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27–

## ஒய்வூதியம்

**வினா 16270—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர், விதவை ஓய்வூதியம் பெற ரூ.1,000/— என உள்ள வருமான உச்சவரம்பு ரூ.5,000/– ஆக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரசாணை திருத்தம் வெளியிடப்படுமா?

[2002 அக்டோபர் 31

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முதியோர் உதவித்தொகை பெறும் மனுதாரர்களுக்கு ரூ.1,000/— சொத்து மதிப்பு என்ற வரம்பினைத் தளர்த்தி ரூ.5,000/— ஆக உயர்த்தி அரசு ஆணை நிலை எண் 100, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 4-7-2002இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**28—**

## உதவித் தொகை

**வினா 16595—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000—2001ஆம் ஆண்டில் தமிழகத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை, உடல் ஊனமுற்றோருக்கு வழங்கிவரும் உதவித்தொகைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கி அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ரூ.206.28 கோடி.

**29—**

## முதியோர் உதவித்தொகை

**வினா 19947—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, ஊராங்கனி கிராமத்தில் முதியோர் உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 அக்டோபர் 31]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முதியோர் உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பித்த ஒரு மாதத்திற்குள் தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**30—**

## கூடுதல் கட்டடம்

**வினா 3668—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டிலுள்ள மேல்நிலை ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பேரணாம்பட்டு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**31—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா 13031—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு காலனியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 அக்டோபர் 31

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நாகமரை ஊராட்சி, பண்ணவாடியான்காடு காலனியில் வசிக்கும் அருந்ததியர் இன மக்களுக்கு ஏற்கெனவே கொங்கலாபுரம் கிராமம், புல எண் 1064/1 மற்றும் 1064/5 ஆகிய புலங்களில் 1995 ஆம் ஆண்டிலேயே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு, தருமபுரி தனி வட்டாட்சியரால் தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. தற்போது வீடு இல்லாமல் இருக்கும் 20 அருந்ததியர்கள் நாகமரை கிராம புல எண் 1068/9இல் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியுள்ளனர். இப்புலம் குன்றுகளாகவும், பாறைகளாகவும் உள்ளதால், வீடுகள் கட்ட தகுதியற்ற நிலமாக உள்ளது. எனவே புல எண் 1068/9இல் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. எனினும் வீடற்ற 20 அருந்ததியர் மக்களுக்கு நில எடுப்பு செய்து வீட்டுமனைகள் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள தனி வட்டாட்சியருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**32–**

**மயானச்சாலை அமைத்தல்**

**வினா 17027–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள சாந்தபுத்தூர், கீழவெளி ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானச் சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள சாந்தபுத்தூர், கீழவெளி ஆகிய



2002 அக்டோபர் 31]

இடங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கெனவே சுமார் 150 மீட்டர் நிலத்தில் மயானப் பாதை வசதியுள்ளது. இந்தப் பாதையை மேம்பாடு செய்ய ரூ.1.30 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு கூடுதலாக நிதி வரப்பெற்றவுடன் இப்பணியினைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**33–**

**உதவித்தொகை**

**வினா 16308–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மேல்நிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோட்டூர் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஆழியார் இடைநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் ஆதிதிராவிட மாணவ, மாணவியர் சில பேர்களுக்கு அரசு வழங்கும் உதவித்தொகையை இன்னும் வழங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 387 ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு உதவித்தொகை மொத்தம் ரூ.3,97,476/- 8–2–2002 தேதி அன்றும் அதேபோன்று வால்பாறை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் 105 ஆதிராவிடர்/பழங்குடியின மாணவியர்களுக்கு உதவித்தொகை மொத்தம் ரூ.1,05,000/– 11–4–2002 தேதி அன்றும், கோட்டூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 40 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர்/மாணவியர்களுக்கு உதவித்தொகை மொத்தம் ரூ.38,260/– 29–1–2002 தேதி அன்றும் வழங்கப்பட்டது. மேலும் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற 22 மாணவியர்களுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு விட்டது. ஆழியார் இடைநிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டில் கல்வி உதவித்தொகை கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

**34–**

## மயானக் கொட்டகைகள்

**வினா 17578—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, குடமுருட்டி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகைகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியைச் சேர்ந்த குடமுருட்டி கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை, ஊராட்சிக்குப் போதிய வசதி கிடைக்கப்பெறும்போது கட்டிக்கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**35–**

## மயானக் கொட்டகை

**வினா 17596—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, ஏகோஜி மகாராஜபுரம் ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ., கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சியைச் சேர்ந்த ஏகோஜி மகாராஜபுரம் குக்கிராமத்தில் மொத்த



மக்கள்தொகை சுமார் 240 ஆகும். இதில் ஆதிதிராவிடர்களின் மக்கள்தொகை 125 ஆகும். இவர்களுக்குத் தனியாக இடுகாடு உள்ளது. இவர்களுக்கு மயானக் கொட்டகை இதுவரை கட்டிக் கொடுக்கவில்லை. 2002–2003 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலோ அல்லது பாராளுமன்ற உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலோ நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**36–**

## மயானக் கொட்டகை

**வினா 17611—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், இருவக்கொல்லை ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* வேட்டங்குடி ஊராட்சியைச் சேர்ந்த இருவக்கொல்லை ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை தற்போது இல்லை. அந்தக் கிராமத்தில் சுமார் 100 பேர் வசிக்கின்றனர். இவர்களுக்கு மயானக் கொட்டகை தேவையான ஒன்றாகும். ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து இப்பணியை எடுத்துச்செய்ய இயலாது. 2002–2003 ஆம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலோ, நிதி ஒதுக்கீடு அளிக்கக் கோரி தனித்தனியே சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2002 அக்டோபர் 31

37–

## மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா 17617–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, வாடி கிராம ஆதிதிராவிடர் மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, வாடி கிராம ஆதிதிராவிடர் மக்களுக்கு 2001–2002 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று மயானக் கொட்டகை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

38–

## நிதி ஒதுக்கீடு

**வினா 19168–திருமதி டி. யசோதா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்படும் மாணவர் விடுதிகளுக்கு ஒதுக்கீடு செய்த நிதியைவிட கூடுதலாக ஆதிதிராவிடர் நலத் துறை ஒதுக்கீடு செய்கிறதா?

(ஆ) அப்படி அதிக ஒதுக்கீடு செய்த விடுதிகள் எத்தனை?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஹட்கோவின் கடன் உதவி மூலம் மொத்தம் 143 விடுதிகள் மேற்காணும் நிதி ஒதுக்கீட்டின்படி கட்ட அனுமதி அளிக்கப்பட்டு தற்போது 73 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

39–

## மாணவ, மாணவி விடுதிகள்

**வினா 19367–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவ, மாணவி விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் விடுதி வாரியாக எத்தனை பேர் தங்கிப் படித்து வருகின்றார்கள்?

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள் 19—ம், மாணவியர் விடுதிகள் 10—ம், கல்லூரி மாணவர் விடுதிகள் 2—ம், கல்லூரி மாணவியர் விடுதி 1—ம் ஆக மொத்தம் 32 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்விடுதிகளில் இணைப்பில் உள்ள புள்ளிவிவரப்படி மொத்தம் 1628 மாணவ/மாணவியர் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

| வ. எண் | விடுதியின் பெயர் | விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாணவர் விடுதி, நாமக்கல் | 77 |
| 2 | மாணவர் விடுதி, சேந்தமங்கலம் | 60 |
| 3 | மாணவர் விடுதி, கா.நா. பட்டி | 30 |
| 4 | மாணவர் விடுதி, மோகனூர் | 25 |
| 5 | மாணவர் விடுதி, வேலூர் | 30 |
| 6 | மாணவர் விடுதி, கலங்காணி | 60 |
| 7 | மாணவர் விடுதி, வரகூர் | 50 |
| 8 | மாணவர் விடுதி, இராசிபுரம் | 80 |
| 9 | மாணவர் விடுதி. குருசாமிபாளையம் | 40 |
| 10 | மாணவர் விடுதி, வெண்ணத்தூர் | 30 |
| 11 | மாணவர் விடுதி, நாமகிரிப்பேட்டை | 30 |
| 12 | மாணவர் விடுதி, தெம்பலம் | 50 |
| 13 | மாணவர் விடுதி, திருச்செங்கோடு | 40 |
| 14 | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 50 |
| 15 | மாணவர் விடுதி, கோட்டப்பாளையம் | 30 |
| 16 | மாணவர் விடுதி. வையப்பமலை | 50 |
| 17 | மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் | 30 |
| 18 | மாணவர் விடுதி, பள்ளிப்பாளையம் | 30 |
| 19 | மாணவியர் விடுதி, கொமாரப்பாளையம் | 30 |
| 20 | மாணவியர் விடுதி. நாமக்கல் | 71 |
| 21 | மாணவியர் விடுதி. சேந்தமங்கலம் | 30 |
| 22 | மாணவியர் விடுதி. களங்காணி | 60 |
| 23 | மாணவியர் விடுதி. பேருக்குறிச்சி | 35 |
| 24 | மாணவியர் விடுதி, எருமப்பட்டி | 50 |
| 25 | மாணவியர் விடுதி, இராசிபுரம் | 100 |
| 26 | மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 27 | மாணவியர் விடுதி, திருச்செங்கோடு | 50 |
| 28 | மாணவியர் விடுதி. மல்லசமுத்திரம் | 30 |
| 29 | மாணவியர் விடுதி, கோட்டப்பாளையம் | 50 |
| 30 | அரசு கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 150 |
| 31 | அரசு கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 80 |
| 32 | அரசு கல்லூரி மாணவர் விடுதி, இராசிபுரம் | 50 |
| | மொத்தம் | 1628 |





**40–**

### உதவித்தொகை

**வினா 20277–திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) சேலம்–1 தொகுதியில் 2002–2003இல் எத்தனை தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகள் +1, +2 பயின்று வருகிறார்கள்?*

*(ஆ) அவர்கள் உதவித்தொகை எவ்வளவு பெறுகிறார்கள்?*

**விடை–**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம்–1 தொகுதியில் மொத்தம் 8 மேல்நிலைப் பள்ளிகள் இயங்குகின்றன. இப்பள்ளிகளில் +1 வகுப்பில் 135 ஆதிதிராவிடர் மாணவ/மாணவிகளும் 3 பழங்குடியினர் மாணவ/மாணவிகளும், +2 வகுப்பில் 120 ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவிகளும், 5 பழங்குடியினர் மாணவ/மாணவிகளும் ஆக மொத்தம் 263 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர்.*

*(ஆ) +1 வகுப்பில் பயிலும் மாணவ/மாணவிகள் வருடத்திற்கு தோராயமாக ஒவ்வொருவரும் ரூ.1,050/–ம், +2 வகுப்பில் பயிலும் மாணவ/மாணவிகள் வருடத்திற்கு தோராயமாக ரூ.1,240/–ம் கல்வி உதவித்தொகை பெறுவார்கள்.*

**41–**

### கூடுதல் கட்டடம்

**வினா 10430–திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சிமெண்ட் தொழிற்சாலை மூலம் கூடுதல் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2002 அக்டோபர் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் கிராமம், அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது டான்செம் நிறுவனத்தின் பரிசீலனையில் இல்லை.*

**42—**

## செயற்பொறியாளர் அலுவலகம்

**வினா 12231—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டமாகத் தரம் உயர்த்தப்பட்டு 4 வருடங்களாகியும் தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், செயற்பொறியாளர் அலுவலகம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதியதாக ஒரு மின் விநியோகக் கோட்டம் அமைக்க குறைந்தபட்சம் 3 (மூன்று) உப கோட்டங்களும், ஒவ்வொரு உப கோட்டத்திற்கும் குறைந்தபட்சம் 4 (நான்கு) (ஆக மொத்தம் 12) பிரிவு அலுவலகங்களையும் உள்ளடக்குவதாக இருக்க 2 (இரண்டு) உப கோட்டங்களும், அதற்குட்பட்ட 7 பிரிவு அலுவலகங்களும் மட்டுமே உள்ளன. இவ்வெண்ணிக்கை புதியதாக ஒரு மின் கோட்டம் அமைக்கப் போதுமானதாக இல்லை. ஆகவே தற்போதைக்கு எடப்பாடியில் புதிய கோட்டம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*



2002 அக்டோபர் 31]

**43—**

## கட்டடப் பொறியாளர்கள் பணியிடம்

**வினா 12304—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தற்போது பட்டதாரி கட்டடவியல் பொறியாளர்கள் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்?*

*(ஆ) தற்போது நடைபெறும் திட்டப் பணிகளுக்குத் தேவையான கட்டடவியல் பொறியாளர்கள் எத்தனை பேர்?*

*(இ) பற்றாக்குறையாக இருப்பின் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுமா? அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தற்போது 3 தலைமைப் பொறியாளர்களும், 10 மேற்பார்வைப் பொறியாளர்களும், 68 செயற்பொறியாளர்களும், 225 உதவிப் பொறியாளர்களும் மொத்தம் 548 பேர் பணிபுரிந்து வருகின்றனர். (இவர்கள் அனைவரும் பட்டதாரி கட்டடவியல் பொறியாளர்கள்)*

*(ஆ) 38 உதவிப் பொறியாளர் (கட்டடவியல்) பணியிடங்கள் காலியாக உள்ளன. இருந்தாலும் தற்போது உள்ள 548 பொறியாளர்களைக் கொண்டு திட்டப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.*

*(இ) தற்போது தமிழ்நாடு அரசு நேரிடையாகப் பணியாளர்களைத் தேர்வு செய்யும் முறையினைத் தடை செய்ய இருப்பதால், காலியாக உள்ள 38 உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களை (கட்டடவியல் பட்டதாரி பொறியாளர்கள்) உள்முகத் தேர்வின் மூலம் நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இளநிலை (முதுநிலை) பட்டதாரி கட்டடவியல் பொறியாளர்கள் மின் வாரியத்தில் இல்லாததால் இளநிலை (இரண்டாம் நிலை) பணியாளர்களை முதல் நிலை*

பணியாளர்களாகப் பதவி உயர்வு செய்து காலியாக உள்ள 38 உதவிப் பொறியாளர்/கட்டடவியல் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**44–**

## கனிம நிறுவன முதலீடு

**வினா 18590–திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் 2001–2002 ஆம் ஆண்டில் எவ்வளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எவ்வளவு உற்பத்தியாகி உள்ளது? எவ்வளவு விற்பனையாகி உள்ளது? அதன்மூலம் கிடைத்த இலாபம் எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2001–2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் ரூ.1685–00 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2001–2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிம நிறுவனம் உற்பத்தி செய்த பொருட்கள், விற்பனை மற்றும் ஈட்டிய லாபம் வருமாறு:

| வ. எண் | பொருளின் விவரம் | உற்பத்தி | விற்பனை | |
|---|---|---|---|---|
| | | | அளவு | மதிப்பு (தணிக்கைக்கு உட்பட்டது) ரூ. இலட்சத்தில் |
| 1 | கருப்பு கிரானைட் கற்கள் க.மீ. | 7200 | 7000 | 2403.20 |
| 2 | வண்ண கிரானைட் கற்கள் க.மீ. | 16800 | 14880 | 3052.50 |
| 3 | உயர்வகை கனிமங்கள் மெடன் | 208680 | 166270 | 251.25 |
| 4 | முடிவுற்ற பொருட்கள் | | | |
| | (அ) அறுக்கப்பட்ட/மெருகிடப்பட்ட கிரானைட் கற்கள் ச.மீ. | 22000 | 19850 | 374.15 |
| | (ஆ) கிரானைட் செதில்கள் மெடன் | 4558 | 4012 | 517.50 |
| | (அ) மற்றவை மெடன் | 2340 | 2300 | 106.40 |
| | மொத்தம் | | | 6705.00 |





**45–**

## புதிய மின்நிலையம் அமைத்தல்

**வினா 18987–திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வடசென்னை அனல் மின் நிலையத்தில் தென்பகுதியில் (Tri-Sakthi) எனும் நிறுவனம் மூலம் புதிய மின் நிலையம் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்திட்டதை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வட சென்னையில் பிரிவு 3–ல் 525 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு Tri-Sakthi Energy (P) Ltd.- உடன் 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கருத்தளவு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதன்படி இந்த நிறுவனம் மேற்குறிப்பிட்ட திட்டத்தைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை அந்தந்த காலகட்டத்தில் எடுக்கத் தவறிவிட்டது. ஆதலின், தமிழ்நாடு மின்வாரியம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த நிறுவனத்துடன் சுருக்கொப்பமிட்ட மின் கொள்முதல் ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசு ஆணையிட்டது.

**46–**

## மருத்துவப் பயிர்கள்

**வினா 20256–திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் சார்பாக மருத்துவப் பயிர்கள் பயிரிடப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன மருத்துவப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் சார்பாக பரிசோதனை அடிப்படையில் நீர் பிரம்மி, சென்னா இலை, பூனைக்காலி, அஷ்வகந்தா போன்ற மருத்துவப் பயிர்கள் சுமார் 500 ஹெக்டேர் பரப்பில் 2001–2002இல் பயிரிடப்பட்டன. மேற்படி மருத்துவப் பயிர்களுக்கு சந்தையில் சரியான விலை கிடைக்காததால், தற்போது மருத்துவப் பயிர்கள் பயிரிடுவது கைவிடப்பட்டுள்ளது. இது தவிர, 2001–2002 வரை, 200 ஹெக்டேர் பரப்பில் நெல்லி மரங்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன் மேலும் தொடர்ந்து நடவு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**47—**

## சந்தன மரங்கள்

**வினா 20257—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் சார்பாக சந்தன மரங்கள் பயிரிடப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் சார்பாக சந்தன மரங்கள் பயிரிடப்படுவதில்லை.

(ஆ) இவ்வினா எழாது.



**48—**

## விருதுகள்

**வினா 24314—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000–2001ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் துறை விருதுகள் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவில் மூன்று பரிசுகளும், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கான பரிசும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன:

**சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு**

| விருதின் பெயர் | வழங்கப்பட்டவர்/நிறுவனம் பெயர் |
|---|---|
| 1.அறிஞர் அண்ணா விருது | தமிழ்நாடு அறிவியல் மன்றங்களின் கூட்டமைப்பு, சென்னை. |
| 2.சுற்றுச்சூழல் சுடரொளி விருது | முனைவர் எஸ். வின்சென்ட், லயோலா கல்லூரி, சென்னை. |
| 3.சுற்றுச்சூழல் செயல்வீரர் விருது | சுற்றுச்சூழல் ஆய்வு மையம், நாகப்பட்டினம். |
| 4. ஆராய்ச்சிக் கட்டுரை | முதல்வர், ஸ்காட் கிருஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில் |

[2002 அக்டோபர் 31

**49–**

### ஆழ்குழாய்க் கிணறு

**வினா 10874–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அணைக்கரை ஊராட்சி, ரம்மதபுரம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதால், புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்து ஏற்கெனவே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், அணைக்கரை ரம்மதபுரம் குடியிருப்பிற்கு மார்ச் 2002—இல் ரூ.6.30 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

**50–**

### முழுநேர கால்நடை மருத்துவர்

**வினா 20715–திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருப்பூர் தொகுதி, முதலிபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு முழுநேர கால்நடை மருத்துவர் நியமிக்கப்படுவாரா?

**விடை–**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருப்பூர் தொகுதியிலுள்ள முதலிபாளையம் கிராமத்தில், கால்நடை மருத்துவமனை ஏதுமில்லை. எனவே அங்கு முழுநேர கால்நடை மருத்துவர் நியமிக்க வேண்டிய நிலை எழவில்லை. ஆனால், முதலிபாளையத்தில், ஒரு பார்வைக் கிளை நிலையம் உள்ளது. பார்வைக் கிளை நிலையத்தின் பணிகளைக் கவனிக்கத் தனியாக கால்நடை ஆய்வாளர் (நிலை 2) எவரும் நியமிக்கப்படுவதில்லை. எனவே, முத்தனாம்பாளையத்திலுள்ள கால்நடைக் கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் (நிலை 2) வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் முதலிபாளையம் சென்று பார்வைக் கிளை நிலையத்தின் பணிகளைக் கவனித்து வருகிறார்.



2002 அக்டோபர் 31]

### ஒன்பதாம் பட்டியல்

**1–**

### தூர் எடுத்தல்

**வினா 9379–திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

தருமபுரி தொகுதியில் பொதுப் பணித் துறையின்கீழ் எத்தனை ஏரிகள் கடந்த 5 ஆண்டுகளில் தூர் எடுக்கப்பட்டன? அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் மட்டும் பொதுப் பணித் துறை பராமரிப்பின்கீழ் 15 ஏரிகள் உள்ளன. இவற்றில் 1997–98 ஆம் நிதியாண்டில் மற்றும் 1998–99 ஆம் நிதியாண்டில் தருமபுரி தொகுதியில் ஒரு ஏரிக்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.20 இலட்சம் மதிப்பளவில் மாதேமங்கலம் ஏரி மற்றும் கிருஷ்ணாபுரம் பெரிய ஏரி ஆகிய இரண்டு ஏரிகளில் தூர் வாருதல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. நிதி நிலைமைக்கு ஏற்ப ஏனைய ஏரிகளில் பணி மேற்கொள்ளப்படும்.

[2002 அக்டோபர் 31

2—

## வாய்க்கால் புனரமைப்பு

**வினா 12983—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை வாய்க்கால்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி அருகில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 9012 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

(ஆ) கிருஷ்ணகிரி அணையில் வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் பணிகள் உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.327 இலட்சம் மதிப்பளவில் 1999--2000 நிதியாண்டில் ஏற்கெனவே முடிக்கப்பட்டது. வலதுபுற பிரதான கால்வாயின் மொத்த நீளமான 14.20 கி.மீ. தூர் அகற்றப்பட்டு 0 முதல் 7 கி.மீ. வரை லைனிங் பணி செய்து முடிக்கப்பட்டது. இடதுபுற பிரதான கால்வாயின் மொத்த நீளமான 18.20 கி.மீ. தூர் அகற்றப்பட்டு 0 முதல் 9 கி.மீ. வரை லைனிங் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் முடிக்கப்பட்ட பின்பு 2000–2001 மற்றும் 2001–2002 ஆகிய நிதியாண்டுகளில் இரு போக பாசனத்திற்காக தண்ணீர் விடப்பட்டு முழுமையாக பாசன வசதி அளிக்கப்பட்டது.

3—

## மணல் திருட்டைத் தடுத்தல்

**வினா 17228—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 அக்டோபர் 31]

பேராவூரணி தொகுதியில் பூனைக்குத்தி ஆறு, அம்புலி ஆறு ஆகிய ஆறுகளில் ஏற்படும் மணல் திருட்டைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதியில் பூனைக்குத்தி ஆறு, அம்புலி ஆறு ஆகிய ஆறுகளில் மணல் திருட்டு ஏற்படாமல் இருக்க வருவாய்த் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலர்களால் காவல் துறை உதவியுடன் அவ்வப்போது திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மணல் திருட்டு சம்பந்தமாக புகார் வரப்பெற்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

4—

## தடுப்புச் சுவர்

**வினா 3778—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், சம் நகரில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதியமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால் இப்பணியை நடப்பாண்டில் மேற்கொள்ள இயலாது. இனி வரும் காலங்களில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த பரிசீலிக்கப்படலாம்.

5—

## வாக்காளர் அடையாள அட்டை

**வினா 12804—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 அக்டோபர் 31

(அ) புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும் அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருப்பது அரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதியமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றவர்களுக்கே புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. எனினும், புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள வாக்காளர் ஒருவர் தாம் வசிக்கும் தொகுதியிலிருந்து இடம் மாறி வேறு தொகுதியில் குடியேறும் நேர்வில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்ட தொகுதி வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்பட, வாக்காளர் மனு செய்ய வேண்டும். 1-1-2002-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களை சிறப்புச் சுருக்கமுறைத் திருத்தம் செய்ய இந்தியத் தேர்தல் ஆணையம் இப்போது ஆணையிட்டுள்ளது. இதன்படி வரைவு வாக்காளர் பட்டியல்கள் 7-11-2002 அன்று வெளியிடப்படுகின்றன. 7-11-2002 முதல் 30-11-2002 வரை பெயர்களைச் சேர்க்க/நீக்க மனுக்கள் அளிக்க கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(2) நவம்பர் திங்கள் இரண்டாவது/நான்காவது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளான 9, 10, 23, 24 ஆகிய தேதிகளில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. 1.1.2002 அன்று, 18 வயது நிரம்பக்கூடிய புதியவர்களுக்கும் இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் பெயர்களைச் சேர்க்க/நீக்க/திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை அந்த முகாமில் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. மேலும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், குடிபெயர்ந்ததனால் அந்தந்த பகுதிக்குரிய வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் தற்போது வசிக்கும் தொகுதி வாக்காளர் பட்டியலில் விண்ணப்ப படிவம்—6 இல் மனுச் செய்து பெயர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.



2002 அக்டோபர் 31]

6—

## தினசரி பத்திரிகைகள்

**வினா 12167—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் கிளை நூல் நிலையத்தில் முக்கியமான தினசரி பத்திரிகைகள் எத்தனை வைக்கப்படுகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

(இ) ஆம் எனில், அதில் விடுபட்டு போன முக்கிய தினசரி பத்திரிகைகளை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலுள்ள கிளை நூலகத்தில் முக்கியமான தினசரி பத்திரிகைகளில், தமிழ் 9— ம், ஆங்கிலம் 6—ம் வாங்கி வைக்கப்படுகின்றன.

(ஆ) அதன் விவரம்:

| தமிழ் நாளிதழ்கள் | ஆங்கில நாளிதழ்கள் |
|---|---|
| 1 டாக்டர் நமது எம்.ஜி.ஆர். | 1 தி ஹிந்து |
| 2 குமரி முரசு | 2 இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 3 விடுதலை | 3 டைம்ஸ் ஆப் இந்தியா |
| 4 மக்கள் குரல் | 4 பினான்சியல் எக்ஸ்பிரஸ் |
| 5 தினத்தந்தி | 5 எக்னாமிக்ஸ் டைம்ஸ் |
| 6 தினமணி | 6 பிஸினஸ் இந்தியா |
| 7 தினமலர் | |
| 8 மாலை முரசு | |
| 9 மாலை மலர் | |

[2002 அக்டோபர் 31

(இ) முழு நேர நூலகங்களுக்கு வாங்கப்படும் அனைத்து நாளிதழ்களும் எடப்பாடி கிளை நூலகத்திற்கு வாங்கி வழங்கப்படுவதால் இக்கேள்விக்கு இடமில்லை.

7–

### உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்

**வினா 20634–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், சம்மட்டி விடுதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், சம்மட்டி விடுதி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4.7.2002ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8–

### வயிற்றுப்போக்கு

**வினா 20022–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பொன்னேரி அரசு மருத்துவமனையில் அங்குள்ள கடலோர கிராமப் பகுதியில் குடிதண்ணீர் அசுத்தம் கலந்து அதை உபயோகித்ததால் வயிற்றுப்போக்கு எவ்வளவு பேருக்கு ஏற்பட்டது என்று அனுமதித்தனர்?

**விடை–**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பாதிப்புப் பற்றிய தகவல் ஏதுமில்லை.



2002 அக்டோபர் 31]

9–

### நோயாளிகளுக்கு உணவு

**வினா 20053–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பொன்னேரி மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு உணவு சரியாக வழங்கப்படவில்லை என அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி அரசு மருத்துவமனையில் உள்ள நோயாளிகளுக்கு உணவு சரியாக வழங்கப்படவில்லை என அரசுக்கு இதுநாள் வரை புகார் எதுவும் வரவில்லை. இம்மருத்துவமனையில் உள்ள உள்நோயாளிகளுக்கு பால், ரொட்டி மற்றும் உணவு ஆகியவை நோயின் தன்மைக்கு ஏற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

10–

### வட்டி, அபராத வட்டி

**வினா 424–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய விவசாயிகளிடமிருந்து வசூலாக வேண்டிய வட்டி, அபராத வட்டி எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய விவசாயிகளிடமிருந்து வசூலாக வேண்டிய வட்டி ரூ.529.27 கோடி. அபராத வட்டி ரூ.99.11 கோடி ஆகும். இதன் விவரம் பின்வருமாறு:–

| கடன் வகை | விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய வட்டி (ரூ. கோடியில்) | அபராத வட்டி |
|---|---|---|
| 1. குறுகிய காலப் பயிர்க் கடன் | 267.21 | 66.68 |
| 2. மத்திய காலக் கடன்கள் | 80.90 | 22.72 |
| 3. மத்திய கால மாற்று/மறு மாற்றுக் கடன் | 37.46 | 9.71 |
| 4. நீண்ட காலக் கடன் | 143.70 | — |
| மொத்தம் | 529.27 | 99.11 |

**11—**

## நியாய விலைக் கடை

**வினா 4940—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே கே. வல்லக்குண்டாபுரம் கிராமத்தில் நியாய விலைக் கடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கே. வல்லக்குண்டாபுரம் நியாய விலைக் கடைக்கு உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையினைப் பெற்று கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**12—**

## முறைகேடுகள்

**வினா 9260—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆண்டில் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் எத்தனை வங்கிகளில் வங்கிக் கணக்குகளில் முறைகேடுகள் நடந்ததாக அரசு கண்டறிந்துள்ளது?

(ஆ) இத்தகைய முறைகேடுகள் நடவாமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் 257 கூட்டுறவு வங்கிகளில் வங்கிக் கணக்குகளில் முறைகேடுகள் நடந்துள்ளன. இத்தகைய முறைகேடுகள் நடவாமல் இருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் பின்வருமாறு:—

1. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் காலாண்டு ஆய்வு மேற்கொள்ள கண்காணிக்கப்படுகிறது.

2. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 20—ல் குறிப்பிட்டுள்ளவாறு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என கண்காணிக்கப்படுகிறது.

3. ஒவ்வொரு மாத இறுதியிலும் வங்கியிலும் மாதாந்திர வரவு செலவுப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வங்கியின் தனி அலுவலர்/நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. துறை அலுவலர்களால் முன்னறிவிப்பின்றி வங்கிகளில் திடீர் ஆய்வும், முனைப்பான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப் படுகின்றன.

[2002 அக்டோபர் 31

5. வங்கிகளில் முறைகேடுகள் கண்டறியப்படின் சட்டப்பூர்வ விசாரணைக்கு உத்தரவிடப்படும் இதன் தொடர்பான குற்ற வழக்கு பதிவு செய்யப்படும், கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**13–**

## வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

**வினா 9261–திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை இலாபகரமாக இயங்கி வருகின்றன?

(ஆ) நட்டத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைக் கண்டறிந்து அவற்றை இலாபகரமாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள 4595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 757 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்தில் இயங்குகின்றன. வங்கிகளில் கடன்கள் வசூலாகாததாலும், நிர்ணயிக்கப்பட்ட நிலைத் திறனைவிட கூடுதலாக பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாலும், நிர்ணயிக்கப்பட்ட மூன்று சதவிகிதத்திற்கும் கூடுதலாக சிப்பந்தி சாதல்வார் செலவினம் உள்ளதாலும், வைப்புத் தொகைகளை அதிக விகிதத்தில் பெற்று குறைந்த வட்டி விகிதத்தில் குறுகிய காலக் கடன் வழங்குவதாலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நட்டத்தில் செயல்படுகின்றன.

நட்டத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்தில் இயங்கும்பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2002 அக்டோபர் 31]

1. தவணை தவறிய கடன்களை வசூலித்தல்.

2. வங்கிகளில் தற்போது நடைமுறையிலுள்ள பணி நிலைத் திறனை வங்கியின் நிதிநிலைமை மற்றும் வழங்கும் சக்திக்கு ஏற்றாற்போல் தேவைப்படித் திருத்தியமைத்தல்.

3.சிப்பந்தி சாதல்வார் செலவினத்தில் கூடுதலாக ஏற்படும் தொகையினைக் குறைத்தல்.

4. வங்கிகள் பெறும் இட்டு வைப்புகள் மற்றும் வழங்கும் கடன்கள் மீதான வட்டி விகிதத்தினைச் சீரமைத்தல்.

5. வங்கியின் நிதியினை பல்வேறு கடன் திட்டங்களில் கூடுதலாக வழங்கவும் வங்கிக்கு ஏற்படும் மொத்த நட்டத்தினைக் குறைக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

**14–**

## நியாய விலைக் கிளைக்கடை அமைத்தல்

**வினா 22620–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைகருங்குளம் ஊராட்சி, நம்பிக்குறிச்சி கிராமத்தில் நியாய விலைக் கிளைக்கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நாங்குனேரி–ராதாபுரம் வட்டம், கூட்டுறவு விற்பனை சங்கம் நடத்தும் கோட்டைக் கருங்குளம் நியாய விலைக் கடையைச் சேர்ந்த மிட்டாதாகுளம் பகுதி நேரக் கடையுடன் நம்பிக்குறிச்சி பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. நம்பிக்குறிச்சி 1—1/2 கி.மீ. தொலைவில் 52 குடும்ப அட்டைகளை மட்டுமே கொண்டுள்ளது. அரசு ஆணையில் வரையறுக்கப்பட்ட 200 குடும்ப அட்டைகள் மற்றும் 2 கி.மீ. தொலைவு குறித்த வரையறைகள் பொருந்தாததால் நம்பிக்குறிச்சி பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பு இல்லை.

[2002 அக்டோபர் 31

**15–**

### புதிய கட்டடம்

**வினா 12973–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டாட்சியர் அலுவலகம் அரசின் சொந்த கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய வினா எழாது.

**16–**

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17771–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கடலூர் தொகுதி, வரக்கால்பட்டு கிராமத்தில் வாழும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட இயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் தொகுதி, வரக்கால்பட்டு கிராமத்தில் வாழும் ஆதிதிராவிட இனத்தவர்கள் 204 பேர்களுக்கு நில எடுப்பு செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் பத்தாண்டுகளுக்கு மேல் ஆட்சேபனையுள்ள புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ள இனங்களில் வரன் செய்து 15 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. வரக்கால்பட்டு கிராமத்தில் தற்போது வீட்டுமனைப்பட்டா வழங்க நத்தம் புறம்போக்கில் தகுதியான இடம் ஏதுமில்லை என்பதால் மேலும் வீட்டுமனைப் பட்டா வழங்க வாய்ப்பில்லை.



2002 அக்டோபர் 31]

**17–**

### கட்டடம்

**வினா 24687–திரு. ப. அரசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

வருவாய் ஆய்வாளர்களுக்கு (Revenue Inspectors) அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை–**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1120 வருவாய் ஆய்வாளர்களில் 1080 ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய அரசு குடியிருப்புகள் உள்ளன. சென்னையில் உள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய அரசு குடியிருப்புகள் தேவையில்லை. 4 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி வருங்காலத்தில் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக மேற்கொள்ளப்படும். வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகக் கட்டடம் மட்டும் தனியே கட்டப்படுவதில்லை. தேவையும் இல்லை, அவசியமும் இல்லை.

**18–**

### விவசாயிகளுக்கு பட்டாக்கள்

**வினா 25268–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள கோடுபட்டி கிராமப் பகுதிகளில் நீண்டகாலமாக புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்து வரும் ஏழை சிறு விவசாயிகளுக்கு பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சியிலுள்ள கோடுபட்டி கிராமத்தில் விவசாயம்

செய்துவரும் நிலங்கள், 'அனாதீனம்' மற்றும் 'தீர்வை ஏற்படாத தரிசு' நிலங்களாகும். இவற்றை நில ஒப்படை செய்ய விதிமுறைகளின்படியும் தகுதியின் அடிப்படையிலும் பரிசீலனை செய்து, நில வகை மாறுதல் செய்து நிலப்பட்டா வழங்க பெண்ணாகரம் வட்டாட்சியரால் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள நபர்களுக்கு வட்டாட்சியரால் நிலப்பட்டா வழங்கப்படும்.

**19–**

## கோகோ நடவுச் செடிகள்

**வினா 15264–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் கோகோ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோகோ நடவுச் செடிகளை மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் கோகோ அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பத்தமடை பகுதியில் இதற்குமுன் எவரும் கோகோ பயிரிடவில்லை. விவசாயிகள் விருப்பம் தெரிவிக்கும்பட்சத்தில் விற்பனை செய்வதற்கு வசதி வாய்ப்புகள் உள்ள விவசாயிகளுக்கு சிறிய அளவில் தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக சாகுபடி செய்யும் அளவில் கோகோ செடிகள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**20–**

## காளான் சாகுபடி

**வினா 15272–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–





*(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் காளான் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் காளான் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001–2002 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு காளான் சாகுபடி பயிற்சி அளிப்பதற்காக 55 விவசாயிகளுக்கு ரூ.0.275 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஊரகப் பகுதியிலுள்ள விவசாய மக்களுக்கு மட்டுமே முன்னுரிமை தரப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில் மேலச்சேவல் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**21–**

## தோட்டக்கலைத் துறை அலுவலகம்

**வினா 17105–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் தோட்டக்கலைத் துறை அலுவலகம் இல்லையென்பதை அரசு அறியுமா?*

*(ஆ) விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற வகையில் ஓர் அலுவலகம் இயங்க அரசு ஆவன செய்யுமா?*

*(இ) ஆம் எனில், எப்போது?*

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் தோட்டக்கலை உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் சீர்காழி தொகுதியில் தோட்டக்கலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தோட்டக்கலை அலுவலர்

[2002 அக்டோபர் 31

மயிலாடுதுறை கட்டுப்பாட்டில், சீர்காழி வட்டாரத்தில் இரண்டு வேளாண்மை உதவி அலுவலர்கள், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் வளாகத்தில் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் சீர்காழி வேளாண்மை வளாக அலுவலகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தோட்டக்கலைத் திட்டப் பணிகளைச் செய்து வருவதால், சீர்காழி தொகுதியில் தனிப்பட்ட தோட்டக்கலை அலுவலகம் அமைக்க அவசியம் எழவில்லை.

**22–**

### சீத்தாப்பழம் பதப்படுத்துதல்

**வினா 19586–திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) நாட்ராம்பள்ளி, கந்திலி ஆகிய ஊர்களில் விளையும் சீத்தாப்பழத்தை பதப்படுத்தி விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி, கந்திலி ஆகிய ஊர்களில் சீத்தாப்பழம் விவசாயிகளால் பயிரிடப்படாமல் வனப் பகுதியில் மட்டுமே இயற்கையாக வளர்கின்றன. பெருமளவு விவசாயிகளால் பயிரிடப்படாததால் சீரான மகசூல் இல்லாத நிலையில் மிகக் குறைந்த அளவில் பயிராகும் சீத்தாப்பழ வகையினை பதப்படுத்தி விற்பனை செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**23–**

### ஆசிரியை பணி நிரப்புதல்

**வினா 12679–திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

பொங்கலூர் தொகுதியில் சுல்தான்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பூராண்டாம்பாளையம் ஊட்டச்சத்து மையத்திற்கு பல ஆண்டுகளாக



2002 அக்டோபர் 31]

ஆசிரியை நியமிக்கப்படாமல் இருப்பதால் உடனடியாக ஆசிரியை பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை–**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

பொங்கலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை வட்டாரம் பூராண்டாம்பாளையம் குழந்தை நல மையத்தில் ஊட்டச்சத்துப் பணியாளர் மற்றும் உதவியாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகின்றனர். குழந்தைகள் நல அமைப்பாளர் பணியிடம் 1.2.1996 முதல் காலியாக இருந்து வருகின்றது. புதிய மையங்கள் மற்றும் புதிய நியமனங்களை அரசு தடை செய்துள்ளதன் காரணமாகவும், ஒரு குழந்தைகள் நல மையத்திற்கு ஒரு பணியாளர் மற்றும் ஒரு உதவியாளர் என்ற அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் குழந்தைகள் நல அமைப்பாளர் பணியிடம் நிரப்பப்படவில்லை.

**24–**

### பணிமனைகள்

**வினா 578–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோட்டம்–2) தருமபுரிக்குச் சம்பந்தப்பட்ட பணிமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றில் சொந்த கட்டடத்தில் இயங்கும் பணிமனைகள் எத்தனை?

(இ) சொந்த கட்டடத்தில் இயங்காத பணிமனைகள் எத்தனை? அவற்றுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்–கோ–2) தருமபுரிக்கு தற்போது மொத்தம் 14 பணிமனைகள் உள்ளன.

[2002 அக்டோபர் 31

(ஆ) தருமபுரி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பணிமனைகளும் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன.

(இ) கேள்வி எழவில்லை.

**25–**

## அடையாள அட்டை

**வினா [illegible]580–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களது விதவைகள், சட்டப்படியான வாரிசுகள் ஆகியோர் மாநில அரசுப் பேருந்தில் இலவசப் பயணம் மேற்கொள்ள எவ்வளவு பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விடுதலைப் போராட்டத் தியாகிகள், அவர்களது விதவைகள் மற்றும் அவர்களது சட்டப்படியான வாரிசுகள் ஆகியோர் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசப் பயணம் மேற்கொள்ள இதுவரை மொத்தம் 8547 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**26–**

## தனி மின் மாற்றி

**வினா 1466–திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

செஞ்சி அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நெற்குணம் என்ற ஊருக்குத் தனி டிரான்ஸ்பார்மர் அமைத்து மின்சாரம் அளிக்கப்படுமா?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

செஞ்சி அனந்தபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நெற்குணம் என்ற ஊருக்குத் தனி மின்மாற்றி அமைத்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**27–**

## மின்சாரம்

**வினா 10266–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சீர்காழியில் அடிக்கடி ஏற்படும் மின் அழுத்தக் குறைவை சரி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன் கோயிலில் 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு 14.12.2001 முதல் இயங்கத் தொடங்கிய பின்னர் தற்பொழுது இப்பகுதி முழுவதும் சீரான மின் அழுத்தம் நிலவுகிறது. மேலும், இப்பகுதியில் மின் விநியோகத்தை சீர் அமைக்கும் பொருட்டு, திருவெண்காடு கிராமத்தில் ஒரு 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டு 2002–2003க்குள் திருவெண்காடு துணை மின் நிலையம் இயக்கி வைக்கப்படும்.

[2002 அக்டோபர் 31

**28–**

### மின் விளக்கு பழுது நீக்குதல்

**வினா 10532–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் அருந்ததியர் தெருவில் பழுதடைந்துள்ள மின் விளக்குகளை மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட புலியூர் அருந்ததியர் தெருவில் பழுதடைந்துள்ள மின் விளக்குகளுக்குத் தேவையான உதிரிபாகங்களை புலியூர் பஞ்சாயத்து தலைவர் வாங்கித் தந்தால் உடன் தெரு விளக்கு எரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**29–**

### மின் வசதி

**வினா 10540–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட மதன கோபாலபுரம் ஊராட்சியில் கிழக்கு ரோட்டு தெருவில் பாதிக்கப்பட்டுள்ள மின் வசதியை சீர்செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதியைச் சேர்ந்த மதன கோபாலபுரம் ஊராட்சியில் கிழக்கு ரோட்டு தெருவில் பாதிக்கப்பட்டுள்ள மின் வசதியை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதன கோபாலபுரம் அருகில் கோ. சத்திரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜித வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) அடுத்து வரும் நிதியாண்டுகளில் குறியீட்டுகளுக்கு ஏற்ப மேற்கண்ட கோ. சத்திரம் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டவுடன் அப்பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்படும்.

**30–**

### மின் வசதி

**வினா 10714–திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி கீழவாடியக்காடு மெயின் சாலை, வடக்குத் தெருவில் மின்சார வசதியில்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொது மக்களின் நலன் கருதி மின் வசதி எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி கீழவாடியக்காடு மெயின் சாலை, வடக்குத் தெருவில் மின்சார கம்பங்களும் மின் வசதியும் உள்ளன. வீட்டு

மின் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன. ஆனால், தெரு விளக்கு வசதியில்லை. அரசின் திட்டத்தில் தெரு விளக்கு ஏதும் அனுமதிக்கப்படாவிடில், தெரு விளக்கு மின் வசதி மதிப்பீட்டின் முழு தொகையையும் பஞ்சாயத்து ஏற்றுக்கொள்வதாக சம்மதக் கடிதத்துடன் விண்ணப்பம் அளிக்கப்பட்டால் உடன் மின் வசதி செய்து தரப்படும்.

**31–**

**மின் வசதி**

**வினா 10797–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பங்கு நத்தம் ஊராட்சி, இராஜகொல்ல அள்ளி காந்திநகர் கிராமத்திற்கு மின்சார வசதி செய்து தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பங்கு நத்தம் ஊராட்சி, இராஜகொல்ல அள்ளி காந்திநகர் கிராமத்தில் சுமார் 30 வீடுகள் உள்ளன. இவற்றுள் 6 வீட்டு மின் இணைப்புகள் ஏற்கெனவே உள்ளன. இரண்டு தெரு விளக்கு இணைப்புகள் உள்ளன. இவற்றைத் தவிர இப்பகுதியிலிருந்து மின்னிணைப்பு கேட்டு விண்ணப்பங்கள் பெறப்படின் வாரிய விதிமுறைக்குட்பட்டு மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**32–**

**மின் கம்பங்கள்**

**வினா 10884–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–



திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி மேலப்பண்டாரகுளம் கிராமத்திலுள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றிட அரசு முன்வருமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி மேலப்பண்டாரகுளம் கிராமத்தில் பழுதடைந்த சிமெண்ட் கம்பம் அடியில் உடைந்த பகுதியில் முற்றிலுமாக கான்கிரீட் போடப்பட்டு மின் கம்பம் சரி செய்யப்பட்டுவிட்டது.

**33–**

**மின் இணைப்பு**

**வினா 12214–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 1999–2000 ஆண்டு சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் குடிசைக்கு மின் விளக்கு திட்டத்தில் எத்தனை பேர் இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

(இ) நிலுவையிலுள்ளவர்களுக்கு எப்போது வழங்கப்படும்?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 1999–2000 ஆண்டில் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் குடிசைக்கு மின் விளக்கு திட்டத்தில் 150 பேர் மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்தனர்.

(ஆ) அவர்களில் 144 பேர்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டது. 6 விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

(இ) நிலுவையில் விண்ணப்பங்கள் ஏதுமில்லை.

[2002 அக்டோபர் 31

34–

**மின் இணைப்பு**

**வினா 12221–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஊஞ்சக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மின் கட்டணம் கட்டாததால் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் மின்னிணைப்பு கேட்டு அப்பள்ளியிலிருந்து விண்ணப்பம் வந்துள்ளதா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஊஞ்சக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மின்னிணைப்பு கட்டணம் ரூ.584/– செலுத்தாததால், 16.2.2001இல் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது. 11.6.2001இல் மேற்படி தொகை பெறப்பட்டு மறு இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. மேலும், மேற்படி மின்னிணைப்பு இதுவரை தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

35–

**வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டம்**

**வினா 12254–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 2000–2001 ஆம் ஆண்டு எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளன?

(ஆ) நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2000–2001 ஆம் ஆண்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் 17 வீடுகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிலுவையில் எந்த விண்ணப்பமும் இல்லை.

36–

**பதவி உயர்வு**

**வினா 12434–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மின்சார வாரியத்தில் சிவில் பொறியாளராக பணியில் சேர்ந்த பட்டயப் பொறியாளர்கள் எந்தவிதமான பதவி உயர்வும் கிடைக்காமல் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க அரசு முன்வருமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

மின்சார வாரியத்தில் சிவில் பொறியாளராகப் பணியில் சேர்ந்த பட்டயப் பொறியாளர்கள், இளமின் பொறியாளர்/சிவில் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்குப் பதவி உயர்வு பெறுகிறார்கள். இளமின் பொறியாளர்/சிவில் பதவிக்கு உயர்வு பெறுவதற்கான முறை வரும்பொழுது, பொறியியல் பட்டப்படிப்பு முடித்த உதவி பொறியாளர்/சிவில் பிரிவினருடன் தற்பொழுது வாரியத்தில் உள்ள நடைமுறைப்படி (3:1) 3 உதவிப் பொறியாளர் : 1 பட்டயப் பொறியாளர் முதல் நிலை என்ற விகிதாச்சாரப்படி பதவி உயர்வு பெறுகிறார்கள்.

மேலும் இது தொடர்பாக, அவர்களுடைய நீண்ட காலப் பணியின் அடிப்படையைக் கருத்திற் கொண்டு 20 ஆண்டுகளுக்கு மேல் பணியில் இருக்கும் பட்டயப் பொறியாளர்/சிவில் முதல் நிலையைச் சேர்ந்த 8

நபர்களில் பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்கான செயற்குறிப்பு வாரியத்தில் பரிசீலனையில் உள்ளது.

**37—**

## மின் மாற்றி

**வினா 12565—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி கீழ்மாம்பட்டு கிராமத்தில் மின் மாற்றி அமைத்துத் தர அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி, கீழ்மாம்பட்டு கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் தொடர்பான கோரிக்கைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பிப்ரவரி 2002—ல் 4 மின் கம்ப இடைவெளியில் 3 கம்பியிலிருந்து 5 கம்பியாக கூடுதல் கம்பிகள் அமைக்கப்பட்டு, மேற்படி குறைந்த மின் அழுத்தம் நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. ஆகையால் புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**38—**

## பழுது நீக்குதல்

**வினா 12582—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*[illegible] திருநெ[illegible]வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்டவினை கிராமத்தில் உள்ள மின் கம்பிகள் பழுதடைந்துள்ளதால் மாற்றிட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் கண்டவினை கிராமத்தில் பழுதான மின் கம்பிகள் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டன. தற்பொழுது மாற்றப்பட வேண்டிய பழுதான மின் கம்பிகள் ஏதுமில்லை.

**39—**

## விவசாயிகளுக்கு மின்சாரம்

**வினா 12680—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பொங்கலூர் தொகுதிக்குட்பட்ட அலகுமலை துணை மின் நிலையத்தில் 24 மணி நேர மின்சாரமும், முதியா நெரிசல் என்ற ஃபீடரில் மட்டும் 6 மணி நேரம் 3 கம்பி மின்சாரமும் மற்ற நேரங்களில் 2 கம்பி மின்சாரமும் உள்ளதால், 13 குக்கிராமங்களில், விவசாயிகள் மிகவும் சிரமப்படுவதால், இதை மாற்றி முழு நேரமும் மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பொங்கலூர் தொகுதிக்குட்பட்ட அலகுமலை 33/11 கேவி. துணை மின் நிலையத்திலிருந்து முதியா நெரிசல் ஊரக மின் பாதையில் தற்போது தற்காலிகமாக பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. தற்போதைய வாரிய ஆணைகளின்படி போதிய தொழில் மின் இணைப்புகள் இல்லாததால் மேற்படி ஊரக மின்பாதையில் தற்போது 24 மணி நேரமும் மும்முனையில் மின்சாரம் வழங்க இயலாது.

[2002 அக்டோபர் 31

**40–**

**மின் மாற்றி**

**வினா 12703—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆவுடையாணிக் கோட்டையில் ஒரு மின் மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆவுடையாணிக் கோட்டை கிராமம், முதுகாடு ஊராட்சியைச் சார்ந்தது. இங்கு, 50 வீட்டு இணைப்புகளும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான இணைப்பும், 600 தெருவிளக்குகள் அடங்கிய 15 தெரு விளக்கு இணைப்பும் உள்ளன. இவை அனைத்திற்கும் முதுகாடு மின் மாற்றியிலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே தற்போது தனியாக புதிய மின் மாற்றி அமைக்க தொழில் நுட்ப ரீதியாக அவசியம் இல்லை.

**41–**

**மின் இணைப்பு**

**வினா 2720—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி வடக்கு ஆதிதிராவிடர் தெருவில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி வடக்கு பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் தெருவில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு மின்சாரம் வேண்டி இதுநாள் வரையில் விண்ணப்பம் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**42–**

**மின்சார வசதி**

**வினா 12748—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாட்டாணிக் கோட்டை ஆனந்தவள்ளி வாய்க்கால் இடப்புறப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மின்சார வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாட்டாணிக்கோட்டை கிராமம், ஆனந்தவள்ளி வாய்க்கால் இடப்புறப் பகுதியில் பெரும்பாலான வீடுகளுக்கு ஏற்கெனவே மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டன. தற்போது மின் இணைப்புப் பெற்றுள்ள விவரங்கள்:—

கடை—3 வீடு—24 தெருவிளக்கு—8

மேலும் இப்பகுதியில் மின்சாரம் வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. இனி விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தகுதியின் அடிப்படையில் மின் இணைப்புகள் உடனடியாக வழங்க ஆவன செய்யப்படும்.

[2002 அக்டோபர் 31

43–

## மின் இணைப்பு

**வினா 12758–திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி வடக்குப் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி வடக்குப் பகுதியில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு மின்சாரம் வேண்டி இதுநாள் வரை விண்ணப்பம் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

44–

## தெருவிளக்கு, மின்சார வசதி

**வினா 13512–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏற்பபையனஅள்ளி ஊராட்சி பாலிக்காட்டிற்கு மின்சார வசதியும் தெரு விளக்கும் ஏற்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம்,



2002 அக்டோபர் 31]

ஏற்பபையனஅள்ளி ஊராட்சியைச் சார்ந்த பாலிக்காடு கிராமத்திற்கு மின் வசதி கேட்டு தெரு மின் விளக்கு கேட்டு விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர் மூலமாக விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டால் வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு மின்னிணைப்பு வழங்கப்படும்.

45–

## தெருவிளக்கு, மின்சார வசதி

**வினா 13849–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி முனிராஜ் வீதி, வண்டிக்காரன் வீதி, வீரபாண்டியன் தெரு ஆகிய இடங்களுக்கு மின்சார வசதி மற்றும் தெரு விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி கிராமத்தைச் சார்ந்த முனிராஜ் தெரு, வண்டிக்காரன் தெரு மற்றும் வீரபாண்டியன் தெரு ஆகிய இடங்களுக்குத் தெரு விளக்கு வசதி கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் நிலுவையில் இல்லை. ஊராட்சித் தலைவர் மூலமாக உரிய விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படின் 12 மின் கம்பங்களை நிறுவி அப்பகுதிக்கு மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46–

## மின் வசதி

**வினா 13935–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

[2002 அக்டோபர் 31

(அ) பண்ருட்டி நகரைச் சேர்ந்த சிரங்குப்பத்தில் ஓடைத் தண்ணீர் செல்லும் வழியில் குறுக்கே போடப்பட்ட சாலையில் புதியதாக மின் கம்பம் அமைத்து மின் வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிரங்குப்பம் ஓடைப் பகுதியில் வீடுகள் எதுவும் இல்லை. ஒரு கோயில் மட்டுமே உள்ளது. அப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்கக் கோரும் விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை. மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால் மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

**47–**

### மரபு சாரா எரிசக்தி

**வினா 13974–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய கரிம வாயுத் திட்டத்தின்கீழ் மரபு சாரா எரி சக்தியை கிராம மக்கள் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய கரிம வாயுத் திட்டத்தின்கீழ் கரிம வாயு கலன் அமைப்பதற்கு உள்ள நிதி உதவியை இந்த ஆண்டிலிருந்து மத்திய அரசு நிறுத்திவிட்டது. மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையால் இதற்கு இந்த ஆண்டு (2002–2003) நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே இந்தத் திட்டம் இந்த ஆண்டு செயல்பாட்டில் இருக்காது.



2002 அக்டோபர் 31]

**48–**

### மின்னிணைப்பு

**வினா 16464–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருநெல்வேலி மாநகராட்சி, 10வது வார்டு கோட்டூர் சாலை பாளையங்கோட்டை கால்வாயின் கீழ் பகுதியில் வசித்து வரும் சுமார் 25 ஆதிதிராவிட மக்களின் இல்லங்களுக்கு மின்னிணைப்பு கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, 10—வது வார்டு, கோட்டூர் சாலை, பாளையங்கோட்டை கால்வாயின் கீழ்ப்பகுதியில் வசித்துவரும் சுமார் 25 ஆதிதிராவிட மக்களின் இல்லங்களுக்கு உரியவர்கள் வீதப்பட்டி I–எ–இல் விண்ணப்பிக்கும் நிலையில் உடனடியாக மின்னிணைப்பு வழங்கப்படும். மாநகராட்சி பகுதியில் குடிசை மின்னிணைப்பு வழங்க இயலாது என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

**49–**

### அரசு அனுமதி

**வினா 16825–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 2000–2001 ஆம் நிதியாண்டில் பொதுத் துறை அமைப்பின்கீழ் நடத்தப்படும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தை சூரிய ஒளியிலிருந்து பெற்றுக்கொள்ள எத்தனை பேர் மனு செய்துள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு அரசு அனுமதி அளித்து மானியத் தொகை வழங்கியுள்ளது?

[2002 அக்டோபர் 31

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000–2001 ஆம் நிதியாண்டில் பொதுத் துறை அமைப்பின்கீழ் நடத்தப்படும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தை சூரிய ஒளியிலிருந்து பெற்றுக்கொள்ள சூரிய ஒளி மின் நிலையம் அமைப்பதற்காக இரு நிறுவனங்கள் மனு செய்துள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

மேற்காணும் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் கருத்துருக்கள் அனுமதி மற்றும் மானியம் பெறும் பொருட்டு மத்திய அரசின் மரபுகள் எரிசக்தி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கருத்துரு 20.3.2001 அன்றும், சிறுதொழில் சேவை நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கருத்துரு 4.4.2001 அன்றும் மத்திய அரசின் மரபுகள் எரிசக்தி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்கான ஒப்புதல் பெறப்படவில்லை.

| வ. எண் | சூரிய ஒளி மின் நிலையம் அமைக்க விண்ணப்பித்த பொதுத் துறை நிறுவனங்கள் | விண்ணப்பித்த நாள் |
|---|---|---|
| 1 | மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம், காரைக்குடி | 27.11.2000 |
| 2 | சிறு தொழில் சேவை நிறுவனம், கிண்டி, சென்னை 32 | 29.01.2001 |

**50–**

### பணி நிரந்தரம்

**வினா 19048–திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கதர் வாரியத்தின் நூற்பு நிலையங்களில் பணிபுரியும் முதல் நிலை நெசவாளர்களை அரசு பணி நிரந்தரம் செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?



2002 அக்டோபர் 31]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின், தொழில் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 97 முதுநிலை நூற்பாளர்கள் நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.25/– மட்டும் பெற்று வந்தார்கள். பின்னர், அரசு ஆணை (நிலை) எண் 28, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள் 9.2.2000—ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில் இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கதர் வாரியத்தால் தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. வாரியத்தில் தற்போது கடுமையான நிதி நெருக்கடி இருக்கும் நிலையில் இவர்களை பணி நிரந்தரம் செய்ய இயலாது.

## 2. கவன ஈர்ப்பு*

**விதி 55–ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 4 வரை)**

**(1) வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு 2000 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் தொடங்கப்படாததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

உறுப்பினர் : திரு. சி. ஞானசேகரன்

அமைச்சர் : மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் (சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை)

**அறிக்கை**

கடந்த 2000–2001 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியின்போது நீதி நிருவாக மானியக் கோரிக்கை தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்பில்,

*இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2002 அக்டோபர் 31

தெரிவிக்கப்பட்டிருப்பினும் அதனைத் தொடர்ந்து வேலூரில் சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு ஆணை ஏதும் வெளியிடப்படவில்லை. மேலும், 28.3.2002 அன்று இதே சட்டமன்ற உறுப்பினர் வேலூரில் சட்டக் கல்லூரி தொடங்குவது குறித்து எழுப்பிய உடுக்குறியிட்ட வினா எண் 854—க்கு விடையளிக்குமுகமாக புதிய அரசு சட்டக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட வேண்டுமாயின் தொடர் செலவினமாக ரூ.16 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சமும் தேவைப்படுகிறது எனவும் தற்போது உள்ள நிதி நிலையில் புதிய திட்டங்களை எடுத்துச் செயல்படுத்த இயலாத நிலை உள்ளது எனவும் அவையில் தெளிவாக பதிலளிக்கப்பட்டுள்ளது. அதே நிலை தான் தற்போதும் தொடருகின்றது. எனவே வேலூரில் புதிய அரசு சட்டக் கல்லூரியை தற்போது தொடங்கும் நிலை இல்லை.

**(2) வேலூரில் கொசுத் தொல்லையால் பலர் மலேரியா நோய்க்கு ஆளாகியுள்ளது குறித்து**

| | | |
|---|---|---|
| உறுப்பினர் | : | திரு. சி. ஞானசேகரன் |
| அமைச்சர் | : | மாண்புமிகு திரு. செ. செம்மலை (மக்கள் நல்வாழ்வுத் துறை) |

**அறிக்கை**

வேலூர் நகராட்சிப் பகுதியில் பூச்சிகளால் பரவும் நோய்கள், மலேரியா, யானைக்கால் மற்றும் டெங்கி கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட விவரம் பின்வருமாறு:-

**மலேரியா நோய் நிகழ்வுகள்**

| ஆண்டு | மலேரியா நோய் நிகழ்வுகள் |
|---|---|
| 1999 | 698 |
| 2000 | 398 |
| 2001 | 316 |
| 2002 (செப்டம்பர் வரை) | 176 |



2002 அக்டோபர் 31]

**யானைக்கால் நோய் பற்றிய விவரங்கள்**

| ஆண்டு | இரத்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப் பட்டவர்கள் (m.f.) | யானைக்கால் நோயாளிகள் (கை, கால், விரை வீங்கியவர்கள்) |
|---|---|---|
| 1999 | 25 | 48 |
| 2000 | 23 | 29 |
| 2001 | 26 | 21 |
| 2002 (செப்டம்பர் வரை) | 19 | 42 |

டெங்கி காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1999 | 11 |
| 2000 | இல்லை |
| 2001 | இல்லை |
| 2002 (செப்டம்பர் வரை) | இல்லை |

இந்தப் பூச்சிகளால் பரவும் நோய்களைக் (மலேரியா, யானைக்கால் மற்றும் டெங்கி) கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கும் பணியில் பொது சுகாதாரத் துறையால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வேலூர் நகராட்சியில் உள்ள 20 களப் பணியாளர்களைக் கொண்டு இந்த நோய் பரப்பிக் கொசுப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கொசு உற்பத்தியாகும் நீர் நிலைகளில் மருந்து தெளித்து கொசுப் புழு ஒழிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும், முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த கொசுக் கொல்லி மருந்தும் அடிக்கப்பட்டு வருகிறது.

மலேரியா, யானைக்கால் மற்றும் டெங்கி நோய் கண்ட நபர்களின் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள வீடுகளில் உள்ளவர்களுக்கும் இரத்தத் தடவல்கள் எடுத்து நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முழு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால் மலேரியா மட்டுமின்றி, பூச்சிகளால் பரவும் நோய்களும் பொதுச் சுகாதாரத் துறையாலும் வேலூர் நகராட்சியாலும் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

**(3) திருப்பூர், வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு, மேல்விசாரம், பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு, திண்டுக்கல் பகுதிகளில் தொழிற்சாலைக் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

உறுப்பினர் : திரு. சி. ஞானசேகரன்

அமைச்சர் : மாண்புமிகு திரு. ப. மோகன் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை)

**அறிக்கை**

வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு, மேல்விசாரம், பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் பெரும்பாலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. மேலும் திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் பொதுவாக சலவை மற்றும் சாயப்பட்டறைகள் அதிகமாக அமைந்துள்ளன.

திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் 1053 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் திருப்பூரில் 288 தொழிற்சாலைகள் இணைந்து 8 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயங்கி வருகின்றன. 667 தொழிற்சாலைகள், தனிக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளன. சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத மீதமுள்ள 98 தொழிற்சாலைகளில் 43 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 55 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவு வழங்க முதல்கட்டமாக முகாந்திரக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு, மேல்விசாரம், பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு, திண்டுக்கல் பகுதிகளில் 740 தோல் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இவற்றில் வேலூர்



மாவட்டத்தில் 373 தொழிற்சாலைகள் இணைந்து 8 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயங்கி வருகின்றன. திண்டுக்கல் பகுதியில் 61 தொழிற்சாலைகள் இணைந்து ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளன. 146 தொழிற்சாலைகள் தனி சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து இயங்கி வருகின்றன. சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத எஞ்சிய 160 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

திருப்பூரில் பொது மற்றும் தனி சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமாக சுத்திகரிக்கப்படும் கழிவுநீர் நொய்யல் ஆற்றில் வெளியேற்றப்பட்டு ஒரத்துப்பாளையம் அணையைச் சென்றடைகிறது. ஈரோடு பகுதிகளில் பெரும்பாலும் உள்ள தனி சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் காவிரி ஆற்றில் கலக்கிறது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள பொது மற்றும் தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பாலாற்றைச் சென்றடைகிறது. திண்டுக்கல் பகுதிகளில் உள்ள பொது மற்றும் தனி சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் அருகில் உள்ள செங்குளம் ஏரியைச் சென்றடைகிறது.

இவ்வாறு சுத்திகரிக்கப்படும் கழிவுநீரில் கரைந்துள்ள திடப்பொருள்களின் அளவைத் தவிர ஏனைய குறியீடுகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுக்கு பொதுவாக உட்பட்டிருக்கிறது. கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவு வாரியம் நிர்ணயித்த அளவான 2100 மி.கி./லிட்டர் அளவை விட அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு கரைந்துள்ள திடப்பொருள் அதிகமுள்ள கழிவுநீரை வெளியேற்றுவதால் குடிநீர் மற்றும் விவசாய நிலங்கள் பொதுவாக பாதிக்கப்படுகின்றன.

ஆகவே வாரியம் மேற்படி தொழிற்சாலைகள் எதிர்மறை சவ்வூடு பரவல் முறை (Reverse Osmosis) அல்லது ஏனைய தகுந்த வழிமுறைகள் மூலம் கழிவுநீரை சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுஉபயோகத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆற்றில் கழிவுநீரை வெளியேற்றக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவுரையை ஏற்று திருப்பூரில் அமைந்துள்ள திருவாளர்கள் கெம்டெக் புராசஸ் என்ற சாயத் தொழிற்சாலை உப்பினைப் பிரித்தெடுக்கும் முறை மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு

ஆகியவற்றை நிறுவி பிரித்தெடுக்கப்பட்ட உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரையும் முழுமையாக மறுஉபயோகம் செய்கிறது. இதனால் நொய்யல் ஆற்றில் விடப்படுகின்ற உப்பு கலந்த கழிவுநீர் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டு மறுசுழற்சி முறை சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

மேலும், நடுத்தர மற்றும் பெரிய சாயத் தொழிற்சாலைகளுக்கு நீர் மாசு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 பிரிவு 33—ஏ—ன்கீழ் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு அல்லது ஏனைய தகுந்த வழிமுறைகளை நிறுவி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு அல்லது ஏனைய தகுந்த வழிமுறைகள் நிறுவாததால் நீர் மாசு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974—ன்கீழ் விளக்கம் கேட்டு முகாந்திரக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஈரோட்டில் காவிரி ஆற்றில் கலக்கும் சாக்கடைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்வதற்காக தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

எனவே தொழிற்சாலைகள், உற்பத்தியாகும் கழிவுநீரை மேற்கூறிய எதிர்மறை சவ்வூடு பரவல் முறை அல்லது ஏனைய தகுந்த வழிமுறைகளைக் கையாண்டு சுத்திகரித்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் பட்சத்தில் நதிநீர் மாசுபடுவது தடுக்கப்படும்.

**(4) சென்னை மாநகராட்சியில் பூங்கா நகர் தொகுதியில் லாரிகள் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கண்ணப்பர் திடலில் வெளி மாநிலங்களிலிருந்து மீன்களைக் கொண்டுவந்து மொத்த விற்பனை செய்வதற்கு விதிகளுக்குப் புறம்பாக சென்னை மாநகராட்சி குத்தகைக்கு விடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து**

| | | |
|---|---|---|
| உறுப்பினர் | : | திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி |
| அமைச்சர் | : | மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் (உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை) |





**அறிக்கை**

வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவரும் பதப்படுத்தப்பட்ட மீன்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஏற்கெனவே சென்னை மாநகராட்சி மக்கள் பூங்கா சாலையில் 1998 ஆம் ஆண்டுக்கு முன் சாலையில் வியாபாரம் செய்து கொண்டு வந்தனர். சென்னை மாநகராட்சி அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது அவர்களை சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண் 199/98 என்ற வழக்கைத் தொடுத்து, அதில் சென்னை மாநகராட்சிக்கு எதிராக தடையாணை பெற்று இருந்தனர். மேற்குறித்த சென்னை உரிமையியல் நீதிமன்றம் 6.2.1999 அன்று தள்ளுபடி செய்தது. அன்றைய தினமே, சென்னை மாநகராட்சி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றியது. மேற்குறித்த மீன் வியாபாரிகள் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை எண் 17839/98 என்ற வழக்கைத் தொடுத்தனர். அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் 10.12.1998 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மேற்கண்ட மீன் வியாபாரிகள் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தள்ளுபடி செய்த வழக்கை நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் புதியதாக ஒரு வழக்கை நீதிமன்றத்தில் நீதிப் பேராணை எண் 18247/2001 அன்று வழக்கைத் தொடுத்தனர். இந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் 4.10.2001 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. நீதிமன்றம் தள்ளுபடி செய்த மேற்படி வழக்கின்மீது மேற்கண்ட வியாபாரிகள் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். மேல் முறையீட்டு எண் 2110/2001 ஆகும். உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் மேற்கண்ட மேல் முறையீட்டு வழக்கில் 23.11.2001 அன்று அளித்த தீர்ப்பில் மனுதாரருக்கு எந்தவித உரிமையும் மாநகராட்சி சாலைகளில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி இல்லை என்றும், சென்னை மாநகராட்சி மனுதாரருடைய கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து முடிவு எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட நீதிமன்ற ஆணைப்படி மண்டல அலுவலர் 3 அவர்கள், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கண்ணப்பர் திடல் என்ற இடத்தில் பயன்படாத நிலமான சுமார் 9 கிரவுண்ட் நிலத்தை மேற்கண்ட மீன் வியாபாரிகளுக்கு உரிமம் அடிப்படையில் வழங்குவதற்கு மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று ஒரே ஒரு மாதத்திற்கு உரிமம் வழங்கி 1.4.2002 முதல் உரிமம் வழங்கினார். அவ்வாறு அவர்களுக்கு உரிமம் வழங்கும்போது, இந்த உரிமம் தற்காலிகமானது என்றும், மேலும் அது ஒரு மாதத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றும், அந்த ஒரு மாதத்திற்கு மட்டும் தங்களுக்குப் போதுமானது என்று மேற்கண்ட மீன் வியாபாரிகளிடமிருந்து இசைவுக்

கடிதம் பெற்றுக் கொண்டு உரிமம் வழங்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட மீன் வியாபாரிகள் அந்த ஒரு மாதம் முடியும் தருவாயில் 29.4.2002 அன்று உயர்நீதி மன்றத்தில் தாங்கள் செய்யும் வியாபாரத்தை மேற்கண்ட இடத்திலிருந்து சென்னை மாநகராட்சி அப்புறப்படுத்தக் கூடாது என்று வழக்கு ஒன்று தொடுத்து நீதிப் பேராணை எண் 14667/2002 என்ற வழக்கில் தடையாணை பெற்று உள்ளனர். இத்தடையாணையை நீக்குவதற்கு சென்னை மாநகராட்சி எல்லாவித முயற்சிகளும் எடுத்து பதில் உரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே பலமுறை நீங்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரைப்பற்றி இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது அது புகாராக இருந்தாலும் சரி, அதே நேரத்திலே அது ஊழலாக இருந்தாலும் அந்த ஆதாரத்தை உங்களிடத்திலே கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டுமென்று பலமுறை இதே மாமன்றத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறீர்கள். அது முறைப்படி கொடுக்கப்படவில்லை. எப்படி கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறேன்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும்,



ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. மு.பெ. சாமிநாதன், திரு. கு. பிச்சாண்டி, திரு. சக்ரபாணி, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. ஜி.கே. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். தீர்மானத்தை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன்; திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினைபற்றி. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? புகழேந்தி சொல்லுங்கள்

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக ஊர்வலத்தின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணை கமிஷன் அறிக்கை

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே கழக ஊர்வலத்திலே நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணைக் கமிஷன் அறிக்கை இன்றைக்குத்தான் எங்கள் பார்வைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே கொடுக்கப் பட்டிருக்குமேயானால், இதுகுறித்த விவாதங்களையோ, இதுகுறித்த செய்திகளையோ, சம்பவங்களையோ விவாதம் செய்திருக்க முடியும். ஆனால் எங்கள் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வாய்ப்புகள் மறுக்கப்படவில்லை. இது ஒரு குறுகிய கால குளிர்கால கூட்டத்தொடர். நீண்ட கூட்டத்தொடர் வருகிறபோது தேவையென்றால் விவாதத்திற்கு அப்போது எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) என்ன, சொல்லுங்கள் மணி?

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் முகையூர் பகுதியிலே பாட்டாளி மக்கள் கட்சி மாவட்டக் கிளையின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: என்னுடைய ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) நேற்றுதான். கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. இவற்றையெல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்டு இன்றைக்கே எடுக்க முடியாது. எதிர்க்கட்சிகள் தொடர்ந்து ஒரு வார காலமாக சட்டசபையைவிட்டு வெளிநடப்புச் செய்து, வெளியேற்றப்பட்டு போகிற காரணத்தால் பல பிரச்சினைகள் எடுக்க முடியாமல் போய்விட்டன. அதனால் அது முறைப்படியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நீங்கள் சொன்னது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு—தொடர்ச்சி

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்) தமிழ்நாட்டில் தொழில்களெல்லாம் நசிந்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக பெரிய தொழில்கள் அனைத்துமே நசிந்து வருகின்றன. பெரிய பெரிய ஆலைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்திலேயும் சரி, தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் சரி, பஞ்சாலைகள், ஜவுளி ஆலைகள் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பெரிய பெரிய ஆலைகள் நூற்றுக்கணக்கான ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பெரிய ஆலைகளை நிரந்தரமாக மூடிவிட்டார்கள். அவற்றை மீண்டும் திறக்கவே போவதில்லை. சில ஆலைகளிலே விருப்ப ஓய்வுக்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். சில ஆலைகளிலே அதுகூட கொடுக்கப்படவில்லை. அந்த இடத்தை ரியல் எஸ்டேட்டாக மாற்றி விற்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறார்கள். இருக்கின்ற ஆலைகளிலும் விருப்ப ஓய்வு கொடுத்து அனுப்பிவிட்டு, சொற்ப ஊதியத்திற்கு 30 ரூபாய், 40 ரூபாய் ஊதியத்திற்கு தொழிலாளர்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இலாபகரமாக நடந்துகொண்டிருக்கின்ற சில ஆலைகளில் போனஸ் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருந்தாலும்கூட, பரவலாக, பெரும்பாலான ஆலைகள் போனஸுக்கும் ஒப்புக்கொள்ளவில்லை. பெரிய ஆலைகள் என்று எடுத்துக்கொண்டால், லட்சுமி மில்ஸ்தான் தமிழ்நாட்டிலேயே





மிகப் பெரிய ஆலை என்று சொல்வார்கள். அதிலேயும் ஒரு யூனிட் மூடப்பட்டுவிட்டது. மூடப்பட்டது மட்டுமல்ல, அதில் இருந்த இயந்திரங்களும் விற்கப்பட்டுவிட்டன.

அனைவருக்கும் விருப்ப ஓய்வு கொடுத்து அனுப்பிவிட்டார்கள். அந்த இடத்தை ரியல் எஸ்டேட்டாக மாற்றப் போகிறோம் என்று சொன்னால் நிலைமை அவ்வளவு கடுமையாக இருக்கிறது. மாநில அரசாங்கம் இதில் தலையிட வேண்டுமென்று பலமுறை நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். ஒரு கட்டத்திலே கோரிக்கையை ஏற்று இடைக்கால நிவாரணம் என்று சொல்லி முதலமைச்சரவர்கள் சில அறிவிப்புகளைக் கொடுத்தார்கள். குறைந்தபட்ச சம்பளம் எவ்வளவு, அதிக சம்பளம் எவ்வளவு என்றெல்லாம் கொடுத்தார்கள். மற்றபடி ஒரு குழு அதைப்பற்றி பரிசீலிக்கும், விசாரிக்கும் என்று சொன்னார்கள். உயர் நீதிமன்றத்திற்குப் போய் அதற்கு இப்போது தடை வாங்கியிருக்கிறார்கள். அந்த இடைக்கால நிவாரணம் இல்லாமல் போய்விட்டது. தீபாவளிக்கு இன்னும் நான்கு நாட்கள்கூட இல்லை. மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. இந்த நிலையிலே ஆலைத் தொழிலாளியினுடைய நிலைமை என்பது மிகப் பரிதாபகரமான நிலைமை. அவர்களுடைய வேலைவாய்ப்பு எல்லாம் போய்விட்டது. பெரும்பாலான தொழிலாளர்கள் வேலையிழந்து இன்று தெருவில் நிற்கிறார்கள்.

*முற்பகல் 10–05*

கோவை என்று சொன்னாலே—நான் நேற்றையதினம் சொன்னேன்—அண்ணா அவர்கள் காலத்திலேகூட பஞ்சாலைத் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற இடம் என்றால் கோவைக்குத்தான் முதலிடம் என்று சொல்வார்கள். அந்தப் பஞ்சாலைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில்–பஞ்சாலைகள் மட்டுமல்ல மற்ற ஆலைகளும் மூடப்பட்டிருக்கின்றன. Engineering தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன அல்லது தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் நிவாரணமும் கிடைத்தாக வேண்டும். மீண்டும் அந்த ஆலைகள், இயங்குவதோடு மட்டுமல்ல; தொழிலாளர்களுக்கு முழுமையான நிவாரணம், முழுமையான சம்பளப் பட்டுவாடாவும் கிடைத்தாக வேண்டும். இடைக்கால நிவாரணம் என்று அரசு அறிவித்ததை, மீண்டும் அதைச் சரியாகச் செய்யாத காரணத்தினாலே அதற்கு உயர் நீதிமன்றத்தாலே தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக இடைக்கால நிவாரணம்

வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் இன்றையதினம் எந்த ஆலையும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல. பக்கத்திலே இருக்கிற நண்பர்கள். உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல வேறு தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களின் நிலைமை இதே நிலைமைதான். High forest. வால்பாறையிலே நீண்டகாலமாக அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளமே கொடுக்கப்படாமல் அவர்களும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல நீலகிரியிலே எடுத்துக்கொண்டால் பல தொழிலாளர்களுக்கு இன்றையதினம் வேலைவாய்ப்பு prospects இல்லை. இன்றையதினம் வேலையே கிடையாது. அதே மேனேஜ்மென்ட்தான் என்று நினைக்கிறேன். இரண்டும் ஒரே மேனேஜ்மென்ட் என்று நினைக்கிறேன். அங்கேயும் சம்பளம் கொடுப்பது இல்லை.

ஏதோ தேயிலைக்கு விலையிருந்தாலும்கூட அந்தத் தேயிலையைப் பறித்து விற்றாவது அவர்கள் வாழ்ந்துகொள்வார்கள். தேயிலைக்கும் விலையில்லை. தேயிலையினுடைய விலை 4 ரூபாய், 5 ரூபாய்க்கு மேல் தாண்டமாட்டேன் என்கிறது. ஆகவே யாரை எடுத்தாலும் தேயிலைக்கு எப்போது நல்ல விலை கிடைக்கும்? தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணம் கிடைக்கப் போகிறது? தொழிலாளர்களுக்கு எந்த விதமாகவாவது சம்பளம் கிடைப்பதற்கு... (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். இன்னும் ஒரே நிமிஷம். எனவே இந்த அரசாங்கம் அதைப்பற்றி ஒரு தெளிவான அறிவிப்பு கொடுக்க வேண்டும். இந்த அரசாங்கம் தெளிவாக–முதலாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கு தெளிவாக—அறிவுறுத்த வேண்டும். அத்தனை பேருக்கும் உடனடியாக நிவாரணம் கிடைத்தாக வேண்டும். ஆலைகள் இயங்குவதற்கும் வழிசெய்தாக வேண்டும். ஆலைகள் இயங்காமல் இருக்க முடியாது. பலகாலம் சோமனூரிலும் மற்ற பகுதிகளிலேயும் பவர்லூம்ஸ் இயங்கவே இல்லை. விசைத்தறிகள் இயங்கவே இல்லை. இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் நிரந்தரமாக நல்லமுறையிலே நடந்து தொழிலாளர்களுக்கு அவர்கள் மகிழ்ச்சியுறத்தக்க வகையிலே அவர்களுக்கு ஊதியமும் இடைக்கால நிவாரணமும் போனசும் கிடைப்பதற்கு இந்த அரசு வழி காண வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.





***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழில் எந்த அளவுக்கு நசிவடைந்திருக்கிறது என்பது இன்றைக்கு சொல்லித் தெரிய வேண்டிய அளவில் இல்லாமல் அந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு அதிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள், அதன்மூலம் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெற்றிருக்கக்கூடிய தொழிலாளர்கள் இன்றைக்கு பல இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த அரசு, பஞ்சாலைத் தொழிலாளர்களை வாழ வைக்கின்ற வகையிலும் உடனடியாக நிவாரணத் தொகை வழங்குகின்ற வகையிலும் எப்படி கழக அரசு இருந்தபோது மூடப்பட்ட பஞ்சாலைகளிலே, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கியதோ, அதைப்போல இந்த அரசு உடனடியாக அந்த ஊக்கத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுவதோடு இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவாக் அமைத்து இன்றைக்கு நசிவடைந்துகொண்டிருக்கிற பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசோடு கலந்து இதற்குரிய உதவித் தொகையைப் பெறுகின்ற வகையில் பஞ்சாலைகள் பாதுகாக்கப்படக்கூடிய முறையிலே, அதிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்களையும் பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர்களையும் பாதுகாக்கின்ற வகையிலே மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டுவதோடு, இன்றைக்கு அரசு மூலம்கூட கூட்டுறவு நூற்பாலைகள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கொளத்துப்பாளையத்திலே கூட்டுறவு நூற்பாலை இன்றைக்கு மிகவும் நலிவடைந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றது. அதையெல்லாம் இன்றைக்கு செம்மைப்படுத்துகின்ற வகையிலே அரசினுடைய கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களையும், அதன்மூலம் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறக்கூடிய தொழிலாளர்களையும், பொதுமக்களையும் பாதுகாக்கின்ற வகையில் அதற்கும் இந்த அரசு நிவாரண உதவித் தொகை வழங்கி, மத்திய அரசினுடைய உதவித் தொகையையும் பெற்று அந்த ஆலைகளை மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு வலியுறுத்தி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலு அவர்கள் பல முறை கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை கவனத்தில் எடுத்து அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்குமாறு கேட்டு வலியுறுத்தி விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) அதுவும், இதுவும் பஞ்சாலைத் தொழிலில் சேர்ந்தது போலிருக்கிறதே.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாத் தொழிற்சாலைகளும் நலிவுற்று தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கக்கூடிய ஓர் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே குறிப்பாக நம்முடைய பஞ்சாலைத் தொழில் மிகவும் நசிவடைந்து இருக்கிறது. நசிவடைந்த நிலையிலே மாத்திரமல்லாமல், இப்போது தீபாவளி நாளை எதிர்நோக்கி இருக்கிற திருநாளிலே போனஸ் பிரச்சினையே பேசப்படாமல், பேசி முடிக்கப்படாமல் தொடர்ந்து இழுபறியாக இருக்கக்கூடிய நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. அதுவும் கோவை மாவட்டத்திலே ஒருசில பஞ்சாலைகளிலே பேசப்பட்டு 22%, 28%வரைகூட கொடுக்கப்பட்டதாக தகவல்கள் சொல்லப்படுகின்றன. அந்த வகையிலே பல்வேறு பஞ்சாலைகள் எல்லாம் மூடப்பட்ட நிலையிலே அதிலும் இலாப நோக்கிலே ஒருசில ஆலைகள் இருந்தாலும்கூட இந்த போனஸ் பிரச்சினைக்காக மூடப்பட்ட நிலையை எல்லாம் சொல்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலை மாற வேண்டும். நலிவடைந்த நிலையை நாம் ஒத்துக்கொள்கிறோம். இருந்தாலும்கூட இந்த நலிவைப் போக்குவதற்கு நம்முடைய தமிழக அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேநேரத்திலே கூட்டுறவு ஆலைகளை பொறுத்தவரையிலே, தருமபுரி மாவட்டம், சேலம், காஞ்சிபுரம், விழுப்புரம், சாரம் ஆலை போன்ற பல்வேறு ஆலைத் தொழிலாளர்கள் எல்லாம் இன்று வேலை இழந்து, அதனால் வேலை இழந்த தொழிலாளர்கள் உணவுக்குக்கூட வழியில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நலிவடைந்த ஆலைகளுக்கு, அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையும் இப்போது கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே இதை எல்லாம் கவனத்திலே கொண்டு நம்முடைய தமிழக அரசு இந்த நலிவடைந்த நிலையைப் போக்குவதற்கு வேலை இழந்த தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் செல்வதற்கு, போனஸ் பிரச்சினையிலே ஒரு நல்ல தீர்வு ஏற்படுவதற்கு அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.



**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழில் சம்பந்தமாகவும், அதனுடைய நெருக்கடி சம்பந்தமாகவும் கடந்த 1 1/2 ஆண்டுகளில் 3 முறை இந்தச் சபையில் ஏராளமான விவரங்கள் பேசப்பட்டிருக்கின்றன. அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று மிகுந்த நம்பிக்கையை அந்தத் தொழிலாள மக்கள் மத்தியிலே தொடர்ந்து நாங்கள் சொல்லி வந்தபோதும் உண்மையில் அந்த நெருக்கடியும், பிரச்சினைகளும், ஆலைகளை மூடுகிற நடவடிக்கைகளும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன என்பதை மிகுந்த கவலையோடு நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் ஏறத்தாழ 38 மில்கள் நாளதுவரை பல்வேறு காரணங்களினால் குறிப்பாக, நிருவாகத்தினுடைய கோளாறுகளின் காரணமாகவே மூடப்பட்டுள்ளன. இவை மூடப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்னரும்கூட, அவற்றைத் திறப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அண்மையிலும், சில மில்கள் பூட்டப்பட்டுள்ளன. சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குள் மட்டும் 10 நூற்பாலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கெனவே இந்த அவையில் நான் பட்டியலிட்டுச் சொல்லியிருக்கின்றேன். மீண்டும் அதை நான் நினைவுபடுத்துகிறேன். ராமகிருஷ்ணா, வசந்தா, ஸ்ரீஹரி மில்ஸ், மது ஸ்பின்னிங் மில்ஸ், ராஜலட்சுமி மில்ஸ், கோத்தாரி மில்ஸ் உள்பட 10 பஞ்சாலைகள் ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் மட்டும் பூட்டப்பட்டிருக்கின்றன. மூடப்பட்டுள்ள இந்த ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாக அல்லது அதனுடைய நலிவுக்கான காரணங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வது சம்பந்தமாக உண்மையில் ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு முத்தரப்புக் குழுவை இந்த அரசு நியமித்தது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், அதேபோல சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி தொழில் துறை அதிகாரிகளையும் இணைத்துக்கொண்டு ஒரு முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டது. நான் மிகுந்த கவலையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற பட்ஜெட் தொடர் கூட்டத்தின்போது தொழில் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கைகள்மீது நான் பேசிய விவரங்களை மீண்டும் நினைவுபடுத்தினேன். முதல்வர் அவர்கள் தலையிட்டுச் சொன்னார்கள். சொல்லி இருக்கின்ற எல்லா விவரங்களையும் ஒவ்வொன்றாக நான் கணக்கிலே எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவேன் என்று சொன்னார்கள். மிகுந்த நம்பிக்கையோடு அந்த வாக்குறுதியை நாங்கள் தொழிலாள மக்களிடத்திலே எடுத்துச்

சொன்னோம். முதல்வர் வாக்குறுதி அளித்திருக்கிறார். நிச்சயமாக ஏதாவது நிவாரணமும், பரிசீலனைக்கும் எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொன்னேன். நம்பினார்கள். இப்போது மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அந்த முத்தரப்புக் குழுவினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அது, அடையாளபூர்வமான ஒரு கூட்டம் நடத்தி இவ்வாறு ஒரு குழு அமைக்கப்பட்டது என்று பதிவு செய்துகொள்ளப்பட்டதே தவிர, அது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பிரச்சினைகள் என்ன? தீர்ப்பதற்காக எடுத்த முயற்சிகள் என்ன? இந்த அரசுக்கு அந்தக் குழு இதுவரைக்கும் ஏதாவது அறிக்கை தந்திருக்கிறதா? அதன்மீது அமைச்சரவை ஏதாவது விவாதித்து ஒரு குறைந்தபட்ச நியாயம் வழங்குவதற்கு ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா என்பதெல்லாம் கேள்விக்குறிகளாக இருக்கின்றன. அதேபோல, பஞ்சாலைகள் அல்லது வேறு ஆலைகளை அதனுடைய உரிமையாளர்கள் பூட்டுகின்றபோது திடீரென...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன் சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் சொல்லிவிடுகிறேன். சொல்லி முடித்துவிடுகிறேன். முக்கியமான பிரச்சினை. மற்றவர்களைவிட அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. கே.சி. கருணாகரன்:** 2, 3 நிமிடங்களில் நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. கே.சி. கருணாகரன்:** மூடுவது சம்பந்தமாக முன்அனுமதி பெறாமல் மூடக்கூடாது என்று ஏற்கெனவே அரசு அதிகாரிகளால் வழிமுறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் திடுமென மூடுகிறார்கள். இது தொழில் தகராறு சட்ட அத்தியாயம் 5—வது பிரிவின்படி சட்டவிரோதமான ஒரு நடவடிக்கை. இப்படி மூடும் உரிமையாளர்கள்மீது நம்முடைய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? தொழிலாளர் நல இலாகா என்ன நடவடிக்கை எடுத்தது? எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உதாரணமாக கஸ்தூரி மில் கடந்த ஓராண்டு காலமாக மூடிக்கிடக்கின்றது. D.C.L அதாவது Deputy Commissioner of Labour சமரச முறிவு அறிக்கையைத்தான் அனுப்பியுள்ளார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், விளக்கமாக பேசக்கூடிய வாய்ப்பு அல்ல, இது. சுருக்கமாக பிரச்சினை பற்றி மட்டும் சொல்லுங்கள், அவ்வளவுதான்.

**திரு. கே.சி. கருணாகரன்:** சரி. அதாவது சமரச முறிவு அறிக்கை அனுப்பியிருக்கிறார். தொழிலாளர்களை ராஜினாமா செய்துவிட்டு வேலையைவிட்டு வெளியே போங்கள் என்று அந்த நிர்வாகம் சொல்கிறது. ஞானாம்பிகா மில்லிலும் அதே நிலைமை. ஒரு புதிய தந்திர தொழில் கொள்கையை, நலிவைப் பயன்படுத்திக்கொண்டு நன்றாக நடத்துகிற ஆலை அதிபர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது permanency-யை abolish பண்ணுவது என்பது அவர்கள் தந்திரம். உண்மையில் நஷ்டம் ஏற்படுவதால் பூட்டுவதில்லை. permanency-யை abolish பண்ணி வெளியே அனுப்பிவிட்டு, மீண்டும் தினக் கூலி அடிப்படையிலே அந்தத் தொழில்களை நடத்துவதற்கு ஆலை அதிபர்கள் முயற்சிக்கிறார்கள். பெண் தொழிலாளிகளை contract system அடிப்படையிலே compound கட்டி, சிறைக் கைதிகளைப்போல அடக்கி வைத்து குறைந்தபட்ச கூலிக்கு வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைமீது நியாயம் வழங்க வேண்டுமென்று நான் சென்ற முறையே சொல்லியிருந்தேன். இப்போது அதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, இடைக்கால நிவாரணம் பல ஆண்டுகாலமாக கொடுக்கப்படவில்லை. மில்லும் பூட்டியிருக்கிறது. வேலையும் இல்லை. கருணை அடிப்படையில் கொடுக்கப்பட்ட தொகையும் நிறுத்தப்பட்டுவிட்டது. உயர்த்தவில்லை என்பது மட்டுமல்ல, 250 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வந்ததும் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த கவலையோடு சுட்டிக்காட்டுகிறேன். நேற்றையதினம் முதல்வர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது இதர பகுதிகளிலே இருக்கின்ற மக்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். அந்த வேதனையில் நாங்களும் பங்கு பெறுகிறோம். உண்மையில் இந்த அரசுக்கு இப்படிப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள்மீது கவலை இருக்குமானால் நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு நியாயம் வழங்குங்கள். பல ஆண்டுகாலமாக நெருக்கடியில் வாழ்கிறார்கள். சம்பளம் கிடையாது, வேலை கிடையாது, வாழ்வு கிடையாது, பொருளாதார மந்தம், நெருக்கடி, கஷ்டம். இவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.

அதேபோல, 10 (பி) என்ற ஓர் அரசாணையை—மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் வணக்கத்திற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த 10 (பி) அரசாணையை சென்ற முறை நாம் இங்கே பிரகடனப்படுத்தினோம். ஆனால் ஆலை நிர்வாகங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சில பேர் அமல்படுத்தினார்கள். சிலபேர் நீதிமன்றம் போனார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கருணாகரன், இது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினையல்ல. அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வாருங்கள். அவ்வளவுதான்.

**திரு. கே.சி. கருணாகரன்:** சரி. அதில் மீண்டும் உயர் நீதிமன்றம் தலையிட்டிருக்கிறது. நம்முடைய முதல்வாதியாக அரசாங்கமே இருப்பதால் அந்தப் பிரச்சினையை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு போக வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். Latest-ஆக கடந்த மே மாதத்திற்குப் பிறகு என்.டி.சி. ஆலைகள் நான்கும் பூட்டப்பட்டிருக்கின்றன. Statesman, காலீஸ்வரா, சோமசுந்தரா போன்ற ஆலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இப்போது மே மாதம் 31 ஆம் தேதிக்குப் பிறகு – என்னுடைய மனைவியும்கூட ஒரு மில் ஊழியர், staff. அவர்கள் உள்பட voluntary retirement-ல் வெளியே வந்து விட்டார்கள். மில் மூடியாகிவிட்டது. இதே மாதிரி என்.டி.சி. ஆலையை பாண்டிச்சேரியிலே மூடுவதற்கு முயற்சித்தபோது, பாண்டிச்சேரியினுடைய முதல்வர் தலையிட்டு மத்திய அரசுடன் வாதாடி அவற்றைச் செயல்பட வைத்துள்ளார். அந்த நடைமுறையை வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்களும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, விசேஷ கவனத்தில் எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கினை வகித்த கோவை மாவட்ட பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாப்பதற்கு, தமிழக பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாப்பதற்கு விசேஷ கவனமும் உரிய முக்கியத்துவமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த கவன ஈர்ப்பு இங்கே எடுத்துக்கொள்ளப்பட்டு கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தென்னிந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று சொல்லப்படுகிற கோவை மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. சுமார் 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட



தொழிலாளர்கள் வேலையிழந்து தவித்துக்கொண்டிருக்கிறார்கள். 38-க்கு மேற்பட்ட பஞ்சாலைகள் கோவையில் மட்டும் மூடப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் நூற்றுக்கணக்கான பஞ்சாலைகள் மூடப்பட்டு இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு வேலையின்றி வீதியிலே அலைய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஏழைத் தொழிலாளிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்தோடுதான் இந்த கவன ஈர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலேயே நமது இந்திய நாட்டிலே இந்தத் தொழிலை சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு கால கட்டத்தில் பார்த்தால், நாம் நவீனமான முறையிலே துணிகளை உற்பத்தி செய்து வெள்ளையர்களிடமிருந்து மான்செஸ்டரிலிருந்து இங்கே பெறுவதற்குரிய முயற்சி எடுக்கவில்லை என்ற காரணத்தினாலே 2,000 தொழிலாளர்களின் கட்டைவிரலை வெட்டியதாக வரலாறு சொல்கிறது. வெள்ளையர்கள் ஆண்ட காலத்திலே 2,000 தொழிலாளர்களை இப்படி நவீன முறையிலே துணிகளைத் தயாரித்தார்கள் என்ற காரணத்தினாலே 2,000 பேர்களுக்கு கட்டை விரல் வெட்டப்பட்டது. இப்படி நிகழ்ந்த ஒரு துன்பத்திற்குப் பின்னாலேதான் விடுதலை பெற்று அந்தத் தொழில் வேகமாக வளர்ச்சி அடைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு நல்ல நிலையிலே செயல்பட்டுக் கொண்டிருந்த வேளையில் நமது தமிழகத்திலே பஞ்சாலைத் தொழில் நசுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது வேதனையாக இருக்கிறது. அவர்கள் வாழ்விழந்த நிலையிலே பட்டினியால், கொடுமையால் அவதிப்படுகிற நிலையிலே ஆளாக்கப்பட்டிருக்கிற பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியாக தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அனைத்து பஞ்சாலைகளைத் திறப்பதற்கும், தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும், தீபாவளி காலத்திற்குள் அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்தி அமர்கிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் கண்டுகொள்ளாமல் விடப்பட்டதால்

[திரு. வ.து. நடராஜன்] [2002 அக்டோபர் 31

வளர்ந்துவிட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு கட்டி, பஞ்சாலைத் தொழிலாளர்கள் வாழ்வில் ஒரு மலர்ச்சியினை ஏற்படுத்திட தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு நியாயமான தீர்வினை அளிக்க தொழில் தீர்ப்பாயத்தின் முன்பு 1,692 பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க 13–9–2001–ல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையை விரைவில் முடிக்கும் 7நோக்கத்துடனும் அவர்கள் துயர் துடைக்க இடைக்கால நிவாரணம் வழங்கும்பொருட்டும் மாண்புமிகு அம்மா அரசு அரசாணைகள் பிறப்பித்தது. அதனை எதிர்த்து சுமார் 600 பஞ்சாலை நிர்வாகத்தினர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, தடையாணை பெற்றனர். தற்போது உயர் நீதிமன்றம் 30–9–2001–ல் வழங்கிய தீர்ப்பாணை, மாண்புமிகு அம்மா அரசு ஏற்படுத்திய தொழில் தீர்ப்பாயம் செல்லும் என தீர்ப்பு வழங்கியது. ஆனால் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க பிறப்பித்த அரசு உத்தரவினை சென்னை உயர் நீதிமன்றம் 30–9–2002–ல் ரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது. இத்தீர்ப்பின் நகல் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை தீர்ப்பின் நகல் பெறப்படவில்லை.

பஞ்சாலைத் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக் குழு இடைக்கால நிவாரணத்தை தடை செய்த உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாகவும், அதில் தமிழக அரசு ஒரு தரப்பாக சேர்ந்து வாதிடுமாறும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. நீதிமன்றத் தீர்ப்பின் நகல் கிடைக்கப்பெற்றதும், அதனைப் பரிசீலனை செய்து தொழிலாளர் நலனைக் காக்க மேல்முறையீடு செய்வது போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைகளைப் பொறுத்தமட்டில், அத்தொழிலில், ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதியம் உள்ளிட்ட பிரச்சினைகள் 13–9–2001 நாளிட்ட ஆணையின் மூலம் அரசு தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட்டுள்ளது. மேலும், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு சில இடைக்கால நிவாரணங்களை அளிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது. மேலும், இவ்வாறு வழங்கப்படும் இடைக்கால நிவாரணத் தொகை தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி பணப்பயனில் சரி செய்யப்படும். மேற்படி அரசு உத்தரவுகள் 13–9–2001



2002 அக்டோபர் 31] [திரு. வ.து. நடராஜன்]

அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த உத்தரவுகள் 12–3–2002 வரை மட்டுமே அமலில் இருக்கும். தொடர்ந்து நிவாரணத் தொகை வழங்கக் கோரும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் தொழில் தீர்ப்பாயத்தின் முன்பு மனு செய்து நிவாரணம் காண வேண்டும்.

பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்த தொழிற் தகராறை சென்னை தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடலாம் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளையும் மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்கிட பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளையும் ஆட்சேபித்து சுமார் 600–க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் பஞ்சாலை நிருவாகங்களினால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. உயர் நீதிமன்றம் 30–9–2002 அன்று வழங்கிய தீர்ப்பில் இடைக்கால நிவாரணம் வழங்க அரசு பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்தும், அதே சமயம் பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நீதிமன்றத் தீர்ப்புக்குவிட உத்தரவிட்ட அரசாணை செல்லும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் நகல் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை பெறப்படவில்லை. பஞ்சாலைத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்கள், சென்னை தொழில் தீர்ப்பாயம் அவர்களது கோரிக்கைகள் குறித்து தீர்ப்பு வழங்க காலதாமதம் ஏற்படும் என்பதால் சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கக் கோரியதன் பொருட்டு அரசு சிறப்புத் தொழில் தீர்ப்பாயம் ஒன்றை அமைத்து ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. எம். சௌந்திரபாண்டியன் அவர்களை முன்னிலை அலுவலராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளது. இச்சிறப்புத் தீர்ப்பாயம் 24–7–2002 முதல் இயங்கி வருகிறது.

*முற்பகல் 10—25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவது தொடர்பாக தொழிலாளர்கள் ஈட்டிய மொத்த சம்பளத்தில் குறைந்தபட்சம் 11 சதவீதமும், அதிகபட்சம் 35 சதவீதமும் எவ்வித ஊதிய உச்சவரம்பின்றி கணக்கிட்டு வழங்க வேண்டும் எனக் கோரி, பல்வேறு தொழிற் சங்கங்கள் 16–10–2002 முதல் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அறிவிப்புக் கொடுத்திருந்தனர். தொழிற் சங்கங்களின் இந்த வேலை நிறுத்த அறிவிப்பு பெறப்பட்டதைத் தொடர்ந்து போனஸ் பிரச்சினை குறித்து எழுப்பப்படும் தொழிற் சங்கத் தகராறுகளில் உடனடியாகத் தலையிட்டு, வேலை நிறுத்தமோ, கதவடைப்போ நடைபெறாமல் பிரச்சினையைச் சுமுகமாக முடித்திட வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்

இந்நிலையில் தொழிற் சங்கங்கள் போனஸ் பிரச்சினையை வலியுறுத்தி, 28-10-2002 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவிப்புச் செய்ததைத் தொடர்ந்து இப்பிரச்சினை குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து சமரச அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 28-10-2002 அன்று கோவையில் தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சார்ந்த 6 பஞ்சாலைகளில் பணிபுரியும் 3,080 தொழிலாளர்களும் 9 தனியார் பஞ்சாலைகளில் பணிபுரியும் சுமார் 1,894 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தேசிய பஞ்சாலைக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில், கோவை தொழிலாளர் இணை ஆணையர் 28-10-2002 அன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளார். நேற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

தனியார் பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட சமரச அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரை மண்டலத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஏதுமில்லை.

கடந்த ஆண்டுகளில் பஞ்சாலைகள் உட்பட்ட தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய போனஸ் பிரச்சினை குறித்து அந்தந்தத் தொழிற்சாலை மட்டத்தில் நிர்வாகங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்வு காணப்பட்டு வந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ளதுபோல் தொழில்வாரியாக போனஸ் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சமீபகாலமாக நடைமுறையில் இல்லை.

இந்நிலையில் 2001-2002 ஆம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை குறித்து பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்கள் கொடுத்துள்ள வேலை நிறுத்த அறிவிப்பு குறித்து தொழிலாளர் நலத் துறை சமரச அலுவலர்களால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சுமூக உடன்பாடு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுப்பினர் குறிப்பிட்டதுபோல





சட்டம்— ஒழுங்குப் பிரச்சினை ஏதும் இல்லை. நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 176 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. 1991 முதல் 2001 முடிய உள்ள காலகட்டங்களில்—தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் 124 தொழிற்சாலைகளும், ஆளுநர் ஆட்சிக் காலத்தில் 3 தொழிற்சாலைகளும் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 49 தொழிற்சாலைகள் மட்டுமே மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது. அதுவும் 1991 முதல் 1996 மற்றும் 2001 முதல் 2002 வரை எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 49 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் 1996—2001 வரை தி.மு.க. ஆட்சியால்தான் 124 தொழிற்சாலைகள் மூடப்பட்டன என்பதை இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும்.

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக இயங்காமல் மூடப்பட்டுள்ள சுமார் 36 பஞ்சாலை நிறுவனங்கள், பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களினால் மட்டுமே இயங்காமல் உள்ளன. எனினும், தமிழகத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளில் ஒன்றுகூட தொழிலாளர்கள் பிரச்சினையால் மூடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனினும், மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களும் திறக்கப்பட்டு தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு துரித நடவடிக்கைகளில் இறங்கி அத்தகைய நிறுவனங்களை மீண்டும் திறந்து, இயக்கிட உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை கூறவும், மீண்டும் திறக்க இயலாத நிலை கண்டறியப்பட்டால், மூடுதலினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தருவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அரசுக்கு ஆலோசனை கூறவும், மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகக் கொண்ட முத்தரப்புக் குழுக்களையும் மாவட்டவாரியாக ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது தொழிலாளர்களின் நலனைக் காக்க கருணையுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் கொண்டுள்ள அக்கறையின் புதிய முயற்சியாகும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீண்டகாலமாக மூடப்பட்டிருக்கும் டன்லப் தொழிற்சாலையைத் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டதைத் தொடர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** சென்னை அம்பத்தூரில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பஞ்சாலைத் தொழில் பற்றி மட்டும் சொன்னால் போதும்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா காலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகளை, 1500 தொழிலாளர்களின் நலன் கருதி அம்மா அவர்கள் திறந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்கிறேன்.

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக இயங்காமல் மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல், மாதம் ரூபாய் 250 உதவித்தொகை வழங்கும் திட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நீண்டகாலமாக பல தொழிற்சாலைகள் இயங்காமலும் மூடப்பட்டும் உள்ளன. இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் இயங்காமல் உள்ளன. இவ்வாறு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளினால் சுமார் 40 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்து தவிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவிட வேண்டும் என்ற கருத்தினை அரசு நீண்ட நாட்களாக பரிசீலனை செய்தது. மேலும், பல்வேறு தொழிற் சங்கங்களும் இதுசம்பந்தமாக அரசிற்குக் கோரிக்கைகள் வைத்தன. நீண்ட பரிசீலனைக்குப்பின், மேற்கு வங்காளத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தினைப் போலவே இம்மாநிலத்திலும் 1989-90 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதாவது 31-03-1990-க்குப்பின் மூடப்பட்ட தொழில் நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு 1-5-1999-லிருந்து ஒவ்வொரு மாதமும் தலா ரூபாய் 250 வீதம் உதவித்தொகை வழங்கிட முடிவெடுத்து அரசாணை நிலை எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999 மூலம் ஆணையிட்டது. இவ்வுதவித்தொகை மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ஒரு இடர்காப்பு உதவியே தவிர, இழந்த மாத வருமானத்தை ஈடுகட்டுவதற்காக அல்ல.



இந்தத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற 91 நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் தகுதியானவர்கள் என்று அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இந்த 91 நிறுவனங்களில் 21 நிறுவனங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து அரசால் நீக்கப்பட்டு, மீதமுள்ள 70 நிறுவனங்களில், இதுவரை 45 நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களின் விண்ணப்பங்கள் மேலாய்வு செய்யப்பட்டு, அவற்றில், உதவித்தொகை பெற அனைத்து தகுதிகளையும் பெற்ற 9,619 தொழிலாளர்கள் பயன்பெற உதவித்தொகை வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுகாறும் 7,793 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். அரசு இதுகாறும் மேற்சொன்ன இனத்திற்காக செலவிட்ட தொகை ரூ.2,50,38,500/— ஆகும்.

இதைத் தவிர, இவ்வாறு ரூபாய் 250 பெறத் தகுதியில்லாத தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகைக்காக ரூபாய் 500 வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேற்சொன்ன தொகையை தகுதியான நபர்களுக்கு வழங்க சில நெறிமுறைகள் அரசால் வகுக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு, இவ்வாறு வழங்கப்படும் நிவாரணத் தொகைக்குத் தகுதியான நபர்கள் 123 பேர் மட்டுமே என தொழிலாளர் ஆணையரால் தேர்வு செய்யப்பட்டது. அரசின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாக சென்ற ஆண்டு மேற்படி தொகையை வழங்கவில்லை.

இவ்வாண்டு மேற்படி உதவித் தொகை வழங்கத் தகுதியுடைய நிறுவனங்களின் பட்டியல் மற்றும் தகுதியான நபர்கள்(தொழிலாளர் ஆணையரிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது)பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் போதும். சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார். அதனால் சொல்கிறேன். ஒரு நிமிடம் கொடுங்கள். நிவாரணம் சம்பந்தமாக அதிகாரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதம் கிடையாது. கருணாகரன், இதில் விவாதம் கிடையாது. அமைச்சர் பேசியதற்குப் பிறகு முடிந்துவிட்டது.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001–2003 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 114 முதல் 120 வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து மூன்றாவது முதல் அறுபத்து ஒன்பதாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. அ. அன்வர் ராஜா.

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்றாவது முதல் ஆறாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக ஊர்வலத்தின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணை கமிஷன் அறிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, என்ன? சொல்லுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற எங்களுடைய பேரணியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள்(அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக ஊர்வலத்தின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்த விசாரணை கமிஷன் அறிக்கை—தொடர்ச்சி

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே, அதுகுறித்து விவாதிப்பதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2002 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே கேட்டு பதில் சொல்லியாயிற்று.

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே, 16 ஆம் தேதியே கொடுத்தாயிற்று, ஆனால்...

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) - தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2002 – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



2002 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)– தொடர்ச்சி

### (ஆ)தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 33–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33–ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (31–10–2002) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

225808



## 9. விதி 110–ன்கீழ் அறிக்கை

### கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் குறித்து மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம். இராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு சம அளவில்
பங்கேற்கும் கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத்
திட்டம் 1991–1992 ஆம் ஆண்டு முதல் தேசிய நலத் திட்டத்தின் ஒரு
பகுதியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி கடல்
மீனவர்கள் மீன்பிடி காலமான ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம்
முடிய மொத்தம் 8 மாதங்களுக்கு மாதச் சந்தாத் தொகை 75 ரூபாயை
ஒவ்வொரு கடல் மீனவரும் செலுத்த வேண்டும். இதன்மூலம் மொத்தம்
8 மாதங்களுக்கு கடல் மீனவர் ஒவ்வொருவரும் மொத்தமாக 600 ரூபாய்
சந்தாத் தொகையாக செலுத்துகின்றனர். இந்தத் தொகைக்கு மேல்
இத்திட்டத்தில் சேர்ந்த ஒவ்வொரு கடல் மீனவருக்கும் மத்திய அரசு
300 ரூபாயும், மாநில அரசு 300 ரூபாயும் செலுத்தி மொத்தம் 1200
ரூபாயை ஒவ்வொரு கடல் மீனவருக்கும் மீன் பிடிப்புக் குறைவாக உள்ள
செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மாதத்திற்கு
300 ரூபாய் என வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை,
திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர்,
தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய 10 கடலோர
மாவட்டங்களிலுள்ள மொத்தம் 1 இலட்சத்து 39 ஆயிரம் கடல்
மீனவர்கள், 8 கோடியே 11 இலட்சத்து 31 ஆயிரத்து 25 ரூபாய் சந்தாத்
தொகையாகச் செலுத்தியுள்ளார்கள். மத்திய அரசு 4 கோடியே 5
இலட்சத்து 65 ஆயிரத்து 512 ரூபாய் மற்றும் 50 காசுகளும் தமிழ்நாடு
அரசு 4 கோடியே 5 இலட்சத்து 65 ஆயிரத்து 512 ரூபாய் மற்றும் 50
காசுகளும் ஆக மொத்தம் 16 கோடியே 22 இலட்சத்து 62 ஆயிரத்து 50
ரூபாய் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு

[திரு. எம். இராதாகிருஷ்ணன்][2002 அக்டோபர் 31

உத்தரவிட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 10 கடலோர மாவட்டங்களில் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ள மொத்தம் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் கடல் மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் 1200 ரூபாய் உடனடியாக வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டுள்ளது என்கிற நல்ல செய்தியை உங்களிடம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன் பிடிப்புக் காலம் இன்னும் முடிவுபெறவில்லை. இந்த மூன்று மாவட்டங்களில் முடிவுபெறாத காலங்களுக்கான சந்தாத் தொகையினை கடல் மீனவர்கள் இன்னும் செலுத்த வேண்டியுள்ளது. எனவே திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மீன்பிடிப்பு குறைவாக உள்ள காலத்திற்கான நிவாரணத் தொகை வழங்குவது சம்பந்தமாக பின்னர் தனியாக அறிவிக்கப்படும்.

*முற்பகல் 10-40*

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002). பேராசிரியர் க. அன்பழகன், திரு. துரை முருகன், டாக்டர் க. பொன்முடி, திருவாளர்கள் இ. புகழேந்தி, எ.வ. வேலு, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சி. ஞானசேகரன், கு. ஜெயக்குமார், திருமதி எஸ். மகேஸ்வரி, திரு. ஜி.கே. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவர்:

"5-10-2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2002) இப்பேரவை நிராகரிக்கின்றது."



2002 அக்டோபர் 31]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"5-10-2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2002) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருவார். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002) (i) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுடைய தீர்மானமும்...(குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். ஏற்கெனவே இந்தச் சட்டம் சம்பந்தமாக ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் அரசுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது பத்திரிகைச் செய்தி. இந்த நேரத்திலே இப்படி ஒரு சட்டத்தை முன்மொழிவது சரிதானா?

---

(i) 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்வகேட் ஜெனரல் உட்பட சட்ட வல்லுநர்களிடம் இதுகுறித்து ஆலோசனை பெற்றிருக்கிறோம். சட்டமன்றத்தில் இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்து எந்தத் தடையும் இல்லை என்று அட்வகேட் ஜெனரல் உட்பட சட்ட வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருடைய தீர்மானமும், மாண்புமிகு நிதி அமைச்சருடைய தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. புகழேந்தி *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** Point of clarification. Speaker. Sir. *(குறுக்கீடு)* ஒன்றே ஒன்றைக் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுடைய... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி *(குறுக்கீடு)* இல்லை, புகழேந்தி, பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்கு மட்டும் நீதிமன்றம் இருக்கிறது என்று சொன்னால், இதற்கு மட்டும் நீதிமன்றம் பொருந்தாதா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் முடிந்து போய் விட்டது. *(குறுக்கீடு)* என்ன, நீங்கள் அனாவசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ஞானசேகரன், சட்டமன்ற விதிமுறைகளே தெரியாதா? *(குறுக்கீடு)* புகழேந்தி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, அது sub-judice என்னும்போது, இது sub-judice இல்லையா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதற்கு மட்டும் கவர்ன்மெண்ட் அட்வகேட் ஜெனரல் எப்படி பர்மிஷன் கொடுத்தார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, நீங்கள் பேசுங்கள், பேசுங்கள்.





***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மதமானாலும், எந்த சாதியானாலும் இந்த மண்ணில் பிறந்தவர்கள் தமிழர்கள். அவர்களின் உயர்வுக்கு, உரிமைக்கு பாதுகாப்பு அளிக்கின்ற நிலையோடு என்றைக்கும் போராடிக்கொண்டிருக்கின்ற மனித நேயம் மிக்க எனது அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த சகோதரத்துவத்தையே குலைக்கக் கூடிய ஒரு மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கண்டித்து, ஆட்சேபித்து, எதிர்த்து சில கருத்துகளை இங்கே எடுத்து வைக்க நான் விழைகிறேன்.

முதலாவதாக மனம் மாறாத மத மாற்றம் என்பதை எந்த மதமும் ஏற்றுக்கொண்டதாக, ஏற்புடையதாக இருக்கும் என்று நாம் கருத முடியாது. ஒரு மனிதன் அவனது நம்பிக்கைக்கு ஏற்ப இறைவனை வழிபடுவதோ, எந்த மார்க்கத்திற்கு ஏற்ப வழிபாட்டை அமைத்துக்கொள்வதோ அவனது தனிப்பட்ட உரிமையாகும். இப்படிப்பட்ட தனிப்பட்ட உரிமைகளில், விடுதலைகளில், சுதந்திரங்களில் ஒரு சட்டம் தலையிடுமேயானால், அந்தச் சட்டம்தான் அராஜகத்தை உருவாக்கக் கூடியதாக, அந்தச் சட்டத்தின் மூலம் அச்சுறுத்தும்போதுதான் அடக்குமுறைகள் தோன்றுகின்றன. வன்முறைகள் வெடிக்கின்றன. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உங்களுடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு, சிந்தனைக்கு இதை நான் பணிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10—15*

அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் ஒரு கடிதத்தினை சிறுபான்மை மக்களுக்கு, சிறுபான்மையின மக்களுக்கு அறிவிப்பதற்காக அந்தத் தலைவர்களுக்கு எல்லாம் ஒரு கடிதத்தினை, மடலினை அளிக்கிறார்கள். அந்த மடலில் 'நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலையும், மக்களைப் பீதியிலும் பதற்றத்திலும் துடிக்க வைக்கும் கொடுமையும் தொடர்ந்து நிகழ்ந்து வருவதும், தேச ஒற்றுமைக்குப் பெரும் கேடு என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த அவல நிலையை முடிவுக்குக் கொண்டுவரவும், மதச்சார்பற்ற மாண்பைப் போற்றிக் காக்கவும் நான் ஆதரவைக் கேட்கிறேன். சிறுபான்மை மக்களின் நலன் காக்க அனைத்து மத மக்களிடம் சகோதரத்துவத்தை வளர்க்க' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு சிறுபான்மை மக்களுக்குத் தெரிவிக்க,

சிறுபான்மை மக்களுடைய தலைவர்களுக்கெல்லாம் தானே எழுதிய தன்னுடைய கடிதத்தினை, மடலினை அனுப்பியிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமை என்ன? தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றுள்ள நிலைமை என்ன? நாட்டிலே இருக்கின்ற சிறுபான்மை மக்கள், இலட்சக்கணக்கிலே ஏன் நாடெங்கும் பல இடங்களிலே போராட்டங்கள், அவர்களுடைய கருத்துகளை எடுத்து வைக்கிற கோரிக்கைகள், எல்லா வகையிலேயும் தங்களுடைய எதிர்ப்புகளைக் காட்டக்கூடிய நிலைமையிலே இன்றைக்குப் போராடிக்கொண்டிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அமைதியான நீரிலே கல் எறிந்தது ஏன்? அமைதியாக இருக்கின்ற நேரத்திலே ஏன் இந்தச் சலனம்? ஏன் இந்த அலைகள்? கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்னவாயிற்று? வாக்கு சேகரிப்போடு இது மறந்துவிட்டதா? இந்த அவசரமான நிலை என்ன? இப்போது ஏற்பட்ட அவசியம் என்ன? இப்போது இருக்கிற சூழ்நிலையில் இந்தச் சட்டம் தேவைதானா என்ற ஒரு கேள்வி மட்டுமல்ல; நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஏன் அலுவலர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும்கூட நான் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் எல்லா மதத்திற்கும் பொது என்று கூறினால், இந்தச் சட்டத்திலே—எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் படிவத்திலே எடுத்துப் பார்ப்போமேயானால் நோக்கக் காரணங்களுக்கான விளக்க உரைகள். நோக்கக் காரணங்களுக்கான விளக்கவுரைகள் கொடுக்கின்றபோது, ஒன்றை நான் புரிந்துகொள்ள முடிந்தது. விவர அறிக்கையும் கொடுத்திருக்கிறார்கள். காரணங்களுக்கான நிலையும் அதிலே சொல்கிறார்கள். 'தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்தால், அது சமூக விரோத மற்றும் தன்னல அக்கறைக் கும்பல்கள்—சமூக விரோத மற்றும் தன்னல அக்கறைக் கும்பல்கள்—தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த அப்பாவி மக்களைத் தன்னல நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிராக அச்சமூட்டும் நடவடிக்கையாக இருக்கும்' என்று சொல்கின்ற அந்தக் கருத்தைப் பார்க்கின்றபோது ஒன்று மிகத் தெளிவாகப் புரிய வருகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த அப்பாவி மக்களை சமூக விரோதக் கும்பல், தன்னலமுள்ள கும்பல் மாற்றுகிறது என்ற கருத்து வருகின்றபோது — அதிலே முதல்வருடைய பெயரே, கீழே அவரே ஒப்பம் அளித்திருக்கிறார். ஆக இது வருகின்றபொழுது நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் படிவத்தின் மூலமாக, இந்த அறிக்கையின் மூலமாக, இந்தக் கருத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக யாரை சமூக விரோதக் கும்பல்கள், யாரை தன்னலம் கொண்ட சுயநலக் கும்பல்கள் என்று குறிப்பிடுகிறார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். யாரைக் குறிப்பிடுகிறார்கள்? யாரைக் குறிப்பிட வேண்டும்? அப்படியென்றால் என்ன அர்த்தம்? இது மதச் சார்பற்ற அரசா அல்லது ஒரு மதம் பிடித்த அரசா என்பதைத் தெரிவித்தாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களை இப்படிப்பட்ட நிலைமைக்கு மாற்றுகிறார்கள் என்ற அடிப்படையிலே எழுதப்பட்ட இந்த எழுத்தின் காரணமாக நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். சமூக விரோதக் கும்பல் என்று குறிப்பிடுவது யாரை என்பதை இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்.





அதுமட்டுமல்ல. விஷ்வ ஹிந்து பரிட்சத்தினுடைய பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா என்பவர் மதுரையிலே நடந்த ஒரு மாநாட்டில், கொஞ்ச நாட்களுக்கு முன்பு நடந்த அந்த மாநாட்டில் சொல்கிறார். என்ன சொல்கிறார் தெரியுமா? "தலித்துகளை நாம் ஒதுக்கி வைத்திருப்பதுதான் மத மாற்றத்திற்கான அடிப்படைக் காரணம்; இனி நாம் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்." அப்படியென்றால் என்ன பொருள்? தலித்துகளைக் குறித்து சட்டத்தில் வருகிறது. தலித்துகளை நாம் ஒதுக்கி வைப்பதுதான் மத மாற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்று அவர் குறிப்பிடுகிறார். ஆக, மத மாற்றத்திற்கு அடிப்படையாகப் போகக்கூடியது எது? அதைக் களைவது எப்படி? அதற்கான ஆலோசனைகள்; அதை ஏற்பதற்கான நிலைப்பாடுகள், இவற்றைக் குறிப்பிடுவதற்கு, இவற்றைச் செய்வதற்குத் தனியாக நாம் ஆலோசனை குறிப்பிடலாமே தவிர, இந்தச் சட்டத்தை இயற்றுவது அச்சுறுத்தலுக்கொப்பாகப் போகாதா? அதுமட்டுமல்ல. மேலும் இந்தச் சட்டத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் சொல்கிறார்கள். சட்டத்தினுடைய 3—வது பிரிவிலேகூட, 3—வது நிலையிலே சொல்கின்றபோது, ஒரு வார்த்தையை நான் பார்த்தேன். அந்த வார்த்தைகளில் அவர்கள் சொல்வது,

'No person shall convert or attempt to convert either directly or otherwise'

'Any person from one religion to another by use of force or by allurement or by any fraudulent means'

*முற்பகல் 10—50*

நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது தமிழிலே அதைச் சொல்கின்றபொழுது, தமிழிலே சொல்கின்ற வாசகத்தில் கட்டாயப்படுத்துதல் என்பது வற்புறுத்தி, அதைப்போல வயப்படுத்தி, மோசடி பேர்வழிகள் மூலமாக என்ற கருத்தும், 2—வது sub-clause பிரிவிலே சொல்கின்றபொழுது பணம் சார்ந்த அல்லது மற்றபடியான பொருள் சார்ந்த நன்மை எதையும் அளிக்கின்ற வகையில்— இங்கேதான் நாம் கவனிக்க வேண்டும். சட்டத்தை இயற்றுகின்றபொழுது, சட்டத்தை எழுதுகின்றபொழுது, வகுக்கின்றபொழுது, அதிலே இருக்கின்ற வார்த்தைகளுக்கான பொருளையும், அர்த்தத்தையும் தெளிவாகச் சொல்கின்ற நிலை நமக்குத் தெரிந்தால்தான் அதைக் கொடுக்க வேண்டும். இங்கே சொல்கின்ற அந்தக் கருத்துப்படி பார்த்தால், உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தலித் கிருத்துவர்களாக இருக்கின்ற நண்பர்கள், தோழர்கள் +2 படிக்கின்றவரை அந்த தலித் கிருத்துவர்களுக்கு சலுகைகள் கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் கிடையாது, சலுகைகள் கிடையாது என்ற நிலை வருகிறபொழுது, அவர்கள் தொழிற் கல்விக்குப் போகின்றபொழுது, தொழிற் கல்வி பயிலப் போகின்றபோது அவர்கள் தங்களை இந்துக்களாக மாற்றிக்கொண்டு அங்கே தொழிற் கல்வியிலே சேர்ந்து, சலுகை பெற்று படிப்பது, பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆக, அப்படி வருகின்றபொழுது ஒன்றை நான் இதிலே குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அவர்கள் மாறுவதற்குக் காரணம் என்ன? சலுகை இல்லை. அங்கே சலுகை இருக்கிறது. அப்படி மாறுவதற்கான ஒரு நிலையை உருவாக்கியது எது? அரசு தான். இந்தச் சட்டத்தின்படி, கட்டாயமாக அவர்கள்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி. இன்னும் 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். இன்னும் 7 பேர் பேச வேண்டும்.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, நான் முடித்துவிடுகிறேன். இந்தச் சட்டத்தின்படி மறைபொருளாக "or otherwise" indirectly ஓர் அரசாங்கமே ஒருவர் மதம் மாறுவதற்குக் காரணமாக அமைகிறது. ஏதோ ஒரு வகையிலே மறைபொருளாக இதிலே வைத்திருக்கிறது என்கின்றபொழுது, இந்தச் சட்டத்தின் மூலமாக யார் யார்மீது நடவடிக்கை எடுக்க முடியும்? அரசாங்கத்தின்மீது, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துகின்றவர்கள்மீது, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள்மீதுகூட போடக்கூடிய வாய்ப்புகள், சூழ்நிலைகள் இந்தச் சட்டத்தின் ஷரத்துகளிலே



புதைந்திருக்கின்றன. ஆக, இந்தச் சட்டம் என்பது ஒருசாராக, ஒருதலைப்பட்சமாகப் போய்க்கொண்டிருக்கின்ற ஒரு நிலையைத்தான் எங்களால் பார்க்க முடிகிறது. அது மட்டுமல்ல, இது ஒரு கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம். அது என்ன கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் என்றால் எதையுமே கட்டாயப்படுத்துவது எங்கேயுமே நிலைப்பதில்லை. திணிப்பது எதுவுமே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இன்னும்கூட சொல்கிறேன். இந்த அரசாங்கம் இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை, விவசாயிகள் பிரச்சினையாக இருந்தாலும், நெசவாளர்கள் பிரச்சினையாக இருந்தாலும், அரசு ஊழியர், ஆசிரியர் பிரச்சினையாக இருந்தாலும், மாணவர்கள் பிரச்சினையாக இருந்தாலும், அதைப்போல, மக்கள் நலப் பணி, சாலைப் பணியாளர் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் அத்தனையும் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், போராட்டங்களையெல்லாம் மூடி மறைக்க, திசை திருப்ப, இந்த ஒரு மத மாற்றத் தடைச் சட்டம் இங்கே கொண்டுவரப்படுகிறதேயல்லாமல், வேறு அல்ல. அவசியம் இல்லாத காலத்தில், அவசரம் அவசரமாகக் கொண்டுவருகின்ற சட்டம். அண்ணன் தம்பிகளாக வாழ்கின்றவர்களை, தமிழர்களைப் பிரித்து மிகப் பெரிய கொடுமைகளை உருவாக்கக் கூடிய ஒரு சட்டம். இன்னும்கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சில உதாரணங்களைச் சொல்வதற்காக பதில் சொல்கின்றபொழுது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இந்தச் சட்டம் அந்த மாநிலங்களிலே இருக்கிறது என்று யாராவது சொல்வீர்களேயானால், 1968—லே ஒரிசாவிலே, மத்தியப் பிரதேசத்திலே வருகிறது என்றால், கிட்டத்தட்ட 32, 34 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கிருந்த நிலைமை இன்று தமிழகத்திலே இருக்கிறது என்று சொல்ல முடியுமா? அதே சூழ்நிலை இங்கே இருப்பதாக நாம் சொல்ல முடியுமா? அந்தச் சட்டங்களுடைய ஷரத்துகள் வேறு. இந்தச் சட்டத்தின் ஷரத்துகள் வேறு. இது அச்சுறுத்தும் விதமாக இருக்கிறது. இது அவசியம் இல்லாத நேரத்தில் மட்டுமல்ல, பொதுமக்களின் உணர்வுகளைத் திசை திருப்புகின்றவிதமாக இருக்கின்ற

காரணத்தினால்தான் இந்தச் சட்டத்தை நாங்கள் முழுமையாக கடுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல, இதை எதிர்க்கிறோம். மேலும், இந்தச் சட்டம் மதச் சார்புள்ள ஒரு சட்டம். இந்தச் சட்டம் தமிழ்நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சட்டம். இந்தச் சட்டம் இன்றைக்குச் செய்திருக்கிற சூழ்நிலை எதிர்காலத்தில் மிகப் பெரிய அமைதியான இடத்தைப் பாழ்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கிவிடும் சட்டம். ஆகவே இந்தச் சட்டத்தை, மத எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கின்ற இந்த சட்டத்தை முழுமையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆட்சேபிக்கிறோம். கண்டனம் செய்கிறோம், கடுமையாக எதிர்க்கிறோம் என்று சொல்லி முடிக்கின்றேன்.

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா.

***திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊனோடும், உயிரோடும், உயிர் மூச்சோடும் கலந்துவிட்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி உரையைத் தொடங்குகின்றேன். இங்கே கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய சகோதரர் புகழேந்தி அவர்கள், அவருக்குச் சார்பாகப் பேசினாரா அல்லது சட்டத்திற்குச் சார்பாகப் பேசினாரா என்று எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம். ஒரு மனிதன் தானே விரும்பி மதம் மாறுவதை இந்திய அரசமைப்புச் சட்டம் தடுக்கவில்லை. இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு மனிதனுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசியல் சாசனத்தினுடைய 25—வது பிரிவு, ஒரு மனிதன் தான் சார்ந்து இருக்கின்ற மதத்தைப் பிரச்சாரம் செய்ய, மத உரிமைகளைப் பேச அவனுக்கு வாய்ப்புகளை அளித்திருக்கிறது. அதைப்போல, ஒருவர் தானாக விரும்பி இன்னொரு மதத்திற்குச் செல்வதை இந்தச் சட்டம் தடுக்கவில்லை. ஆனால் ஒரு மனிதனை மதம் மாறுவதற்கு கட்டாயப்படுத்துகிறபோது கட்டாயப்படுத்தியோ, ஆசை வார்த்தைகளைச் சொல்லியோ மோசடியாகவோ ஒருவரை மதம் மாற்றம் செய்வதை இந்தச் சட்டம் தடுக்கிறது என்பதை நான் அன்போடு முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ இந்தச் சட்டம் தமிழ்நாட்டிலே மட்டும்தான் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைப் போல உறுப்பினர் இங்கே தன்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.



*1967* ஆம் ஆண்டு ஒரிசாவிலும், *1968* ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்திலும் கொண்டுவரப்பட்டு அதற்குப் பிறகு அருணாச்சலப் பிரதேசம், திரிபுரா போன்ற மாநிலங்களில் எல்லாம் இந்தச் சட்டம் அமலிலே இருக்கிறது என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் சாதாரணமாகக் கொண்டுவரப்படவில்லை. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோதுகூட, உடனடியாக அந்தந்த சர்க்கார்கள் எல்லாம் கொண்டுவந்துவிடவில்லை. இதற்கு கமிஷனைப் போட்டார்கள். நீதிபதி பவானி சங்கர் நியோகி அவர்களுடைய தலைமையிலே ஒரு கமிஷன் மத்தியப் பிரதேசத்திலே நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷனுடைய அறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் அவசியமான சட்டம் என்ற அடிப்படையில் அங்கே கொண்டுவரப்பட்டது. அப்படிக் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து, ஒரிசாவிலே கொண்டுவரப்பட்ட சட்டத்தையும், மத்தியப் பிரதேசத்திலே கொண்டுவந்த சட்டத்தையும் எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கை ஒட்டுமொத்தமாக விசாரித்து, நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலேகூட, இந்தச் சட்டம் செல்லுபடியாகிற சட்டம் என்று தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், ஒரு தலைசிறந்த கருத்தை அந்தத் தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். "மதச் சுதந்திரம் என்பது மதம் மாற்றும் சுதந்திரம் அல்ல" என்று நீதிபதிகள் அந்தத் தீர்ப்பிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் அங்கே கொண்டுவரப்பட்டபோது அந்த மாநிலங்களில் ஆண்ட கட்சி, ஆட்சி கட்சி காங்கிரஸ் கட்சிதான் என்பதை மறந்துவிடக் கூடாது. மதச் சார்பற்ற கொள்கை..(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கிறார். 1968—ல் ஒரிசாவிலே அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சுதந்திரா கட்சி ஆட்சியிலே இருந்தது. 1968—லே மத்தியப் பிரதேசத்திலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது சம்யுக்த விதா யக்தல் அங்கே ஆட்சியில் இருந்தது. திரு. கோவிந்த நாராயண் சிங் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அதுமட்டுமல்ல, அன்றைய தினம் சுதந்திரா கட்சியினுடைய தலைவராக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரி அவர்கள், தன்னுடைய

கட்சியைச் சார்ந்த அந்த முதலமைச்சருக்குக் கடிதம் எழுதுகிறார். 'அதைப்பற்றி நிறைய புகார்கள் வருகின்றன. நீங்கள் இந்தச் சட்டத்தை அமல்படுத்த உட்படும்போது நிறைய புகார்கள் இன்னும் வரும். எனவே அருள்கூர்ந்து அந்தச் சட்டத்தை உடனடியாகக் கைவிட்டுவிடுங்கள். நீங்கள் விருப்பத்திற்கு மாறாக நிர்பந்தப்படுத்துவீர்களேயானால், அந்தச் சட்டத்தை அமல்படுத்துவீர்களேயானால் நிச்சயமாக கிறிஸ்துவ மதம் வளரும், க்ஷீணிக்காது' என்று ராஜகோபாலச்சாரியே சொல்லியிருக்கிறார்.

*முற்பகல் 11—00*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்ததுபோல, இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ஒரிசா மாநிலத்திலும், மத்தியப் பிரதேஷ் மாநிலத்திலும் 1968 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டபோது அப்போது காங்கிரஸ் ஆட்சி இல்லைதான். வேறு ஆட்சிகள்தான் இரு மாநிலங்களிலும் அப்போது ஆட்சி செய்தன. ஆனால் அதன் பின்னர் பல காலம் ஒரிசா மாநிலத்திலும், மத்தியப் பிரதேஷ் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சிகள்தான் நீண்டகாலம் ஆட்சி புரிந்தன. இன்றுகூட மத்தியப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ்தான் ஆண்டு கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் அந்த அளவிற்கு விரும்பத் தகாத சட்டம் என்றால் அத்தனை ஆண்டு காலம் ஒரிசா மாநிலத்தில் ஆட்சி செய்த காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் அரசு ஏன் அந்தச் சட்டத்தை இரத்து செய்யவில்லை? ஏன் அதனைத் திரும்பப் பெறவில்லை? இன்றுகூட, காங்கிரஸ் கட்சி கடுமையாக தமிழ்நாட்டில் கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்டத்தை எதிர்க்கிறதே, இன்றுகூட மத்தியப் பிரதேசத்தில் ஆண்டு கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசு ஏன் இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 34 ஆண்டு காலத்தில் அந்தச் சட்டத்தின்கீழ் ஒருவர்கூட தண்டிக்கப்பட்டதில்லை என்பதுதான் உண்மை. அப்படி இருக்கிற சட்டம் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் பதில் சொல்கிறேன், please. அதானை, ஏன் கைவிடவில்லை என்று கேட்டார்கள். இன்றோடு மத்தியப் பிரதேசத்தினுடைய ஒரு பகுதியாக இருந்து புதிய மாநிலமாக உருவாகியிருக்கிற சட்டீஸ்கர் மாநிலத்திலே அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியோடு அந்தச் சட்டம் காலாவதியாகிறது.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியப் பிரதேஷ் மாநிலத்தில் அந்தச் சட்டம் இன்றுவரை அமலில் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் இன்றுகூட காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது. இதுவரை இந்தச் சட்டத்தின்கீழ் யாரும் தண்டிக்கப்பட்டார்களா, படவில்லையா என்பது பிரச்சினை அல்ல. இந்தச் சட்டம் கொண்டுவருவதே தவறு என்று தமிழ்நாட்டில் வாதாடுகின்ற காங்கிரஸ் கட்சி, தானே ஆட்சி புரிகின்ற மத்தியப் பிரதேஷ் மாநிலத்தில் இன்றுவரை அந்தச் சட்டத்தை ஏன் வாபஸ் பெறவில்லை?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுதான் சொல்கிறேன். Nobody was prosecuted. Nobody was convicted. அதுமட்டுமல்ல. இந்தச் சட்டம் செல்லாத சட்டம் என்று சுப்ரீம் கோர்ட் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டினுடைய தலைமை நீதிபதி ஹிதயத்துல்லா அவர்கள், இந்தத் தீர்ப்பு தவறானது; மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று துணை ஜனாதிபதியாக இருந்த நேரத்திலே குறிப்பிட்டிருக்கிறார். இந்தத் தீர்ப்பு தவறான தீர்ப்பு.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ பேர் கருத்துகள் கூறலாம். அதெல்லாம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பாகிவிடாது. 1977 ஆம் ஆண்டில் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பு இன்றுவரை அப்படியே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது என்று சொன்னார்கள். மத்தியப் பிரதேச மாநிலத்தில் பெரும்பாலும் பூராவும் காடு. அங்கே பீடி இலை எடுப்பது ஒரு பெரிய தொழில். (குறுக்கீடுகள்) பின்னணி சொல்கிறேன். உங்களுக்குப் புரியவில்லை என்றால் அதற்கு நான் என்ன பண்ண முடியும்? அதனுடைய பின்னணி என்ன என்று சொல்கிறேன். பீடி இலை எடுப்பது அவர்களுடைய தொழில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன். ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறார்கள் என்று புரியவில்லை. அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். இவர்கள் ஏன் ஆத்திரப்படுகிறார்கள்?

அங்கே குழுக்களிடையே அடிக்கடி சண்டை வரும். சண்டை வருகின்ற காலங்களில் இதுபோன்ற மத மாற்றப் பிரச்சினைகள் வந்ததாகச் சொல்லப்பட்ட காரணத்தாலே, அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர, இன்றுவரை அமல்படுத்தப்படவும் இல்லை, யாரும் தண்டிக்கப்படவும் இல்லை என்பதுதான் சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள நிலைமை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்ப மத்தியப் பிரதேசத்தைப் பற்றி கேள்வி கேட்கிறேன். மீண்டும் மீண்டும் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சட்டீஸ்கரைப் பற்றியே பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று புரியவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Chattisgarh is a part of Madhya Pradesh. இன்றைக்கும் அமல்படுத்தப்படவில்லை. இருந்தால் சொல்லுங்கள். இப்போதுதான் புதிதாக ஆனது. ஒரு வழக்கு ஏதாவது ஒரு கோர்ட்டிலே, மத்தியப் பிரதேசத்திலே இருக்கிறது என்று இந்த நேரத்திலே சொல்லுங்கள்; என்னிடத்திலே காட்டுங்கள். இல்லாவிட்டால்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர்கூட மத்தியப் பிரதேசத்தில் இந்தச் சட்டத்தில் தண்டிக்கப்படவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. மத்தியப் பிரதேசத்து முதலமைச்சருக்குத் தெரியாதா? அங்கிருக்கிற காங்கிரஸ் ஆட்சிக்குத் தெரியாதா? தெரிந்திருந்தால் இந்தச் சட்டத்தில் ஒருவருமே தண்டிக்கப்படவில்லை என்று இந்தச் சட்டத்தை இரத்துச் செய்துவிடலாம் என்று இரத்துச் செய்திருக்கலாமே; ஏன் இரத்துச் செய்யவில்லை, ஏன் இரத்துச் செய்யவில்லை என்றுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்கிறார்கள்.

*முற்பகல் 11—05*

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே...

**திரு. எச். ராஜா:** தலைவர் அவர்களே...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லிவிடட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமல்படுத்தப்படவில்லை என்று சொன்னாலே, அந்தச் சட்டம் செயலிழந்துவிட்டது என்றுதான் பொருள்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே.....

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** தலைவர் அவர்களே...

**திரு. எச். ராஜா:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) திரு. ராஜா உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் பேசும்போது சொல்லலாம். திரு. அன்வர் ராஜா, நீங்கள் பேசுங்கள்.

***டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, ஒரேயொரு கிளாரிபிகேஷன்...

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் உட்காருங்கள். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு பேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்வர் ராஜா பேசி முடித்துவிடட்டும். பிறகு கூப்பிடுகிறேன் டாக்டர் பொன்முடி

**திரு. அ. அன்வர் ராஜா:** 1982 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காட்டில் கலவரம் நடந்தபோதுகூட, புரட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக அந்தக் கலவரத்தைச் சென்று பார்வையிட்டார்கள். பார்வையிட்டு, அதற்குப் பிறகு நீதிபதி வேணுகோபால் அவர்கள் தலைமையிலே ஒரு கமிஷனைப் போட்டார்கள். அந்தக் கமிஷன் தன்னுடைய பரிந்துரையை தமிழக அரசுக்கு 1986 ஆம் ஆண்டு அளித்திருக்கிறது. அதிலேகூட, நீதிபதி வேணுகோபால் அவர்கள் மிகத் தெளிவாகத் தன்னுடைய பரிந்துரையைத் தெரிவித்திருக்கிறார்கள். அது, தமிழக அரசினுடைய பொதுத் துறை 29—4—1986 ஆம் ஆண்டு அரசாணை நிலை எண் 961—லே காணப்படுகிறது. அதிலே நீதிபதி வேணுகோபால் அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். "மதமாற்றத்தால், இனக் கலவரங்கள்

[திரு. அ. அன்வர் ராஜா] [2002 அக்டோபர் 31

ஏற்படுவதாலும், சட்டம்—ஒழுங்கு மிகவும் பாதிக்கப்படுவதாலும், மத்தியப் பிரதேசம், ஒரிசா, அருணாசலப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் வன்முறை, ஏமாற்றுதல் அல்லது பொருள் உதவி என்ற போர்வையில் மத மாற்றத்தைத் தூண்டுதல் என்பன போன்ற காரணங்களினால் மத மாற்றத்தைத் தடைசெய்து சட்டம் இயற்றியுள்ளதுபோல், தமிழ்நாட்டிலும் இதைப் பின்பற்றி ஒரு சட்டம் இயற்றலாம்" என்று நீதிபதி வேணுகோபால் கமிஷன் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கத்தை...

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே,...

**திரு. எ.வ. வேலு:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிடட்டும், நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்த பிறகு கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. அ. அன்வர் ராஜா:** அந்த வகையில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு மதுரைக்கு அருகில் 250 தலித் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மதம் மாறியிருக்கிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. பத்திரிகையிலே நாம் படிக்கிறோம். காஞ்சிபுரம், இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் சில கோரிக்கைகளை முன்வைத்து மதம் மாறுவதாக அறிவிப்புகள் செய்திருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்திகளைப் படிக்கிறோம். அதோடு அறியாமையிலும், வறுமையிலும் உழலும் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் மத்தியிலே ஊடுருவி, அவர்களிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி மோசடியாக மத மாற்றம் செய்யும் வேலைகள் தீவிரமாகி வருகின்றன. இதனால், மத மோதல்கள் ஏற்பட்டு பொது அமைதி சீர்குலையும் அபாயம் தோன்றியிருக்கின்ற காரணத்தால், இந்த அவசரச் சட்டம் இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் பிறப்பிப்பதற்கான காரணம் நம்பர் 1—பிற மாநிலங்களில் இந்தச் சட்டம் இருக்கிறது. நம்பர் 2 — சுப்ரீம் கோர்ட் இந்தச் சட்டம் சரியான சட்டம் என்று ஏற்கெனவே தீர்ப்பு வழங்கி



2002 அக்டோபர் 31] [திரு. அ. அன்வர் ராஜா]

இருக்கிறது. நம்பர் 3 — நீதிபதி வேணுகோபால் கமிஷன் இப்படிப்பட்ட ஒரு சட்டம் தமிழ்நாட்டிற்குத் தேவை என்று தன்னுடைய பரிந்துரையை தந்திருக்கிறது. நம்பர் 4 — புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று அவர்களுடைய காலத்திலேயே எண்ணி செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு குறிப்பிட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் இந்தச் சட்டம் ஏன் வரவில்லை என்பது முக்கியம் அல்ல. ஆனால் அந்தக் காலத்திலேயே இது வந்திருக்க வேண்டிய சட்டம் என்பதுதான் முக்கியம் என்பதை அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டம் என்பது எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல.

காஞ்சிப் பெரியவர் நம்முடைய சந்திரசேகர சரஸ்வதி சுவாமி அவர்களிடம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அமெரிக்கர் போய் அவரிடம் ஒரு விண்ணப்பத்தைக் கேட்டிருக்கிறார். சுவாமிகளே, நான் இந்து மதத்தினுடைய புத்தகங்களையெல்லாம் படித்து, அதிலே என்னுடைய மனதைப் பறிகொடுத்திருக்கிறேன். அது என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. எனவே நான் இந்து மதத்திலே சேர விரும்புகிறேன். எனவே என்னை இந்து மதத்தில் சேர்த்துக் கொண்டு ஆசிர்வதியுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு காஞ்சிப் பெரியவர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா? ஓர் உண்மையான கிறிஸ்துவனுக்கும், ஓர் உண்மையான இந்துவிற்கும் இடையே எந்தவித வேறுபாடும் இல்லை. எனவே நீ, உன்னுடைய பிறந்த மதமான கிறிஸ்துவ மதத்திலேயே ஓர் உண்மையான கிறிஸ்துவனாக இருந்து வா என்று காஞ்சிப் பெரியவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் படித்தேன்.

அதைப்போல முகம்மது நபி சல்லாஹு அலேஹிவ சல்லம் அவர்களின் காலத்திலேகூட, இப்படிப்பட்ட சர்ச்சைகள் எழுந்துண்டு. இப்படிப்பட்ட சர்ச்சைகள் எழுகிறபோது அவர்களே அதற்குப் பதில் சொல்லி இருக்கிறார்கள். 'லகும் தீனுகும் வலியதீன்'—உங்கள் மார்க்கம் உங்களுக்கு, எங்கள் மார்க்கம் எங்களுக்கு — என்று நபிகள் நாயகம் அவர்கள் பதில் சொல்லியதாக நாம் படிக்கிறோம், பார்க்கிறோம்.

[திரு. அ. அன்வர் ராஜா] [2002 அக்டோபர் 31

*முற்பகல் 11—10*

அதோடுமட்டுமல்லாமல் குர்ஆன் ஷெரீப்பிலேயே இதற்கு விளக்கம் இருக்கிறது. கட்டாயம் மத மாற்றம் என்பதை அல்குரான் ஷெரீப்பும் எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொண்டதில்லை. ஒருவரை மதம் மாறுகின்ற விஷயத்தில் கட்டாயப்படுத்தக்கூடாது என்று குர்ஆன் தெளிவாக்குகின்றது. அதேபோல கட்டாயப்படுத்தி ஒருவரை மதம் மாற்றுவதால் அவருக்கும் பலன் இல்லை. மார்க்கத்திற்கும் புண்ணியம் இல்லை என்பது அருள் குர் ஆன்—இலே சொல்லப்பட்டிருக்கின்ற திருவசனம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டம் கட்டாயமாக ஒருவரை மதம் மாற்றுவதற்கு விதிக்கப்படுகின்ற தடைச் சட்டம் என்பதையும் எந்த மதத்திற்கும் எதிரானது அல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அண்ணல் மகாத்மா காந்தி அடிகள்கூட எனக்கு மட்டும் சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் இருக்குமானால் ஒட்டுமொத்தமாக இந்த மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்த சட்டம் போடிருப்பேன் என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த ஆரம்ப காலங்களில் கம்யூனிஸ்டுகளிலே ஒரு பிரிவினர் தீவிரவாதத்தை ஆதரித்துக்கொண்டிருந்தார்கள் என்ற விஷயம் இந்திய நாடாளுமன்றத்திலே பேசப்பட்டது. இந்த வாதப் பிரதிவாதங்களுக்கு இடையே தலையிட்டுப் பேசிய அன்றைய பிரதமர் நேரு அவர்கள் மிகத் தெளிவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'நீங்கள் கம்யூனிஸ்ட்களால் இந்த நாட்டுக்கு ஆபத்து வரும் என்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் அப்படிக் கருதவில்லை. கம்யூனிசத்தால் இந்த நாட்டுக்கு ஆபத்து வரும் என்று நான் நம்பவில்லை. ஆனால் மத உணர்வால், வகுப்புவாத உணர்வால்தான் இந்த நாட்டுக்கு ஆபத்து வரும் என்று கருதுகின்றேன்' என்று நேரு அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதாக ஒரு வரலாறு உண்டு. "The real danger to the country is not with Communism, but with Communalism" என்று நேரு அவர்கள் அன்றே சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல இந்தியாவினுடைய பிரதமராகயிருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் மத வெறி இந்த நாட்டிலே இருக்கக்கூடாது என்றுதான், என் உடம்பிலே அணிந்திருந்த பூணூலை நான் என்றோ கழற்றி எறிந்துவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இவ்வளவையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு என்ன காரணம் என்றால், மத உணர்வு



2002 அக்டோபர் 31] [திரு. அ. அன்வர் ராஜா]

என்பதும், அந்த உணர்வுகளால் ஏற்படுகின்ற விளைவுகளும் ஒரு நாட்டின் பொது அமைதியைக் கெடுத்துவிடும். எனவே கட்டாயமாக ஒருவரை மதம் மாற்றத் தூண்டுவது என்பதும், கட்டாயமாக மதம் மாற்றுவது, தூண்டுவதால் ஏற்படுகின்ற விளைவுகள் என்ன என்பதையும் அருள்கூர்ந்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று அனைவரையும் நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக அந்த வகையில், ஜாதி, மத, இன உணர்வுகளைக் கடந்து நிற்கின்ற அற்புதமான தலைவராக விளங்கிக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழகம் மிகப் பெரிய வெற்றியை அடையப்போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு மனித நேயம் மிக்க தலைவர் என்று நம்முடைய அன்பிற்குரிய சகோதரர் இங்கு ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். யார் மனித நேயம் மிக்க தலைவர் என்பதை, நான் அதை மட்டும் சுட்டிக்காட்டி விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

வங்காள தேசப் போர் நடந்துகொண்டிருந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை ஒரு கட்டுரையிலே நான் படித்தேன். வங்க தேசப் போர் — வங்காள தேசமும் முஸ்லிம்கள், அவர்களை எதிர்த்துப் போர் புரிகின்ற பாகிஸ்தானும் முஸ்லிம்கள். இரண்டு படைகளுக்கும் போர். அதிலே வங்காள தேசம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இந்தியாவிலிருந்து வங்காள தேசத்திற்கு ஆதரவாக படைப் பிரிவுகள் அனுப்பப்பட்டன. அனுப்பப்பட்ட 'முக்திவாகினி' என்ற அந்த படைப் பிரிவில் — நம்முடைய இந்தியாவில் மெட்ராஸ் ரெஜிமெண்ட், சிக் ரெஜிமெண்ட் என்று பல ரெஜிமெண்டுகள் இருக்கின்றன. இதிலே சிக் ரெஜிமெண்ட் அனுப்பிவைக்கப்பட்டது. சீக்கியர்களைப்பற்றி நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். தங்கள் மதக் கடமையிலிருந்து எந்தக் காலத்திலும் அவர்கள் பின்வாங்க மாட்டார்கள். 1984 ஆம் ஆண்டு Ranjit Singh Mann என்ற Mann கட்சியினுடைய தலைவர் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களோடு வெற்றி பெற்றார். வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்கு உள்ளே நுழைகிறபோது தன்னுடைய உடைவாளை எடுத்துவிட்டுப் போகமாட்டேன். அதாவது கத்தியை எடுத்துவிட்டு நான் உள்ளே போகமாட்டேன் என்று சொன்னார் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஞாபகம் இருக்கும். நீங்கள் கத்தியோடு உள்ளே வரக்கூடாது என்று அவரைத் தடுத்தார்கள். இது என்னுடைய மதச் சின்னத்தினுடைய அடையாளம். இதை எடுத்தால் நான் உள்ளே வருவதற்குக்கூட விரும்பவில்லை என்று நாடாளுமன்றத்திற்கு உள்ளே அவர் நுழையவில்லை. ஏனென்றால் தன்னுடைய மதச் சின்னத்தின் அடையாளமான கத்தியை அவர் எடுக்க விரும்பவில்லை.

அதேபோல, இந்தியாவினுடைய எட்டாவது ஜனாதிபதியாக இருந்தார் கியானி ஜெயில் சிங். அந்த ஜெயில் சிங் ஜனாதிபதியாக இருக்கின்றபோதே அவருக்கு அளிக்கப்பட்ட, அவருடைய சமுதாயத்திலிருந்து அளிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவதற்காக குருத்துவாராவுக்குச் சென்று அந்தத் தண்டனையை நிறைவேற்றினார் என்பதும் உலகறிந்த உண்மை. எல்லோரும் அறிந்த உண்மை. ஏனென்றால் இந்தியாவின் ஜனாதிபதியே அந்த மதக் கடமையை நிறைவேற்றுவதற்குப் போனார் என்கின்ற இந்தச் செய்தியை மனதில் வைத்துக்கொண்டு நான் இந்தச் சம்பவத்தை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக எந்தக் காலத்திலும் தங்களுடைய மதச் சடங்குகளிலிருந்து, சம்பிரதாயங்களிலிருந்து பின்வாங்காத அந்த இராணுவம் நம்முடைய இந்திய இராணுவம், சீக்கியர்கள் முழுக்க முழுக்க இருக்கின்ற சிக் ரெஜிமெண்ட், 'முக்திவாகினி' என்ற பெயரில் உள்ளே போய் பாகிஸ்தானுடைய படைகளை அடித்து நொறுக்கிக்கொண்டு போகிறபோது, அங்கே பார்த்தால் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் ஏற்கெனவே வங்காள தேச வீரர்களைத் தோற்கடித்து விரட்டியடித்துவிட்டு அங்கிருக்கின்ற வங்க தேசப் பெண்மணிகளைப் பிறந்த மேனியாகப் பதுங்கு குழிக்குள்ளே வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு அதைப் பார்த்து என்ன செய்வது என்று புரியவில்லை. அவர்களைக் காப்பாற்ற வேண்டும். என்ன செய்வது? வேறு வழியே இல்லாமல் நம்முடைய சீக்கிய வீரர்கள், இந்திய இராணுவ வீரர்கள், தங்கள் தலைப்பாகைகளை அவிழ்த்து அந்தப் பெண்களிடம் கொடுத்து கட்டிக்கொள்ளச் சொல்லி அழைத்து வந்தார்கள் என்று நாம் படிக்கிறபோது, மயிர்கூச்செரிகிற சம்பவம் அதுதான். நான் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மதம் என்பது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் செல்லும். அந்தக் குறிப்பிட்ட எல்லையையும் கடந்து செல்கின்றது மனிதாபிமானம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மனிதாபிமானம் என்ற அடிப்படையிலேதான் அந்தத் தலைப்பாகையை அவன் அவிழ்த்துப் போட்டான். ஆக, மனிதாபிமானம் என்கின்ற அந்த ஒரு சொல்லுக்கு, பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே என்கின்ற அந்த ஒரு சொல்லுக்கு எடுத்துக்காட்டாக இன்று வாழ்ந்துகொண்டிருக்கிற ஒரே தலைவர், நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தன்னுடைய எதிரியின் மகன் என்று தெரிந்தும்கூட அவனுடைய பசியைப் போக்குவதற்கு உதவிய கருணைமிக்க தலைவி எங்கள் அம்மா அவர்கள்தான் என்பதனை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக,





அப்படி மனிதாபிமான உணர்வோடு இந்த ஆட்சிக்குத் தலைமை ஏற்று நடத்திக்கொண்டிருக்கிற அம்மா அவர்கள் சிறுபான்மைப் பிரதிநிதிகளைச் சந்தித்து, கலந்துரையாடி, இந்தச் சட்டம் உங்களுக்கு விரோதமானது அல்ல, உங்களைப் பாதுகாக்கின்ற சட்டம் என்று தந்திருக்கின்ற உறுதியை சிறுபான்மை மக்கள் ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை ஆதரித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேணுகோபால் கமிஷன், ஏமாற்றி தவறான முறையில் மத மாற்றம் செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்பதோடு அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்கள், அத்தோடு ஆர்.எஸ்.எஸ். நடத்துகின்ற அணிவகுப்புகள், பயிற்சிகளைத் தடை செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்கள் சிறுபான்மைச் சமுதாய மக்கள் மத்தியிலே அச்சத்தையும், பாதுகாப்பற்ற தன்மையையும் உருவாக்கி, பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் ஆபத்தான சித்தாந்தம்; எனவே அதைத் தடை செய்ய வேண்டும். இரண்டையும் தடை செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக்கொண்டார்கள். 16 ஆண்டுகள் கழித்து இன்றையதினம் இந்தச் சட்டம் வருகிறது. எம்.ஜி.ஆர். இருந்தபோதே இந்தப் பரிந்துரை வந்துவிட்டது. எம்.ஜி.ஆர். ஏன் செய்யவில்லை? வேண்டாம். ஒருத்தரை தடை செய்து ஒருத்தரை தடை செய்யாமல் இருப்பது சரியாக இருக்காது; இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேருக்கும் சம உரிமை இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நாடு மதச் சார்பற்ற நாடு என்பதை தமிழகத்திலே நிரூபிக்க வேண்டும் என்றுதான் எம்.ஜி.ஆர். அன்றையதினம் நிறைவேற்றவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே மிக முக்கியமான சட்டமுன்வடிவின்மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற அவைத் தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும், எங்களுடைய கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ.பா. அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டசபை கூடுவதற்கு மூன்று வாரங்கள் இருக்கின்ற ஒரு காலகட்டத்திலே ஓர் அவசரச் சட்டத்தை இந்த அரசு இங்கே கொண்டு வந்திருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தினுடைய நிதி நிலைமைபற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு இந்த அவையிலே ஒவ்வொரு நேரத்திலும் எடுத்து வைக்கின்றார்கள் என்பதை நன்றாக அறிந்திருப்பீர்கள். அதுமட்டுமல்ல, தமிழகம் இன்றைக்கு எத்தகைய ஒரு நெருக்கடியான நிலையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதையும், ஆசிரியர்கள் போராட்டம் ஒரு பக்கம், தொழிலாளர்கள் போராட்டம் ஒரு பக்கம், மாணவர்கள் போராட்டம் ஒரு பக்கம், விவசாயிகள் போராட்டம் ஒரு பக்கம், அரிசி விலை உயர்வு ஒரு பக்கம், காவிரி நீர் இல்லாதது ஒரு பக்கம் என்று அடுக்கடுக்காக நெருக்கடிகள் நெருக்க, இந்த நேரத்திலே இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் என்ன என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் கட்டாய மதமாற்றம் ஏற்படுவதாக இந்த அரசுக்குச் செய்திகள் வந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்படுகின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். இதற்கு ஏதாவது புள்ளிவிவரங்கள் உண்டா? இந்த 20 நாட்களில் எத்தனை கோடி மக்கள் தமிழகத்திலே கட்டாயத்தினால் மதம் மாற்றிக் கொண்டார்கள் என்பதை இந்த அரசால் சொல்ல முடியுமா? என்னைப் பொறுத்த மாத்திரத்தில் இன்றைக்குக் கொண்டுவந்திருக்கின்ற இந்த ஒரு சட்டம் யாரோ ஒருவரை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், யாரோ ஒருவருடைய மனநிறைவுக்காக இதைச் செய்ய வேண்டுமென்பதற்காகவே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. சாதாரணமாக சட்டங்கள் இயற்றப்படும்போது அந்தச் சட்டங்கள் மக்களினுடைய நலத்திற்காகவும், மக்களுடைய மேம்பாட்டிற்காகவும், மக்களைப் பாதுகாப்பதற்காகவும்தான் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் நான் இந்தச் சட்டமன்றத்திலே அழுத்தமாகச் சொல்வேன்; திட்டவட்டமாகச் சொல்வேன். I would say concretely and constructively, without fear or favour. haste or hesitation or even the slightest hindrance to my thinking on this occasion that this legislation. this law, is to protect a particular religion; is to protect a particular group; is to toe line with Hindutva and to please Hindutva. There is no hesitation.....





முற்பகல் 11—20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொன்னதையெல்லாம் நான் மறுக்கிறேன். இதற்கு முன்பாகப் பேசிய திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், வேணுகோபால் கமிஷன் அமைக்கப்பட்டு, வேணுகோபால் கமிஷன், 1986 ஆம் ஆண்டு, தனது அறிக்கையைக் கொடுத்து, அது இந்த அவையில் வைக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டபோது, “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போதே, இத்தகைய சட்டத்தை ஏன் கொண்டுவரவில்லை; அதைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விரும்பவில்லை; அதனால் கொண்டுவரவில்லை” என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்தார்கள். அதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். 1986 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே, வேணுகோபால் கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அது இந்த அவையில் வைக்கப்பட்ட பிறகு, அரசாணை நிலை எண் 916, நாள் 29 ஏப்ரல் 1986 அன்று ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணையின் முக்கியப் பகுதிகளை இப்போது வாசிக்கிறேன்:

“ஆணைக் குழுவின் சட்டரீதியான பரிந்துரைகளையும், நீதி நிருவாக மற்றும் காவல் துறை சம்பந்தப்பட்ட பரிந்துரைகளையும், சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. மேலும், மத மாற்றங்கள் தவறான அடிப்படையில், அதாவது வன்முறையால், பொருள் உதவியால், ஏமாற்றத்தால், இன்னபிற காரணங்களால் நிகழும்போது, அதனைத் தடை செய்ய சட்டம் ஒன்று ஒரிசா, மத்தியப் பிரதேசம், திரிபுரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இயற்றப்பட்டதுபோன்று, தமிழ்நாட்டிலும் இயற்றலாம் என்ற பரிந்துரையையும், இன ஒற்றுமையைக் குலைக்கும் அமைப்புகளின் தீவிர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பரிந்துரைகளையும், அரசு ஏற்கிறது” என்ற அரசாணை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதை ஏற்றுக்கொண்டார்கள். இது 1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவர அவர் திட்டமிட்டபோது, 1987 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்துவிட்டார். அதற்கு வாய்ப்பு இல்லாமல் போனதே தவிர, புரட்சித் தலைவர் அரசு இதை ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரம் இதோ இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஏற்றுக்கொண்டார் என்றால், நானும் அதைத்தான் சொன்னேன். ஏற்றுக்கொண்டாலும், அவர் சட்டமாக இயற்றவில்லை. ஏன் என்று சொன்னால்...(குறுக்கீடுகள்) ஒன்றரை ஆண்டுக் காலமாக... (குறுக்கீடுகள்) இல்லை, 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி அவர் கண்ணை மூடுகிறார். ஒன்றரை ஆண்டு காலம் போதாதா? நீங்கள் 13 மாதங்களில் சட்டத்தை நிறைவேற்றினீர்கள், அவர் ஒன்றரை ஆண்டு காலம் இருந்திருக்கிறார்; ஏன் நிறைவேற்றவில்லை? அவர் நிறைவேற்ற விரும்பவில்லை. அதுதான் உண்மை. அவர் அப்படி இருந்திருந்தால், ஆர். எஸ்.எஸ். பயிற்சிகளுக்கும், ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பிற்கும் நிச்சயமாகத் தடை விதித்திருப்பார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை ஆண்டு காலங்களில் புரட்சித் தலைவர் ஏன் இந்தச் சட்டத்தை நிறைவேற்றவில்லை என்றால், 34 ஆண்டு காலத்தில், மத்தியப் பிரதேசத்தில் இந்தச் சட்டத்தை ஏன் காங்கிரஸ் ஆட்சி வாபஸ் பெறவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு explanation. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...... (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப மத்தியப் பிரதேசத்தையே உதாரணம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவரிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) நிதியமைச்சர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே இருந்தால்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, ரொம்ப கோபப்படாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18—க்கும் மேற்பட்ட சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 18—க்கும் மேற்பட்ட சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இன்று மதியம் ஒரு மணி அல்லது 2 மணிக்குள் எல்லாவற்றையும் முடிக்க முடியுமா என்ற அச்சமும் இருக்கிறது. ஆகவே...(குறுக்கீடுகள்) afternoon we will have it or we will have it tomorrow. That is different.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், 5 நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். புரட்சித் தலைவர் காலத்தில், புரட்சித் தலைவர் இருந்திருந்தால், ஆர்.எஸ்.எஸ்.—க்குத் தடை கொண்டுவந்து இருப்பார் என்று சொன்னார். வேணுகோபால் கமிஷன் பரிந்துரை புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆயப்பட்டது. ஆயப்பட்டு, Indian Penal Code 153 A sub clause (c)-ஐ மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் படித்து இருப்பார். அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவாக "whoever organises any exercise. movement, drill or other similar activity intending that the participants in such activity shall use or be trained to use criminal force or violence or knowing it to be likely that the participants in such activity will use or be trained to use criminal force or violence or participates in such activity, shall be punished with imprisonment which may extend to three years or with fine" என்ற ஒரு provision அதற்குப் பொருத்தமாக இருக்கிறது என்ற காரணத்தால், அதற்கான தீர்வுகளும் இருந்த காரணத்தால், அது

தேவையில்லை என்ற முடிவு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே எடுக்கப்பட்டது என்பதை அந்த அமைச்சரவையில் இருந்தவன் என்ற முறையிலே, அதை அறிந்தவன் என்கின்ற முறையிலே சொல்கிறேன். தெரியாத ஒன்றை மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகின்றேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகின்றேன். அந்த ஆட்சிக் காலத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை தெரியாத நிலையிலே அவைக்குத் தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் தரக் கூடாது என்பதை அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11—25*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் உங்களுடைய கட்சிக்காரர்தான். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உச்ச நீதிமன்றத் தீர்ப்பு..... ஒன்றை..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஒரு சட்டமுன்வடிவோடு முடியக்கூடியதல்ல. இன்னும் 20 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு சட்டமாகவில்லை; அதுதான் நாட்டினுடைய சட்டம். கட்டாயப்படுத்தி எந்த மத மாற்றம் மட்டுமல்ல, கட்டாயப்படுத்தி எதைச் செய்தாலும் கிரிமினல், எதைச் செய்தாலும் நிச்சயமாகத் தண்டிக்கப்படத்தக்க சட்டம். ஆனால் இந்தச் சட்டம் அமல்படுத்தக்கூடிய சட்டமேயல்ல. It is not cognizable. Who is the offended party? Who has complained to you? Nobody. (Interruption) It is not cognizable.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய விதி 3 மற்றும் 5—ன்படி this is absolutely cognizable because — மாண்புமிகு எஸ்.ஆர்.பி.



அவர்களுடைய கவனத்திற்கு — 3 ஆண்டுக்கு மேல் தண்டனை என்றாலே it becomes automatically cognizable. அது உங்களுக்குத் தெரியாதா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது யாருக்கு? 3 ஆண்டுகாலம் யார் மேல்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு மேலே யாருக்கு தண்டனை? 4 ஆண்டு தண்டனை யாருக்கு? ஒரு தலித்தை மத மாற்றம் செய்தால், ஒரு குழந்தையை மத மாற்றம் செய்தால், ஒரு பெண்ணை மத மாற்றம் செய்தால்—ஆக இவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், ஒரு தலித் என்பவருக்கு குழந்தையோட மனப் பக்குவம்தான் இருக்கிறது, எவ்வளவு இழிவுபடுத்துகிற சொல், அந்தச் சொல்? மிகவும் ஆபத்தான சொல், அந்தச் சொல்.

**THIRU K. JAYAKUMAR:** It is misleading.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தலித்தையோ, ஒரு பெண்மணியையோ, ஒரு குழந்தையையோ மதம் மாற்றினால் தண்டனை என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறுவது தவறு. கட்டாயமாக அல்லது ஏமாற்றி மதம் மாற்றினால்தான் தண்டனை என்று இருக்கிறதே தவிர, அவர்களாக விரும்பி மதம் மாறினால் எந்தத் தண்டனையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கட்டாயமாக மத மாற்றம் நடந்தது என்று உங்களுக்கு ஒரு புகாராவது வந்து இருக்கிறதா? வந்து இருந்தால் எவ்வளவு புகார்கள் வந்து இருந்தன? (குறுக்கீடு) இந்த அவசரச் சட்டம் வந்து 20 நாட்கள் ஆகின்றன. (குறுக்கீடுகள்) ஒரு புகார் (குறுக்கீடுகள்)—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இறுதியாக அமைச்சர் விளக்கம் அளிப்பார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். டாக்டர் ஜெயக்குமார், பேசி முடியுங்கள். 2 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 நிமிடங்களுக்கு மேலாகப் பேசி இருக்கிறார். எனக்கு 5 நிமிடங்கள்,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், ஆளும் கட்சியினுடைய எண்ணிக்கை பலம் என்ன என்று தெரியுமா? இரண்டு

பேர் இன்றைக்குப் பேசுவதற்குப் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். ஒருவரைத்தான் நான் பேச அழைத்து இருக்கிறேன். இந்த மாதிரி சிக்கல்களில் நீங்கள் மாட்டினீர்கள் என்றால், உங்களுக்குப் பேச வாய்ப்பே கிடைக்காது. எதிர்க்கட்சிக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பே கிடைக்காது. அவர்களுடைய எண்ணிக்கை பலத்திற்குத் தகுந்தாற்போல வாய்ப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆளும் கட்சியில் 2 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒருவரை மட்டும்தான் அழைத்து இருக்கிறேன். 2 மணித் துளிகளில் பேசி முடியுங்கள், இல்லாவிட்டால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளும் கட்சியின் சார்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, காஞ்சி மடாதிபதியைச் சென்று ஒருவர் சந்தித்ததாகவும், அவர் இந்து மதத்திற்கு வர வேண்டுமென்று மனு கொடுத்ததாகவும், அந்த மனுவை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், நல்ல கிறித்தவராக இருப்பதே நல்ல இந்துவாக இருப்பதற்குப் பொருள் என்ற கருத்தை இங்கே குறிப்பிட்டார். நேற்றையதினம் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் இந்த அவையிலே பேசுகின்றபோது ** இந்தச் சபையிலே, இன்றைக்கு ஒரு வினாவை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறது. ஆதரித்துச் சொன்னதெல்லாம் நீக்கப்பட்டு இருக்கிறது. ஏன், நீங்கள் பாட்டுக்கு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. கு. ஜெயக்குமார்:** மன்னிக்க வேண்டும். இன்றைக்கு ஆளும் கட்சியின் சார்பாகச் சொன்னவர் சொல்கின்றபோது, அவர் ** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஜெயக்குமார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமுன்வடிவினுடைய சுரத்துக்குள் சென்று பேச வேண்டும். ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



மதத்தை விமர்சனம் செய்வது, எந்த ஒரு மதத்தையும் விமர்சனம் செய்து பேசுவது வரம்பு மீறிய ஒன்று. அவர் அதைப் பேசக்கூடாது என்று மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், விருப்பப்பட்டு எந்த மதத்திலும் யாரும் சேரலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக எந்த மதத்தையும் விமர்சனம் செய்யவில்லை. அதிலும் குறிப்பாக இந்து மதத்தை விமர்சனம் செய்கிறார் என்பதைப்போல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அதைக் குறிப்பிட்டுப் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ஜெயக்குமார், பேசுங்கள். நீங்கள் குறிப்பிட்டுப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. கு. ஜெயக்குமார்:** நான் ஒரு மதத்தில் இருக்கின்ற அடிப்படைக் கட்டளைகளைச் சொல்கிறேன். ஒரு மதத்திற்கு வர வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன். சொல்லுங்கள், அடுத்த கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) யார் கணேசனா? யார் பேசுவது? திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடுகள்) செல்வி க. பாலபாரதி (குறுக்கீடுகள்) உட்காருங்கள். 20 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. செல்வி க. பாலபாரதி.

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான சட்டம் வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தின்மீதான கருத்துகளை எதிர்க்கட்சிகள் என்ற முறையில் கூறக்கூடிய கருத்துகளுக்கு முதலமைச்சர் அவர்களும், ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்களும் மிகுந்த கவனத்தோடு கேட்க வேண்டும். இதில் ஓர் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே, ஓர் ஊனமுற்ற குழந்தை அல்லது ஒரு நோஞ்சான் குழந்தையை தாய் அல்லது தந்தை, நோஞ்சான் என்பதற்காகவே கொன்று விடுவது இல்லை. அதைப் போஷித்து வளர்க்கக்கூடிய, காப்பாற்றக்கூடிய ஓர் உணர்வைப்போல இந்தச் சபையில் இருக்கக்கூடிய பெரும்பான்மையான ஆளுங்கட்சியைச்

[செல்வி க. பாலபாரதி] [2002 அக்டோபர் 31

சார்ந்தவர்கள், எதிர்க்கட்சிகளுடைய உணர்வை, கருத்துகளை நீங்கள் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்பதை உங்களிடத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டம் அக்டோபர் 5 ஆம் தேதி அவசரமாகப் பிறப்பிக்கப்பட்டதனுடைய காரணத்தை இந்தச் சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதை அறிந்துகொள்வதற்கு நாங்கள் ஆர்வத்தோடு இருந்துகொண்டிருக்கிறோம். கட்டாய மத மாற்றத்தினால் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய அரசியல் நெருக்கடி என்ன அல்லது அரசியல் நிகழ்வு என்ன? பொருளாதார விளைவுகள் என்ன? இதைப்பற்றியெல்லாம் இந்தச் சபை விவாதித்து அதற்குப் பிறகு இந்தச் சட்டம் தேவைதான் என்றால் உண்மையிலேயே உங்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழகத்தினுடைய அரசியல் சூழ்நிலை தயவுசெய்து அப்படிப்பட்ட ஒரு நிலையில் இல்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்தச் சட்டத்திற்கு பிற்பாடு பல்லாயிரக்கணக்கான சிறுபான்மை மக்கள் இன்றைக்கு 10,000, 20,000 என்று குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். கிராமங்கள் முழுவதும் இருக்கக்கூடிய சிறுபான்மை மக்கள் தங்களுக்கு ஏதோ நிகழப்போகிறது என்ற அச்ச உணர்வுக்கு அவர்கள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே இவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு கொண்டிருக்கிறார்கள். "நம்முடைய மதம் வேடிக்கை பார்ப்பதா" என்று சொல்லி வேறு சில குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்து இருக்கக்கூடிய வகுப்புவாத அமைப்புகள் தீவிரமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வுகளை நீங்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டும் என்பதை நான் உங்களிடம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 20 ஆம் தேதி மதுரையிலே நடந்திருக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட அமைப்பினுடைய மாநாட்டில் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, இப்படி யாரோ ஒருவர் பேசினார் என்று சொல்லி நீங்களாகவே எழுதி வைத்துக்கொண்டு வாசிப்பது என்பது முறையல்ல. பத்திரிகையில் இது வந்தால், அமைதியை குந்தகப்படுத்தக்கூடிய செய்திகள் அவையெல்லாம். தயவுசெய்து அதை விட்டுவிட்டு என்ன கருத்து என்பதை மட்டும் நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 அக்டோபர் 31]

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர......

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொண்டுவருவது சரி. யாரோ ஒரு பிரமுகர் பேசினார் என்று சொல்லி நீங்கள் எழுதி வைத்துக்கொண்டு அதை வாசிப்பது என்பது முறையல்ல. ஆதாரம் வேண்டும். என்னிடம் காட்டியிருக்க வேண்டும். திரு. புகழேந்தி ஒரு விளக்கம் சொன்னார். அதை என்னிடம் கொண்டு வந்து காட்டினார். ஒரு பிரமுகர் பேசினார் என்று சொல்லி அதை நீங்கள் எழுதி வைத்துக்கொண்டு அதைக் கொண்டுவந்து வாசிப்பது என்பது, அது பத்திரிகையில் வந்தது என்று சொன்னால், அதனுடைய விளைவுகள் நன்றாக இருக்காது. அதனால் நீங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் அவர் பேசியதாக சொல்லப்பட்ட அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதி வந்த சட்டம் நம்முடைய தமிழக அரசால் அவசரமாக பிறப்பித்த பின்னால்தான், அந்த மாநாடு மதுரையிலே நடைபெறுகிறது. அதற்குப் பின்னாலேதான் இதுபோன்ற மதவெறியை பிரச்சாரமாகக்கொண்டு அந்தப் பேச்சு பேசப்படுகிறது. அதைத்தான் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதவெறியை பிரச்சாரமாகக் கொண்டு பேசப்படுகின்றது என்று சொல்வது வேறு. திரு. பழனிசாமி மதவெறியைப் பிரச்சாரமாகக்கொண்டு பேசப்படுகிறது என்று சொல்வது வேறு. அவர் பேசியிருக்கிறார் என்று சொல்லி, ஒரு பிரமுகர் பேசினார் என்று சொல்லி வாசிக்கிறது வேறு. இது சட்டமன்ற மரபுக்கே விரோதமானது. அவைக் குறிப்பில் இருந்தும் இவை அனைத்தும் நீக்கப்படுகின்றன.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசும்போது குறிப்பாக தலித் இனத்தைச் சேர்ந்த ** என்ற வார்த்தை, தவறான வார்த்தை. அந்த வார்த்தை வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பிரமுகர் பேசியதாக இவர் வாசிப்பது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள், ஏதோ ஓர் இடத்தில், வேறு ஓர் அமைப்பு, ஒரு தனியார் அமைப்பு நடத்திய ஒரு மாநாட்டில் யாரோ ஒருவர் பேசியதை இங்கே படித்துக்காட்டி, அதை எதற்காகப் படிக்கிறீர்கள் என்று கேட்டால், சமுதாயத்தில் அமைதி சீர்குலைக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக இதை வாசிக்கிறேன் என்று சொல்கிறார். இதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி வாசிக்கிறாரே, அப்படியானால் சிறுபான்மையினத் தலைவர்கள் எல்லாம் இங்கே கூடி ஒரு மாநாடு போட்டார்களே, அப்போது பெரும்பான்மை இன மக்கள் மனம் புண்படும்படி பல கருத்துகள் அந்த மாநாட்டில் பேசப்பட்டனவே, சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதுதான் உங்கள் நோக்கம் என்றால், அதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் ஏன் படித்துக்காட்டவில்லை? ஆகவே எங்கோ, யாரோ பேசுகின்ற கருத்துகளுக்கும் இந்த அரசுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய பேச்சுக்களை எல்லாம் இங்கே வாசிப்பதாக இருந்தால் இரு தரப்பினரின் பேச்சுக்களையும் வாசிக்க வேண்டும். இல்லையென்றால் இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு எனது வணக்கத்தை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட அந்த மாநாடும்கூட அபாயகரமானதுதான். இந்த நிகழ்வுகள் எல்லாம் இந்தச் சட்டம் அமைந்ததற்குப் பிற்பாடு எழுந்திருக்கக்கூடியவை. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். ஆகவே இந்தச் சட்டம் உருவானதற்குப் பிற்பாடு ஏற்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய இந்த நிகழ்வுகளைத் தவிர்க்கவில்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





என்று சொன்னால், நாம் எல்லோரும் ஏதோ ஒருவிதமான நடவடிக்கைகளுக்கு ஆட்பட்டுவிடுவோம். ஆகவேதான் இந்தக் கட்டாய மதமாற்றம் என்பது இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட ஆதிவாசி மக்கள், அவர்கள் தங்களது சமூக அங்கீகாரத்திற்காகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். திருச்சியில்கூட திண்ணியத்தில் மலம் தின்ன வைத்த நிகழ்ச்சி நடந்தது. நிலக்கோட்டையில் சிறுநீரை தாழ்த்தப்பட்டவர்களைக் குடிக்க வைத்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்ணியத்தில் இருவர் — இருவரைக் கொடுமைப்படுத்தி மலம் தின்ன வைத்த சம்பவத்தைப் பற்றிய செய்தி கிடைத்தவுடனே நான் துடித்துப்போய், பதறிப்போய், உடனடியாக குற்றவாளிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறையினருக்கு உத்தரவிட்டேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே ஒருவர் வாயில் கட்டாயப்படுத்தி சிறுநீரை ஊற்றியபோது அதற்குப் பொறுப்பான குற்றவாளிகளையும், உடனடியாக உரிய சட்டங்களின்கீழ் கைது செய்ய வேண்டும், தண்டனை அளிக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்தகைய கொடுமைகள், எங்கே யாருக்கு இழைக்கப்பட்டாலும், மனிதாபிமானத்தின் அடிப்படையில் அவை கண்டிக்கத்தக்கவை. கண்டனத்திற்கு உரியவை. ஆனால் எங்கோ ஒன்று, இரண்டு என்று நடைபெற்ற சம்பவங்கள், ஏதோ தினந்தோறும் தமிழ்நாட்டில் நடைபெறுகின்றன என்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நமது மாநில அரசு நடவடிக்கை எடுத்தது என்பதில் மறுப்பு இல்லை. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது கைது நடவடிக்கை உட்பட எடுத்தார்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இத்தகைய தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் இருந்தும்கூட இந்தச் சமுதாயத்தில் அத்தகைய அவலங்கள் தொடர்கின்றன என்பதை நாம் கவலையோடு பார்க்கிறோம். ஆகவேதான்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலைக்கு மரண தண்டனை அளிக்கும் சட்டங்கள் கூட இருக்கின்றன. அதனால் கொலைகள் நடைபெறாமல் இருக்கின்றனவா? திருட்டுக்குத் தண்டனை வழங்கும் சட்டங்கள்

இருக்கின்றன. அதனால் திருட்டுக்கள் நடைபெறாமல் இருக்கின்றனவா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே எத்தனை சட்டங்கள் இருந்தாலும், குற்றம் புரிபவர்கள், சமுதாயத்தில் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை அவ்வப்போது கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதுதான் ஓர் அரசின் கடமை. அந்தக் கடமையை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும்.

*முற்பகல் 11—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடித்து விடுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணித் துளிகளில் முடித்து விடுங்கள் பாலபாரதி. (குறுக்கீடு)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேறு யாருக்கும் அனுமதி இல்லை. செல்வி பாலபாரதி உரையை முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே இந்தக் கட்டாய மத மாற்றத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறபொழுது சமூக அந்தஸ்திற்காக தாழ்த்தப்பட்டவர்கள் செல்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொல்கிறபொழுது கிறிஸ்துவ மதத்திலேயே இருக்கலாம்; இன்னொரு குறிப்பிட்ட மதத்திற்குள்ளே நுழைய முடியாது. நுழைந்தால் சாதியில் பல படிமானங்கள் அதிகமாக இருக்கின்றன. எந்தப் படிமானத்தில் இணைப்பது என்ற பிரச்சினை வருகிறது. ஆகவே தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் சேவை செய்வது என்ற உணர்வோடு சொல்கிறபோது, அவர்கள் விரும்பி மத மாற்றத்திற்குச் செல்கிறார்கள். கட்டாயப்படுத்துவது என்று சொல்கிறபொழுது....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனம் மாறி, தாங்களே விரும்பி மதம் மாறுவதற்கு இதிலே எங்கே தடை இருக்கிறது? எந்தவிதத் தடையுமே இல்லை. வற்புறுத்தல், கட்டாயப்படுத்துதல், அதுதான் தடை செய்யப்படுகிறதேயொழிய, எந்த ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனும் தாராளமாக மனமுவந்து இஸ்லாமிய மதத்திற்கோ அல்லது கிறித்துவ மதத்திற்கோ போக வேண்டுமென்று விரும்பினால் தாராளமாகச் செல்லலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. இந்த ஆட்சி தடையாக இருக்கவே இருக்காது.





**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு என்னுடைய நன்றி. இந்தச் சட்டத்தில் 'கடவுளின் பெயரால் பயமுறுத்தி' என்று இருக்கிறது. ஆண்டவன் இரட்சிப்பார் என்று ஒரு கிறிஸ்துவ சகோதரர் சொல்கிறார். அதைப் பிடிக்காத அல்லது வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்துபவர் அப்படியானால் என்னை ஆண்டவன் இரட்சிக்கமாட்டாரா; இவர் என்னை பயமுறுத்துகிறார் என்று தவறாகப் பயன்படுத்துவதற்கு....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவர் இரட்சிப்பார், ஏசுபிதா இரட்சிப்பார் என்று சொன்னால், அது பயமுறுத்தல் அல்ல. ஏசுபிதா தண்டிப்பார். நீ மதம் மாறவில்லை என்றால் உயிர் போய்விடும்; உனக்கு வயிற்று வலி வந்து விடும் என்று சொன்னால்தான் அது பயமுறுத்தல் (மேசையைத் தட்டும் ஒலி) இரட்சிப்பார் என்பது பயமுறுத்தல் அல்ல (மேசையைத் தட்டு ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** ஆனால் இந்தச் சட்டம் நடைமுறையிலே வருகின்றபொழுது ஓர் எதிர் உணர்வு, குரோத உணர்வு வருகின்றபொழுது இந்தச் சட்டத்தை இப்படியெல்லாம் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற முறையிலேதான், அரசு, மதவெறி அமைப்புகளுக்கு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த கையில் கொடுத்துவிடக் கூடாது என்ற கவலையோடு நாங்கள் பார்க்கின்றோம்.

அதேபோலத்தான் மதச் சடங்குகளில் பங்கேற்றால்கூட தண்டனை கிடைக்கும். அதைப்போய் பார்த்துவிட்டு வருபவரைக்கூட, பிடிக்காத ஒருவர் வந்து ஓர் அரசியல் நோக்கத்திற்காகவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ, அவருக்குக் கடன் கொடுக்கவில்லை என்றால்கூட, அவர் வந்து complaint கொடுப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகுக்கிறது. ஆகவே இன்னொரு மதத்துக்காரர் கடன் தரவில்லை என்றாலும் சட்டம் பாயும். ஒரு சிறுபான்மை மதத்தைச் சார்ந்த அதிகாரி, கீழ் அதிகாரி வேலை செய்யவில்லை என்று சொன்னால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, முடித்து விடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இவர் என்னை மதம் மாற்ற முயற்சித்தார், ஆகவே என்னை suspend செய்துவிட்டார் என்று சொல்வதற்குக்கூட இந்தச் சட்டம் வழிவகுக்கிறது. ஆகவே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களின் அடிப்படையிலே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த ஒரு மதமாற்ற நிகழ்வு நடைபெறுகிறபோதும் ஆங்கு, தாமாகவே அமைதி முறையில் நடந்தால், எந்தத் தடையுமே இல்லை. வன்முறையிலோ, ஈர்ப்புச் சக்தி மூலமாகவோ ஏழை மக்களை ஏமாற்றி, துன்புறுத்தி மத மாற்றம் நடக்கின்ற இடத்தில் பிறரும் சென்றிருந்தால் அந்தத் துன்புறுத்தலுக்கு அவரும் உடந்தை என்றுதானே பொருள்? அதுதான் சட்டத்தினுடைய நியதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, முடித்துவிடுங்கள். கடைசி வரியைச் சொல்லி முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இன்றைக்கு தமிழகத்தில் மதத்தை மாற்றி எங்கு பிரச்சினை வந்தது என்பதை நாம் விவாதிக்க வேண்டாமா? தமிழகத்தில் திராவிட இயக்கம் 1920—லிருந்து தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், எம்.ஜி.ஆர். அவர்களும், இன்னும் இருக்கக்கூடிய நமது எல்லா திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களும், நீங்கள் எல்லாம் சேர்ந்துதானே இதில் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வளர்த்தீர்கள். இந்த மண்ணிலே யார் மதத்தை மாற்றி என்ன பிரச்சினை ஏற்பட்டது? (மேசையைத் தட்டும் ஒலி) ஒரிஸ்ஸாவிலும், மத்தியப் பிரதேச மாநிலத்திலும் சமூக சீர்திருத்த இயக்கம் கடந்த காலங்களில் வளரவில்லை. தமிழக மண் அப்படிப்பட்ட மண்ணா? இங்கே ஆத்திகக் கருத்தும், நாத்திகக் கருத்தும் சேர்ந்து, சேர்ந்து இருக்கக்கூடிய மண் அல்லவா? ஆகவே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, திராவிட இயக்கத்தைப்பற்றி பாராட்டியதற்கு ரொம்ப நன்றி. உங்களுடைய தலைவர் இராமமூர்த்தி அவர்கள் திராவிட இயக்கத்தைப்பற்றி ஒரு நூலே எழுதியிருக்கிறார். அது என்னவென்று பாருங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தினுடைய நல்ல கருத்துகளைப் பாராட்டுவதில் தவறே இல்லை. அதுதான் மார்க்சியத்தின் சிறப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, செல்வி பாலபாரதி உரையை முடியுங்கள்.



**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து. இந்தச் சபையில் இருக்கக்கூடிய தலைவர்களின் படங்கள் எல்லாம் அரசியல் தலைவர் படங்கள். நாட்டினுடைய போராட்டத்திற்குள் ஈடுபடும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, உரையை முடியுங்கள். திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) செல்வி பாலபாரதி உரையை முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** ஆனால் மடாதிபதிகளுடைய, மத போதகர்களுடைய படங்களை வைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 20 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) பாலபாரதி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினரைப் பேசி முடிக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, கடைசி வாக்கியத்தைச் சொல்லி உரையை முடிக்கச் சொன்னால் முடிக்கமாட்டேன் என்கிறீர்களே?

**செல்வி க. பாலபாரதி:** அரசியலில் மதச் சார்பான கருத்துகளை நாம் தள்ளி வைக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய தமிழகம் பல கலாச்சாரங்களை, பன்முகக் கலாச்சாரங்களைக் கொண்டு சிறந்து விளங்கும். ஆகவே சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மதத்தைச் சார்ந்த மக்கள், இந்த அவையிலேகூட மாண்புமிகு முதல்வர் அவர்களை, அன்னை தெரசா போன்றவர் என்று பாராட்டவில்லையா? எங்களுடைய குலதெய்வம் என்று நமது ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய—மதுரை மீனாட்சியைப் போன்றவர் என்று— நமது சிவகாமி வின்செண்ட் பாராட்டவில்லையா? அவர்களுடைய கடவுள் வேறாக இருக்கும். தனக்கு விருப்பமான அரசியல் தலைவரை, தன்னுடைய மதக் கடவுளை உருவகப்படுத்துவது இங்கே இருக்கக்கூடிய சாதாரண இயல்பு. ஆக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் வீணான பிரச்சினைகளை எழுப்பிவிடும். ஆகவே நீங்கள் இன்னும் கொஞ்சம் பதட்டம் இல்லாமல் ஆய்ந்து ஒரு குழுவிற்கு அனுப்புங்கள் அல்லது இதை நிறுத்தி வையுங்கள் என்று மீண்டும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு நன்றி கூறி அமைகிறேன்.

முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் கடுமையாக எதிர்க்கிறேன். கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்து சில கருத்துகளை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்களின் உரிமைக்காகப் பாடுபடும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் முதலாவது கொள்கைக்கு எதிரான கொள்கை என்ற காரணத்தாலே, எங்களுடைய சமூக நீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்களின் கொள்கைக்கு எதிரான கொள்கை என்ற காரணத்தாலே, நாட்டிலே வாழக்கூடிய சிறுபான்மையின மக்களின் உரிமையை, குரலை, நெறிக்கக்கூடிய சட்டம் என்ற காரணத்தாலே இதை நான் முதலிலே கடுமையாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதத்தின் பெயரால் ஒரு துளி இரத்தம்கூட சிந்தக் கூடாது. தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும். தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'எம்மதமும் சம்மதம்' என்று சொல்லியவர்கள் வாழ்ந்த நாட்டிலே, எல்லா மதத்தவர்களும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த நாட்டிலே, எல்லா மதத்தவர்களும் வாழ்ந்துகொண்டு இருப்பதோடு, மதச்சார்பற்ற நாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிற நம்முடைய நாட்டிலே மதத்திற்கு எதிரான சட்டம் வரக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே மீண்டும் ஒருமுறை கண்டனத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்த காலத்திலே மத மாற்றத்திற்கு அதிகம் செல்லவில்லை. அந்த நேரத்திலே இந்தச் சட்டம் பெரிதாக இங்கே பாயவில்லை. நம்முடைய ஜனநாயக நாட்டிலே இந்தச் சூழ்நிலையிலே இப்படிப்பட்ட சட்டம் தேவையில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று சென்னை எண்ணூரிலே கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கே கடலரிப்பைத் தடுப்பதற்கு தடுப்பு நடவடிக்கை, தடுப்புச் சுவர் தேவை. அந்தப் பணியிலே நாம் கட்டாயம் ஈடுபட்டாக வேண்டும். இங்கே மெரினா கடற்கரையில் கடல் அரிப்பு இல்லை. இங்கே தடுப்பு நடவடிக்கை, தடுப்புச்



சுவர் கட்டாயம் தேவையில்லை. ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில், அமைதிப் பூங்காவாக, மனித நேயத்தோடு எல்லா மதத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவையில்லை என்பதை இங்கே நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நான் சில புள்ளிவிவரங்களோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நாட்டினுடைய மக்கள்தொகையில் கிறித்துவர்களின் எண்ணிக்கை அரசாங்கக் கணக்குப்படி 1971—லே 2.60%, 1981—ல் 2.43%, 1991—ல் 2.34%, 2001—ல் 2.16%. ஆக கிறித்துவ மக்களுடைய மக்கள்தொகை 10 ஆண்டுகளுக்கொரு முறை அரசு சொல்லக்கூடிய அந்தப் புள்ளிவிவரப்படி ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டு வந்திருக்கிறதே தவிர கூடவில்லை. அதைப்போலவே இஸ்லாமியப் பெருமக்களுடைய மக்கள்தொகை 1961—ல் 10.7%, 1971—லே 11.2%, 1981—ல் 11.4%, 1991—ல் 11.7%, 2001—ல் 11.9% இப்படிப் பார்க்கின்ற நேரத்திலே நாட்டிலே மத மாற்றங்கள் ஏற்படவில்லை. மத மாற்றத்தாலே இஸ்லாமியப் பெருமக்களோ அல்லது கிறித்துவப் பெருமக்களோ, மக்கள்தொகை எண்ணிக்கையில் கூடவில்லை என்பதற்கு ஒரு சான்றாகக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் எந்தக் குறிப்பிட்ட மதத்தையும் குறிப்பிடவில்லை. அப்படி இருக்கின்றபோது, இவர் கிறித்துவ மதத்தினைக் குறிப்பிட்டு, இஸ்லாமிய மதத்தினைக் குறிப்பிட்டு இந்த மதங்களைச் சார்ந்தவர்களின் மக்கள்தொகை என்ன, அது எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்று ஏன் சொல்லிக்கொண்டு இருக்கிறார் என்று தெரியவில்லை. அப்படிப் பார்க்கப்போனால், தமிழ்நாட்டில் சிறுபான்மையினங்கள், சிறுபான்மையின மக்கள் என்று சொன்னால் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்று மட்டும்தான் பொருளா? வேறு மதங்கள் இல்லையா? சிறுபான்மையின மக்கள் வேறு பிரிவுகள் இல்லையா? ஜைனர்கள் இல்லையா? ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள், புத்திஸ்டுகள் இல்லையா? சீக்கியர்கள் இல்லையா? பார்சிகள் இல்லையா? யூதர்கள் இல்லையா? இத்தனை பிரிவுகள் இருக்கின்றபோது, இத்தனை மதங்கள் இருக்கின்றபோது, எந்த மதத்தைப் பற்றியும் இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லாதபோது, மாண்புமிகு உறுப்பினர் ஏன் கிறிஸ்தவர்களைப் பற்றியும் இஸ்லாமியர்களைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேச வேண்டும்?

முற்பகல் 11—50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மத மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த மத மாற்றத்தைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் என்று சொல்வதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. யாரும் அப்படி இந்த நாட்டிலே வலுக்கட்டாயப்படுத்தி அல்லது ஆட்படுத்தி, கட்டாயப்படுத்தி மதத்திற்கு மாற்றம் செய்தார்கள் என்று சொன்னால் மதத்திலே மக்கள் தொகையினுடைய எண்ணிக்கை கூடியிருக்க வேண்டுமா, வேண்டாமா? கூடவில்லை. ஆனால் அதே நேரத்திலே கிறிஸ்தவ மதத்தைப்பற்றி, இஸ்லாமிய மதத்தைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்னதற்குக் காரணம் நம்முடைய நாட்டிலே புத்தர்கள் இருக்கிறார்கள். சீக்கியர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தாலும்கூட இந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் கூடுதலான எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக ஆதாரத்திற்காகச் சிலரை மட்டும் குறிப்பிட்டுச் சொன்னேன். இப்படி எந்த மதத்திலும் கட்டாயப்படுத்திய காரணத்தினாலே அந்த மதத்தினுடைய மக்கள்தொகை கூடவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். தவிர, வேறு எதற்காகவும் இல்லை. ஆகவே அந்த வகையிலே நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலே இங்கே கட்டாய மதமாற்றம் என்பது இல்லை. அப்படிப்பட்ட நிலையிலே இல்லை. இங்கு ஒற்றுமையாக, ஒரு தாய் மக்களாக, சகோதரர்களாக, மனித நேயத்தோடு, நல்லிணக்க உணர்வோடு வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே இப்படிப்பட்ட கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் தேவையில்லை என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆக இங்கு எங்கே இருக்கிறது கட்டாயம்? இல்லை, கட்டாயம் என்று யாராவது சொன்னாலும்கூட அது தவறான கருத்து என்பதை நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். இந்தச் சட்டம் என்பது நம்முடைய அரசமைப்புச் சட்டப் பிரிவு 25— க்கு எதிரான சட்டம். ஆகவே இது அரசியல் சட்டத்திற்கு எதிரான சட்டம் என்ற காரணத்தினாலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சட்டம் ஏற்கெனவே ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இந்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 25—வது பிரிவுக்கு எதிரானது அல்ல என்று உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தெளிவாகத் தீர்ப்பளித்துள்ளது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இங்கே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய சிறுபான்மையின மக்கள் எல்லோரும் தங்களுடைய எதிர்ப்புக் குரலைக், கொடுத்து நமக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை என்று எடுத்துக்காட்ட வேண்டுமென்று சொன்னால், உங்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டத்தைத் திரும்பப்பெற வேண்டுமென்று வலியுறுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் மனிதநேயத்திற்கு எதிரான சட்டம், நல்லிணக்கத்திற்கு எதிரான சட்டம், சமூக நீதிக்குப் புறம்பான சட்டம் என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே ஒருவன் தான் விரும்பி — இந்துவாக இருக்கிறவன் விரும்பி — நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள் — இந்துவாக இருக்கக்கூடியவன் விரும்பி இஸ்லாமியனாக மாறலாம். இஸ்லாமியன் கிறிஸ்தவனாக மாறலாம். கிறிஸ்தவன் இந்துவாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அவர்கள் விரும்பி மாறினாலும்கூட இது கட்டாயம் என்று வந்துவிடக்கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலை கட்டாயம் உருவாகும். இதற்கு ஆட்படுவார்கள் என்ற காரணத்தினாலே திரும்பத் திரும்பப் பேசினாலும்கூட நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இன்றைய சூழ்நிலையிலே தேவையில்லாத சட்டம். இந்தச் சட்டம் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டம் என்ற காரணத்தாலே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது. இந்தச் சட்டத்தை வேண்டாம் என்று சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைக் கூற நான் விரும்புகிறேன். ஒரு மத மாற்றத் தடைச் சட்டம் கொண்டுவருவதற்கான அவசியம், நெருக்கடி தமிழ்நாட்டிலே என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அளிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அப்படிப்பட்ட கட்டாயம் தமிழகத்திலே ஏற்படவில்லை. ஆகையால் இப்படிப்பட்ட ஒரு மதமாற்றத் தடைச் சட்டத்தை ஏன் கொண்டு வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி.

*முற்பகல் 11—55*

பொதுவாக மத மாற்றம் ஏற்படுகிற மதத்திலே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அந்த மதத்தை வளர்ப்பதற்கு என்ன சாத்தியக்கூறுகளோ அதைச் செய்ய வேண்டும் அந்த மதத்தினர். அதைச் செய்யாதபோது தான், அந்த மதத்திலே ஒரு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிற போதுதான் தன்னுடைய மதத்தை மறந்து பிற மதங்களிலே சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியா முழுமையும் அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் அந்த மதத்தைப் பாதுகாப்பதற்காக, அந்த மதத்தினுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு, விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சட்டத்தால் எல்லாவற்றையும் தடுத்துவிட முடியுமா? நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அந்தச் சட்டத்தினுடைய பலமும், பலவீனமும் தெரியாத விஷயமா? இப்படிப்பட்ட அவசியம் ஏன் வருகிறது? ஏன் கொண்டு வரவேண்டும்? ஆகையால் இந்தச் சட்டம் வருவதற்கு யாரோ ** அவருடைய முயற்சியால் இதைக் கொண்டு வர வேண்டிய அவசியத்தினாலேதான் இந்தச் சட்டமன்றத்திலே இதை இயற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரியாததல்ல....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரோ ** காரணமாக என்று கூறுவதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன். மன்னிக்க வேண்டுகிறேன். இதில் ஒரு விளக்கத்தை மட்டும் நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோதே சொன்னார். இஸ்லாமிய சமுதாயத்தினுடைய மக்கள்தொகை குறைந்துவிட்டது. கிறித்தவ மதத்தினுடைய மக்கள் தொகை குறைந்து விட்டது. எதற்காக இந்தச் சட்டம் என்று கேட்கிறார். மக்கள்தொகையே குறைந்துவிட்ட நிலையில், மத மாற்றத்தில் அவர்கள் ஈடுபடாத நிலையில், கட்டாய மதமாற்றத்தில் அவர்கள் அறவே ஈடுபடாத நிலையில், எதற்காக

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன



சிறுபான்மையின மக்களுக்கு அச்சம் வேண்டும்? பெரும்பான்மை மக்கள் அல்லவா அச்சப்பட வேண்டும்? ஏதோ இந்தச் சட்டம் கிறித்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் மட்டுமே எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்ற எண்ணம் அவையிலே இருக்க வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். ஓர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் அவர் ஒரு கிறித்தவரையோ அல்லது இஸ்லாமிய குடிமகனையோ இந்து மதத்திற்குக் கொண்டுவர விரும்பினாலும்கூட, கட்டாய முறையிலே கொண்டு வர விரும்பினாலும்கூட, அந்த இந்து மதவாதிமீதும் இந்தச் சட்டம் பாயும் என்பது சட்டத்தினுடைய ஷரத்து அல்லவா? இது நிதர்சனமான உண்மை அல்லவா? இதனை உணர வேண்டும், ** என்று கூறுவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரை மனதில் வைத்துக் கூறுகிறார் என்று தெரியவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொல்வது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இதுவும் குறிப்பாக 1997—லே 11—6—1997, மாண்புமிகு பழனிசாமி அவர்களுக்கு, ** என்று நீங்கள் சொன்னீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. மறுபடியும் அதைப் பயன்படுத்தாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, காரணகர்த்தா என்று சொன்னீர்கள். வேணுகோபால் கமிஷனைப்பற்றி உங்களுக்குத் தெரியும். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருடைய சீடர் நீதிபதி வேணுகோபால் அவர்கள். அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மத மாற்றத் தடைச் சட்டம் ஏன் வேண்டும் என்பதை அவர் மிகவும் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மத மாற்றத்தால் இனக் கலவரங்கள் ஏற்படுவதாலும், சட்டம்—ஒழுங்கு மிகவும் பாதிக்கப்படுவதாலும், மத்தியப் பிரதேசம், ஒரிசா, அருணாச்சலப் பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் வன்முறை, ஏமாற்றுதல் போன்ற காரணங்களால் அல்லது பொருளுதவி என்ற போர்வையில் மத மாற்றத்தைத் தூண்டுதல் என்பன போன்ற காரணங்களால் செய்யப்படும் மத மாற்றத்தைத் தடை செய்து சட்டம் இயற்றி இருந்ததுபோல, தமிழ்நாட்டிலும் இதனைப் பின்பற்றி ஒரு சட்டம் இயற்றலாம் என்று சொன்னவர் ஒரு மதவாதி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன

தந்தை பெரியாரின் வழியில் ஆலயங்களுக்கே செல்லமாட்டேன் என்று சூளுரைத்து அவருக்கே தனிக் கொள்கையை வகுத்துச் செயல்படுகிற திரு. வேணுகோபால் அவர்கள் இப்படிக் கூறியிருக்கிறார். வெவ்வேறு மதத்தினர் வழிபடும் ஆலயங்கள் மற்றும் பொது வழிபாடுகள் மிகவும் அருகருகே உருவாகுவதைத் தடை செய்ய வேண்டும் என்று சொல்லிய அவர்கள், இந்தியாவில் உள்ள அனைவருக்கும் மதவேறுபாடின்றி ஒரு பொதுவான கிரிமினல் நடைமுறை விதித் தொகுப்பு வழங்க வேண்டும் என்று சொன்னார். அதைச் சொல்லிவிட்டு இந்து, கிறித்தவர், முஸ்லீம் என்ற மதப் பாகுபாடின்றி இந்தியக் குடிமக்களின் மனித உரிமையைப் பாதுகாக்க இந்த மதச் சட்டம் வேண்டும் என்று கூறியவர் தந்தை பெரியார் வழிவந்த திரு. வேணுகோபால்.

*நண்பகல் 12—00*

அதுமட்டுமல்ல. 11—6—1997—லே மத்திய அரசு ஒரு அஞ்சலை எழுதியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். இருங்கள், Please. I am not yielding. 11—6—1997—லே மைய அரசு ஒரு கடிதத்தை மாநில அரசிற்கு எழுதி இருக்கிறது. அப்போது மைய ஆட்சியிலே இருந்தபோது அந்தக் குறிப்பிட்ட தேதியிலே இன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் குரல்வளையை நெறிக்கக்கூடிய சட்டம் என்று கூறுகிறார்கள். அப்போது மைய அரசின் ஆட்சியிலே திரு. மாறன் அவர்கள் இருந்தார். திரு. பாலு அவர்கள் இருந்தார். அன்று மத்திய அரசு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அந்தத் தாக்கீதின் அடிப்படையில், 'The Government of Tamil Nadu may examine facts of each case as to whether the said conversion that was going on in Tamil Nadu can be contained by enacting a legislation in line with the provisions of Madhya Pradesh' என அந்தத் தேதியிலே மத்திய அரசு ஓர் அஞ்சல் எழுதியது. அதையொட்டி உடனே மாநில அரசு 10—11—1998—லே Advocate General-உடைய opinion—ஐக் கேட்டது. Advocate General அப்போது வெங்கடபதி. தி.மு.க.வினுடைய தலைமை வழக்கறிஞர்தான். அவர் வழக்கறிஞர். அவர் opinion கொடுத்திருக்கிறார். இப்படிச் சட்டம் கொண்டுவருவதற்குத் தடையில்லை என்று ஒப்புதல் கொடுத்திருக்கிறார். அந்த அளவிற்கு இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு விதையை இட்டது, அந்த விதை முளைத்து வர காரணமாக இருந்தது, தி.மு.க. டெல்லியிலே ஆண்டபோது அங்கு திரு. மாறன் அவர்களும், திரு. பாலு அவர்களும் அமைச்சராக இருந்தபோது அவர்கள் எழுதிய



அஞ்சல், அதற்கு இவர்கள் கொடுத்த பதில், இவற்றை மனதிலே கொள்ள வேண்டும். வித்திட்டது இந்த அரசு அல்ல. வித்திட்டது தி.மு.க.வினுடைய டெல்லி அரசு என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுக்கு மத்தியப் பிரதேசத்திலே இருக்கின்ற இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தைப் போல நீங்களும் ஏன் ஒரு சட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்று கடிதம் அனுப்பியதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் இங்கே தெரிவித்தார். அப்போது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள்கூட மத்திய அமைச்சரவையிலே இருந்தார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, 1997 ஆம் ஆண்டு மத்திய சர்க்கார் கேட்டது என்று சொன்னார்கள். ஆனால் 1997 ஆம் ஆண்டு கேட்டதாகச் சொன்னாலும் அன்றைக்கு ஆட்சியிலே இருந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேயில்லை. கொண்டுவருவதற்கான சாத்தியங்களையோ, கூறுகளையோ, அதை ஏற்றுக்கொள்ளவோ இல்லை என்பது மட்டுமல்ல, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரையே இங்கே அடிக்கடி பயன்படுத்தி தந்தை பெரியார் அவர்களுடைய சீடரான மரியாதைக்குரிய வேணுகோபால் அவர்களைப்பற்றிச் சொல்கிறபோது, தந்தை பெரியார் அவர்களையே இழிவுபடுத்துகிற விதமாகவும் இருந்தது. வேணுகோபால் அவர்கள் ஒரு காலத்திலே பெரியாரின் சீடராக இருந்திருக்கலாம். ஆகவே அவர்கள் இதை எழுதுகின்றபோதும் பெரியாரின் கொள்கையிலே இருந்தார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பெரியாரின் வழியில் இருப்பவர்கள் இதைப் பரிந்துரைக்கவும் முடியாது. இந்த மாதிரியான ஒரு சட்டத்திற்கு வழி வகுத்திருக்கவும் முடியாது என்பதை இங்கே நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. பல மாநிலங்களிலே இந்த மத மாற்றத் தடைச் சட்டம் இருக்கிறது. இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மத்திய அரசு இப்படி ஒரு தாக்கீது

அனுப்பியிருக்கிறது. ஏன் மத்திய அரசே வலியுறுத்தியிருக்கலாமே, இந்தியா முழுவதும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரச் சொல்லி. ஏன் கொண்டுவரச் சொல்லவில்லை? ஏன் அவ்வளவு அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது? அதை அங்கே நிறைவேற்றியிருக்கலாமே, நாடாளுமன்றத்திலே நிறைவேற்றியிருக்கலாமே! அங்கே சொல்லி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கலாமே! ஏன் அங்கே சொல்லவில்லை? இங்கே கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆசையினால்தான் ஒரு சமுதாயத்து மக்கள் மதிக்கப்படவில்லை என்கிறபோது தன் மனம் மாறி, அவன் மதத்தை மாற்றுகிறான், அது உண்மையா, இல்லையா? மதிக்கப்படுகிறதா? நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். இப்போது கொண்டுவரப்படுகிற சட்டத்தைப்பற்றிக் கேட்கிறேன். இதிலே எவ்வளவு கேவலப்படுத்தப்பட்டிருக்கிறது? நீங்கள் சொல்கிறீர்களே, இந்தச் சட்டத்தில் ஒரு சமூகமே இன்றைக்கு கேவலப் படுத்தப்பட்டிருக்கிறதே, உண்டா, இல்லையா? நான் சொல்கிறேன், இந்து மதத்தில் இருக்கிற ஒருவர் வேறொரு சமூகத்திற்கு மதம் மாறினால் 3 ஆண்டு காலம் தண்டனை, 50 ஆயிரம் ரூபாய் அபராதம். ஆனால் தலித் தாழ்த்தப்பட்ட மக்கள், அரிஜன மக்கள் மதம் மாறினால், அதை முயற்சி செய்தால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம், நான்கு ஆண்டு காலம் தண்டனை, ஏன் அவ்வளவு கேவலமாக இருக்கிறான் அவன்? சட்டத்திலே கேவலப்படுத்தப்பட்டிருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தலித் மக்களுக்கு எதிராக அல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** அப்போது இந்த மக்கள் அவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய நோக்கமே. அந்த தாழ்ந்த மக்களிடத்தில் காசுக்காக, பணத்திற்காக, ஆசை வார்த்தைகளைக் காட்டி, அப்படி ஏழ்மையாக இருக்கின்ற மக்களைச் சமுதாயத்திலே வளர்ப்பதற்கு நீங்கள் சட்டம் கொண்டு வந்திருந்தால் உண்மையிலேயே பாராட்டக்கூடியதுதான். இந்தச் சட்டம் அதற்கு வந்திருந்தால் போதும். இலவசம் வழங்குவது போதாதுங்க. இலவசம் வழங்குவது வேறு. அந்தச் சட்டத்தினுடைய நோக்கம் அந்த மக்களை இன்னும் இந்தச் சட்டத்தின் மூலமாகக்கூட கேவலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது, தாழ்த்தப்பட்ட மக்களை, அரிஜன மக்களை அப்படிக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏன் வந்திருக்கிறது? அப்படிப்பட்ட' சூழ்நிலை வருவதற்கான காரணம் என்ன?



ஆகவே இந்த மக்களை, இந்து மதத்திலே பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏதாவது இருக்கிறதா? (குறுக்கீடு) அதற்காக என்ன சட்டங்கள், நுணுக்கங்கள் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, இங்கே பேரவைத் துணைத் தலைவர் ஏதோ சொல்ல இருக்கிறார்.

*பிற்பகல் 12—0.5*

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது இந்த கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிற சூழ்நிலைகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பாதுகாப்பான சட்டம் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று. ஏனென்றால், ஒரு தாழ்த்தப்பட்டவன் S.C.—ஆக இருக்கிறபோது அவன் கிறிஸ்தவனாக மாற்றப்பட்டால்-Scheduled Caste—லிருந்து B.C.—ஆக மாற்றப்படுகிறபோது அவனுடைய சலுகைகள் எல்லாம் போய்விடுகிறது. மாமேதை அம்பேத்கர் Indian Constitution அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அப்படிக்கொண்டு வந்தபோதும் அந்தச் சலுகைகளைப் பறிக்கிற சூழ்நிலைதான் தாழ்த்தப்பட்டவன் வந்தபோதும் கிறிஸ்துவனாக மாற்றப்படுகிறபோது ஏற்படுகிறது என்பதுதான் உண்மை. ஆகவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டம் ஒரு பாதுகாப்பான சட்டம். ஆகவேதான் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையில் அறிமுகப்படுத்தி இருக்கிறார். தாழ்த்தப்பட்ட மக்கள் இதை வரவேற்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு, பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது இந்தச் சட்டத்தில் தலித் இன மக்களைக் குறிப்பிட்டு இருப்பதால் அந்த இன மக்களையே கேவலப்படுத்துவதாகப் பொருள் என்று அவர் வாதிட்டார். அது தவறான வாதம். பொதுவாக இந்தியாவிலேயே தலித் இன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், நசுக்கப்பட்ட மக்கள் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அந்த தலித் . மக்கள், அத்தகைய தாழ்த்தப்பட்ட மக்களாக இருப்பதால் நசுக்கப்பட்ட மக்களாக இருப்பதால், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று, அதனால்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்திலேயே

குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் தலித் மக்களைக் குறிப்பிட்டிருப்பதால் அவர்களைக் கேவலப்படுத்துவதாக அர்த்தமா? (மேசையைத் தட்டும் ஒலி) தலித் இன மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், நசுக்கப்பட்டவர்கள் என்பதால்தான் அவர்களைக் கைதூக்கி விட வேண்டும், அவர்களை உயர்த்த வேண்டும் என்பதற்காக மாநில அரசில் இட ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அவர்களுக்காக பல சலுகைகளைச் செய்திருக்கிறோம். அவர்களுக்கென்று பிரத்தியேகமாக பல சட்டங்களை இயற்றியிருக்கிறோம். அந்தச் சட்டங்களெல்லாம் தலித் இன மக்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காகத்தானே தவிர, அவர்களை கேவலப்படுத்துவதற்காக அல்ல. அதைப்போலவே தலித் இன மக்கள் என்பவர்கள் ஒரு vulnerable section of society என்பதால்தான் இந்த கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தில் கூட அவர்களைக் குறிப்பிட்டிருப்பதற்கு காரணம் அவர்கள் ஒரு vulnerable section of society. அவர்களை யாரும் ஏமாற்றி விடக்கூடாது என்று அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தானே தவிர, கேவலப்படுத்துவதற்காக அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மதம் மாறுவதாலே சலுகைகள் கிடைக்காமல் போகிறது. அதற்காக இது பாதுகாப்பு என்று சொன்னார்கள். மீனாட்சிபுரத்திலே மதமாற்றம் நடைபெற்றது. இந்தியாவிலேயிருந்து பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் மீனாட்சிபுரத்திற்கு வந்தார்கள். திரு வாஜ்பாய் அவர்கள்கூட வந்தார்கள். சென்றவர்கள் எல்லாம் அந்த மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே பேசினார்கள். நீங்கள் மதம் மாறுவதன் மூலமாக உங்கள் சலுகைகள் எல்லாம் போய்விடுகின்றன. கல்விச் சலுகை இல்லை. இடஒதுக்கீடு இல்லை. Scholarship கிடையாது. பண உதவித்தொகை கிடையாது. ஒதுக்கப்பட்ட இடங்களில் தேர்தலிலே நிற்க முடியாது. வேலையிலே ஒதுக்கீடு இல்லை. இவ்வளவு தடைகள் இருக்கின்றன. நீங்கள் ஏன் மதம் மாற வேண்டும்? இந்துவாக மாறி விடுங்கள் என்று சொன்னார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் சலுகைகள் போனாலும் பரவாயில்லை. மதம் மாற மாட்டோம், ஏனென்று சொன்னால் இந்து மதம் எங்களை இழிவுபடுத்துகிறது. நாங்கள் எந்த மதம் என்று சொல்கிறோமோ, அந்த மதத்தினுடைய கோயில்களுக்கு உள்ளேயே எங்களை வரக்கூடாது என்று சொல்கிறார்கள். எனவே அந்த மதத்தை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னார்கள்.



ஆக, தாழ்த்தப்பட்ட மக்கள் இழிவுபடுத்தப்படுகிற காரணத்தாலேதான் மதம் மாறுகிறார்களே தவிர வேறல்ல. இச்சட்டத்தில் fraud and fraudulent means என்று போட்டிருப்பது சரியல்ல. நிச்சயமாக allurement என்று சொல்கின்ற சொல், இதில் இருக்கிற வயப்படுத்துதல். வயப்படுத்துதல் எப்படி வயப்படுத்துவது? (குறுக்கீடு) கல்வி கொடுத்தால் அதற்குப் பெயர் வயப்படுத்துதலா? இல்லை மருத்துவச் செலவு கொடுத்தால் அது வயப்படுத்துதலா? Kootharambakkam dalits raring to convert ஏன் வந்தது? Kootharambakkam dalits raring to convert என்று வருகிறது ஏன்? இழிவுபடுத்துகிறோம். தொடர்ந்து எங்களுக்கு எந்தச் சலுகைகளும் கிடையாது. இந்த மதத்திலே இருக்கிறதனாலே எங்களை மதிக்கவில்லை. எங்களுக்கு மரியாதை இல்லாத இடத்திலே நாங்கள் இருக்க மாட்டோம். எனவே மதம் மாறுகிறோம் என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? சட்டம் தவறானவர்கள் கையில் கிடைத்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். Fraud and fraudulent means, force என்று சொல்லப் போகிறார்கள். இல்லாவிட்டால் force allurement என்று சொல்லப் போகிறார்கள். என்ன? allurement என்றால் என்ன? எல்லாமே allurement தான். வயப்படுத்துதல் என்ற சொல் allurement-க்கு எப்படி சரியானது என்பது தெரியவில்லை. வயப்படுத்துதல் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. Allurement என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இந்தச் சட்டம் நிறைவேறுமேயானால் தவறாகப் பயன்படுத்தப்படும். எனவே, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகிற இந்தச் சட்டம் வேண்டாமென்று அதனால்தான் சொல்கிறேன்.

*பிற்பகல் 12–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி பேசி முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. *(குறுக்கீடு)* ஒரு clarification.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** பொதுவாக ஒரு மத மாற்றம் என்று சொன்னால், எல்லோருக்கும் ஒரு சட்டம் ஒரு சீரான, ஒரே தண்டனையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலேதான் நான் சொல்ல

வந்தேனே தவிர, அந்தச் சட்டத்தில் இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை. அப்படி வருகிற போதுதான் நான் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு வந்ததே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது அப்படி வரலாம்.

இந்து மதத்திலிருக்கிறவர்களில் கடவுளை விரும்பி வணங்குகிறவர்கள் இருக்கிறார்கள். இன்னும், இந்து மதத்திலே கடவுள் கோவிலுக்கே போகாதவர்களும் இருக்கிறார்கள். சில பேர் நாத்திகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் இந்து மதத்திலேதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நாத்திகர்களும் இந்த இந்து மதத்தைச் சார்ந்தவர்கள்தானே? அப்படி இருக்கிறபோது ஒரு சட்டத்தைக்கொண்டு வருகிறபோது, அதில் இருக்கிற ஏற்றத் தாழ்வை ஏன் நாமே பிரித்துப் பார்க்க வேண்டும்? அப்படிப் பிரித்துப் பார்ப்பதிலே என்ன நியாயம் இருக்கிறது? அதைத்தான் நான் சொல்ல வந்தேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன், கீரிப்பட்டி இருக்கிறது, நாட்டார்மங்கலம் இருக்கிறது, இன்னும் அங்கே தேர்தல் நடந்து முடிந்ததா? எத்தனை பாப்பாரப்பட்டி இருக்கிறது? தேர்தல் நடத்த முடிந்ததா? எத்தனை சட்டமுன்வடிவுகளை நாம் தனி அலுவலர்களுக்குக் கொண்டுவருகிறோம்? என்ன அவசியம் இருக்கிறது? அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால், அந்த மக்கள் தனித்தனியாக நின்று, ஆட்சிப் பொறுப்பு ஏற்று இருக்க வேண்டும் என்று சொன்னால், நம்மால் இருக்கிற சட்டத்தை வைத்து பயன்படுத்த முடிந்ததா இதுவரையிலேயும்? பயன்படுத்த முடியவில்லையே? பரிதாப நிலைதானே இருக்கிறது. அப்படி அதனாலேதான் நாங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகையால் ஏழை எளியவர்கள் தன்மானத்தோடு வாழக்கூடியவர்கள்தானே தவிர, தன்மானத்தை இழக்கக்கூடியவர்கள் அல்ல. அதனுடைய பொருள், உள்ளடக்கம் அப்படித்தான் வருகிறது. ஒரு தன்மானத்தை இழந்து, தன்னுடைய காசை, பணத்தைப் பெற்றுக்கொண்டு, ஏழ்மையைப் பயன்படுத்திக் கொண்டு மதம் மாறுகிறார்கள். அதுதானே அதனுடைய உள்நோக்கம்? ஆகையால் தன்மானத்தை இழக்கவில்லை; தன்மானத்தை, ஏழ்மையாக இருந்தாலும், பாதுகாக்கக்கூடியவர்கள்தான் இந்த மதத்திலே இருக்கக் கூடியவர்கள்.



நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். இப்படிச் சட்டம் கொண்டுவரக்கூடிய நீங்கள் எந்த மதத்தைச் சார்ந்திருந்தாலும், மத வெறியர்களுக்கு சட்டம் கொண்டு வந்தால் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அப்படி வந்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) மத வெறியர்களுக்கு, மத வெறியர்களுக்குச் சட்டம் வரவில்லை. மத வெறியர்களுக்கு இந்தச் சட்டம் வரவில்லை. நீங்கள் ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத வெறியர்களுக்குத்தான் இந்தச் சட்டமே. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பழனிசாமி, முடியுங்கள். சட்டமுன்வடிவுகள் நிறைய இருக்கின்றன. முடித்துவிட்டீர்களா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றால் மாறிக் கொள்ளலாம். அதற்குத் தடை இல்லை. நீதிமன்றத்தின் மூலமாக யார் வேண்டுமென்றாலும் மனுச் செய்து மாறிக்கொள்ளலாம் என்றுதான் இப்போது சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங் பரிவார்களுக்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுகிறேன். இது மத வெறியர்கள், கிறிஸ்துவ மதத்தில் இருந்தாலும் சரி, மத வெறியர்கள் இஸ்லாமிய மதத்தில் இருந்தாலும் சரி, மத வெறியர்கள் இந்து மதத்தில் இருந்தாலும் சரி, எந்த மத வெறியர்கள் எந்த மதத்திலே இருந்தாலும், அனைவர் மீதும் இந்தச் சட்டம் பாயும். இது ஒரு நடுநிலைச் சட்டம். இது ஒரு சார்புச் சட்டம் அல்ல என்பதனை நான் தெளிவாக்குகிறேன். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, முடியுங்கள். முடித்துவிட்டீர்களா?

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. முடித்துவிடுகிறேன்.

[2002 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் உரையை முடிக்கட்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் அற்புதமாக, தமிழ்நாட்டிலே நடந்திருக்கிற நிகழ்வுகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மனிதனுடைய மலத்தை மனிதனே தின்கின்ற நிலைகள் இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) சொன்னார்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன். அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) சிறுநீரைக் குடிக்கிற நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின்மீது சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அந்தக் கொடுமைகள் நடக்கின்றனவா, இல்லையா? இப்போதுகூட அரியானாவிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. கொடூரமான சம்பவம். பாருங்கள். 5 தலித்துகள், அவர்கள் மாடு மேய்த்துக்கொண்டிருந்தவர்கள். பசுவினுடைய தோலை உரித்தார்கள் என்ற பெயரால் 5 பேரையும், செத்துப்போன மாட்டை கழுகு தின்றுவிடும் என்பதற்காக, அந்த மாட்டுத் தோலை உரித்ததற்காக 2000 பேர் சேர்ந்து, 5 பேரையும் உயிரோடு கொளுத்தியிருக்கிறார்கள், இந்து மதத்திலே. (குறுக்கீடுகள்) நீங்கள்தானே இந்தியா பூராவும் உதாரணம் சொல்கிறீர்கள். நாங்கள் சொல்லக்கூடாதா? நீங்கள்தான் சொல்கிறீர்கள், இந்தியாவிலே மதம் இங்கே இருக்கிறது, அங்கே இருக்கிறது என்று சொல்கிறீர்கள், நாங்கள் சொல்லக்கூடாதா? இந்த மதத்திற்கு இவ்வளவு பெரிய அவமானம் ஏற்படலாமா? இந்து மதத்தால் பாதுகாக்கப்படுகிறதா?



2002 அக்டோபர் 31] [திரு. ஜி. பழனிசாமி]

நான் இப்போதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் என்பது தமிழகத்திலே ஒரு மத மோதலை உருவாக்கி, அமைதியைச் சீர்குலைக்கும் நிலையைத்தான் உருவாக்கப்போகிறது.

தயவுகூர்ந்து இந்தச் சட்டத்தை (குறுக்கீடுகள்) நாங்கள் எல்லாம் இந்து மதம்தானேங்க (குறுக்கீடுகள்) இங்கே இருப்பவர்கள் எல்லாம் இந்து மதம்தானே? இங்கே பேசுகிறவர்கள் எல்லாம் இந்து மதம்தானே? நாங்கள் எல்லோரும் இந்து மதம்தானே? அன்றைக்குக்கூட அந்தச் சிறுபான்மையினர் நடத்திய கூட்டத்திலே பேசிய அத்தனை பேரும் இந்துக்கள்தானே? அவர்கள் இந்துக்கள் இல்லை என்று சொல்லவில்லையே? அப்படிப்பட்டவர்கள்தானே நாமும் பேசியிருக்கிறோம்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆகவே இந்தச் சட்டம் வருவதற்கு அவசியம் இல்லை. தமிழகத்தில் தேவையில்லை. இந்தச் சட்டத்தை நம்முடைய அரசு திரும்பப் பெற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டு அமைகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ். (குறுக்கீடு) நேரம் இல்லை. உட்காருங்கள். கடைசியாகப் பார்க்கலாம். (குறுக்கீடு) இல்லை. முடியட்டும் பிறகு பேசுவோம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் சில கருத்துகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சிறுபான்மை மக்கள் சார்பாக ஒரு வேண்டுகோளாக நான் வைக்க விரும்புகிறேன்.

கட்டாய மத மாற்றம் என்று சொல்கிறபோது நிச்சயமாக மற்றவர்களைக் கட்டாயப்படுத்தி மதம் மாற்றுகிறபோது நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

இன்றைய சூழ்நிலையில் மத மாற்றம் என்பது ஒருவன் மனம் மாறினால்தான் அவன் மதமாற்றம் அடையமுடியும். பணத்துக்கும், பொருளுக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு மதம் மாறுகிறான் என்று சொன்னால், அவன் உண்மையிலேயே எந்த மதத்தையும் ஏற்று, தழுவிச் செல்பவனாக இருக்க இயலாது. எனவே அப்படிக் கட்டாயமாக மதம் மாற்றுகிறபோது, அதில் குறிப்பிட்ட சாரார் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது நிச்சயமாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது இந்த ஷரத்துகளைப் பார்க்கிறபோது, ஆசைகாட்டியோ அல்லது பொருள் உதவி செய்தோ அல்லது உதவிகள் செய்து நீ இங்கே வருவாய் என்று சொன்னால் உனக்குப் பதவிகள் தருவோம் என்று, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி மாற்றினால்கூட அது மத மாற்றம் என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பொதுவாக, கிருத்தவ மதத்தைப் பொறுத்தவரையில், கல்வி, மருத்துவம், பொதுத் தொண்டு, மக்கள் விழிப்புணர்வு, நாகரிகம், தொழு நோயாளிகளுக்கு மருத்துவமனை, அதுபோல விதவைகளுக்கு ஆதரவு நிலையங்கள், உடல் ஊனமுற்றவர்களுக்குப் பாதுகாப்பு, இப்படி பல்வேறு பணிகளை அவர்கள் செய்து வருகிறார்கள். மன வளர்ச்சி குன்றியவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய இடங்களிலே பெற்றோர்கள் குழந்தைகளைக் கொண்டுவந்து விட்டால் அவர்கள் எங்களை உபசரிப்பார்கள் என்று சொன்னால், அதன்மூலம் எங்களை மதம் மாற்ற முயற்சி செய்தார்கள் என்ற நிலையில் இப்படிப்பட்ட பொதுத் தொண்டு செய்வதுகூட மத மாற்றத்திற்கு உடந்தையாக இருந்துவிடுகிறது என்கிற பொருள்கூட வந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே அவற்றைக் களைந்துவிட வேண்டுமென்று நான் ஒட்டுமொத்தமாக உங்களிடம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு சில கருத்துகளை நான் உங்களிடம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதாவோடு கூட்டணி வைத்தது என்கிற காரணத்தால் சிறுபான்மைப் பிரிவு மக்கள் ஒட்டுமொத்தமாக— மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து மக்கள் விரோத அரசு என்று சொல்லியதன் காரணத்தால்



உங்களோடு கூட்டணி வைத்தார்கள். கூட்டணி வைக்கிறபோது இந்த மதவாதத்தை எதிர்த்து நீங்கள் உறுதியாக சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்ற எதிர்பார்ப்போடு நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டணி வைக்கிற சூழ்நிலையில், அப்படி கூட்டணி வைத்த நேரத்தில் நடந்து முடிந்த தேர்தலிலே சிறுபான்மைப் பிரிவு மக்கள் எங்கிருந்தாலும், எந்தத் தொகுதியில் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக அவர்களுடைய பார்வை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவி என்கிற ஒரு பார்வையின் அடிப்படையில்தான் சிறுபான்மை மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள். ஒட்டுமொத்தமாக நம்மை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி ஒரு சூழ்நிலை நிலவுகிறபோது நாம் நிரபராதியாக கைவிடப்பட்டோமோ என்கிற உணர்வும் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு அம்மா அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் சில தினங்களுக்கு முன்பு கிருத்தவர்கள் சார்பிலே ஒரு பேரணி, ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டைப் பார்க்கிறபோது எனக்கு வேதனையாக இருந்தது. காரணம் என்னவென்று சொன்னால், ஆடு நனைகிறதே என்று ஓநாய் கதறியதாம். அதைப்போல சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் அங்கே அவர்களுக்கு ஆதரவு குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி ரத்தக் கறை படிந்த ஆட்சியாக தமிழகத்திலே இருந்திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தாமிரபரணி ஆற்றிலே 17 பேர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள். கோயம்புத்தூரிலே 19 இஸ்லாமிய இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். இவற்றிற்கு மேலாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்திலே ஜான் ஜோசப் என்கிற ஒரு சாமியார் 1997-லே கற்பழித்தார், கொலை செய்தார் என்ற ஒரு வழக்கைப் போட்டார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்திலே சென்றது. அதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அன்றைக்கு அங்கு காவல் துறை டி.எஸ்.பி.க்களாக இருந்தவர்கள் இரண்டு பேர்கள், ஒருவர் மரியாதைக்குரிய பன்னீர்செல்வம், இன்னொருவர் திரு. பிரேம்குமார். ஆக, இவர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு கடந்த 10 ஆம் தேதி உயர் நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்று தெரியுமா?

சிறுபான்மை மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்திய இந்த உயர் காவல் துறை அதிகாரிகள்மீது F.I.R. போட வேண்டுமென்று உயர் நீதிமன்றத்திலே strictures pass பண்ணியிருக்கிறார்கள். நான் வேதனையோடு சொல்கிறேன், இன்றைக்கு கிறிஸ்தவப் பெருமக்களுக்காகக் குரல் கொடுக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுகிறேன், அன்றையதினம் என்ன சொன்னார்கள் தெரியுமா? இந்த நிகழ்வு நடைபெறுகிறபோது அந்த மடத்திலே பணியாற்றிக்கொண்டிருந்த கன்னிகைகளுக்கு கன்னித் தன்மை இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டுமென்று * தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்த மிகப் பெரிய கொடுமை என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்கட்டும். பதில் சொல்லச் சொல்கிறேன். விளக்கம் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களில் யாராவது ஒருவர் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இதை யாரும் மறுக்க முடியாது என்பது எங்களைப் பொறுத்தவரைக்கும்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, பேசுங்கள் (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பயன்படுத்திய அந்த வார்த்தைகள் முழுவதும் தவறானவை. திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் அப்படிப்பட்ட கருத்தையோ அல்லது எதையுமே சொன்னதும் இல்லை. சிறுபான்மை மக்களுடைய பாதுகாப்புக் காவலனாக இருப்பவர் கலைஞர். அவர்மீது சுமத்திய தேவையில்லாத குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும். அந்த வாசகங்கள் முழுவதையுமாக, குமாரதாஸ் சொன்னதை முழுவதுமாக அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. குமாரதாஸ் சொன்னதும் இருக்கும், நீங்கள் சொன்ன விளக்கமும் இருக்கும். (குறுக்கீடுகள்)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.





**திரு. இ. புகழேந்தி:** அது தவறு, தி.மு.க. அப்படிப்பட்ட கட்சி அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, திரு. குமாரதாஸ் சொன்ன கருத்து, நீங்கள் அதை மறுத்தது பதிவு செய்யப்படுகிறது. இரண்டும் பதிவு செய்யப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே கதை சொல்ல வரவில்லை. (குறுக்கீடுகள்) நான் இங்கே பொய் சொல்ல வரவில்லை. (குறுக்கீடுகள்) நான் இங்கே சொல்வது அத்தனையும் உண்மை. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுங்கள் என்று சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) அந்த வாசகங்களை எல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடலாம். அது தேவையில்லாத விஷயம். நாங்கள் சொன்ன வார்த்தைகளை நீக்கினீர்கள். ஆனால் இந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவில்லை. (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பயன்படுத்தப்பட்ட பல சொற்களை பேரவைக் குறிப்பிலேயிருந்து அகற்றியிருக்கிறீர்கள். குறிப்பாக ** என்பதை அகற்றியிருக்கிறீர்கள். அதேபோல செல்வி பாலபாரதி அவர்கள் பேசியது முழுவதையும் அகற்றியிருக்கிறீர்கள். மற்றவர்கள் பேசியதையும் அகற்றியிருக்கிறீர்கள் இந்த அவையிலே நேரடியாக எவ்வித ஆதாரமுமே இல்லாமல் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்ற நேரத்தில் (குறுக்கீடுகள்) அப்படிச் சொல்லப்படுவதை எப்படி நீங்கள் அனுமதிக்கிறீர்கள்? அதற்கும் இந்தச் சட்டமுன்வடிவிற்கும் என்ன சம்பந்தம்? இந்தச் சட்டமுன்வடிவிற்குச் சம்பந்தமே இல்லாமல் அவர் தன்னை தற்காத்துக் கொள்வதற்காக எதையோ சொல்கிறார். அவர் செய்த தவறை மறைப்பதற்காக ஏதோ சொல்கிறார். அது முறையல்ல. எனவே அதை அகற்றுவதுதான் முறை என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்த 2, 3, வாக்கியங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றப்படுகின்றன. திரு. குமாரதாஸ் மீதியைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டால் அவை அவைக் குறிப்பிலே இருக்கலாம். அவர் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறுகிறார்கள். எனவே அவர்களுக்குப் பேச வாய்ப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ் அவர்கள், நீங்கள் சொன்ன 2, 3, வாக்கியங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அதற்கான ஆதாரங்களை நீங்கள் என்னிடத்திலே கொடுத்துவிட்டு மீண்டும் சட்டமன்றத்திலே அதை நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாக்கியங்களை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியாயிற்று. (குறுக்கீடுகள்) பரிதி, என்ன மறுபடியும் அவைக் குறிப்பிலே சேர்க்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள் அப்புறம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன வழக்குகளில் நீதிமன்றம் போட்ட உத்தரவுகளும் நகல்களும் என்னுடைய கையிலே இருக்கின்றன. அவற்றை உங்களிடம் நான் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ் அவர்கள், அதை என்னிடத்திலே கொடுத்ததற்கப்புறம் மீண்டும் வாய்ப்பு வருகிறபோது அதைப் பேசுவதற்கான வாய்ப்பை அளிக்கிறேன். இப்போது நீங்கள் குறிப்பிட்ட சில வாக்கியங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஐயா, இது அநியாயம். (குறுக்கீடுகள்) ஏன் என்று சொன்னால் (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் சேர்ந்து சத்தம் போட்டவுடனே நான் ஒன்றும் அதிலே பயந்துவிடமாட்டேன் சார்.





(குறுக்கீடுகள்) அந்தக் காரியம் இங்கே நடக்காது. நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். * கன்னித் தன்மை இருக்கிறதா என்று பரிசோதனை நடத்துவதற்காக மாவட்ட காவல் துறையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அழைத்தது நூற்றுக்கு நூறு உண்மை, உண்மை, உண்மை என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் அவர்கள் என்னிடத்திலே பேசுங்கள். நீங்கள் அந்த ஆதாரங்களை என்னிடத்திலே கொடுத்துவிட்டு மீண்டும் இந்த அவையிலே பேசுகின்ற வாய்ப்பு வருகிற நேரத்திலே உங்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பை நான் வழங்குகிறேன். இப்போது சட்டமுன்வடிவின் மேலே பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலேயிருந்து அதை நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீக்கப்பட்டுவிட்டன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல....

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரங்களை தற்போதே தருகிறேன் என்று சொல்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆதாரங்களைப் பார்க்கலாமே? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, குமாரதாஸ் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிறுபான்மை மக்கள் நடத்திய கூட்டத்தில் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அருமை இந்துச் சகோதரர்களை திருடன் என்று சொன்னவரும் இதே கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) ஆக, அவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, (குறுக்கீடுகள்) சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டு, சிறுபான்மை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மக்களை ஒட்டுமொத்தமாகப் பகைத்துக் கொண்டு, (குறுக்கீடுகள்) சிறுபான்மை மக்களால் தூக்கி எறியப்பட்ட கலைஞர் அவர்கள், இன்றைக்கு சிறுபான்மை மக்களுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, நான் உங்களுடைய பாதுகாவலனாக வருகிறேன் என்று சொன்னால், (குறுக்கீடுகள்) இதைவிடக் கேவலமான, மலிவான அரசியல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆனால் அம்மா அவர்களிடம் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், அம்மா நீங்கள்தான் எங்களுடைய பாதுகாவலர், நீங்கள் தமிழகம் மட்டுமல்ல, இந்திய நாட்டையே ஆள வேண்டும் என்பது சிறுபான்மை மக்களுடைய ஆவல். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) எனவே நாங்கள் சிறுபான்மை மக்கள் சார்பாக (குறுக்கீடுகள்) இந்தப் பகுதியில் இருக்கக் கூடிய பெருவாரியான மக்கள் (குறுக்கீடுகள்) ஒட்டுமொத்தமாக அதை எதிர்க்கிறபட்சத்திலே.... (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒட்டுமொத்தமாக எதிர்க்கிற சூழ்நிலை, நீங்கள் சிறுபான்மை மக்களுக்கு .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் தி.மு.க. உறுப்பினர்கள், உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஆதரவு தருகின்ற விதத்தை, சட்டத்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், உட்காருங்கள். நான் தீர்ப்பு சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். அனைவரும் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) புகழேந்தி முதலில் இருக்கைக்குச் செல்லுங்கள், சொல்கிறேன். உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்) உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். முதலில் உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) உங்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சியினுடைய உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். எல்லோரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) குமாரதாஸ் அவர்கள் (குறுக்கீடுகள்) இல்லை உட்காருங்கள், முதலிலே எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். உட்காருங்கள், சொல்கிறேன். முதலிலே அமைதியாக அமருங்கள்.



(குறுக்கீடுகள்) பொன்முடி அவையினுடைய விதிமுறை உங்களுக்குத் தெரியும். அமைதியாக அமருங்கள். குமாரதாஸ் அவர்கள் என்ன கருத்தை இப்போது சொல்ல வருகிறீர்கள்? நீங்கள் சொல்லுங்கள். கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) குமாரதாஸ் அவர்கள் பேசுகிற அந்த விவரத்தை ஏற்கெனவே ராஜா அவர்கள் (குறுக்கீடுகள்) என்னிடத்திலே கொடுத்துவிட்டார். உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். ராஜா அவர்கள் ஏற்கெனவே அதை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** ராஜா சமபந்தப்பட்டது அல்ல. குமாரதாஸ் சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் சம்பந்தப்பட்டது. குமாரதாஸ் அவர்கள் நீங்கள் இதற்கான ஆதாரத்தை, முதலிலே ஓர் ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் பேசியதற்கான ஆதாரத்தை கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் படித்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே இப்போது நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின் மேலே பேசி முடித்துவிடுங்கள். அதற்குள் நான் அந்த ஆதாரத்தைப் பார்த்து, அவைக் குறிப்பிலே சேர்க்க வேண்டுமா என்கிற தீர்ப்பை நான் கொஞ்சம் பொறுத்துச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடத்திலே இன்னும் கொடுக்கவில்லை. ராஜா அவர்கள் என்னிடத்திலே ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் பேசுகிறபோது சொல்லவிருக்கிறார்கள். அதை அவர்கள் பேசும்போது சொல்லட்டும். ஆகவே இப்போது நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இப்போது சொல்கிறேன். சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது சம்பந்தமாக ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் பேசியது இனிமேல் point of order கிடையாது. (குறுக்கீடுகள்) அடுத்து அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) பேசியதைத்தான் சொல்கிறேன். நீக்கப்படுகிறது. அவர் கொடுக்கவில்லை. முன்கூட்டியே ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். அவர் கொடுக்கவில்லை. அதனால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது முன்கூட்டியே ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு அதைக் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டும். ராஜா அவர்கள், அவர்கள் பேசுவதற்காக ஓர் ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் பேச இருக்கிறார்கள். குமாரதாஸ் அவர்கள் அந்த ஆதாரத்தைக்

கொடுக்கவில்லை. அவர் முதலிலே பேசிய ஒரு கருத்துக்கான ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறார். அதை நான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். அதிலே உண்மை இருக்குமேயானால், அதை அவைக் குறிப்பிலே நான் ஏற்ற இருக்கிறேன். இல்லையென்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். ஆகவே நீங்கள் அவர் பேசியது தவறு என்றால் இருக்கையிலிருந்து சொல்ல வேண்டுமே தவிர, அத்தனை பேரும் வந்து, அவர்களோடு நீங்களும் முறைகேடாக நடந்துகொண்டால், அது முறைகேடல்லவா! (குறுக்கீடுகள்) இருக்கையிலேயே எழுந்தல்லவா சொல்ல வேண்டும்! (குறுக்கீடுகள்) இல்லை. பேரவைத் தலைவரை வந்து தர்ணா செய்வதைப் போல, முற்றுகையிடுவதைப் போல நீங்கள் வருவது என்பது – தொடர்ந்து சட்டசபை ஆரம்பத்திலிருந்து இதைச் செய்துகொண்டு இருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, சட்டமன்ற விதிகளுக்குட்பட்டு, அவர் ஆதாரத்தைக் கொடுக்காத காரணத்தால் அதை அவைக் குறிப்பிலிருந்து இப்போது நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*பிற்பகல் 12–30*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொட்டு வைத்த இந்துச் சகோதரர்களைப் பார்த்து உன்னுடைய நெற்றியிலே இரத்தம் வருகிறதா என்று கிண்டல் பண்ணவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணாரியம்மன் கோவிலுக்குச் சென்று தீ மிதித்தவர்களைப் பார்த்து அமைச்சரவையிலிருந்து எடுக்கவில்லையா? ஆக, இந்துச் சகோதரர்களை எப்படியெல்லாம் பழி வாங்க வேண்டுமோ அப்படியெல்லாம் செய்யவில்லையா? அதுமட்டுமல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** கடந்த பாராளுமன்றத்திலே....

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்த மசோதா....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி முறைகேடாகப் பேசுவது சரியல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** வரம்பு மீறிய முறையில் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசியது முறையற்றது. அவர்களுடைய தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர் பேசியதை அவைக் குறிப்பிலே ஏறாமல் இருக்க உத்தரவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறவில்லை.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமாரதாஸ் அவர்கள் அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிற மசோதாவின்மீது தன் கருத்துகளைச் சொல்ல வேண்டுமே தவிர, தேவையில்லாத பிரச்சினைகளை (குறுக்கீடு) நான் உங்களிடத்தில் கேட்கவில்லை. I am appealing to the Chair.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** I am appealing to the Chair. I am not arguing with you. I am appealing to the Chair. தேவையில்லாத பிரச்சினைகளைப் பேசுவதால்தான் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு கட்சிக்கும், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு கொள்கை உண்டு. அந்தக் கொள்கையைப் பேசுவதற்கு உரிமை உண்டு. அப்படி ஆயிரம் கருத்துகளை வெளியிலே பேசலாம். அவ்வளவையும் இங்கே வந்து எடுத்துச் சொல்வது, அதற்கு நாங்கள் பதில் சொல்வது என்றிருந்தால் இந்த அவையினுடைய பணிகள் செம்மையாக நடைபெறாது. ஆகவே இதில் என்ன தொடர்பு உடையது என்றுதான் பேச வேண்டுமே தவிர மற்றபடி அவர் பேசியது மாதிரி திருப்பிப் பேச ஆரம்பித்தால், சபையினுடைய நேரம்தான் வீணாகும். எனவே தாங்கள் அதற்கு அருள்கூர்ந்து ஓர் அறிவுரை வழங்கி முற்றுப்புள்ளி வைத்து சபையை நடத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் உடல் நலக் குறைவோடு இருக்கிறீர்கள். தயவுசெய்து அமருங்கள். டாக்டர் குமாரதாஸ் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் இவற்றைச் சொல்ல வேண்டி இருக்கிறது இல்லையா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் இப்போது என்ன சொல்கிறார் என்று சொன்னால், அவர்களுடைய தலைவர் தேவையில்லாமல் அவைக்கு வெளியே இந்துக்களின் மனம் புண்படும்படி, இந்துக்கள் திருடர்கள் என்று கூறுவார். அதை இந்த அவைக்குள்ளே சுட்டிக்காட்டக் கூடாது என்று கூறுகிறார் திரு. துரைமுருகன் அவர்கள். அவர்களுடைய தலைவர் இந்துக்கள் பொட்டு வைப்பதும், தீ மிதிப்பதும் தவறு என்று வெளியே பேசுவார். ஆனால் அதை இந்த அவைக்குள்ளே சுட்டிக்காண்பிக்கக்கூடாது என்று திரு. துரைமுருகன் கூறுகிறார். எப்படியோ போகட்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அவர்களுடைய தலைவர் எதையாவது உளறிக்கொட்டி விடுகிறார், அதற்கு இவர்கள் இங்கே பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள் என்றுதான் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் ஒன்றை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Religious fundamentalists என்பவர்கள், மத வெறியவர்கள் என்பவர்கள், மதவாத தீவிரவாதிகள் என்பவர்கள் எல்லா மதங்களிலும் இருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, இது கிறிஸ்தவர்களிலும், இஸ்லாமியர்களிலும் இருக்கின்ற Religious fundamentalist–களைக் குறிப்பிடும் என்று நீங்கள் எடுத்துக்கொண்டால், இந்து மதத்தில் இருக்கிற Religious fundamentalists மதவாத தீவிரவாதிகளுக்குக்கூட இந்தச் சட்டம் பொருந்தும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சிறுபான்மையின மக்களுக்கு இதுவரை எந்த வகையில் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்ததோ அது தொடரும்; அதைப்பற்றி எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்ற உத்தரவாதத்தை நான் அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் பேசும்போது சிறுபான்மை மக்கள் நடத்திய அந்த மாநாட்டில் கலைஞர் அவர்கள் இந்துக்களை திருடன் என்று குறிப்பிட்டதாகச் சொன்னார். அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர் என்ன சொன்னார் என்றால், இந்து விஸ்வ கோஷ் என்ற இந்தி அகராதியில், மத்திய அரசினுடைய கல்வி அமைச்சகம் வெளியிட்ட அந்த அகராதியில், இந்து என்பதற்கு என்ன பொருள் இருக்கிறது என்பதைச் சொல்லிவிட்டு, அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் சொன்னாரே தவிர, இந்து என்றால்





திருடன் என்று வற்புறுத்தி அவர் அங்கே குறிப்பிடவில்லை. இரண்டாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவ:'கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல கலைஞர் அவர்களுக்கு உளறத் தெரியாது. ஆதாரத்தோடுதான் பேசுவாரே தவிர, எங்கேயும் அவர் உளறியதாக இதுவரையிலே, அவருடைய 79 ஆண்டு கால வரலாற்றில் குறிப்புகள் கிடையாது.

*பிற்பகல் 12–3.5*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, திருடன் என்று கலைஞர் அவர்கள் கூறவில்லை என்று சொன்னார். பிறகு அதற்கு விளக்கமும் தந்ததாகச் சொன்னார். சிறுபான்மை மக்களுடைய அந்த மாநாட்டில் சென்று கஷ்டப்பட்டு இந்து என்பதற்கு என்ன பொருள் என்பதை எந்தெந்த dictionary-யில் எல்லாம் இருக்கிறது என்று தேடி, இந்து என்பதற்கு திருடன் என்று பொருள் என்று அந்த மாநாட்டில் சொல்லி, பிறகு தன்வாயிலாகச் சொன்னால், இந்துக்கள் எதிரிகளாகி விடுவார்கள் என்பதைக் காட்டி dictionary-யில் சொல்லப்பட்டிருக்கிறது என்று, அகராதியில் சொல்லப்பட்டிருக்கிறது என்று அகராதி மூலமாக இந்துக்கள் திருடர்கள் என்று கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார். தான் சொன்னதாகச் சொல்லவில்லை. அகராதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதைச் சென்று சிறுபான்மையினர் கூட்டத்தில் ஏன் சொல்ல வேண்டும்? இந்துக்கள் திருடர்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை, அகராதியில் இருப்பதை, சிறுபான்மையினர் மாநாட்டில் சென்று அந்தச் சிறுபான்மையினரை அவர்களின் மனதைத் திருப்திபடுத்த, இந்துக்கள் திருடர்கள் என்று dictionary-யிலே சொல்லப்பட்டிருக்கிறது, அகராதியிலே சொல்லப் பட்டிருக்கிறது நான் சொல்லவில்லை, நான் சொல்லவில்லை என்று சொல்லிக் கொண்டு, இந்துக்களை நீங்கள் திருடர்கள், திருடர்கள் என்று அகராதியைச் சுட்டிக்காட்டிச் சொல்லி, இந்துக்கள் மனதைப் புண்படுத்தி திரு. கருணாநிதி அவர்கள் ஓரிரு மதத்திற்கு சார்பாகச் சென்று இந்து மதத்தை எதிர்க்கின்றார். திருடர்கள் என்று சொல்லி இருக்கின்றதே உண்மை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி சொல்ல முடியாது என்பதை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்லும் வகையில், திரு. ராஜா அவர்கள் என்னிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக

வெளியிடப்பட்ட ஒரு வெளியீட்டை ஆதாரமாகக் கொடுத்து, அது சம்பந்தமாகப் பேச வேண்டுமென்று கூறியிருக்கிறார். திரு. ராஜா அவர்கள் என்ன விளக்கம் சொல்கிறீர்கள்?

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இந்து விஸ்வ கோஷ் விளம்பரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்து விஸ்வ கோஷ் புத்தகத்தினுடைய *360, 361* ஆம் பக்கத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பது ஏற்கெனவே சபாநாயகர் அவர்களிடம் சொல்லிவிட்டு, காட்டிவிட்டு, அதை நான் படித்துக் காட்டுவதற்காக என் கையில் வைத்திருக்கிறேன். அவரிடம் ஏற்கெனவே கொடுத்தும் இருக்கிறேன். அதே பக்கம்தான். அதே வரிகள். ஆங்கிலத்திலே சொல்வார்கள் statement of untruth and half truth என்று சொல்வார்கள். அதாவது அந்தப் புத்தகம் ஒரு கலைக் களஞ்சியம். இந்து என்பதற்கு ரிக் வேத காலத்திலிருந்து என்ன என்னவெல்லாம் அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, உலக நாடுகளிலே எங்கெங்கெல்லாம் என்னென்ன அர்த்தங்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள் என்பதைப் பற்றி அந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஒரே வரியிலே இருக்கின்ற முதல் பகுதியை விட்டுவிட்டு, அரை வரியை மட்டும் சொல்லி இந்துக்களை திருடன் என்று உள்நோக்கத்தோடு, திட்டுவதற்காகச் சொல்லப்பட்ட statement தான் அது. கைதட்டல் வாங்க வேண்டும் என்பதற்காகச் சொல்லும் ஒரு மலிவுப் பிரச்சாரம். ஏன் என்று சொன்னால் என்னிடம் புத்தகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? அதாவது சிந்து மாநிலத்திலே இருப்பவர்களை 'சிந்த்' என்று அழைப்பதைப் போல ஹிந்து என்ற பகுதியில் வாழ்கின்ற மக்களை 'ஹிந்த்' என்று பாரசீகர்கள் அழைத்தார்கள். அவர்களுடைய புனித நூலான சாத்திர் என்கின்ற புத்தகத்திலே 162–வது வரியிலே, இந்த பாரத நாட்டினுடைய பகுதியை 'ஹிந்த்' என்று அழைத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அடுத்து 163–வது ஆயத்திலே 'ஹிந்த்' பகுதியில் வாழ்பவர்களை ஹிந்தி என்று அழைத்தார்கள். எப்படி சிந்து மாநிலத்தில் வாழ்பவர்களை சிந்திக்கள் என்று நாம் அழைக்கிறோமோ, அதுபோல ஹிந்த் பகுதியில் வாழ்பவர்களை இந்துக்கள் என்று அழைத்தார்கள் என்று அந்தப் புனித நூலிலே குறிப்பிடப்பட்டிருப்பதைச் சொல்லியிருக்கிறது. அதற்கு அடுத்த வரியை நான் படித்துக் காட்டுகிறேன். அதற்குப் பிறகு நமக்குத் தெரியும். It was just a statement of untruth and half truth என்பது நமக்குப் புரியும்



ஏனென்றால்,

"முஸ்லீம் தர்ம் ஸ்வீகார் கர்ணேகே பாத்
பார்ஸ் நிவாஸியோனே, ஹிந்து சப்த்கே
சாத் காஃபிர், காலா, லுட்டேரா, குலாம்
இத்யாதி அர்த்தோம்கி யோஜனா கி".

அதாவது 'பார்சியிலே வாழுகின்ற பாரசீக மக்கள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்ட பிறகு இந்துக்களை 'காபிர்' என்றும் இஸ்லாமிலே நம்பிக்கை இல்லாதவர்கள் என்றும் 'காலா' என்றும் 'கருப்பர்கள்' என்றும் 'லுட்டேரா' 'கொள்ளைக்காரர்கள்' என்றும் 'குலாம்' 'அடிமைகள்' என்றும் அவர்கள் இதற்குப் பல்வேறு அர்த்தங்களைச் சொல்ல முற்பட்டார்கள். ஆகவே இதிலே பாரசீகர்கள் அவர்களுடைய புனித நூலிலே எந்தவிதமாகவும் இந்து மதத்திற்கு விரோதமாகவோ, இந்துக்களை திருடர்கள் என்றோ குறிப்பிடவில்லை. மதம் மாறிய காரணத்தால், இவ்வாறு சொல்லி அர்த்தம் சேர்ப்பதற்கு–

"ஹிந்து சப்த்கே சாத்
இத்யாதி சப்தோகோ ஜோட்னே கி யோஜனா கி"

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒருகால் காஞ்சி சங்கராச்சாரியார் கண்ணாடியை வைத்துவிட்டுப் போனாரோ என்று சொன்னதைப்போல, இந்தி தெரியாத காரணத்தால் சொன்னதோ? (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிப் பெரியவரைப் பற்றிச் சொன்னார், கண்ணாடியை வைத்துவிட்டுப் போனார் என்று. இது இந்தி புரியாத காரணத்தாலா? படிக்காத காரணத்தாலா? அடுத்த வரியிலே சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நான் உங்களைக் குறுக்கிடவில்லை. என்னைக் குறுக்கிடக் கூடாது.

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. எச். ராஜா:** அடுத்த வரியிலே சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. எச். ராஜா:** முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன், இன்னும் ஒரேயொரு வரிதான், அடுத்த வரியும் இருக்கிறது. அதையும் சொல்லியிருக்க வேண்டும்.

"இந்து தேஷ் பாரத் கே நிவாஸியோ
முசல்மானோ கோ, இந்து நாம் ஸே புகார்தே ஹை"

அதாவது, இந்தப் பகுதியிலே வாழுகின்ற முஸ்லீம்களைக்கூட அவர்கள் இந்து என்றே அழைத்தார்கள் என மௌலானா ஜலாலுதீன் ரூமி அவருடைய புத்தகத்திலே கூறியிருக்கிறார். எனவே பாரசீகப் புத்தகத்தை–இந்தப் புத்தகத்தை–மத்திய அரசாங்கம் தடை செய்ய வேண்டிய தேவையில்லை. ஏனென்றால் நான் ஒரு பத்திரிகையிலே தலையங்கம் கூடப் படித்தேன். மத்திய அரசாங்கத்திலே டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அவர்கள் என்ன செய்கிறார்? இந்த வரிகளை வேண்டுமானால் அழித்திருக்கலாம்? அல்லது இதைக் கொளுத்தியிருக்கலாம் என்றெல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. இது ஒரு கலைக் களஞ்சியம். கலைக் களஞ்சியத்திலே உலகத்திலே யார் யார் என்னென்ன சொன்னார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முஸ்லீமாக மாற மறுத்த காரணத்தால், குரு தேஜ் பகதூர் கொல்லப்பட்டார் என்று சொன்னால், அதை நியாயப்படுத்துகின்ற வரி அல்ல அது. நடந்த சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று அர்த்தம். ஆகவே அந்த வழக்கிலே அவர்கள் மதம் மாறிய காரணத்தால் குறிப்பிட்டார்கள் என்பதை, இந்துக்கள் திருடன் என்ற அர்த்தத்திலே, அதிலும் அந்த விளம்பரத்திலே அரை வார்த்தையிலே சொல்லியிருப்பது என்பது உள்நோக்கத்தோடு உள்ளது என்பதை பாரதிய ஜனதா கட்சி தெரிவிக்கிறது.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அந்தப் புத்தகத்தைப் படிக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் பேசி முடித்துவிடட்டும். திரு. குமாரதாஸ் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** சுருக்கமாகச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்ன அதே encyclopaedia இந்தியிலே 'விஸ்வ கோஷா' என்ற அந்தப் புத்தகத்தை நானும் படிக்கின்ற





வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அவர் சொன்ன விளக்கங்களை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன். இந்து என்ற சொல்லுக்கு அவர் சொன்ன எல்லாப் பொருள்களும் அதிலே இருக்கின்றன. சிந்துவில் வாழ்பவர்கள் எப்படி 'சிந்து'வோ, இந்தியாவிலே வாழ்பவர்கள் இந்துதான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இந்து என்றால் ஒரு மதம் என்ற பொருள் அதில் கூறப்படவில்லை. இதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் கலைஞர் அவர்கள் அதை மேற்கோள் காட்டினார். சைவ மதம் இருக்கிறது, வைணவ மதம் இருக்கிறது, இந்து மதம் இல்லை. இந்து என்ற சொல்லுக்கு இங்கு வாழ்பவர்கள் இந்துக்கள், இந்து என்று சொன்னால் திருடர்கள் என்று பாரசீக மொழியிலே பொருள் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் உள்ளம் கவர்ந்த திருடர்கள் என்று ஏற்றுக்கொள்கின்றேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னாரேதவிர (மேசையைத் தட்டும் ஒலி) இந்து என்பதை திரு. ராஜா அவர்கள்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொன்முடி, (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரேயொரு நிமிடம், ஒரேயொரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். அதாவது....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் பொன்முடி அவர்களுக்கு ஒரேயொரு கருத்தை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். ஆகவே ராஜா அவர்கள் இந்து என்பதை அதிலேயும் இந்து மதம் என்று குறிப்பிடப்படவில்லை என்று அவரே சுட்டிக்காட்டியிருப்பதற்கு அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். அதாவது இந்து என்பதற்கு திருடர்கள் என்று அவர் சொன்னதாகப் பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. ராஜா அவர்களும்

கொடுத்திருக்கிறார்கள். அவர் கொடுத்ததைத்தான் நீங்களும் வாசித்துச் சொல்கிறீர்கள். உங்களுடைய கட்சியின் சார்பாக வெளியிடப்பட்டதைத்தான் நீங்களும் வாசித்துச் சொல்கிறீர்கள். அதிலே இருப்பதை மதமே அல்ல என்றும், இந்து என்பதை கொள்ளைக்காரன், கொடுமைக்காரன், அடிமை என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். 'உள்ளம் கவர் திருடன்' என்று சொல்லியது இலக்கிய வார்த்தைகளே கிடையாது. 'உள்ளம் கவர் கள்வன்' என்றுதான் நான் படித்திருக்கிறேன். இலக்கியத்திலே அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, 'உள்ளம் கவர் திருடன்' என்று சொன்னால், முழுமையாக திருடன் என்றுதான் அதற்குப் பொருள். ஆகவே அந்தப் பொருள் சரியாக வராது.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification, please.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, கலைஞர் அவர்கள், இந்து மதம் என்பது மதமே இல்லை என்றுதான் சொன்னார் என்று சொன்னார்கள். கலைஞர் அவர்களும் பள்ளியிலே படித்தவர். என்ன மதம் என்று கேட்டதிலே 'நான் இந்து மதம் இல்லை' என்றா எழுதியிருக்கிறார். நீங்கள் டாக்டர், நீங்களும் பள்ளியிலே, கல்லூரியிலே படித்தீர்கள். உங்கள் சர்டிபிகேட்டிலே எந்த மதம் என்று கேட்டபோது, என் மதம் "இந்து மதம் இல்லை, இந்து மதமே இல்லை" என்று சொல்லியிருக்கிறீர்களா? அல்லது இந்து என்றுதான் உங்கள் certificate book–ல் இருக்கிறதா? இப்படியெல்லாம் பேசி, மக்களை ஏமாற்றுவது, சிறுபான்மை மக்களுடைய வாக்குகளைப் பெற வேண்டும் என்பதற்காக, இந்துக்களைப் பகைத்துக் கொண்டால் சிறுபான்மை மக்கள் வாக்கு கிடைத்துவிடும் என்பதற்காக, இப்படி உண்மைக்கு மாறான செய்தியை மக்களிடம் சொல்வது, பள்ளியிலே இந்து என்று உங்கள் certificate புத்தகத்தில் எழுதிவிட்டு, இந்துக்கள் நாங்கள் இல்லை என்று சொல்வது, நாட்டை ஏமாற்றுகிற ஒன்று என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

***பிற்பகல் 12—45***

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். நான் பதில் சொல்ல வேண்டும். *(குறுக்கீடுகள்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hinduism என்று சொன்னால், Hinduism is not a dogma. It is only a way of life. அது ஒரு தத்துவம் அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை என்பதை ஏற்றுக்கொண்டவர்களெல்லாம் இந்துக்கள். அவ்வளவுதான். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமாரதாஸ், பேசுங்கள். சட்டமுன்வடிவின்மீது பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் பேச முடியாது. குமாரதாஸ், சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* குமாரதாஸ், பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ் அவர்கள், *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். குமாரதாஸ் அவர்கள், நீங்கள் பேசியதற்கான தீர்ப்பை நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, நீங்கள் சொன்ன கருத்து, இந்த கன்னிச் சோதனை நடத்துவதற்கு ஆணையிடப்பட்டது என்று சொன்ன கருத்து, அந்தக் கருத்து உண்மையில் நடந்த செய்தி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். 4-9-1997-ல் தி.மு.க. ஆட்சி இருந்தபோது நடைபெற்றிருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றிருக்கிறது என்று அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். அதற்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக, ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். ஆக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சிறுபான்மை மக்களுக்கு, இப்படிப்பட்ட கடும் சோதனைகள் நடந்திருக்கின்றன என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாக இருந்தது. அதற்கு ஆதாரம் வழங்கிவிட்டேன். நீங்கள் தீர்ப்பு வழங்கியதற்கு நன்றி.

அடுத்தபடியாக, குஜராத் மாநிலத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், முடியுங்கள். நேரம் இல்லை. இன்னும் 20 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சட்டென்று முடித்துவிடுகிறேன். குஜராத் மாநிலத்தில் சிறுபான்மை மக்கள் அங்கே தாக்கப்பட்டு பல படுகொலைகள் நடந்தன. ஆகவே குஜராத் மாநிலத்தினுடைய முதலமைச்சர் நரேந்திர மோடி அவர்களை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று சொல்லி, பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் வந்தது. ஆனால் அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்தது? அவர்களை ஆதரித்துத்தான் வாக்களித்தார்கள். ஆக, டெல்லியிலே இந்துத்வத்திற்கு ஆதரவு, தமிழ்நாட்டிலே இந்துத்வத்திற்கு எதிர்ப்பு. இது என்னடா, இது கூத்து. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இப்படி அங்கொன்றும், இங்கொன்றுமாக நாடகம் ஆடி வருபவர்களை நாட்டு மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, நான் இறுதியாக ஒரே ஒரு கருத்தினைச் சொல்லி முடிக்கிறேன். இங்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இந்துச் சட்டம் பற்றி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தாழ்மையாக உங்களுடைய பொற் பாதங்களிலே சமர்ப்பித்து, இவர்களெல்லாம் சண்டைபோட்டாலும், உங்களை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பது எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், நான் இந்தச் சிறுபான்மை மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வுகளாக உங்கள் பாதங்களிலே சமர்ப்பித்து, வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.





கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு ஒரு நிகழ்வு. அங்கே ஞானதாஸ் என்கிற ஒரு பையன். கோட்டாறு காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. குமாரதாஸ், சட்டம் அமல்படுத்தப்படவில்லையே இன்னும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை, இல்லை. பத்திரிகையிலே வந்து உடனே வந்த நிகழ்ச்சி. Ordinance வந்த உடனே வந்த நிகழ்ச்சியை மாத்திரம் ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்து விடுகிறேன். அங்கே கோட்டாறு காவல் நிலையப் பகுதியிலே பழனிவிளை என்கிற ஒரு பகுதி. அங்கே ஞானதாஸ் என்கிற ஒரு சகோதரன். அவரும் கிறிஸ்தவர். அவன் புதிதாக ஒரு வீடு கட்டி, அங்கே குடியேறி இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அங்கே கிறிஸ்தவர்கள் கூடுவதும், ஜெபம் பண்ணுவதும், போவதுமாக இருந்து வருவது வழக்கம். இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவதாக அவசரச் சட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக பத்திரிகையிலே வந்த இரண்டு தினங்களில், சுரேஷ் என்கிற ஒரு நண்பர், அவர் அந்தப் பகுதியினுடைய R.S.S.—னுடைய முக்கிய பிரமுகர். அவர், கோட்டாறு காவல் நிலையத்திலே ஒரு மனுவினைக் கொடுக்கிறார். என்ன கொடுக்கிறார் என்று சொன்னால், எனக்கு ஞானதாஸ் பிரியாணி வாங்கிக் கொடுத்தார், பிறகு என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார், என்னுடைய தலையிலே கை வைத்து ஜெபம் பண்ணினார், ஜெபம் பண்ணி, அங்கிருந்தவர்களெல்லாம் அல்லேலூயா அல்லேலூயா என்று சொன்னார்கள். உடனே ஞானதாஸ் என்னிடம் சொன்னார், நீ கிருஸ்தவ மதத்திற்கு வந்து விடுவாய் என்று சொன்னால், உனக்கு எல்லாவிதமான உதவிகளையும், நான் செய்கிறேன் என்று சொன்னார். இது கோட்டாறு காவல் நிலையத்திலே மனுவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இன்ஸ்பெக்டர் இரண்டு பேரையும் அழைக்கிறார். ஆனால் இந்த ஞானதாஸ் யார் என்று சுரேஷ்"க்கும் தெரியாது, சுரேஷ் யார் என்று ஞானதாஸ"க்கும் தெரியாது. இரண்டு பேருக்கும் யார், யார் என்று தெரியாது. அவன் என்ன? அந்தப் பகுதியினுடைய R.S.S.—னுடைய தலைவர். அவன் அந்த வீட்டிலே ஞாயிற்றுக்கிழமைதோறும் ஜபம் எடுப்பதைத் தடுக்க வேண்டும். அதுதான் அவனுடைய சிந்தனை. எனவே இந்த மனுவைக் கொடுத்து இன்ஸ்பெக்டர் கூப்பிட்டு விசாரிக்கிறார். நீ அனுமதியோடு பிரேயர் பண்ணுகிறாயா? இல்லை. இனிமேல் அனுமதியில்லாமல் ஜபம் பண்ணக்கூடாது என்று சொல்லிவிடுகிறார்.

53-161—14a

இரண்டுபேரும் பிரிந்து செல்கிறார்கள். இந்தச் சட்டத்திலே அம்மா அவர்கள் கட்டாய மதமாற்றம் கூடாது என்கின்ற பெருநோக்கத்தோடு கொண்டு வந்திருந்தாலும், இப்படிப்பட்ட தவறுகள் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. வேணுகோபால் கமிஷனைப் பற்றி இங்கே சொன்னீர்கள். பல ஆண்டுகளாகி.... (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமாரதாஸ், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த வேணுகோபால் கமிஷனுக்குப் பிறகு மிகப் பெரிய ஒரு கொடுமை நடந்து வருகிறது அம்மா. 25, 50 ஆண்டுகளானாலும்கூட, ஒரு சர்ச் இருக்கிறது என்று வைத்தால், அன்றைக்கு 50 குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அந்தச் சபையிலே சேர்ந்திருப்பார்கள். இன்றைக்கு 100–ஆக மாறுகிறபோது அந்தக் கோயிலை விரிவுபடுத்திக் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுத்தால், X or Y ஒரு மனுவைக் கொடுத்து, அந்தக் கோயிலை விரிவுபடுத்தக் கூடாது என்று சொன்னால், அந்தக் கோயிலை விரிவுபடுத்த இயலாத சூழ்நிலை. கேட்டால் வேணுகோபால் கமிஷன். இவையெல்லாம் எப்படி ஏற்புடையதாக இருக்க முடியும்? எனவே சிறுபான்மை மக்கள் உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால், ஒட்டுமொத்தமான மக்கள், அது இந்துவாக இருந்தாலும் சரி, கிறிஸ்துவனாக இருந்தாலும் சரி, இஸ்லாமியராக இருந்தாலும் சரி, எங்களுக்கு முழு பாதுகாப்பையும் தமிழகத்தில் தருவதற்கு டாக்டர் புரட்சித் தலைவி மாத்திரம்தான் உண்டு என்று நம்புகிறார்கள். எனவே நான் மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் வாக்கெடுப்பு நடத்தினால், இந்தத் தீர்மானம் வெற்றிபெறும். அதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் ஒரு பரந்த நோக்கோடு, இந்த நாட்டினுடைய பிரதமராக வர வேண்டுமென்று ஏழை குடிமக்கள் துடித்துக்கொண்டு இருக்கிறார்களே, அதை நீங்கள் கருத்திலேகொண்டு, முடிந்தால் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கிற நீங்கள் defer செய்து இதை மாற்றி வைத்து பின்பு Select Committee–க்கு அனுப்பி எப்படியாவது இன்றைக்கு நிறைவேற்றாமல் மாற்றி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் போர்க்குணத்தோடு போராடுவதால் நீங்கள் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, நாங்கள்— சிறுபான்மை மக்கள் பயந்துவிடக்கூடாது. எனவே தயவு செய்து தாய் உள்ளத்தோடு இதைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானம் எங்களுக்கு, சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதல்ல என்ற கருத்தைக் கூறி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா, கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லிவிடுங்கள். ஏற்கெனவே சில விளக்கங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரேயொரு நிமிடம். ஒரு clarification கேட்டு, முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification–க்கு எல்லாம் நேரம் இல்லை. திரு. எச். ராஜா அவர்கள் பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை பாரதிய ஜனதா கட்சி, இது துணிச்சலான முடிவு என்கின்ற காரணத்தினால், அதனுடைய நியாயம் கருதி இதை வரவேற்கிறது. ஆதரிக்கிறது. அதாவது ஒரு சட்டத்தை சட்டத்தின் வாயிலாகப் பார்க்க வேண்டும் என்று சொன்னால், அதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. இது அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானதல்ல. 5–ஆம் தேதி அவசரச் சட்டம் அறிவிக்கப்பட்ட மறுநாளே, அரசியல் ரீதியாக இந்தச் சட்டத்தை அணுகியிருக்கின்ற முறையைப் பயன்படுத்திய காரணத்தால் தமிழகம் முழுவதும் போட்டா போட்டிகள் தொடங்கியது. அரசமைப்புச் சட்டப்படி, இது செல்லாது என்கின்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது சட்டத்தினுடைய அறியாமையால் வந்தது என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால், இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என 1977–லே Stanyslaus - Vs. - State of Madya Pradcsh என்கின்ற வழக்கின் மூலமாக உச்ச நீதிமன்றம் இப்படிப்பட்ட சட்டம் செல்லுபடியாகும் என்று கூறியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். "Propagation is concerned with the right to communicate beliefs to another person or to expound the tenets of one's religion, but does not include a right to forcible conversion." அதோடுகூட இன்னும் தெளிவாகச் சொல்கிறார்கள். .."right to propagate does not mean right to convert" ஆகவே, சட்டப்படி இது செல்லும். ஆனால் இது அரசியலாக்கப்பட்டு பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். அனைத்துமே, இந்த அவையிலே விவாதிக்கும்போது இழுக்கப்பட்டிருக்கிறது.

*1954*–லே பவானிசங்கர் நியோகி கமிஷன் நியமித்ததே காங்கிரஸ் அரசாங்கம்தான். ஒருகால் அது சட்டமாகக் கொண்டுவரப்பட்டபோது சம்யுக்த் விதாயத் தள் அமைச்சரவை இருந்திருக்கலாம், மத்தியப் பிரதேசத்திலே. மத்தியப் பிரதேசத்திலே நான்கு ஆண்டுகள் பணியாற்றியவன் நான். இன்று இருக்கிற சட்டிஸ்கர் பகுதி முழுவதும் சுற்றியிருப்பவன். அங்கு ஆதிவாசி மக்கள் பீடி இலைகளைச் சேகரித்து வாழ்வது அனைத்தையும் அறிந்தவன். அவர்களோடு ஒன்றோடு ஒன்றாகப் பழகியவன் என்ற முறையிலே சொல்ல முடியும். ஆனால் அந்த நியோகி கமிஷனுடைய அறிக்கை, பரிந்துரைகள் *1968*–லே செயல்படுத்தப்பட்டன. அதேபோல, எனக்கு முன்பு பேசிய பலரும் சொன்னதைப் போல, தமிழகத்திலும் ஜஸ்டிஸ் வேணுகோபால் கமிஷனிலே *161* சாட்சியங்களை விசாரித்து, *323* சாட்சியப் பொருட்களை ஆராய்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் கலவரத்திற்கு மூலக் காரணமாக இந்துக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டதும், அதற்குக் கையாண்ட பிரச்சார முறைகளுமே காரணம் என்பதை இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கக் கோப்புகளிலேயே இருக்கிறது. கமிஷன் ரிப்போர்ட்டிலே இருந்துதான் நான் quote செய்திருக்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அதேபோல கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தின் பெருமைகளைப்பற்றிப் பேசாமல், இந்து மதத்தின் கடவுள்களை இழிவாக விமர்சித்தார்கள் என்பதும் கமிஷன் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லப்பட்ட இன்னொரு அம்சத்தை திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். R.S.S.–ஐத் தடை செய்ய வேண்டுமென்று அந்தக் கமிஷனிலே சொல்லப்பட்டு, R.S.S.–னுடைய பயிற்சியைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். R.S.S.–ஐப் பலமுறை தடை செய்து தோற்றுப்போய் இருக்கிறது மத்தியிலேயிருந்த காங்கிரஸ் அரசாங்கம். Latest–ஆக *1992* டிசம்பர் மாதத்திலே விஷ்வ இந்து பரிஷத்தையும், R.S.S.–ஐயும் தடை செய்தார்கள். அதற்குப் பிறகு, அதற்காக நியமிக்கப்பட்ட Tribunal–ல் அந்தத் தடையானது நியாயம் அற்றது, ஆதாரம் இல்லாதது, R.S.S.–ஐத் தடை செய்வதற்கு எந்தக் காரணங்களும் இல்லையென்று தடையை நீக்கி இருக்கிறது என்பதையும் நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாம் அதற்கெல்லாம் போக வேண்டாம். யார் ஆட்சியிலே இருந்தார்கள், மத்தியப் பிரதேசத்திலே? ஒரிசாவிலே ஆட்சியிலே இருந்தது யார்? திரிபுராவிலே சம்யுக்த் விதாயத் தள்ளோ, சுதந்திரா பார்ட்டியோ, பாரதிய





ஜனசங்கமோ ஒருகாலத்திலும் ஆட்சியில் இல்லை. ஆனால் அங்கேயும் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அருணாசலப் பிரதேசத்திலே நாங்கள் எப்போதும் ஆட்சியிலே இல்லை. ஆனால் அருணாசலப் பிரதேசத்திலே கொண்டுவரப்பட்டது. எனவே இதை ஏதோ கட்சிப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாமல் சட்டப் பிரச்சினையாக அணுகி இருக்க வேண்டும். அதையெல்லாம் விட்டுவிடுவோம். காந்திஜி சொல்லியிருக்கிறார். "எனக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் இருந்தால், நான் அனைத்து மத மாற்றத்தையும் தடுத்து நிறுத்துவேன்" என்று. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்களைக் கேட்கிறேன், ஒருக்கால் காந்திஜி தலைமையை விட்டுவிட்டு, இன்று சோனியா காந்தி அவர்கள் தலைமையை ஏற்ற காரணத்தினால் எதிர்க்கிறார்களோ? (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சினை எழுகிறது. ஆகவே இந்தச் சட்டம் எந்த ஒரு மதத்தையும் எதிர்த்து இயற்றப்படவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், மறுநாள் காலையிலே அறிக்கைகளைப் படித்தேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனக்கு சட்டத்தினுடைய முன்வடிவம் வந்து சேர்ந்த சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் பேசும்போதெல்லாம் சொன்னார்கள், இது சிறுபான்மையினருக்கு விரோதமானது என்று. சட்டமுன்வடிவு வந்த உடனே பார்த்தேன். அதில் இந்துக்கள் எல்லாம் மதம் மாற்றலாம் என்று எங்காவது சட்டத்திலே சொல்லிவிட்டதோ அர்சாங்கம் என்று நான் பார்த்தேன். சொல்லவில்லையே! ஒரு மனிதர், ஒரு நபர் அடுத்த மதத்திற்கு ஒருவரை மாற்றக்கூடாது. "...Any person from one's religion to any other by use of force or by allurement or by any fraudulent means" என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, இது சிறுபான்மை மதத்தினருக்கு விரோதமானது என்று பேசியிருப்பது எப்படிப் பொருந்தும்? அவர்களைத் தூண்டிவிட்டு, அந்த இடங்களிலே பேசும்போது இந்து மதத்திற்கு விரோதமாகவும் பேசியது, இந்து மத ஆச்சாரியர்களைக் குறிவைத்துப் பேசியது இவை அனைத்துமே அரசியல் நோக்கங்களுக்காகப் பேசியது, (குறுக்கீடு) இல்லை. I am not yielding. *(குறுக்கீடு)* நீங்கள் பேசியபோது நான் குறுக்கிடவில்லையே. என் வாய்ப்பின்போதுதானே பேசிக்கொண்டிருக்கிறேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தியைக் கொலை செய்த கூட்டம், இப்படி மகாத்மா காந்தியையே அவர்கள் எடுத்துச் சொல்வது மிக அவமானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எச். ராஜா:** சட்டமன்றத்திற்கு வெளியிலே மாண்புமிகு உறுப்பினர் இதைப் பேசட்டும். நாளைக்கு வழக்கு தொடரப்படும். ஏனென்று சொன்னால், 1948–லே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. மகாத்மா காந்தியினுடைய கொலைக்கும், R.S.S.–ற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று. அதற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் வந்த பிறகு, கபூர் கமிஷனை நியமித்தார்கள். குழிப் பிள்ளையை எடுத்து இழவு கொண்டாடுகின்ற பணியாக அந்த கபூர் கமிஷனும் சொன்னது, காந்திஜி கொலைக்கும், R.S.S.–ற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. என்று. நீதிமன்றத் தீர்ப்பும் இருக்கிறது. கோயபெல்ஸினைப் போல தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருப்பது முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவிற்கு வாருங்கள். (குறுக்கீடு) சட்டமுன்வடிவிற்கு வாருங்கள். திரு. ராஜா, சட்டமுன்வடிவிற்கு வாருங்கள். இன்னும் இரண்டு மணித்துளிகளில் விளக்கம் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் (குறுக்கீடு) ஒரே ஒரு விளக்கம்.

**திரு. எச். ராஜா:** I am not yielding. (Interruption) I am not yielding.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் பேச வேண்டும். நீங்கள் கம்யூனிஸ்டைச் சொல்லவில்லை. ஆனால் இப்போது வந்து திரு. ராஜா பேசிக்கொண்டிருக்கிற விஷயத்திலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் உட்காருங்கள், திரு. ராஜா அவர்கள் பேச வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. இவர் எல்லாவற்றையும் சேர்த்து எங்கேயோ அழைத்துக்கொண்டு போகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** திராவிடக் கட்சிகள் ஆளுகின்ற மாநிலத்திலே பெரியாரையும், அண்ணாவையும் திரும்ப ஒருமுறை கொன்றுக்கொண்டிருக்கிறார்களே தவிர, வேறு வழியே இல்லை. இது என்ன ஆகப்போகிறது என்று தெரியவில்லை.

**திரு. எச். ராஜா:** I am not yielding.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்படி அனுமதிப்பது, பி.ஜே.பி. என்ற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேசுங்கள். பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ராஜா, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர் சொன்னது மறுக்கப்பட வேண்டிய ஒன்று. அது நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்ற காரணத்தினால் கோயபெல்ஸ் சொன்னதைப் போல, ஒரு பொய்யை ஆயிரம் முறை சொன்னால் அது உண்மைக்கான மரியாதையைப் பெறும் என்பதை வைத்துக்கொண்டு நாம் பொய்யைச் சொல்லக்கூடாது என்கின்ற காரணத்தால் நான் சொன்னேன். ஆகவே இந்த இடத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** மதமாற்ற சம்பவங்கள் தமிழகத்திலேயே நடந்ததற்கான விசாரணைக் கமிஷனுடைய அறிக்கை இருக்கிறது. எனவேதான் நான் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது இங்கே குறிப்பிடும்போது கூத்தரம்பாக்கத்தைப் பற்றியும், தலித்துகள் பற்றியும் பேசிய காரணத்தினால் அதுபற்றி ஆழமான என்னுடைய கருத்துகளைச் சொல்லிவிடுகின்றேன். தீண்டாமை என்பது குற்றம் இல்லையென்று சொன்னால், இந்த உலகத்திலே எந்த ஒரு குற்றமும், குற்றம் இல்லை என்பதை பாரதிய ஜனதா கட்சி ஏற்றிருக்கிறது. நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் இங்கே பேசும்போது மதிப்பிற்குரிய திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூத்தரம்பாக்கத்தைப்பற்றி அவர் கையிலே இருக்கின்ற ஒரு பத்திரிகை அறிக்கையை வைத்துக்கொண்டு சொன்னார்கள்.

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, சட்டமுன்வடிவின்மீது பேசி, ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** என்னுடைய பேச்சை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேச்சை முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, சீக்கிரம் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** இவர்கள் எல்லோரும் குறுக்கிடுவதால்தான் என்னுடைய பேச்சை முடிக்க முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, ஒரு மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** அனைவரும் குறுக்கிடுவதால்தான் என்னுடைய பேச்சை முடிக்க நேரமாகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. ஒரு மணித்துளியிலே பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** அதாவது தலித் மக்கள் இந்து மதத்திலே இருக்கின்ற (குறுக்கீடுகள்) I am not yielding. I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** காந்திஜி அவர்கள் சொன்னார்கள். காந்திஜி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**THIRU K. JAYAKUMAR:** Who is Godse? Who is Godse?

**திரு. எச். ராஜா:** கோட்சே, ஹிந்து ராஷ்ட்ரிய தள்ளினுடைய தலைவனாக இருந்தவன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களெல்லாம் பேசும்போது நான் அமைதியாகத்தானே இருந்தேன். இப்போது எதற்கு அவர்கள் பேசவேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா பேசி முடிக்கப் போகிறார். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசிக்கொண்டிருக்கிற திரு. ராஜா கட்சி ஆளுகின்ற குஜராத் மாநிலத்திலே இந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, நீங்கள் இன்னும் ஒரு மணித்துளியில் உங்கள் பேச்சை முடியுங்கள். சட்டமுன்வடிவின்மீது பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** I am not yielding. (Interruptions) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி., அவர் பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எச். ராஜா:** மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன கருத்துகளை இந்தச் சட்டமானது பிரதிபலிக்கிறது. ஏனென்று சொன்னால், மனிதாபிமான சேவை என்ற பெயரில் மதமாற்றம் செய்வது ஆரோக்கியமற்ற செயல். மத மாற்றம் என்பது மற்ற வியாபாரத்தைப் போன்று ஒரு வியாபாரமே என காந்திஜி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, ராஜ்குமார் அமிர்த் கௌ, அவரே ஒரு கிறிஸ்தவர். அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். காந்திஜிக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்து மதத்தில் உள்ள தீண்டாமையைப் பயன்படுத்தி, சர்ச்சுகள் ஒட்டுமொத்த மதமாற்றம் செய்தாலும், சர்ச்சுகளிலிருந்து தீண்டாமையை நீக்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். மேலும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் மோட்சத்திற்குச் செல்ல முடியாது என்கின்ற அகம்பாவத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** அகம்பாவத்தை கிறிஸ்தவர்கள் தங்கள் இதயத்திலிருந்து தூக்கியெறிய வேண்டுமென்று எழுதி இருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டம் எந்த ஒரு மதத்திற்கும் விரோதமாக இல்லை.

இந்துக்கள் கிறிஸ்தவர்களை இந்துவாகக் கட்டாயப்படுத்தி மாற்றினாலும், அல்லது முஸ்லீம்களைக் கட்டாயப்படுத்தி இந்துவாக மாற்றினாலும்கூட, அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும். அப்படி இருக்கும்போது, இது ஏதோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு விரோதமாகவோ அல்லது இன்னொரு சமுதாயத்திற்கு ஆதரவாகவோ வந்திருக்கிறது என்று பேசுவது நியாயமில்லாதது. மேலும் சொல்கிறேன், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டணியில் இல்லை. ஆகவே பாரதிய ஜனதா கட்சியைத் திருப்திபடுத்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை அல்லது இந்தச் சட்டத்தை அவர்கள் இங்கு நிறைவேற்ற வேண்டுமானால் பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆதரவு இருந்தால்தான் நிறைவேற்ற முடியும் என்கின்ற ஓர் அவசியமும் இல்லை. ஆனால் இந்தச் சட்டத்தினுடைய நியாயங்களைக் கருத்திலே கொண்டு, இது நாட்டினுடைய நலனை, இம்மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, மத நல்லிணக்கத்திற்காக, ஏனென்றால், மத மாற்றம் என்பது குடும்பங்களைப் பிரிக்கின்ற செயலாக இருக்கிறது. சமூக மோதல்களைக் கொண்டுவருகிறது என்பது விசாரணையிலே வந்திருக்கின்ற காரணத்தால், அரசாங்கம் இச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இது அத்வானிஜியையும், யாரையும் திருப்திப்படுத்துவதற்காக என்று சொல்வதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. சங் பரிவாருக்காக என்று சொல்வதையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) ஏனென்றால், இப்படிப்பட்ட கருத்துகள் அனைத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** எனவே நான் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, மதமாற்றம் என்பது, மன மாற்றமில்லாத மதமாற்றம், ஏமாற்றம் என்கின்ற காரணத்தாலும், அது சமூக மோதல்களை உருவாக்கும், சட்டம்–ஒழுங்கை அது பாதிக்கும் என்கின்ற காரணத்தாலும், நல்ல எண்ணத்தோடு கொண்டுவந்திருக்கின்ற, — a bold action on the part of the State Government – இந்த மசோதாவை பாரதிய ஜனதா கட்சி ஆதரிக்கும் என்று தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. வேண்டாம். (குறுக்கீடுகள்) இரண்டு மணித்துளிகளில் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி கொலைக்கும், R.S.S.–க்கும் தொடர்பு இல்லை என்று சொல்வது தவறான கருத்து. கோர்ட்டிலே நிரூபிக்கப்பட்டு, அவர்கள் இருவருக்கும் R.S.S.–உடன் தொடர்பு உண்டு என்கின்ற காரணத்தால்தான் அன்றையதினம் R.S.S. தடை செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல. ஆண்டுதோறும் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட நாளில் அவர்கள் இனிப்புகள் வழங்கி அதைக் கொண்டாடிக்கொண்டு வருகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல. காமராஜரையே உயிரோடு கொளுத்த முயன்ற கும்பல்தான்– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஏனென்றால், இது நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தமானது. தவறான கருத்து. (குறுக்கீடுகள்) இல்லை, தடை முன்பு வந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நான் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையை வழங்கலாம். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு தவறான அணுகுமுறையாகிவிடும்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட அந்த நாளில், தித்திப்பு வழங்கிக் கொண்டாடுகிற கும்பல்தான் அந்தக் கும்பல். அதுமட்டுமல்ல காமராஜரை உயிரோடு கொளுத்த முயன்ற கும்பல் அந்தக் கும்பல் என்பதை காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** காந்தியைக் கொன்றது யார்தான் என்று சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு தற்போது சட்டப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்தகைய சட்டத்தின் அவசியத்தைக் கருதி, கடந்த 5-10-2002 அன்று, தமிழக அரசு இதற்குரிய அவசரச் சட்டத்தை, அதாவது, 2002 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை அவசரச் சட்டத்தின் வாயிலாகக் கொண்டுவந்தது.

கட்டாய மதமாற்றத்தைச் சட்டரீதியாகத் தடை செய்வதற்குரிய அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அவசரச் சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தமிழக அரசு ஆழ்ந்த கவனத்தோடும், மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும் பரிசீலனை செய்த பின்னர்தான், இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடைபெற்றுவரும் கட்டாய மத மாற்ற ரீதியான நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டுதான், இத்தகைய கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் உடனடித் தேவை என்பதன் அடிப்படையில், இச்சட்டமுன்வடிவு, சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது சட்டம் ஆக்கப்பட உள்ளது.





கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் என்பது, தற்போதும்தான் புதிதாக நமது நாட்டில் கொண்டுவரப்படுகிறது என்று எவரும் கூற முடியாது. ஏனெனில், கட்டாய மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சார்ந்த மக்களில் ஒரு சாராரை ஒட்டுமொத்தமாகக் கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ அல்லது மோசடி செய்தோ மத மாற்றத்திற்கு உள்ளாக்கக்கூடாது என்றும், நமது நாட்டில் ஏற்கெனவே பல மாநிலங்களில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக, "கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்தல்" என்ற பொருள்பற்றி 1954 ஆம் ஆண்டிலேயே, மத்தியப் பிரதேச மாநிலத்தில், அன்றைய மாநில அரசால், நியோகி கமிட்டி (Niyogi Committee) என்னும் பெயரில் கட்டாய மத மாற்றத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறியும் Fact Finding Commission ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நியோகி கமிட்டியின் செயல்பாடுகளைக்கூட தடுத்து நிறுத்த, நாக்பூர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு, பின்னர் அந்த வழக்கு முறியடிக்கப்பட்டது. அதன் பின்னர், 1956 ஆம் ஆண்டு நியோகி கமிட்டியின் அறிக்கை இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

பின்னர், 1968 ஆம் ஆண்டில், ஒரிசா மாநிலத்தில் The Orissa Freedom of Religion Act - Act 2 of 1968 என்ற சட்டமும், அதே 1968 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேச மாநிலத்தில், The Madhya Pradesh Dharma Swatantrya Adhiniyam Act 27 of 1968 என்ற சட்டமும் கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்யும்பொருட்டு கொண்டுவரப்பட்டன.

மேலும், அருணாசலப் பிரதேச மாநிலத்திலும், 1978 ஆம் ஆண்டு The Arunachal Pradesh Freedom of Religion Act - Act 4 of 1978 - என்ற கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது என்பதையும் நாம் அறிகிறோம்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ஏன் கொண்டுவரப்படவேண்டும் என்பதற்கு, உரிய காரணங்களை தற்போது நான் விளக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1981 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மீனாட்சிபுரத்தில், 800 ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக மதம் மாறிய நிகழ்ச்சியும், அதனை அடுத்து 1982 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு பகுதியில், இரு

மதத்தினரிடையே ஏற்பட்ட மோதல்களின் காரணமாக, காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோக நிகழ்வுகளும், தமிழ்நாட்டின் மத நல்லிணக்க உணர்வுக்கு அப்போது பெரிதும் ஊறு விளைவித்தன.

*பிற்பகல் 1-10*

மத ரீதியான காரணம் எதுவும், தமிழகத்தின் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்துவிடக் கூடாது என்று கருதிய அன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால், மண்டைக்காடு கலவரத்தின் உண்மையான பின்னணியைக் கண்டறிவதற்கு, உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வேணுகோபால் அவர்கள் தலைமையில், விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையை 21-9-1985 அன்று அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கை 12-5-1986 அன்று தமிழக சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டது. நீதிபதி திரு. வேணுகோபால் அவர்கள், தனது அறிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பதற்ற நிலைக்கும், மோதல்களுக்கும் முக்கியமான காரணம், கட்டாய மத மாற்ற நடவடிக்கைகளே என்று மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணைக் கமிஷன், தனது அறிக்கையில், மதமாற்றத்தால், கலவரங்கள் மற்றும் சட்டம்-ஒழுங்கு பாதிப்பு மற்றும் சமூக அமைதிக் குலைவு ஆகியவை ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும் என்றால், மத்தியப் பிரதேசம், ஒரிசா மற்றும் அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கட்டாய மத மாற்றத்தை தடை செய்யக் கொண்டுவரப்பட்டுள்ள சட்டங்களைப் போலவே, ஆசை காட்டி, மோசம் செய்து, கட்டாயப்படுத்திச் செய்யப்படும் மத மாற்றத்தினைத் தடை செய்ய, தமிழ்நாட்டிலும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணைக் கமிஷனின் பரிந்துரைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டு, அரசு ஆணை எண் 916, பொதுத் துறை, நாள் 29-4-1986-ன்படி, தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்பு, ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களிலும், 1968 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டாய மத மாற்றத் தடைச் சட்டங்களை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட Stanyslaus - Vs. - State of Madya Pradesh (AIR 1977 SC 908) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தின் தேவையை மிகத் தெளிவாகத் தன்னுடைய தீர்ப்பில் வலியுறுத்தியது. குறிப்பாக, பொது அமைதிக்குக்



குந்தகம் ஏற்படுவதைத் தடுக்க, இந்தச் சட்டங்கள் வழிவகை செய்யும் என்பதால், இந்தச் சட்டங்கள் இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 25 மற்றும் 26 ஆகியவற்றின் அடிப்படையில் செல்லுபடியாகும் என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய இந்த இரு மாநிலங்களிலும் கட்டாய மத மாற்றத்தை, கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தின்மூலம் தடுத்திருக்காவிட்டால், அங்கு பொது அமைதிக்கு பங்கமும், சட்டம்-ஒழுங்குப் பராமரிப்புக்குப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கும் என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதுமட்டுமன்றி, மத்திய அரசுகூட, கட்டாய மத மாற்றத்தைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்திருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்பி, குறிப்பாக, 1997 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒட்டுமொத்தமாக சிலர் மதம் மாறிய நிகழ்வினைச் சுட்டிக்காட்டி, இவர்கள் கட்டாயமாக மதம் மாற்றப்பட்டனரா என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும், அவ்வாறு கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டிருந்தால், எந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் இயற்றப்பட்டுள்ள கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசு, தமிழக அரசைக் கேட்டுக்கொண்டிருந்தது.

பொதுவாகவே, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் தொடர்ந்து மத மாற்ற நிகழ்வுகள், மத ரீதியான காரணங்கள் அன்றி, வேறு சில காரணங்களுக்காக, கட்டாயத்தின் அடிப்படையில் நடைபெற்று வந்தது தமிழக அரசின் கவனத்தை ஈர்த்தது. குறிப்பாக, இத்தகைய மத மாற்ற நிகழ்வுகள், விருதுநகர், இராமநாதபுரம், தேனி ஆகிய மாவட்டங்களில் சமீபத்தில் நடைபெற்றுள்ளன. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மத மாற்ற நிகழ்வு நடைபெறக்கூடிய சூழ்நிலை நிலவுவதாகவும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், தமிழக அரசு, கடந்த 5-10-2002 அன்று, தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடை அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது.

கட்டாய மத மாற்றத்தினால், சமுதாயத்தில் பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, ஏழ்மையையும், பிற்பட்ட நிலையையும் பயன்படுத்தி, மதத் தீவிரவாத

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 31

அமைப்புகள் கட்டாய மத மாற்றத்தின் மூலம் நாட்டில் குழப்பத்தினை விளைவிக்க முயல்கின்றன. மதம் மாறினாலும், சாதி உணர்வுகள் நீடிக்கின்றன. மத மாற்றம் செய்யப்பட்டவர்கள், சமுதாயத்தில் தனிமைப் படுத்தப்படுகின்றனர். மத மாற்றம் பல்வேறு பிரிவினரிடையே எதிர்ப்பு உணர்வை Resentment–ஐ ஏற்படுத்துவதுடன், மத உணர்வைத் தூண்டிவிட்டு மதக் கலவரங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

*பிற்பகல் 1–15*

சமுதாய நல்லிணக்க உணர்வைச் சீர்குலைக்கும் இத்தகைய தீய விளைவுகள், தமிழ்நாட்டில் நிகழக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில்தான், கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்ய சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் பார்த்தாலும்கூட, இந்திய தண்டனைச் சட்டத்தில் கட்டாய மத மாற்றத்தைத் தடுக்க வழியில்லை. அதாவது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 153 (A), ஒரு மதத்தினர் புண்படும்படி, யாரும் அவதூறாகப் பேசுவதைத் தடுக்குமே ஒழிய, அதனால் கட்டாய மத மாற்றத்தைத் தடுக்க இயலாது.

தீவிரவாதப் போக்கு பெருகி வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்ய ஒரு சட்டம் இருப்பது, தீவிர மதவாத அமைப்புகளின் மதமாற்ற முயற்சிகளைத் தடுத்து நிறுத்த ஒரு கேடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தற்போது தமிழ்நாட்டில் இயற்றப்படும் இந்தச் சட்டம் எந்த ஒரு மதத்தினருக்கும் அல்லது பிரிவினருக்கும் எதிரானது அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ அல்லது மோசடி செய்தோ, கட்டாய மத மாற்றத்தில் ஈடுபடுவோர்மீது மட்டுமே, இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும். தாமாகவே முன்வந்து விருப்பத்துடன் மதம் மாறுபவர்கள்மீது, இந்தச் சட்டத்தின்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது. எனவே சிறுபான்மையினர்மீது இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை சாதாரணமாகப் படித்துப் பார்த்தாலே, சிறுபான்மை மதம் மட்டுமல்லாமல், எந்தக் குறிப்பிட்ட மதத்திற்கு எதிராகவும், ஒரு குறிப்பும் இதில் இல்லை என்பதை எவரும் எளிதில் உணரலாம்.



2002 அக்டோபர் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இன்று இங்கே நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், தமிழக அரசு கொண்டுவந்துள்ள கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். ஆனால் ஒன்றை மட்டும் அவர்கள் வசதியாக மறந்து விட்டார்கள். ஒரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் 1968–லிருந்தே நடைமுறையில் உள்ளது என்பதை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இந்த இரு மாநிலங்களிலும், 1968–க்குப் பின்னர், காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியில் இருந்துள்ளனர். தற்போதுகூட, மத்தியப் பிரதேசத்தில், காங்கிரஸ் கட்சிதான் ஆட்சியில் உள்ளது. ஏற்கெனவே இந்தச் சட்டம் இவர்களுக்கு முன்னரே கொண்டுவரப்பட்டிருந்தாலும், காங்கிரஸ் இந்த மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்தக் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை ஏன் ரத்து செய்யவில்லை?

மகாத்மா காந்தியடிகள், மத மாற்றம்பற்றிக் கூறியுள்ளது இங்கே என்னுடைய நினைவுக்கு வருகிறது. 'Conversions are harmful to India. If I had power and could legislate, I should certainly stop all proselytising' என்றார். அதாவது, "மதமாற்றங்கள் இந்தியாவுக்குத் தீங்கு விளைவிப்பவை. எனக்கு மட்டும் சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்குமேயானால், எல்லாவித மத மாற்ற முயற்சிகளையும் நான் நிச்சயமாகத் தடுத்து நிறுத்துவேன்" என்று தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியடிகளின் வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற காங்கிரஸ் கட்சியினர், கட்டாய மத மாற்றத்தைப்பற்றி தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்ட கருத்தை ஏன் தற்போது ஏற்க மறுக்கிறார்கள்? மகாத்மா காந்தி அவர்கள் தெரிவித்த கருத்தை, தற்போது சட்டமாக்க தமிழக அரசு முற்படும்போது, அதனை ஏன் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடப் பாரம்பரியத் தலைவர்கள் விட்டுச் சென்ற கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு இயங்கிவரும் இயக்கமாகும். அந்த மகத்தான தலைவர்களின் கொள்கைகள், சமுதாயத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டே சமூகச் சீர்திருத்தம் செய்ய விழைகின்றன. எவ்வகையிலாவது மக்களைத் தூண்டிவிட்டு, இன்னொரு மதத்துக்கு ஒட்டுமொத்தமாக மாற்றுவதை ஊக்குவிக்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 அக்டோபர் 31

பணத்திற்காக மதம் மாறுபவர்களை வரவேற்பது எந்த மதத்திற்கும் – அது சிறுபான்மையோ, பெரும்பான்மையோ – உரிய சமுதாயப் பண்பு ஆகாது என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

நீண்ட நெடிய மதச்சார்பற்ற பாரம்பரியத்தைக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மதம் என்பது ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கை மட்டுமல்லாமல், அவருடைய தனிப்பட்ட கண்ணியத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டுவது என்பதை எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. ஒரு மதத்தை அங்காடிக்குக் கொண்டுவந்து, அதை ஒரு வணிகப் பொருளாக மாற்றுவதைத்தான் இந்தச் சட்டம் தடுக்கிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய திராவிடப் பாரம்பரியத் தலைவர்களின் கொள்கை வழி நின்று, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க எப்போதும் பாடுபட்டு வரும் இயக்கமாகும். எல்லா சிறுபான்மைக் குழுக்களின் அச்சத்தையும், ஐயப்பாட்டையும் போக்க நான் பெரிதும் விரும்புகிறேன். இந்தச் சட்டம் சிறுபான்மையினரின் சுதந்திரத்தை எந்த வகையிலும் பறிக்காது, பாதிக்காது. மாறாக சுரண்டலிலிருந்து சமுதாயத்தின் நலிந்த பிரிவினரைப் பாதுகாக்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிக்கொண்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு இந்த அவையைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2002 அக்டோபர் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(குறுக்கீடுகள்)

*(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்புக் கோருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, இந்தச் சட்டமன்றத்தினுடைய விதி ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். விதி 99(8), "எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவசியமின்றி கேட்கப்படுகிறதென்று பேரவைத் தலைவர் கருதினால், அவர், முறையே 'ஆம்' என்று ஏற்பவர்களையும், 'இல்லை' என்று எதிர்ப்பவர்களையும் தனித்தனியே அவரவர்களது இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களது எண்ணிக்கையைக் கணித்துப் பேரவையின் முடிவு என்ன என்பதை அறிவிக்கலாம். அவ்வாறு கணிக்கப் பெறும்போது வாக்காளர்களின் பெயர்கள் தனித்தனியே பதிவு செய்யப்பெற மாட்டாது." அதாவது, எழுந்து நில்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பேரவைத் தலைவர்— எண்ணிக்கை அதிகம் என்ற தீர்மானத்திற்கு,— நிதி அமைச்சருடைய தீர்மானத்திற்கு எண்ணிக்கை அதிகம் என்று கருதினால், வாக்கெடுப்பு அவசியம் இல்லை என்று நான் தீர்ப்பு அளிக்கலாம். எழுந்து நின்று பார்த்துவிட்டு தீர்ப்பு அளிக்கலாம்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தமாதிரி முன்மாதிரியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., நீங்களே விதியை வாசியுங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, வாசியுங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு மைக் கொடுங்கள்.



2002 அக்டோபர் 31]

**THIRU S.R. BALASUBRAMONIYAN:** "If, in the opinion of the Speaker, the division is unnecessarily claimed, he may ask the members who are for 'Aye' and those for 'No' respectively to raise in their places and on a count being taken, he may declare the determination of the House. In such a case, the names of the voters shall not be recorded" என்று இருந்தாலும்கூட, நீங்கள் ஒவ்வொருவரையும் எப்படி கணக்கு எடுப்பீர்கள் என்றால், பிரிவு வாரியாக எழுந்து நிற்கச் சொல்லி, இன்னின்னார் என்று பெயர் சொல்லி, பிறகு உட்காருவதுதான் முறை. அதுதான் இதுவரை பின்பற்றக்கூடிய முறை. புது முறை வர முடியாது. திரு. புகழேந்தி என்று சொன்னால்தான், அவர் உட்கார முடியும். திரு. எச்.எம். ராஜு என்று சொன்னால்தான் அவர் உட்கார முடியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களுக்கு விதி அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. நீங்கள் முடிவு செய்ய முடியும். (குறுக்கீடு) அதைத் தவறாக அவர் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடு) The ruling party is enjoying an absolute majority. Where is the question of misuse here? The ruling party is enjoying an absolute majority. There is no misuse at all.

*பிற்பகல் 1—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இதை challenge பண்ணுகிறீர்களா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். கண்டிப்பாக இதுவரை, இதுகாறும் எந்த முறை பின்பற்றப்பட்டதோ, அதேபோல பிரிவுவாரியாக எழுந்து நிற்கச் சொல்லி, ஒவ்வொருவர் பெயராக — ஒருவர் பெயரை, துணை சபாநாயகர் பெயர் என்றால், துணை சபாநாயகர் பெயரை, அவர் சொன்னதற்குப் பிறகுதான் அவர் உட்கார முடியும். அதேபோல், normal Division should be conducted.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இப்போது வாக்கெடுப்பு. வாக்கெடுப்பு அழைப்பு மணி அடிக்கலாம்.

*(அழைப்பு மணி இரண்டு மணித்துளிகள் ஒலிக்கப்பட்டது.)*

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன்.

*(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)*

வாக்கெடுப்பு நேரத்தில் அனைவரும் அவரவர் இருக்கையில் இருந்திட வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலே இருந்து இன்னொருவர் இடத்திற்குச் செல்லக்கூடாது. வாக்கு எண்ணி முடிக்கும் வரை அவரவர் இருக்கையிலே இருக்க வேண்டும் என்பது விதி.

பேரவையின் முதன்மைச் செயலாளர், தற்போது பகுதிவாரியாக உறுப்பினர்களை பெயர் குறிப்பிட்டுப் படிப்பார்.

பகுதி—I, எழுந்து நில்லுங்கள். பகுதி—I, தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கலாம். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானத்தை ஆதரிப்போர், பகுதி—I—லே எழுந்து நிற்கலாம். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டத் தீர்மானத்தை ஆதரித்து ஓட்டு போடச் சொல்கிறோம். சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்கிற நிதி அமைச்சருடைய தீர்மானத்தை நாங்கள் வாக்கெடுப்புக்கு விடச் சொல்லி கேட்டோம். நீங்கள் கேட்டீர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படிச் சொல்லவேயில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உங்களுடையதுதான்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உங்களுடைய disapproval தீர்மானமாக இருக்கலாம். (குறுக்கீடுகள்) உங்களுடைய disapproval தீர்மானமும் இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒட்டுமொத்தமாக எஸ்.ஆர்.பி. அவர்களுடைய தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய தீர்மானத்தை...



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தந்த disapproval தீர்மானமா அல்லது நான் முன்மொழிந்த சட்டமுன்வடிவு தீர்மானமா என்பதனை நீங்கள் தெளிவாக்கிச் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முடிந்துவிட்டது. மாண்புமிகு நிதி அமைச்சருடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சட்டமுன்வடிவு தீர்மானத்திற்கு வாக்கெடுப்பு கோருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் இப்போது பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

டிவிஷன் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்ற காரணத்தால், I—வது பகுதியிலே தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சட்டமுன்வடிவு தீர்மானத்தை எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு விடுங்கள். பகுதிவாரியாக உறுப்பினர் பெயர்களை அழையுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. தீர்மானம் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. தற்போது பேரவை முதன்மைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை அடிப்பார்.

*(அழைப்பு மணி இரண்டு மணித்துளிகள் அடிக்கப்பெற்றது.)*

உறுப்பினர்கள், அவரவர்கள் இருக்கையிலே அமர வேண்டும். நுழைவு வாயில்கள் அனைத்தையும் மூடும்படி உத்தரவிடுகிறேன்.

(நுழைவு வாயில்கள் மூடப்பட்டன)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

நம்முடைய பேரவை 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் அறிவித்த பிறகு, பேரவை முதன்மைச் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களின் பெயர்களைப் படிப்பார்கள்.

*பிற்பகல் 1—30*

**பிளாக்—1**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. மாண்புமிகு திரு. அ. அருணாசலம்
3. திரு. செ. அண்ணாதுரை
4. திரு. கு. அண்ணாமலை
5. திரு. ப. அண்ணாவி
6. திரு. பி.ஆர். சுந்தரம்
7. திரு. ஆஸ்டின்
8. திரு. ஆ.கு.சீ. அன்பழகன்
9. திரு. கே.பி. அன்பழகன்
10. திரு. கு. அன்பழகன்
11. திரு. ப. ஆண்டிவேல்
12. திரு. த. ஆறுமுகம்
13. திரு. ப. இளவழகன்
14. திரு. கா.தி. இளையகண்ணு
15. திரு. இரா.தா. இன்பத் தமிழன்
16. திரு. ஆ. பூவராகமூர்த்தி



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

17. திரு. ந. இராமு
18. திரு. மா. இராஜசேகர்
19. திரு. வீ. சந்திரன்
20. திரு. சி. இராசேந்திரன்
21. திரு. கே.கே. உமாதேவன்
22. திரு. வெ. ஏழுமலை

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.
—ஒருவருமில்லை.

**பிளாக்–2**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

23. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா
24. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்
25. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
26. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை
27. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்
28. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி
29. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்
30. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி
31. மாண்புமிகு திரு. ப. மோகன்
32. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்
33. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
34. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்

35. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்

36. திரு. கே. பாண்டுரங்கன்

37. திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு

38. திரு. வீ. சுப்பிரமணியன்

39. திரு. எஸ்.பி. சண்முகநாதன்

40. திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்

41. திரு. ஆர். வைத்திலிங்கம்

42. திரு. சி. சண்முகவேலு

43. திரு. கே.ஆர். சுந்தசாமி

44. திரு. ந. கணபதி

45. திரு. ஆர்.டி. கணேசன்

46. திரு. கே.சி. கருப்பணன்

47. திரு. ஜி. கோதண்டராமன்

48. திரு. வெ. கோவிந்தராஜ்

49. திரு. எம். சக்திவேல் முருகன்

50. திரு. ப. இராஜரெத்தினம்

51. திரு. எம்.எஸ். சந்திரசேகரன்

52. திரு. நா. சந்திரமோகன்

53. திரு. ராதா ரவி

54. திரு. ஆர். சாமி

55. திரு. ப. சிதம்பரம்

56. திரு. பி.கே. சேகர் பாபு

57. திரு. கே.கே. சிவசாமி



58. திரு. சி. சிவசாமி

59. திரு. அ. சிவபெருமாள்

60. திரு. மா. சின்னசாமி

61. திரு. எஸ்.எம். சீனிவேல்

62. திரு. எம். சுப்பையா பாண்டியன்

63. திரு. வி.ஏ. செல்லையா

64. திரு. எஸ்.கே. செல்வம்

65. திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி

66. திரு. பி.கே.டி. நடராஜன்

67. திரு. க. தவமணி

68. திரு. செ. தாமோதரன்

69. திரு. ப.வெ. தாமோதிரன்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.
—ஒருவருமில்லை.

**பிளாக்–3**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

70. மாண்புமிகு திரு. செ. செம்மலை

71. மாண்புமிகு திரு. ப. தனபால்

72. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்

73. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்

74. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி

75. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி

76. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்

77. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்

78. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்

79. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்

80. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்

81. மாண்புமிகு திரு. அ. மில்லர்

82. திரு. இரா. வில்வநாதன்

83. திருமதி வளர்மதி ஜெபராஜ்

84. திருமதி இரா. சரோஜா

85. திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி

86. திருமதி வி. அழகம்மாள்

87. டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி

88. திருமதி கு. கலாவதி

89. செல்வி சி. கனகதாரா

90. திருமதி எஸ். கவிதா சம்பத்

91. திருமதி ஆர். சசிகலா

92. திருமதி செ. சுந்தராம்பாள்

93. திருமதி சி.எம். சூரியகலா

94. திருமதி செல்வி முருகேசன்

95. திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன்

96. திருமதி நளினி மனோகரன்



97. திருமதி கே. பவானி கருணாகரன்

98. திருமதி பூபதி மாரியப்பன்

99. திருமதி மல்லிகா சின்னசாமி

100. திருமதி எஸ். ராஜம்மாள்

101. திரு. தா. பச்சைமால்

102. திரு. ப. நீலகண்டன்

103. திரு. க. பதினெட்டாம்படியான்

104. திரு. கே.எஸ். பழனிசாமி

105. திரு. கே. பழனியப்பன்

106. திரு. அ. பாப்பா சுந்தரம்

107. திரு. எஸ்.எம். பாலன்

108. திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்

109. திரு. என்.கே. பெருமாள்

110. திரு. ப. பொன்னம்பலம்

111. திரு. எஸ். மகாலிங்கம்

112. திரு. எஸ். மாணிக்கராஜ்

113. திரு. ஆகு. முருகேசன்

114. திரு. கா.பூ. முனுசாமி

115. திரு. எஸ்.எஸ். ரமணீதரன்

116. திரு. என். ரெங்கநாதன்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.
— ஒருவருமில்லை.

ஆவணக்காப்பக ... சென்னை-600 008

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

**பிளாக்–4**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

117. திரு. கே.என். இலட்சுமணன்

118. திரு. சி. துரைராஜ்

119. திரு. கே. அய்யாறு வாண்டையார்

120. திரு. அ. அன்வர் ராஜா

121. திரு. எச். ராஜா

122. திரு. ரா. ஈஸ்வரன்

123. திரு. சி.வி. சண்முகம்

124. திரு. அ. வெங்கடாசலம்

125. திரு. ஏ.கே. செல்வராஜ்

126. திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்

127. திரு. வி. ஜெயராமன்

128. திரு. அ. நடராஜன்

129. திரு. கே.வி. முரளிதரன்

130. திரு.ச. ராமராஜ்

131. திரு. வி.ஆர். ராஜாங்கம்

132. திரு. பி.ஜி. இராஜேந்திரன்

133. திரு. ப. அரசன்

134. திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்

135. திரு. இ.ஏ. வியாவுதீன் சேட்

136. திரு. பெ. வாசுதேவன்



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

137. டாக்டர் சி. விஜயபாஸ்கர்

138. திரு. செ. வெங்கடாஜலம்

139. திரு. கே.எஸ். தென்னரசு

140. திரு. ஆர். வடிவேல்

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. திரு. ஜி. பழனிசாமி

2. திரு. கே.சி. கருணாகரன்

3. திரு. வை. சிவபுண்ணியம்

4. திரு. என். நன்மாறன்

5. திரு. சோ. இராசேந்திரன்

6. செல்வி க. பாலபாரதி

7. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி

8. திரு. கே. மகேந்திரன்

9. திரு. ஏ.எஸ். கண்ணன்

10. திரு. கி. பாரிமோகன்

11. திரு. அ.இரா. மலையப்பசாமி

12. திரு. க. முருகவேல்ராஜன்

13. திரு. தி. வேல் முருகன்

14. திரு. சி. சண்முகம்

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.- ஒருவருமில்லை.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

**பிளாக்-5**

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன் — ஒருவருமில்லை.

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

15. திரு. துரைமுருகன்
16. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்
17. திருமதி டி. யசோதா
18. திரு. ஜி.கே. மணி
19. திரு. ஐ. கணேசன்
20. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
21. திரு. இ. புகழேந்தி
22. திரு. எச்.எம். ராஜு
23. திரு. சோ. பாலகிருஷ்ணன்
24. திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்
25. திரு. கோ. இரவிராஜ்
26. திரு. டி.கே. இராஜா
27. திரு. பரிதி இளம்வழுதி
28. திரு. கே.ஆர். இராமசாமி
29. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி
30. திரு. சி. ஞானசேகரன்
31. திரு. கே. ஆறுமுகம்
32. திரு. பி.எஸ். உலகரட்சகன்
33. திருமதி காசாம்பு பூமாலை
34. டாக்டர் க. பொன்முடி



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

35. திரு. க. பாரமலை
36. திரு. வி.கே. லட்சுமணன்
37. திரு. கு. ஜெயக்குமார்
38. திரு. டி. சுதர்சனம்
39. திரு. மே.ப. காமராஜ்
40. திரு. மு. கார்த்தி
41. திரு. கா. கந்தசாமி
42. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்
43. திரு. சு. சிவராஜ்
44. திரு. போளூர் வரதன்
45. திரு. ஆர். கிருஷ்ணன்
46. திரு. ஜெ. அன்பழகன்
47. திரு. எஸ். தாமோதரன்
48. திரு. கோவை தங்கம்
49. திரு. இரா. இராம் பிரபு
50. திரு. டி.என். சிவசுப்பிரமணியன்
51. திரு. எஸ். நடராஜன்
52. திரு. அன்பில் பெரியசாமி
53. திரு. என்.ஆர். ரங்கராஜன்
54. திரு. எம். ராம்குமார்
55. திரு. ஆ. ராஜகோபால்
56. திருமதி எஸ். மகேஸ்வரி

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். —ஒருவருமில்லை.

பிளாக்-6

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன் — ஒருவருமில்லை.

தீர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

57. திரு. ஆற்காடு நா. வீராசாமி
58. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
59. திரு. கு. பிச்சாண்டி
60. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
61. திரு. ஆர். சக்ரபாணி
62. திரு. மு.பெ. சாமிநாதன்
63. திரு. கே.என். சேகரன்
64. திரு. துரை. கி. சரவணன்
65. திரு. பா. பரணிகுமார்
66. திரு. அ. அசோகன்
67. திரு. டி.பி.எம். மைதீன்கான்
68. திரு. எஸ்.கே. வேதரத்தினம்
69. டாக்டர் பி. வள்ளல் பெருமான்
70. திரு. எஸ்.ஏ.எம். உசேன்
71. திரு. இரா. திருமாவளவன்
72. திரு. ப. ரங்கநாதன்
73. திரு. எ.வ. வேலு

நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். — ஒருவருமில்லை.





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பெற்றன:

ஆதரித்தோர் .. 140 (மேசையைத் தட்டும் ஒலி)

மறுத்தோர் .. 73

நடுநிலை வகித்தோர் .. ஒருவருமில்லை

எனவே தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 1—45*

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**திரு. ஜி.கே. மணி:** வாக்களிக்காதவர் பெயர், இருக்கையில் இல்லாதவர், கலந்துகொள்ளாதவர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தேவையில்லை.



2002 அக்டோபர் 31]

## (ஆ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2002). மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு, நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) பேரவைக் கூட்டத்தை மாலையில் நடத்தக் கோருதல்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர் சார்பிலும் ஒரே ஒரு கோரிக்கை. இந்த ஒரு சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிறகு முடித்துவிட்டு மீதியை மாலை 4—30 மணிக்கு எடுத்துக் கொண்டு 6—30 மணிக்குள் முடித்துவிடலாம். (குறுக்கீடுகள்) நாளைக்கு வர வேண்டியதில்லை. (குறுக்கீடு) ஊருக்குப் போக வேண்டும். நாளைக்கு வேண்டுமென்று நானே கேட்கவில்லை. இன்று மாலையே முடித்துவிடலாம். 6—30 மணிக்கு முடித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதே முடித்துவிடலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்கெனவே முடிவு செய்துவிட்டோம். இப்போதே முடித்துவிடலாம்.

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)– தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர். (குறுக்கிடு)

## 3. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (இ) பேரவைக் கூட்டத்தை மாலையில் நடத்தக் கோருதல் –தொடர்ச்சி

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இன்னும் 19 மசோதாக்கள், சட்டமுன்வடிவுகள் எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், இப்போது எல்லோரும் பசியோடு இருப்பதால், இப்போது நீங்கள் அவையை ஒத்திவைத்துவிட்டு, மீண்டும் 4—30 மணிக்குக் கூடி, விவாதம் இல்லாமல் 6—30 மணிக்குள் எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்துவிடலாம் என்ற கோரிக்கையைத் தங்கள்முன் வைக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவாதம் இல்லாவிட்டாலும்கூட சரி. ஆனால் சட்டமுன்வடிவுகளில் சில தவறுகள் இருக்கின்றன. அதைச் சுட்டிக்காட்டித்தான் ஆக வேண்டும்.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)–தொடர்ச்சி

### (ஆ) தமிழ் நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002 – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு, நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

****



பிற்பகல் 4—30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)
– தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2002). மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது clarification மாதிரி மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் இதிலே Annexure-லே இல்லாத சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவருவதுபோல் இருக்கிறது. Annexure to the Tamilnadu Prohibition of Harassment of Woman என்றுதான் இருக்கிறது, இது வரப்போகிற சட்டம்தான். 'Harassment of Woman' இப்போது இருக்கிற சட்டம். The Act may be called Tamilnadu Prohibition of Eve-teasing Act தான். ஆகவே அது Eve-teasing amendment Act என்றுதான் இருக்க வேண்டுமே தவிர The Prohibition of Harassment of Woman Act

---

@30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

என்பது It is a mis-normer. ஆகவே இல்லாத சட்டத்திற்கு திருத்தத்தைக் கொண்டுவருவது போல இருக்கிறது. இது Annexure—லே இருப்பது தவறான ஒன்று. ஆகவே இதைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருத்தினால்தான் கோர்ட்டிற்குப் போனால் செல்லும். ஏனென்றால் இந்த 'Act'—ஐப் பொறுத்தவரையிலே Annexure to the Tamilnadu Prohibition of Harassment of Woman Amendment Bill, 2002 என்றுதான் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, சட்டத் துறையிலே கேட்டதற்கு இதில் ஒன்றும் சிக்கல் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Short Title and Commencement of the Bill of this Act - This Act may be called the Tamilnadu Prohibition of Harassment of Woman (Amendment) Act. Section 2 indicates that 'In the Tamilnadu Prohibition of the Eve-teasing Act of 1998, for the expression "Eve-teasing", the expression "Harassment of Woman" shall be substituted என்று இருக்கிறது. ஆனால் The amendment gets incorporated in the Parent Act itself and the long title and short title become spent over provisions once the Bill is passed. So there is legally nothing wrong. Again, the name of the Short Title shows only the name of the Amendment Act. It does not lay down any legal provision. It does not also amend any legal provision. Legally, there is no flaw in it.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நான் சுட்டிக்காட்டியிருக்கிற இந்த விதியிலேயே முதலிலே நீங்கள் சொல்லும்போதே 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிடம் குறும்பு செய்தலைத் தடை செய்கின்ற சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டமுன்வடிவுதான்/ ஒரு amendment கொண்டுவரும்போது existing Act-க்குத்தான் amendment கொண்டுவர முடியும். வரப்போகிற Act-க்கு அடுத்த bill -லிலே வரும்போது நீங்கள் போட்டுக்கொள்ளலாம், Nothing wrong in it. I hope நீங்கள் legal-ஆகக் கேட்டுப் பண்ணினீர்கள் என்றால் right. அதைப் பொறுத்தவரைக்கும் Mis-normer என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும், அதிலே பாருங்கள். முதலிலே A Bill to amend the Tamilnadu Prohibition of Eve-teasing Act of 1998, inceptively it has been made very clear. The intention is inceptively made out very clear. So there is nothing illegal in it. There is no legal flaw in it.



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை மற்றொரு கருத்துகூட இருக்கிறது. Eve-teasing என்பது தனிப்பட்ட முறையிலே அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றுதான் முதலில் இந்தச் சட்டம் 1998—லே கொண்டுவரப்பட்டது, கல்லூரிகளிலேயும் மற்ற இடங்களிலேயும் இருக்கிறது எல்லாம். Eve-teasing என்பதைவிட இப்போது Harassment of Woman என்று சொல்லும்போது it is a wider term. Eve-teasing வேறு harassment வேறு. Eve-teasing என்பது கல்லூரிகளிலோ மற்ற இடங்களிலோ நடக்கிற அந்த ragging போன்றவற்றைத் தடுக்க வேண்டுமென்று தனிப்பட்ட முறையிலே கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம். இப்போது harassment என்ற அந்த scope—ஐ wider பண்ணி இந்தச் சட்டத்தோடு சேர்ப்பதனால் அதனுடைய முக்கியத்துவம்—Eve-teasing-க்கு இருக்கிற முக்கியத்துவம் போய்விடுமோ என்ற சந்தேகம் வருகிறது. வேண்டுமென்றால் இந்த harassment-க்காக தனிப்பட்ட ஒரு சட்டம் கொண்டுவருவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் யாருக்கும் இருக்கமுடியாது. ஆகவே இதையும் பரிசீலனை பண்ணி amendment என்று கொண்டுவருவதைவிட harassment-க்கு ஒரு தனிச் சட்டம் கொண்டுவந்து-(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். அமைச்சர், அவர் பேசி முடித்துவிடட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** Eve-teasing-க்குத் தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்தால்தான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து அரசு எடுத்த முடிவு அல்ல. சட்ட ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு சட்ட ஆணையத்தினுடைய கருத்தின் அடிப்படையில்தான் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு clarification மட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவில் 4(சி))—யில் Presumption as to harassment death and abetment of harassment suicide-லிருந்து when the question is whether any person had caused harassment death or abetted harassment suicide of a woman, theCourt shall, unless the contrary is

[திரு. சி. ஞானசேகரன்] [2002 அக்டோபர் 31

proved, presume that such person had caused the harassment death or abetted the harassment suicide என்று வருகிறது. இதிலே burden of proof is on the accused என்று வருகிறது. இது இருக்கும்போது கடைசியிலே எங்கேயோ கொண்டுபோய் விட்டுவிடும். ஆகவே burden of proof is only on the prosecution என்ற வகையில் நீங்கள் வைத்தால்தான் ஓரளவிற்கு இதிலே குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கும். இல்லையென்று சொன்னால் presumption என்ற அடிப்படையில் அனுமானத்தின் அடிப்படையிலே செய்வதனால் போலீஸ்காரர் சாதாரணமாக ஏதாவது கேஸ் போட வேண்டுமென்று நினைத்தால் எல்லோரையும் கொண்டுபோய் இந்த கேஸிலே மாட்டிவிடுவார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த presumption என்று இருப்பதை எடுத்துவிட்டு நீங்கள் burden of proof-ஐ prosecution—யே எடுத்துக்கொண்டு அவர்களே அந்த வழக்கில் முக்கியமான சாட்சிகள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்கிற ஒரு நிலையை நீங்கள் எடுத்தால்தான் இது மற்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே Eve-teasing of a woman என்று மட்டும் இருக்கிறது. அதிலே சில நேரங்களிலே ** ragging அதற்குக்கூட நீங்கள் ஏதாவது வழிவகையைக் கண்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லி அமைகிறேன்.

*பிற்பகல் 4—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, (குறுக்கீடு) திரு. கணேசன், ஏதாவது கேட்க வேண்டுமா?(குறுக்கீடு) திரு. கணேசன், பேசக்கூடாது, ஏதாவது Clarification மட்டும் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களிடம் குறும்பு செய்வது என்ற சட்டத்தை முந்தைய அரசு கொண்டுவந்தபோதே நான் இந்தச் சட்டத்தைப் பற்றி மிகத் தெளிவாக அப்போதே பேசியிருக்கிறேன். இது இரண்டு பக்கமும் கூர்மையான கத்திக்குச் சமமான ஒரு சட்டம். இந்தச் சட்டத்தைக் கையாளுபவர்களையே அது கிழித்துவிடும். இந்தச் சட்டம் ஒருபுறம் பார்த்தால் மிக மிகத் தேவையாக இருக்கிறது. இன்னொருபுறம் பார்த்தால் சில அப்பாவி மாணவர்கள் இதனால் பழிவாங்கப்படுவதையும் நாம்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 அக்டோபர் 31] [திரு. ஐ. கணேசன்]

கண்கூடாகப் பார்க்கிறோம். இங்கே இதற்கு முன்பாகப் பேசிய திரு. ஞானசேகரன் அவர்கள் இந்தச் சட்டத்தினுடைய உட்கருத்தினைப் புரிந்து சற்று வேகமாகச் சொல்லியதை இங்கே நகைச்சுவையோடு ரசித்தார்களே ஒழிய, இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் அந்த மாணவர்களும், நம்முடைய தாய்கள் பெற்றெடுக்கக்கூடிய குழந்தைகளும்தான் என்பதனை மறந்துவிடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருமே தாய்க்குலம்தான்,

**திரு. ஐ. கணேசன்:** எல்லோருமே தாய்க்குலம்தான். ஆனால் இந்தச் சட்டம் தேவை. 1998—லே ஒரு முஸ்லிம் பெண் பாதிக்கப்பட்டு துடிதுடித்துச் செத்தபோது இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பிறகு இந்தச் சட்டம் கொண்டுவந்த பிறகும் நாகர்கோவிலிலே இரண்டு பெண்கள்மீது திராவகம் வீசப்பட்டது மற்றும் மதுரை பக்கத்திலே ஒரு பெண் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு கொடுமையாக இருக்கக்கூடியது, கடுமையான சட்டம் பாய வேண்டும். நான் இதைப் பற்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இல்லை, ஏதாவது விளக்கம் மாதிரி சொன்னால்கூட பரவாயில்லை.

**திரு. ஐ. கணேசன்:** இந்தச் சட்டத்தைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விளக்கம் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இதில் பாதிப்பு இருக்கிறது. நாளைக்கு ஆண்கள் பாதிக்கப்படலாம். அதனாலே கொஞ்சம் சொல்வதற்கு அனுமதியுங்கள்.

இடி இடித்து மழை பெய்து எல்லாம் நின்னாச்சு, காலையிலேயே. அதனாலே இப்போது சுமுகமாக இருக்கிறோம். ஆரம்பித்திருக்கிறோம். கடைசியாக முடிக்கிறோம், கொஞ்சம் கலகலவென போகட்டும். இதில் தப்பு வராது. நாம் சட்டத்தைக் கொண்டுவருகிறோம். சினிமா பாட்டு எவ்வளவு கேவலமாக இருக்கிறது? பெண்டு பிள்ளைகளோடு நாம் படம் பார்க்க முடிகிறதா? 'ஓ போடு', 'ஓ போடு', இது பாட்டா? மாண்புமிகு புரட்சித் தலைவர் பாடினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியாக, அதை விளக்கமாக ஒரு நாள் வைத்துக்கொள்வோம்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை அது நன்றாக இல்லை. சட்டம் இயற்றுவது சினிமா மூலம் வரும் கேளிக்கை வரிக்காக. சினிமாவிலே இருக்கக்கூடியவர்களையே அந்த சென்சார் போர்டிலே போட்டு அந்தப் படம் ஓட வேண்டும் என்பதற்காக நாம் எப்படி வேண்டுமானாலும் அனுமதித்துவிடுகிறோம். இது வந்து தப்பு, 'ஓ போடு' அதைவிட கேவலம். என்னுடைய சகோதரர்கள் இருக்கிறார்கள். சொல்வதற்கே வெட்கம். இந்தச் சபையிலே சொல்லக்கூடாது. கேவலம். இவ்வளவு மோசமான பாட்டுத் தேவையா? இதுமாதிரி பாட்டு எல்லாம் நாம் அனுமதித்துவிட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் அனுமதிக்கவில்லை. நாம் சட்டசபையில் இருக்கிறோம்.

**திரு. ஐ. கணேசன்:** சென்சார் போர்டு யாரு? (குறுக்கீடு) மத்திய அரசு. இங்கே தமிழ்நாட்டிற்கு? (குறுக்கீடு) எல்லோரும்தான் 150 பேர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் அரசாங்கம்தான் அது.

**திரு. ஐ. கணேசன்:** எங்கள் அரசாங்கம் இல்லைங்க. நாங்கள் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். நீங்கள் எல்லாம் அரசாங்கம், அரசாங்கம் என்று எல்லாவற்றையும் எங்கள் தலையிலேயே அரைக்கப் பார்க்கிறீர்கள். நமது நிதி அமைச்சர் அதில் மிகவும் கெட்டிக்காரர். (சிரிப்பு) அது இல்லை, நாங்களும் அதில் இருக்கிறோம், அவ்வளவுதான். அதனால் இந்த சினிமாதான் நம்முடைய தமிழ் கலாச்சாரத்தையே குட்டிச்சுவராக்குகின்றது. இன்றைக்கு கேட்கிறேன். சீரழிக்கிறதா இல்லையா? தாய்மார்கள் சொல்லட்டும். நீங்கள் மவுன்ட்ரோட்டிலே போகிறீர்களே காரில், நம்முடைய பெண்கள் எங்கேயாவது, நூற்றில், ஆயிரத்தில், இலட்சத்தில் ஒரு பெண் பாவாடை, ஜாக்கெட், தாவணி போட்டு பார்த்திருக்கிறீர்களா? தமிழ் கலாச்சாரமா?

*பிற்பகல் 4—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், சட்டமுன்வடிவில் பேசுங்கள். 18 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஐ. கணேசன்:** இது சட்டம்தான். இது ரொம்ப மோசமான சட்டம். அதாவது தப்பாக நினைக்கக் கூடாது. இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஒரு ஆண்மீது அநியாயமாகப் பழி சுமத்தி இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குப் போட்டு, அப்படி பாதிக்கப்படும்போது தாய்மார்கள்தான்





பாதிக்கப்படுவார்கள். அதனால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது தயவு செய்து Select Committee—க்கு விட்டோ, இல்லை வேறு ஏதாவது ஒன்று பண்ணியோ இந்தச் சட்டத்தை நீங்கள் நன்றாக ஆராய்ந்து, அதன் பிறகு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் நம் எல்லோருக்கும் நல்லதாக இருக்கும். நம்முடைய கலாச்சாரத்தை, பண்பாட்டை, தமிழ் நாகரிகத்தை நீங்கள் எடுத்துக்காட்டுகிற அளவுக்கு இந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். சினிமா இந்தக் கலாச்சாரத்தை சீரழித்துவிட்டது. அதை நம் அரசாங்கம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசினுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மத்திய அரச்ாங்கத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து ஒரு சட்டமுன்வடிவை, இல்லை— சட்டத்தை மாற்ற வேண்டுமென்று நாம் முன்மொழிய வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் நம்முடைய தமிழ் கலாச்சாரம் நிலைநிறுத்தப்படும் என்பதை தயவுசெய்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றையதினம் பாடிய பாட்டு 'தூங்காதே தம்பி தூங்காதே' எப்பேற்பட்ட பாட்டு. 'வேப்ப மர உச்சியில் பேய் ஒன்று ஆடுது என்று' ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. கணேசன், சட்டசபை முடிந்த பிறகு ஒரு நாள் வைத்துக்கொள்ளலாம் ஓய்வாக. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இன்றைக்கு இருக்கின்ற பாட்டு ஒரு பாட்டா? ஒரு நிமிடம். இந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது தயவுசெய்து, இரண்டு பக்கமும் கூர்மையான கத்தியைக் கையாள்வதைப் போல அரசாங்கம் நிதானமாக, சிந்தித்து, யாருக்கும் பாதிப்பு வராமல் Select Committee-க்கு விட்டு, அதன்பிறகு நிறைவேற்ற வேண்டுமென்று பணிவோடு உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்'

என்கிற பாரதியின் குரலுக்கு ஏற்ப பெண்களுக்கு எதிரான சமூக அநீதிகள் களையப்பட வேண்டும். அவற்றை ab-initio ஆரம்பம் முதற்கொண்டே ஒடுக்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகக் குறிக்கோளுடன் இருக்கிறார்கள். எனவே 1998 ஆம் ஆண்டு Eve-teasing Prohibition Act என்ற தலைப்பிலே இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தில் இப்போது எந்தவிதமான உட்கருத்தும் மாற்றப்படவில்லை. ஆனால் தண்டனையும் அதற்கு மேல் தண்டத் தொகையும்தான் அதிகப்படுத்தப்படுகின்றது. ஏறக்குறைய 1998 ஆம் ஆண்டு காலத்திலே சட்டம் இயற்றி, ஐ.நா. அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் ஒரு புள்ளிவிவரம், இந்தியாவிலே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்று பார்த்தால் 74 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஏறக்குறைய Eve-teasing Prohibition Act 1998-ல் இயற்றப்பட்ட பிறகு 3320 குற்றங்கள் நடைபெற்று 8 நிகழ்வுகளிலேதான் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. அதுவும் சென்னையிலே 2282 குற்றங்கள். மற்ற எல்லாவற்றிலும் அபராதம் மட்டும் விதிக்கப்பட்டிருக்கின்றது. தண்டனை அளிக்கப்படவில்லை. எனவே அதிகமான அளவிற்கு இதிலே குற்றச்செயலிலே ஈடுபடுபவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்கிற வகையிலேயும், இது முற்றிலுமாக ஒடுக்கப்பட வேண்டும் என்கிற வகையிலேயும் அரசு இந்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இதற்கு ஆதரவு அளித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடைசெய்கின்ற (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 4—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சரின் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2002) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ 29—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2002) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வரும் மூன்று சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு கல்வி அமைச்சரைச் சார்ந்தவை. ஏதாவது கருத்துச் சொல்வதாக இருந்தால் சேர்த்துச் சொல்லலாம். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்த) மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவுகள் எல்லாம் இப்போது

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





சட்டமாக்கப்பட இருக்கின்றன. ஆசிரியர்கள் போராட்டங்கள் எல்லாம் இப்போது ஓய்ந்து ஓரளவுக்கு அவர்கள் அமைச்சரோடு பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மாணவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு பயம் இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. பொதுவாக பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு அரசுக் கல்லூரியும் இணைக்கப்படுகிறபோது கல்விக் கட்டணம் உயர்த்தப்படும் என்கிற அச்சம் அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், சாதாரணமாக அரசுக் கல்லூரியிலே ஒரு மாணவன் படிக்கிறபோது அவன் கல்விக் கட்டணத்தை மிகக் குறைந்த அளவிலே கட்டுகிறான். ஆனால் பல்கலைக்கழகத்தோடு அந்தக் கல்லூரி இணைந்துவிட்ட பின்னால் அவன் அதிகமான ஒரு தொகையைக் கட்ட வேண்டியிருக்கிறது என்கிற ஒரு பயம் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது அரசுக் கல்லூரியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் எந்த அளவுக்கு கட்டணத்தைக் கட்டுகிறார்களோ அதே கட்டணத்தைத்தான் அந்தக் கல்லூரி பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட பின்னாலும் கட்ட வேண்டி வரும் என்கிற உறுதியை நீங்கள் அளித்து அந்த மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

வேலூரிலே திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைக் கொண்டுவந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக் கொண்டு கூடிய விரைவிலேயே அந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நான் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளை பல்கலைக்கழகத்தோடு இணைக்கிற முயற்சியைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களை பாதிக்கின்ற விவரங்களையெல்லாம் உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவ்விதம் இருக்கும்போது பழையபடி பல்கலைக்கழகங்களுடன் இணைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கெனவே சட்டமன்றத்திலே பேசி இருக்கிறோம். இருந்தாலும், அரசு திரும்பவும் சட்டமாக்குவதற்கான முயற்சியை எடுத்திருக்கிறது. எனினும் இதன்மீது இருக்கின்ற பாதிப்புகளை நான் திரும்பவும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, மாணவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் அதற்கு நீண்ட விளக்கத்தை சென்ற முறை பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அளித்தார்கள், பாதிக்காது என்று. ஆனால் பல்கலைக்கழகத்தில் மாற்றப்படுகிறபோது கட்டண விகிதங்கள் மாறுகிற சூழ்நிலை கண்டிப்பாக ஏற்பட்டு விடும். இப்போது இருக்கிற நிலைமையிலேயே கல்லூரிகளிலே படிக்க முடியாத நிலையில் கிராமப்புறத்திலே இருக்கிற ஏழையெளிய மாணவர்கள், இப்படி இணைக்கப்படுகிறபோது மேலும் மேல் கல்வியை, உயர் கல்வியைப் பெற முடியாத ஓர் இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே அரசுக் கல்லூரிகள் என்று இருக்கிறபோதுதான், ஓரளவாவது கிராமப்புறத்து மாணவர்களாலே கல்வி பயில முடிகிறது. அதுவே தனியார் கல்லூரிக்குச் செல்கிறபோது அவர்களால் இயலாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. தொடர்ந்து இது நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. ஆகவே ஏழை எளியவர்களுடைய கல்வி பாதிக்காத வண்ணம் இந்தச் சட்டத்தைப்பற்றி நமது அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி. திரு. புகழேந்தி, கடைசியாகப் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களாலே, பல்கலைக்கழகங்கள், குறிப்பாக திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம்பற்றி திருத்தச் சட்டமுன்வடிவுகள் இங்கே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவு வருவதற்கு முன்பு கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லாம் போராடிக்கொண்டிருந்த நிலையை நாம் கண்ணுற்றோம். இவர்களுடைய போராட்டத்தினுடைய நோக்கம், அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கின்ற நேரத்திலே ஆசிரியர்கள் சலுகைகள்



எல்லாம் பறிக்கப்படும் என்ற ஓர் அச்சம் ஏற்பட்டது. அந்த அச்சத்தின் அடிப்படையிலே அவர்கள் போராடினாலும்கூட, அரசினுடைய கெடுபிடியான நடவடிக்கைக்குப் பயந்து, அரசு அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலே அவர்கள் எல்லாம் பணிக்குத் திரும்பிச் சென்றிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல. நம்முடைய மாணவர்களுடைய போராட்டமும் அதேபோல்தான். இப்போது பல்கலைக்கழகங்களுடன் சேர்ப்பதனாலே, Self-financing Colleges என்று சொல்கிறார்களே, சுயநிதிக் கல்லூரிகள் கட்டணத்தைப்போல நிச்சயமாகக் கூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எவ்வளவுதான் நாம் இன்று சொன்னாலும்கூட, எதிர்காலத்திலே இந்தக் கல்விக் கட்டணம் கூடுகின்ற காரணத்தாலே, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுடைய கல்வித் தரம் வெகுவாகப் பாதிக்கக்கூடும். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரும் அதே வேளையிலே, ஏழை எளிய, கிராமப்புறத்துக் குழந்தைகளுடைய கல்வி நலன் பாதிக்காத வகையிலே எக்காரணம் கொண்டும் கல்விக் கட்டணம் கூடாத வகையிலே, இந்தத் திருத்தச் சட்டம் அமைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. ஆகவே மாணவர்களுடைய நலன், ஆசிரியப் பெருமக்களுடைய நலன் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் வைக்கிறேன். அதேநேரத்திலே, இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தையே எடுத்துக்கொள்வோம். இந்தப் பல்கலைக்கழகங்களிலே இடஒதுக்கீட்டு முறை முழுமையாகப் பின்பற்றப்படவேயில்லை. நான் இந்த மாமன்றத்திலே கடந்த ஆட்சிக் காலத்திலேயும் சரி; இப்போதும் சரி பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். உதாரணத்திற்கு, தாழ்த்தப்பட்டவர்களுடைய இட ஒதுக்கீடு 18 சதவீதம் என்று இருந்தாலும்கூட, சென்னைப் பல்கலைக்கழகத்திலே 2 சதவீதம்கூட நிறைவேற்றப்படவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு 2 1/2 சதவீதத்திற்கும் குறைவாகவே நிறைவேற்றப்படுகிறது. இப்படி பல்கலைக்கழகங்களிலே பணி நியமனங்களிலே முறையான இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்ற குறை தொடர்ந்து இருக்கின்ற காரணத்தாலே, இந்தத் திருத்தச் சட்டத்தின்மூலம் அந்த இட ஒதுக்கீட்டு முறை முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும். கல்விக் கட்டணத்தை எக்காரணம் கொண்டும் கூடுதலாக்கக்கூடாது என்ற கருத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களோடு கல்லூரிகளை முழுமையாக ஒப்படைக்கின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய இன்னல்கள் அல்லது எதிர்காலத்திலே எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலைகள் குறித்து, மாணவர்கள், ஆசிரியர்கள் அச்சத்தோடு போராடிய காலமும், ஆசிரியர்கள் இன்றைக்குப் பணிக்குப் போய்விட்டாலும்கூட, மாணவர்களிடையே இன்று தோன்றியிருக்கின்ற அச்சம், இதற்கு அடிப்படைக் காரணம், பல்கலைக்கழகங்கள் போதுமான அளவிற்கு நிதி நிலையோடு இல்லை என்ற கருத்தை இங்கேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழகங்கள் நிதி நிலைமை சரி இல்லாதபோது ஏழை எளிய மாணவர்கள்,— அதாவது வசதி வாய்ப்பு இருப்பவர்கள் தனியார் கல்லூரியிலே போய்ச் சேருவது வேறு. ஆனால் கல்லூரிப் படிப்பு என்றால் ஆண்களாயினும், பெண்களாயினும் அரசுக் கல்லூரிகளை நாடிச் செல்கின்ற சூழல் நிலவுகிறது. அரசுக் கல்லூரிகளை நாடிச் செல்கின்றபோது அங்கே பல்கலைக்கழகங்கள் நிதிநிலை சரியில்லை என்று கட்டணங்களை எதிர்காலத்திலே உயர்த்துகின்ற நிலை வருமேயானால் நிச்சயமாக சாதாரண, நடுத்தர, ஏழை எளிய மக்களுடைய கல்வி நிலை பாதிக்கப்படும். கல்லூரிப் படிப்பிற்குப் போகவே வேண்டாம் என்ற சூழ்நிலைகள் உருவாகிவிடுமோ என்ற அச்சம்தான். நம்முடைய தலைவர்கள் எல்லாம், பெரியார், அண்ணாவைப் போன்றவர்கள் எல்லாம் போராடிப் பெற்ற அந்த உரிமை, அவர்களுக்கு முழுமையாக கல்வி அறிவு வேண்டும்; அறியாமை நீக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்துகள், இதன்மூலமாகத் தூர்ந்துப்போகக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே அந்த அச்சத்தை அகற்ற வேண்டியது அரசின் கடமை. பல்கலைக்கழகங்களுடைய நிதிநிலை எப்படி இருந்தாலும், நிச்சயமாக மாணவர்களுக்கு எந்தவிதமான சலுகைகள் பாதிப்பும் இருக்காது, கட்டண உயர்வும் இருக்காது என்ற அந்த வாக்குறுதியை, உத்தரவாதத்தை அரசு எப்படித் தரப் போகிறது என்று தெரியவில்லை. ஆனால் தர வேண்டும். அது தொடர்ந்து நிலை பெற வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாக இங்கே இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவில் எடுத்து வைத்து அமர்கிறேன்.

*பிற்பகல் 4—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.





**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9—5—2002 அன்று இதே சட்டமன்ற மாமன்றத்தில் இதுபற்றி விரிவாக விவாதம் செய்யப்பட்டு அது சட்டமாக மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு, இந்த அரசுக் கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாக மாற்றுவதற்கான ஒப்புதலை மத்திய அரசிலுள்ள அமைச்சர் அவர்களும் பிறகு ஜனாதிபதி அவர்களும் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுவிதமான புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் கல்வித் துறையிலே அறிமுகப்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில்தான் அரசுக் கல்லூரிகளையும் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்ற வேண்டும் என்ற சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து அது சட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனுடைய முக்கியமான குறிக்கோள், பொதுவாக ஒரு கல்லூரி ஆரம்பித்தோம் என்று சொன்னால், அந்தக் கல்லூரிக்கு தன்னாட்சி வேண்டும் என்று கேட்பது, autonomous வேண்டும் என்று கேட்பது ஓர் இயற்கை. அதற்கடுத்தது அதை ஒரு நிகர்நிலை பல்கலைக்கழகமாக, Deemed University-ஆக மாற்ற வேண்டுமென்று, அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். பிறகு அதைப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொல்லும்போது வேலூரிலே பல்கலைக்கழகம் வேண்டும் என்று சொன்னார்கள். ஆக ஒரு பல்கலைக்கழகம் என்பது உயர் கல்வியிலே எல்லோரும் வரவேற்கக்கூடிய ஓர் உச்சநிலை ஆகும். ஆகவே அதை கருத்தில் வைத்துக்கொண்டுதான் ஒவ்வொரு அரசுக் கல்லூரியையும் பல்கலைக்கழகத்துடன் சேர்க்கும்போது அதனுடைய அந்தஸ்தும் உயர்கிறது. ஒரு கல்லூரி என்பதைக் காட்டிலும் ஒரு பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாக ஆகும்போது ஏறக்குறைய ஒரு department மாதிரிதான் அது. ஆகவே ஆராய்ச்சி போன்றவற்றை எல்லாம் தொடர்வதற்கும், அந்த ஆராய்ச்சியின் மூலமாக ஆசிரியர்கள் பெற்ற அறிவை மாணவர்கள் பெறுவதற்கும் இது நன்கு ஏதுவாக அமைகிறது. ஆகவே அதைக் கருத்தில்கொண்டுதான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம். அதோடு உறுப்புக் கல்லூரியாக மாற்றும்போது பல்கலைக்கழக மானியத்தில் பல திட்டங்களுக்கு வேண்டிய நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. Modernisation Programme போன்றவற்றுக்கு எல்லாம் மத்திய அரசு பணம் தருகிறது. ஆனால் அரசுக் கல்லூரி என்ற எண்ணத்தில் எடுத்து நாம் அதற்காகக் கொடுத்தோம் என்றால் அந்தப் பணம் நமக்கு வருவதில்லை. அரசாங்கம் பணம் செலவு செய்கிறது கல்வியை வளர்ப்பதற்காக. அதேநேரத்தில்

மற்ற எந்தெந்த வழிகளிலே அந்தப் பணத்தைப் பெருக்கி அந்தக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் கிடையாது.

சொல்லப்போனால், தருமபுரியிலே ஒரு கல்லூரி இருக்கிறது என்றால் இப்போது அதை பல்கலைக்கழகத்தின் அங்கமாக ஆக்கும்போது அதனுடைய அந்தஸ்து உயர்கிறது. முசிறியிலே இருக்கிற ஒரு அரசுக் கல்லூரி உயர்ந்தால் அதனுடைய அந்தஸ்து உயர்கிறது. அதேபோல கோத்தகிரி, ஊட்டியிலே இருக்கிற அரசுக் கல்லூரி உயர்ந்தால் அதுவும் ஒரு University—யாக மாறுகிறது. ஆகவே அப்படி மாறும்போது அதனுடைய தரம் உயரும்போது, அந்தக் கல்லூரியின் தரமும் உயர்கிறது. வசதிகளைப் பெறுவதற்கு அங்கு வாய்ப்பு இருக்கிறது. வெறும் கல்லூரிகளாக வைத்துக்கொண்டு இருந்தோம் என்றால், அதனுடைய வளர்ச்சி குன்றிவிடுகிறது. ஆகவேதான் வளர்ச்சி பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அவற்றைக் கொண்டுவந்தோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. அப்படிக் கொண்டுவரும்போது சில குறைபாடுகளை ஆசிரியர் பெருமக்கள் சொன்னார்கள். முதலில் இந்தக் கருத்தைச் சொல்வதற்காக பல கூட்டங்களில் நானும் இதுபற்றி விவாதங்கள் செய்தபோது அப்போது யாரும் எதிர்க்கவில்லை; வரவேற்றார்கள். ஏனென்றால் ஒரு கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்தாக மாற்றும்போது எல்லோரும் வரவேற்கின்ற ஒரு செயலாகக் கருதினோம். ஆனால் சட்டம் இயற்றப்பட்ட பிறகுதான், ஜனாதிபதி ஒப்புதல்அளித்த நேரத்தில்தான் ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினையை உருவாக்கினார்கள். ஏனென்றால் அவர்களை பல்கலைக்கழகத்தில் சேர்க்கும்போது அவர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக மாறுகிறார்கள் என்ற நிலையை உயர்த்தப் பாடுபட்டோம். என்னைப் பொறுத்தவரையில் இதை ஒரு நல்ல திட்டமாகக் கருதினேன். பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக மாறினால் அவர்களுடைய அந்தஸ்துதான் உயர்கிறது. பிறகு அவர்களுடைய retirement age *58—* லிருந்து *60* வயது வரை உயர்ந்து பணியாற்றலாம். பிறகு automatic promotions ஆசிரியர்களுக்கு உண்டு. இங்கே அரசுக் கல்லூரிகளில் அதிகமான அளவிற்கு promotions கிடைப்பதில்லை. பயன்கள் எதுவும் கிடைப்பதில்லை. ஆனால் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார்கள் என்றால் அவர்களுக்கு Career Advancement Scheme என்று இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், *7* ஆண்டுகள், *5* ஆண்டுகளுக்குள்ளாக அவர்களுக்கு automatic -ஆக Reader, Assistant Professor, Professor போன்ற பல அந்தஸ்துகள் கிடைக்கின்றன.



ஆனால் அரசுக் கல்லூரிகளில் கிடைப்பதில்லை. அப்படிச் செய்வதன் மூலமாக ஆசிரியர்களுக்குப் பலன் இருக்கும் என்று நாங்கள் கருதினோம். அதனால் வெளியிட்டோம். ஆனால் ஆசிரியர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். அதற்காகப் போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்துவதற்கு முன்பே சொன்னோம். எதுவாக இருந்தாலும் இந்த அரசானது பேசித் தீர்க்கத் தயார் என்று சொன்னோம். போராட்டம் தேவையில்லை என்றுதான் சொன்னோம். இந்த அரசானது, புரட்சித் தலைவி அரசானது எதையும் மூடி மறைப்பதில்லை. அவர்கள் குறையைச் சொன்னார்கள். எங்களிடம் என்ன சொன்னார்கள்? அரசாங்க ஊதியம் இருக்க வேண்டும், எங்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக ஆசிரியர்களாக இருக்க வேண்டாம் என்று கோரிக்கை வைத்தார்கள். அப்படி விரும்பினால் அரசுக்கு ஆட்சேபணை இல்லை என்றுதான் சொன்னோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அதைத்தான் அவர்களுடன் பேசி, அவர்கள் என்னென்ன குறைகளைச் சொன்னார்களோ அவற்றையெல்லாம் போக்கி அவர்களுக்கேற்ற வகையில்தான் இந்தச் சட்டத்தை, ஒரு மாறுதலாகக் கொண்டுவந்திருக்கின்றோம். ஆகவே இப்போது இதை வாபஸ் வாங்குகிற நிலை வந்தால் என்னவாகும் என்றால் originality இல்லாமல் போகும், சட்டத்திற்கு (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு)

*பிற்பகல் 5—00*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப்பற்றி நாங்கள் சொல்கின்றபொழுது, அமைச்சர் தெரிவிக்கின்ற கருத்தின் அடிப்படையிலே பார்க்கின்ற நேரத்திலே, கல்லூரியை நடத்தக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், தன்னுடைய கல்லூரி Deemed University யாக வர வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்தில்லை என்ற ஆர்வத்திலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கமாகச் சொல்லப்படுவது, கல்லூரிகளுக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு, பல்கலைக்கழகத்திலே தன்னாட்சி அதிகாரம் பெறுவதற்குமாகச் சொல்கிறார்களே தவிர, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற காலமெல்லாம் மாறி இப்போது புரட்சிப் பெண்களாக, புதுமைப் பெண்களாக வருவதற்கு பெண்கள், சாதாரண கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய அடித்தட்டுப்

பெண்கள், எளிய முறையிலே குறைவான கட்டணத்திலே கல்வி பெறுவதற்குண்டான சூழ்நிலை நிலவிக்கொண்டிருக்கிறது; இருந்து கொண்டிருக்கிறது. இப்படி பல்கலைக்கழகங்களுடன் இணைப்பதனாலே சாதாரண ஏழை எளியோர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் கல்லூரிகளிலே சட்டப் படிப்பு, சட்ட மேற்படிப்பு படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே அதைத்தான் பிரதான கருத்தாக எடுத்துக் கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கல்விக் கட்டணம் உயர்த்தப்படக்கூடாது என்ற நிலையிலே இது அமைய வேண்டும் என்பதே என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கும், கல்லூரிகளுடைய வசதிகளைப் பெருக்குவதற்கும் பல வழிவகைகளைக் கொண்டுவருவதற்கெல்லாம் அரசு பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல பட்ஜெட்டிலே அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்குகின்றோம். அதோடு நின்றுவிடாமல், மற்ற எந்தெந்த வழிகளில் பணத்தைக் கொண்டுவர முடியுமோ அதை அந்தக் கல்லூரிக்குக் கொண்டுவருவதற்காகத்தான் இதனுடைய ஒரு திட்டம். அதிலே பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலமாகவும்கூட பணத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதையும் பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், டெல்லியிலே பார்த்தீர்கள் என்றால் டெல்லி யூனிவர்சிட்டியிலே 78 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. அவை அனைத்துமே Constituent - உறுப்புக் கல்லூரிகளாகத்தான் இருக்கின்றன. அங்கே முழு grant, 100% grant கொடுக்கிறார்கள், U.G.C. ஆகவே அங்கே பல வசதிகள் பெருக்கப்பட்டிருக்கின்றன. இங்கே குறைவுதான். ஆகவே அதையும் ஏதாவது பெறமுடியுமா என்ற வகையில் அதைப் பெறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்காகவும் இதைக் கொண்டுவருகின்றோம். அது ஒன்று.

இரண்டாவது, இப்போது, முதலில் ஆசிரியர்கள் பிரச்சினையைக் கிளப்பியபோது, அவர்கள் சொன்னது, அரசு ஊழியர்கள் அந்தஸ்து தொடர்ந்து எங்களுக்கு இருக்க வேண்டும்; பல்கலைக்கழகத்திற்குப் போனால் பண வசதி இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே எங்களுடைய சம்பளத்திற்கும் மற்றவற்றைப் பெறுவதிலும் பிரச்சினைகள் வரும்.



எங்களுக்கு pension இருக்கிறது என்று ஏதேதோ குறையைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியைத் தந்தார்கள். உங்களுக்கு வேண்டிய அனைத்து சம்பளத்தையும் இந்த அரசே ஏற்று, பல்கலைக்கழகத்திற்கு முழுமையும் தரும். உங்களுக்கு வேண்டிய pension benefits எல்லாமே தரும். ஆகவே எந்த விதத்திலும் குறைபாடு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருபடி மேலே சென்று நீங்கள் அரசு ஊழியர்களாகவே இருங்கள்; எங்களுக்கு எந்த விதத்திலும் objection கிடையாது; அரசுக்கு objection கிடையாது என்று சொல்லி அதற்கென்று ஒரு குழுவை அமைத்து, நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அந்தக் குழுவை அமைத்து, அந்தக் குழுவிலே இந்தக் கருத்தெல்லாம் சொல்லப்பட்டு, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் எல்லாமே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த மாறுதலும் அவர்களைப் பொறுத்து கிடையாது.

அடுத்ததாக, ஆசிரியர்கள்—மாணவர்களைக் காட்டிலும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மேல் அக்கறை இப்போது வந்துவிட்டது, இந்தப் போராட்டத்தைத் தொடருவதற்காக; ஆகவே மாணவர்களுடைய இந்தக் கட்டணம் உயர்ந்துவிடும் என்ற பிரச்சினையை முன்வைக்க ஆரம்பித்தார்கள். அதற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கை தந்தார்கள். மாணவர்களுக்கு கட்டணத்தை தற்போது எந்த விதத்திலும் நாங்கள் மாற்றமாட்டோம் என்ற அந்த உத்தரவாதத்தைத் தருவதாகவும் சொன்னார்கள்.

அடுத்ததாக அரசுக் கல்லூரியாக இருந்தால் கட்டணமே உயர்த்தப்படாமல் இருந்துவிடும், பல்கலைக்கழகத்திற்குச் சென்றால் கட்டணம் உயர்ந்துவிடும் என்ற வாதத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் அரசுக் கல்லூரியாக இருந்தால்கூட கட்டணத்தை உயர்த்த முடியும், அரசு நினைத்தால். ஏனென்றால் பல நேரங்களில் பலவற்றைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று நீங்கள் சொல்கிற கருத்தும் ஆராய வேண்டிய ஒன்றுதான். ஆகவே அரசுக் கல்லூரியாக இருந்தால் கட்டணம் உயர்த்தப்பட மாட்டாது, பல்கலைக்கழகம் என்றால் கட்டணம் உயர்ந்துவிடும் என்பது, அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வாதம். பல்கலைக்கழகம் என்றால்கூட, அங்கே நம்முடைய அரசிலே இருக்கின்ற அரசுச் செயலாளர், Director மற்றவர்களெல்லாம் அங்கே Syndicate member களாக இருக்கிறார்கள்.

அவர்களெல்லாம் கலந்துதான் கட்டணத்தை உயர்த்த முடியும். ஏனென்றால், பல்கலைக்கழகமும் அரசினுடைய ஓர் உறுப்புதான். பல்கலைக்கழகம் என்றால் சுதந்திரமாகச் செயல்படலாம். அதற்கு சுதந்திரம் தரப்பட்டிருந்தாலும்கூட, கல்வித் துறையிலே நம்முடைய இதே சட்டமன்றத்தில்தான் அதற்கும் வாதாடி அதற்கு வேண்டிய அனைத்து பணத்தையும் தர இருக்கின்றோம். நம்முடைய 'Block grants' —லே, அப்படிக் கொடுக்கும்போது இதை இங்கேயே நம்முடைய உறுப்பினர்கள் பேசலாம். இந்தக் கட்டணங்களை உயர்த்த வேண்டிய தேவை இல்லை; அதனால் ஏழை மாணவர்கள் அவதிப்படுவார்கள்; ஆகவே ஏழை மாணவர்கள், கிராமப்புற மக்களுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டும் என்றால், அந்தக் கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பேசுவதற்கு, எப்படி அரசுக் கல்லூரிக்கு வேண்டாம் என்று சொல்கின்றோமோ அதேபோல, பல்கலைக்கழகத்திற்கும் வேண்டாம் என்று சொல்வதற்கும் இந்த மாமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஏனென்றால் அவர் 'grant' வரும்போது discussion—லே பேசினார். அதிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும் சிலர் அங்கே செனட் மெம்பராக இருக்கிறார்கள், நம்முடைய மாமன்றத்தில் நம்முடைய கருத்துகளைச் சொல்வதற்காக. ஆகவே கட்டணம் அங்கு சென்றால் உயர்ந்துவிடும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம். இருப்பினும், நம்முடைய முதல்வர் அவர்கள் உறுதி தந்திருக்கின்றார்கள். அங்கு சென்றாலும் Constituent College—ஆக மாறினாலும் கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வதற்கு தற்போது அரசு உத்தரவாதம் தருகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் அங்கே வருவதற்கு வாய்ப்பு கிடையாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைப்பற்றிச் சொல்லும்போது, இந்த அரசு—நீங்கள் சொல்வது—மாணவர் சேர்க்கையில் தற்போது நடைமுறையில் உள்ள இன ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து பின்பற்றப்படும்—இதைத்தான் நம்முடைய உறுப்பினர்கள் அடிக்கடி வலியுறுத்துகிறார்கள். அதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 5—05*

அடுத்ததாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் அனைத்து உதவித் தொகை திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக மாறினாலும்கூட இந்தச் சலுகைகள் தொடர்ந்து செயல்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல், மாணவர்களுக்கு உயர் கல்வி பெறுவதற்கு வாய்ப்புகள் தருவது எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது. இந்த அரசினுடைய கொள்கையை அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே ஓர் அறிவிப்பைச் சொன்னார்கள். பெண்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட பெண்களுக்கு பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு அனைத்துக் கல்வியும் இலவசமாகத் தருவதற்கு உறுதி தந்திருக்கிறார்கள். அத்தகைய சலுகைகள் தொடர்ந்து செயல்படும் என்பதைத்தான், இந்தக் கருத்தாகச் சொல்கின்றேன். ஆகவே மாணவிகளுக்கு எந்தவிதத்திலும் அந்தப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு கிடையாது. அதேபோல, குறிப்பாக, மீண்டும் சொல்கிறேன். தற்போதுள்ள படிப்பு கட்டண விகிதங்கள் மாற்றப்படமாட்டாது என்ற உறுதியும் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களுக்கு இதனால் எந்தவிதமான பாதிப்பும் வருவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே இதுபோன்று மாமன்றத்தினுடைய கருத்துகள் அடிக்கடி வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அருள்கூர்ந்து இந்த விளக்கங்களை ஏற்று, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டங்களுக்கான திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2002) நிறைவேற்றப் பெற வேணடும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (ஊ) சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2002). மாண்புமிகு கல்வி அமைச்சர், நீங்கள் முன்மொழிய வேண்டும். ஏனென்றால் அதில் பேசுகிறவர்கள்தான் மொத்தமாகப் பேசலாம். பதிலும் மொத்தமாகச் சொல்லலாம். நீங்கள் முன்மொழிய வேண்டும்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (ஏ) திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2002). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*பிற்பகல் 5—10*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்விஅமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (ஏ) குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002). மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"*2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

Statement of Objects and Reasons—லே என்ன சொல்கிறார்கள் என்றால், "In order to give sufficient time to investigating agency to complete the process of investigations, as the existing period of fifteen days is found to be not sufficient, the Government have decided to amend sub-section (2) of the said section 167 by enhancing the period of detention of the accused from fifteen days to thirty days".

இது அடிப்படையான ஒரு சிறைக் கைதியினுடைய உரிமையைக் கடுமையாகப் பாதிக்கக்கூடியது. இன்றைக்கு 15 நாட்களில் காவல் துறையிலே எந்த வழக்கையும் investigate செய்து, charge sheet கொடுத்து, வழக்குகளை முடிப்பது என்ற வழக்கம் இல்லை. அவரவர்களுடைய தேவைக்கேற்ப நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் இப்போது என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஒருவரைக் கைது செய்தால் ஒரேயடியாக 30 நாட்கள் அவனை உள்ளே தள்ளலாம். இந்த 15

@ 29—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 அக்டோபர் 31

நாட்களில் அவனுக்கு ஏதோ ஏற்படுகிற harassment என்பது 15 நாட்கள் கழித்து அதை நீதிபதியிடத்திலோ அல்லது மேஜிஸ்ட்டிரேட் அவர்களிடத்திலோ, அதைச் சொல்வதற்கு அவனுக்கு இருந்த வாய்ப்பு இதனாலே மூடப்படுகிறது. இது அடிப்படை உரிமையை மீறுகிற ஒன்று என்பது எங்களுடைய கருத்து. இந்த நேரத்தில் என்ன நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், investigate பண்ணுவதற்கு 15 நாட்கள் காணாது என்ற காரணத்தால்— அடுத்த 15 நாட்களை அவர்களே வாங்கலாம். இப்போதுகூட சட்டத்தினை நிறைவேற்றியிருக்கிறோம். என்ன? ஒரு கைதியை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமலேயே remand-ஐ extend பண்ணுவதற்கான வசதி இன்றைக்கு சட்டத்திலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே அதற்காக என்று சொல்லி, இங்கே ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அந்தக் கைதியை extension-க்காகக் கொண்டு செல்வதில் சிரமம் இருக்கிறது, ஆகவே 30 நாட்கள் என்று மாற்றப்படுகிறது என்று எல்லாம் சொல்வது சரியல்ல. அப்படிப்பட்ட காரணங்கள்தான் சொல்லப்பட்டு இருக்கின்றன. இது காவல் துறையினுடைய கையிலே— மக்களுடைய அடிப்படை உரிமைகளை மீறக்கூடிய ஒரு முறையிலே உள்ளது என்கிற ஓர் எண்ணத்தை ஏற்படுத்துகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

இப்படி 30 நாட்கள் என்று வருகிற நேரத்திலே, வசதியாக நாம் investigate பண்ணலாம்; அவன் உள்ளேதானே இருப்பான் என்ற ஒரு மனோநிலை காவல் துறைக்கு ஏற்படுவதற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே அரசு இப்படி 15 நாட்கள் என்பதை ஒரேயடியாக 30 நாட்கள் என்று மாற்றுவது சரியல்ல. இன்றைக்கு extend பண்ணுவதற்கான வாய்ப்புகள் — 15 நாட்கள் — காணவில்லையென்றால் மீண்டும் extend பண்ணுவதற்கான ஏற்பாடுகள் இருக்கிற நேரத்திலே, இப்படிப்பட்ட ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்திருப்பது தவறு என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத் திருத்தத்தினை வாபஸ் பெற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையிலே Video Conferencing அதற்காக ஒரு சட்டம் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின்படி remand-லே இருக்கக்கூடிய கைதியை அழைத்துப் போகாமலேயே, நீதிமன்றத்திலிருந்து



2002 அக்டோபர் 31] [திரு. இ. புகழேந்தி]

மீண்டும் remand extension செய்வதற்கு வாய்ப்புகள், வசதிகள் இருப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டது. இப்போது 15 நாட்கள் remand என்பது 30 நாட்களாக மாற்றப்படுவதற்கான காரணம், அரசு கூறுகின்ற காரணம், அவர்கள் கொண்டுவந்த சட்டத்திற்கே முரண்பாடாக இருக்கிறது. இப்படி ஒரு சட்டம் வருகின்றபோது அது தேவையில்லை, அல்லது அது இருக்கின்றபோது இது தேவையில்லை. இப்போது 30 நாட்கள் என்கின்றபோது இன்னொரு பிரச்சினை என்னவென்றால், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவது மட்டுமல்ல; சிறைச்சாலைக்கு ஏதேனும் ஒரு வழக்கிற்காக அரசியல் நோக்கத்தோடு அரசியல்வாதிகளை, எதிர்க்கட்சிக்காரர்களைக் கைது செய்துகொண்டுபோகின்ற போதுகூட, இந்தச் சட்டத்தினை அடிப்படையாக வைத்துக்கொண்டு மிக அதிகமான தாக்குதலுக்கு இதைப் பயன்படுத்தக்கூடும் என்கின்ற ஓர் ஐயமும் இதிலே புதைந்திருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம் என்பது தேவையில்லாத ஒன்று; அவசியம் இல்லாத ஒன்று; முரண்பாடுகளுக்குள் சிக்கிக்கொண்டிருக்கின்ற ஒன்று; ஆகவே அரசு இந்தச் சட்டத்தினைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

*பிற்பகல் 5—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சராலே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிற இந்த அவசரச் சட்டமுன்வடிவு என்பது தேவையில்லாத ஒரு சட்டம். இதிலே, இந்தச் சட்டத் திருத்தத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிற காரணம், investigating agency-க்குக் கால அவகாசம் போதவில்லை. அதற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே Video Conferencing என்ற முறையைக் கொண்டுவரக்கூடிய நேரத்திலே, எதிர்க்கட்சிகளின் சார்பிலே நாங்கள் எல்லாம் குரல் கொடுத்தோம். அதையும் மீறி, அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அதற்குப் பிறகு இப்படி ஒரு சட்டம் என்று சொன்னால் இந்தச் சட்டம் சில நேரத்திலே குற்றம் செய்யாமலே குற்றவாளிகள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள், நிரபராதிகள்கூட 15 நாட்களுக்கு மேலாக ஒரு மாதம் தண்டிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு ஒருவன் தவறு செய்யவில்லை என்று சொன்னாலும்கூட, அவனுக்கு வேண்டாதவர்கள், பிடிக்காதவர்கள் எப்படியாவது புகார் கொடுக்க வேண்டுமென்று அவதூறான ஒரு புகாரை வழக்குமன்றத்திலே கொடுத்துவிடுகிறார் என்று சொன்னால், அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு

முதல் தகவல் அறிக்கையும் பெறப்பட்டு ஒரு மாத காலம் தவறு செய்யாமலேயே தண்டிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆக 15 நாட்களே அதிகம் என்று சொல்லக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே ஒரு மாத காலம் என்பது தேவையில்லாத ஒன்று. உதாரணத்திற்கு, இப்பொழுது ஆளும் கட்சி கொண்டுவரக்கூடிய சில திருத்தங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்கள், சாத்வீக முறையிலே அற வழியிலே போராட்டம் நடத்தினாலும்கூட, அந்த அற வழிப் போராட்டத்தை மீறி தண்டிக்கக்கூடிய, கைது செய்யக்கூடிய நடவடிக்கைகளை எல்லாம் தொடர்ந்து நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அல்லது பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக போராட்டம் என்று அறவழிப் போராட்டக் காலங்களிலேகூட கைது செய்யப்பட்டு, ஒரு. மாத காலம் வரை தண்டிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட சட்டம் நிச்சயமாக எந்தத் தரப்பு மக்களாக இருந்தாலும் சரி, யாருக்கும் தேவையில்லாத சட்டம். இந்தச் சட்டத்தை அரசு கட்டாயம் திரும்பப் பெற வேண்டும். இது மனித உரிமையைப் பறிக்கக்கூடிய ஒரு சட்டம். எனவே தயவுசெய்து, நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தேவையில்லாமல் இப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவை இன்று கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். Law Commission பல முறை இதுகுறித்து விவாதித்து, குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டால், முதலிலே காவல் துறையினர் Criminal Procedure Code Section 57—வது பிரிவின்படி, 24 மணி நேரம் அவரை வைத்திருக்கலாம். அந்த 24 மணி நேரத்திற்கு மேல் அவரை வைத்துக்கொள்ளக்கூடாது. புலன் விசாரணை முடியாவிட்டாலும்கூட, அருகில் இருக்கக்கூடிய magistrate—இடம் கொண்டுபோய், குற்றஞ்சாட்டப்பட்டவரை ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைத்தால் 15 நாட்கள் அவரைக் காவலில் வைக்க magistrate—க்கு அந்த அதிகாரத்தை இந்த Criminal Procedure Code 167. Sub-section 2 கொடுத்திருக்கிறது. 15 நாள் வரை நாம் அந்த அதிகாரத்தை magistrate—க்குக் கொடுத்து remand செய்கிறபோதுகூட, அந்த magistrate, he





has to apply his mind. அந்த judicial mind—உடன் அவர் அந்தப் பிரச்சினையை அணுகி, அவருடைய முழு கவனத்தையும் செலுத்தி காவல் துறையினுடைய reports எல்லாம் அதிலே சரியாக இருக்கிறதா, அவரை 15 நாட்கள் காவலில் வைக்கக்கூடிய அளவிற்கு C.D. - அதாவது Case Diary —யிலே materials இருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்த பிறகு after applying judicial mind, he has to remand என்றுதான் நாம் இப்பொழுது வைத்திருக்கிறோம். Law Commission-ம் அதைத்தான் வற்புறுத்தியது. மத்தியிலும் நாம் மத்திய சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, 15 நாள் போதும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்குமேல் அரியானா, அதேபோல பஞ்சாப், திரிபுரா போன்ற மாநிலங்களிலே இப்படிப்பட்ட ஒரு சோதனை அளவிலே அவர்களும் செய்து பார்த்திருக்கிறார்கள். அப்படி சோதனை செய்து பார்த்தபோது, திரிபுராவை எடுத்துக்கொண்டாலும் சரி, பீகார் போன்ற மாநிலங்களிலே 30 நாட்கள், சில நேரங்களிலே, சில குற்றங்களுக்கு 60 நாள் வைத்துக்கொள்ளலாம் என்றுகூட அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிக் கொண்டுவந்திருக்கிற காரணத்தினால், சிறைச்சாலையில் பல கைதிகள் அப்படியே கிடக்கிறார்கள். சில நேரங்களில் காவல் துறையினர் வேறு வேலையில் ஈடுபடுகிற காரணத்தினால், கோர்ட்டுக்கு அவர்களைக் கொண்டுபோகாமல், சிறையிலேயே செத்து சுண்ணாம்பாகிக் கொண்டிருக்கிறார்கள் அங்கே பல கைதிகள். நீதிமன்றத்தையும் பார்க்க முடியாமல், ஜாமீனிலும் வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இன்று திரிபுரா, அதேபோல குஜராத், அரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் நிலவி வருகிறது.

*பிற்பகல் 5—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொன்னதைப்போல, இதே அவையில் Video Conferencing மூலம் இவர்கள் 15 நாட்களுக்குள் புலன் விசாரணையை முடிக்க முடியாவிட்டால், சிறையில் இருந்தபடியே அந்தக் கைதியை remand extension செய்யமுடியும் என்ற ஒரு சட்டம் இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டது. அதற்குக்கூட நான் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தேன். ஆந்திராவிலே இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படியெல்லாம் சொல்லி நீங்கள் Video Conferencing மூலம் கொண்டுவருவதேகூட தவறு

[திரு. சி. ஞானசேகரன்] [2002 அக்டோபர் 31

என்று நாங்கள் வாதிட்டோம். அப்படி இருந்தும்கூட, ஒரு சட்டத்தை pass செய்திருக்கிறீர்கள். அப்படி இருக்கிறபோது, இந்த Government இப்போது why it breath hot and cold at the very same time? என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஒருபுறம் நீங்கள் Video Conferencing மூலம் remand extension செய்து கொள்ளலாம் என்று ஒரு சட்டம்; அதற்கு அடுத்து, இப்போது எங்களாலே புலன் விசாரணையை 15 நாட்களுக்குள் முடிக்க முடியவில்லை; ஆகவே 30 நாட்களுக்கு ஒரு கைதியை நாங்கள் சிறையிலே வைத்துக் கொள்வோம் என்பதற்காக இப்படி ஒரு சட்டமுன்வடிவை நீங்கள் கொண்டுவந்திருப்பது என்பது, வன்மையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் இங்கே ஆணித்தரமாக காங்கிரஸ் பேரியக்கத்தின் மூலமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நம்முடைய Codifying authorities முதலிலே என்னென்ன தீர்ப்புகளை உச்ச நீதிமன்றத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஞானசேகரன், கருத்துகளை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கருத்துதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விரிவான விவாதம் கிடையாது இதிலே.

**திரு. சி. ஞானசேகரன்:** கருத்துக்காகத்தான் நான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, திரு. ஜி.கே. மணி எல்லாம் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி உங்களுடைய கருத்து என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** "The object of the production of the accused is not merely to authorise detention but also to prevent abuse of investigating agency" என்றிருக்கிறது. அதாவது, புலன் விசாரணை அதிகாரி, தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை misuse செய்து, ஏதாவது ஒரு சாதாரண petty-case-75—வது பிரிவில் ஒரு case—ஐப் போடுவார்கள். Magistrate முன் உடனே கொண்டு சென்றால், அதிலே மிஞ்சிப் போனால் 50 ரூபாய் fine போடலாம். இல்லை ஒரு நாள் till the rising of the Court என்று ஒரு தண்டனை கொடுக்கலாம். ஆனால் Magistrate ஒரு remand போட்டு 30 நாட்களுக்குப் பிறகு வீட்டிற்கு அனுப்பிய பிறகு, 30 நாட்களுக்குப் பிறகு இவர்கள் ஒரு charge-sheet போட்டு, ஒரு நாள்



2002 அக்டோபர் 31] [திரு. சி. ஞானசேகரன்]

தண்டனை அனுபவிக்கக்கூடிய குற்றத்திற்குக்கூட, ஒருவனை நீங்கள் 30 நாட்கள் தண்டிக்கப் போகிறீர்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு சட்டம் நிச்சயமாக மனித உரிமையை முழுக்க முழுக்க நசுக்கக்கூடிய ஒரு சட்டமாக அமைந்துவிடும் என்கிற காரணத்தினால்தான் சொல்கிறேன். இதிலே இன்னொன்றுகூட— The first spell of the remand under Section 161...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள், அவ்வளவுதானே?

**திரு. சி. ஞானசேகரன்:** சுருக்கமாக இல்லை. இவ்வளவு பெரிய புத்தகத்திலே ஒருசில point—களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு பெரிய புத்தகத்தை எல்லாம் வாசிப்பதற்கு எல்லாம் நேரம் இல்லை. எல்லோரையும் தீபாவளி வரைக்கும் இங்கேயே உட்கார வைக்கப் போகிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, ஒரேயொரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் சீக்கிரம் முடித்து விட்டுப் போக வேண்டும் என்று சொல்கிறார்கள் அல்லவா? சொல்லுங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** The first spell of the remand under Section 161, Sub-section (1) is limited to only 15 days. Once the stage is reached, Sub-section 167(2) has to be resorted to.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்திலே இப்படி இருக்கிறது என்று மட்டும் சொல்லுங்கள். வாசிக்க வேண்டிய அவசியம் இல்லை. அமைச்சருக்கும் சட்டம் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, அமைச்சரும் சட்டம் படித்தவர்தான். நான் என்ன சொல்கிறேன் என்றால், "G.K. Moopanar Vs. State of Tamil Nadu 1990 Criminal Journal Page 2685" இதிலேகூட, 15 நாள் ரிமாண்டே போதும் என்றுதான் நம்முடைய சென்னை உயர்நீதிமன்றம்கூட தீர்ப்பளித்திருக்கிறது. உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆகவே The sword of democracy should not hang over the head of the accused for indefinite period

[திரு. சி. ஞானசேகரன்] [2002 அக்டோபர் 31

என்று இதிலே உச்ச நீதிமன்றத்தினுடைய பல தீர்ப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே நான் இந்த அரசையும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம்—நீங்கள் ஒரு unwanted and unwarranted legislation—ஐக் கொண்டுவந்து, சாதாரண மக்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு வழி காணுகிறீர்கள். உங்களிடம் காவல் துறை இருக்கிறது—15 நாட்களுக்கு ஒரு முறை நீங்கள் புலன் விசாரணையை முடிக்க முடியாவிட்டால், நீங்கள் மீண்டும் அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து ஒப்படைத்து, remand extension பெற்று, பிறகு நீங்கள் வழக்கை முடித்துத் தாருங்கள். இப்போது என்ன ஆகும் என்று சொன்னால், போலீஸ்காரர்கள் தூசி தட்டாமல் பல C.D.-க்களை அப்படியே 30 நாட்களுக்குத் தூக்கிப் போட்டுவிடுவார்கள். Petty case-க்குக்கூட அவர்கள் பல நாட்கள் சிறையிலே வாடக்கூடிய ஒரு கொடுமை இந்த இடத்திலே அரங்கேறும் என்கிற காரணத்தாலே, இந்தச் சட்டமுன்வடிவை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகக் கடுமையாக எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்கள் என்றிருப்பதை 30 நாட்கள் என்று ஆக்குவது, குறிப்பாக மனித உரிமையை மீறிய செயலாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. காரணம், விசாரணைக்காக ஒரு குற்றவாளியைக் கொண்டு வருகிறபோது, அவரைப்பற்றி எந்தவிதமான விசாரணையும் இல்லாதபோதே 15 நாட்கள் வைப்பது என்பதே ஒரு தண்டனை. அதை மேலும் 30 நாட்களாக மாற்றுவது என்பது தேவையில்லாத ஒன்றாக நான் கருதுகிறேன். குறிப்பாக, மனித உரிமைக் கமிஷன் பல தடவை சொல்லியிருக்கிறது. குற்றவாளிகளைக்கூட சிறைச்சாலைகளிலே அடைத்துதான் அவர்களுக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டுமென்று இல்லை. அவர்களை வெளியிலேயே வைத்து, அவர்களைத் திருத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று, ஒரு முன் முயற்சி எடுக்க வேண்டுமென்று மனித உரிமைக் கமிஷனே சொல்லியிருக்கிறது. ஆகவே சிறையிலே இருக்கிற காரணத்தாலே, அவர்களுடைய மன நிலை பாதிக்கப்படுகிறது. அதன் பிறகு திருத்துவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன என்று மனித உரிமைக் கமிஷன் சொல்லியிருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே நான் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு குற்றவாளி என்று அவர் நிரூபிக்கப்படாத நிலையில், அவர் மேலும் 15 நாட்கள் சிறையில் இருக்க



2002 அக்டோபர் 31] [திரு. வை. சிவபுண்ணியம்]

வேண்டுமென்று சொல்வது எந்தவகையிலும் நியாயமானதாக இல்லை. ஆகவே அரசு இந்தச் சட்டத்தைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5—25*

இன்னொன்று, நமது சுப்ரீம் கோர்ட்டும் சொல்லியிருக்கிறது. நமது உயர் நீதிமன்றத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிற செய்தி; நிறைய வழக்குகள் தேங்கிக்கொண்டே இருக்கின்றன. நிலுவையில் இருக்கின்றன. Special Court போட்டு அவற்றை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படியும் தீர்வு காணப்படவில்லை என்று சொல்கிற இந்த நேரத்தில், 15 நாட்களுக்குள்ளாகவே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய முடியாதபோது, ஒரு மாத காலம் என்று சொல்கிறபோது, மேலும் கால அவகாசம் நீடிக்கப்படும். ஆகவே வழக்குகள் தேங்குவதற்கான வாய்ப்புதான் அதிலே அதிகமாக இருக்கிறது. ஆகவே இதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதில்கூட, நடைமுறையில் இருக்கிற ஒன்று; 15 நாட்கள் என்று remand செய்வது சட்டப்படியாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் ஒரு குற்றவாளிக்கு 45 நாட்கள் கழித்துதான் ஜாமீனே கிடைக்கிறது. 506/2, 307 போன்ற வழக்குகளில் 45 நாட்களுக்கு இடையில் அவன் வெளிவர முடிவதில்லை. 302 போன்ற வழக்குகளில் குற்றவாளிகளுக்கு கிட்டத்தட்ட 4 மாதம், 5 மாதம் கழித்துதான் ஜாமீன் கிடைக்கிறது. ஆகவே நடைமுறையில் இப்படி இருக்கிறபோது, இந்தச் சட்டத்தை மேலும் திருத்துவது என்பது, மனித உரிமையைப் பாதிப்பதாக அமையும் என்கிற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில குற்ற நிகழ்வுகளில் Investigating Agencies, புலனாய்வு செய்பவர்களுக்குப் போதிய அவகாசம் அளித்து, புலனாய்வு முடிக்கப்பட வேண்டும். அதேநேரத்திலே சிறைச்சாலைகளிலிருந்து சிறைவாசிகளை நாம் நீதிமன்றத்திற்குக் கொண்டுவருகின்ற வழியில், பல்வேறு சிரமங்கள் சிறைவாசிகளுக்கும் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையையெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்

[திரு. டி. ஜெயக்குமார்] [2002 அக்டோபர் 31

நிச்சயமாக அறிந்திருப்பார்கள். கடந்த காலங்களிலெல்லாம் ஏறக்குறைய சிறைவாசிகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லும் போது வரும் வழியிலே தப்பித்து விடுகின்ற சூழ்நிலை; அதுமட்டுமல்லாமல், சிறைவாசிகளுடைய எதிரியே பழிக்குப் பழியாகத் தீர்த்து கொல்லப்பட்ட சம்பவங்களையெல்லாம்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள். புள்ளிவிவரத்தை நாம் உற்று நோக்கும்போது, 1998 ஆம் ஆண்டு, Prison custody and Police custody —யிலிருந்து 70 பேர் தப்பித்துச் சென்றிருக்கிறார்கள். மொத்தம் 1991 ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரையிலே தப்பித்துச் சென்றவர்களின் எண்ணிக்கை என்று பார்த்தால், 656 கைதிகள் தப்பிச் சென்றிருக்கிறார்கள். எனவே இதிலே man-power மற்றும் செலவைக் குறைத்து மற்றும் சிறைக் கைதிகளுடைய உரிமையையும் பாதுகாக்கின்ற வகையிலே ஒரு நல்லதைச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு, அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சொல்கிறபோதுகூட, முரண்பாடு என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, அன்றைக்கு இருந்த முதலமைச்சரால் கொள்கை அளவு ஒப்புதல் கொடுக்கப்பட்டு, Public Prosecutor—ஆக இருந்த சண்முகசுந்தரம் அவர்களுக்கு அரசின் சார்பிலே கடிதம் எழுதப்பட்டு, அவரும் இதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றார். அதை ஒரு நிமிடத்தில் நான் வாசிக்கின்றேன்:

"I have pursued the paper sent along with the Government letter dated 31.8.1998. I am of the opinion that the suggestion of the Director General of Police, Chennai to provide the extension period of remand of a person from 15 days to 30 days may be accepted. The papers received for reference are returned herewith."

தெளிவாகவே அன்றைக்கு உங்களுடைய P.P.—யே opinion கொடுத்திருக்கிறார். எனவே நிர்வாகத்தினுடைய ஒரு தொடர்ச்சியாகத்தான், பல்வேறு சிரமங்கள் இருக்கின்ற அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்தச் சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. எனவே சிறைவாசிகளுடைய அந்த உரிமை காப்பாற்றப்படும். அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். எந்தவிதத்திலும் உரிமைகள் மீறப்படாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்து, சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



2002 அக்டோபர் 31]

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முரண்பாடுகள் — contradictions — என்று நான் சொன்னது, Video Conferencing என்ற சட்டத்தை இந்த அரசே கொண்டுவந்து, இன்றைக்கு மீண்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதில் இருக்கின்ற முரண்பாடுகளைக் குறிப்பிட்டேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த Video Conferencing என்பதற்கு ஒரு சட்டமே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

*பிற்பகல் 5—30*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2002) ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஓ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2002), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள்(திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2002) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு மிக முக்கியமான கொள்கைப் பிரச்சினை இருக்கின்றது என்பது என்னுடைய கருத்து. அதாவது, Statement of Objects and Reasons என்பதில் என்ன சொல்கிறார்கள் என்றால், Hindu Religious & Endowment Department—க்கு என்று சில வேலைகள் செய்வதற்கு ஒரு Additional Commissioner post தேவை இருக்கிறது. ஆகவே Joint Commissioner post-லே இருக்கிற ஒருவர் Additional Commissioner-ஆக மாற்றப்படுகிறார். இந்த Additional Commissioner post-ன் காரணமாக 35,600 ரூபாய் அரசுக்கு அதிக செலவு ஆகிறது. ஒன்றை இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு Additional Commissioner post. create செய்யப்பட்டு அவருக்கு 35,600 ரூபாய் என்பது சம்பளம் மட்டும். அதோடு அவருடைய allowance. T.A./D.A.

@ 25-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதையெல்லாம் பார்க்கிற நேரத்திலே ஒரு பெரிய தொகை அரசுக்குச் செலவாகிறது. இரண்டு, மூன்று நாட்களாக, இந்த அவையிலே தொடர்ந்து பேசப்படுகிற ஒரு விஷயம், அரசு ஊழியர்களுக்கு இன்றைக்கு வருவாயில் ஒரு பிரதான பங்கு செலவு செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, அரசு ஊழியர்களுடைய ஒரு பகுதிதான் Additional Commissioner. Additional Commissioner என்ற ஒரு புதிய post create செய்து, அதிக செலவை மீண்டும் ஏன் ஏற்படுத்துகிறீர்கள்? அது எப்படி நியாயம்? இந்த Additional Commissioner வேலையை Joint Commissioner செய்வதற்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தால் போதுமே! இதற்கு என்ன Objects and Reasons சொல்கிறீர்கள்? அதாவது, The Government have upgraded the post of Joint Commissioner என்று சொல்கிறீர்கள். There is no provision in the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act to appoint an Additional Commissioner. Additional Commissioner என்ற ஒரு ஆளை appoint செய்வதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இல்லாததன் காரணமாக, Joint Commissioner post—ஐ இப்படி convert செய்வதைவிட, அந்தச் சட்டத்தைத் திருத்தி, அந்த Joint Commissioner இந்த வேலையைப் பார்க்கலாம் என்று கொண்டுவந்தால் போதுமே. இன்றைக்கு அரசு ஊழியர்களுக்கு அதிகமாக செலவு செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லி, போராடிக்கொண்டிருக்கிறவர்களை அழைத்துப் பேசுவதற்குக்கூட முடியாது என்ற ஒரு நிலையை எடுத்துக்கொள்கிற ஒரு மாநில அரசு, இப்படி அதிக செலவை ஏற்படுத்துகிற ஒரு சட்டம் கொண்டுவருவது என்ன நியாயம்?

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்று நான் ஒரு விஷயத்தை இந்த மாமன்றத்தின் வழியாகக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்திலே ஒரு தேவஸ்வம் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு முக்கியமான விஷயம். அங்கே 380 ஊழியர்களுக்கு இருக்கிற சம்பளம் 75 ரூபாய். இன்னொரு செட்டுக்கு இருக்கிற சம்பளம் 65 ரூபாய். இந்த 65 ரூபாய்க்காரனுக்கும், 75 ரூபாய்க்காரனுக்கும் மாதம் 50 ரூபாய் உயர்வு கொடுப்பதற்கு 1.7.1997 முதல் ஆணையிட்டதற்குப் பிறகு நிதிநிலை அனுமதிக்கவில்லையென்று மறுக்கப்படுகிறது. அந்த மாவட்டத்தினுடைய ஆலய ஊழியர்களுக்கு 1997—லிருந்து 2001 வரை 4 ஆண்டுகளுக்கு அந்த ஊதிய உயர்வு வழங்கவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள்? நிதிப் பற்றாக்குறை காரணம் என்று



சொல்கிறார்கள். அப்படி ஏழை ஊழியர்களுக்கு 380—க்கும் அதிகமான ஊழியர்களுக்கு 65 ரூபாயும், 75 ரூபாயும் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றவனுக்கு மாதம் 50 ரூபாய் உயர்வு கொடுப்பதற்கு நிதியில்லை என்று அரசு சொல்கிறபோது, இங்கு ஒரு Additional Commissioner post create செய்து மேலும் அதிகமாக நிதிச் செலவை ஏற்படுத்துவது என்ன நியாயம்?

*பிற்பகல் 5—35*

நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்வது, ஒரு Joint Commssioner post—க்கு powers delegate பண்ணலாம். அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக ஒரு Additional Commissioner post—ஐ create பண்ணுவது நியாயமா? சொல்லுங்கள். ஒரு தனி நபருக்காக வேண்டி இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. நான் அப்படி allegation பண்ணவில்லை. ஆனால் நான்கு நாட்களாக இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். அரசு ஊழியர்களுக்கு இன்றைக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. ஆகவே இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுடைய வசதிகள் இன்று பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடத்திலே செய்ய வேண்டிய வேலைகள் எழுதிக் கொடுத்ததற்குப் பிறகு செய்யப்படவில்லை. என்ன சொல்கிறார்கள்? சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்த நிதி இன்னும் அரசிடமிருந்து வரவில்லை; ஆகவே அந்த வேலைகளைச் செய்ய முடியாது என்று எங்களுடைய மாவட்டத்திலே சொல்லப்படுகிறது. அப்படி சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி ஏழை எளிய மக்களுடைய வசதிக்காக வேண்டி செலவு செய்ய வேண்டி....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 11 Bills இருக்கின்றன. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்தப் பணம்கூட அனுமதிக்கப்படாமல் இருக்கின்ற நேரத்திலே ஒரு Additional Commissioner post create பண்ணி 50,000 ரூபாய் அதிகம் செலவு செய்ய வேண்டுமா? என்ன கொள்கை? ஆகவே இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன். இதை வாபஸ் பெற வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து இப்போது தன்னுடைய துறைக்கு ஒரு Additional Commissioner புதிதாக நியமிப்பதற்காக ஒரு வழிவகை காண்பதற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். நேற்று அவர் 110 statement-ஐப் படிக்கின்றபோது இந்தக் கூடுதல் பதவி உருவாக்குகின்ற காரணத்தினால், அரசாங்கத்திற்கு எந்தவிதமான பணச் செலவும் இல்லையென்று அவர்கள் சொன்னதாக எனக்கு நினைவு. ஆனால் இந்த நிதிக் குறிப்பிலே பார்க்கின்றபோது இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாக இயற்றப்படுகின்றபோது மாநில தொகு நிதியிலிருந்து செலவிட நேரிடும். அதற்கான சட்டம் இயற்றுதல் விளைவாக ஏற்படக்கூடிய செலவு ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 35,600 ரூபாய் என்று இங்கே நிதிக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தன்னிடம் இருக்கக்கூடிய அலுவலர் ஒரு Joint Commissioner-ஐ இவர்களாகவே அந்தப் பொறுப்பைக் கொடுத்து அந்த Additional Commissioner எந்தப் பணியை ஆற்றப்போகிறாரோ அந்தப் பணியை இவர்கள் மிக எளிதாக ஆற்ற வைக்க முடியும். அதை விடுத்து, இப்படி நிதி நெருக்கடி என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அரசு ஊழியர்கள் இன்று பல நாட்களாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய சலுகையை அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைக்கூடக் கொடுக்க முடியாது என்று இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், தொடர்ந்து அவர்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை ஏற்றினீர்கள். 4,000/– சம்பளம் ஏற்றி, திரும்ப பணம் இல்லையென்று நிற்க வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். M.L.A. fund இதுவரை இன்னும் சரியாக வரவில்லை. M.L.A.Office—னுடைய அந்த current bill-ஐக்கூட ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** M.L.A. fund-க்கும் அறநிலையத் துறைக்கும் என்ன சம்பந்தம்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இவ்வளவு நிதி நெருக்கடி என்று இருக்கின்றபோது இப்படி புதிதாக ஒரு பதவி உருவாக்கப்பட வேண்டுமா? இந்த நிதிச் சுமையை இந்த அரசாங்கத்திற்குக் கொண்டுவர வேண்டுமா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை நீங்கள் உபரி



நிதியை ஆலயத்திலிருந்து பெறுவீர்கள் என்று சொன்னால் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு, மற்ற துறைகளுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமேயொழிய, தேவையில்லாமல் இப்படி புதுப் புது பதவிகளை எல்லாம் உருவாக்கி புதிதாக இன்னும் கொஞ்சம் சுமையை நீங்கள் அரசு மேல் சுமத்துவதற்கு வழிவகை காண்பது என்பது ஏற்கத்தக்கதல்ல. ஆகவே நாங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கிறோம். அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சார்பாகக் கொண்டுவரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம். நேற்றையதினம் இங்கே சூடான விவாதங்கள் இந்த அவையிலே நடைபெற்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அரசு ஊழியர்களுடைய பிரச்சினையிலே, விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகிறபோது நிதியில்லை, நிதி நெருக்கடியிலே தமிழக அரசு சிக்கித் தவிக்கிறது. தமிழக அரசு திவால் ஆகியிருக்கிறது என்கிற கருத்தை இங்கே முன்வைத்தார்கள். இப்படி அரசு நிதிச் சுமையிலே இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, ஒரு இணை ஆணையர் பதவிக்குப் பதிலாக கூடுதல் ஆணையாளரை நியமனம் செய்ய வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் கூடுதல் செலவினை ஏற்படுத்தும் என்கின்ற வகையிலே இப்படிப்பட்ட கூடுதல் செலவினை ஏற்படுத்தக்கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தை இங்கே பதிவு செய்து, அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

*பிற்பகல் 5-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் , இன்னும் 11 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. உட்காருங்கள்,

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் செயல் அலுவலர்கள் நிலை (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் கருத்தை நாங்கள் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா கருத்துகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள். இரண்டு நிமிடங்களில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், இரண்டு நிமிடங்களில் சொல்லுங்கள், (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், இரண்டு நிமிடங்களில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். நீங்கள் train-ஐப் பிடிக்க வேண்டுமா, வேண்டாமா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவின் மேலே எங்களுடைய கருத்துகளையும் கேட்க வேண்டும். இல்லையென்றால் எல்லோரையும் கேட்கக்கூடாது. கேட்டால் எல்லா கட்சிகளுக்கும் வாய்ப்பு கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை சட்டமுன்வடிவின்மீது எங்களுடைய கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது. காரணம், இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக ஒரு புதிய பதவியை உருவாக்குவது என்பது இப்போது தேவையற்றது. அதற்கு ஒரு நிதிச் சுமை வருகிறது. இன்னொன்று. இந்த அறநிலையத் துறை அதிகாரிகளே – என்னுடைய தாழ்மையான கருத்து, அறநிலையத் துறையின்கீழ் செயல்படுகின்ற அதிகாரிகள் – அரசுக்கு எப்போதுமே ஒரு தவறான தகவலை, யோசனையை வழங்கி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதிலே வல்லவர்களாக இருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்கு நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. காலம் கடந்து வேண்டுமானால் நீங்கள் பரிசீலித்துப் பார்த்தால் தெரியும். இது பல அனுபவங்களிலே கிடைத்திருக்கிற உண்மை. ஆகவே இப்படிப்பட்ட அதிகாரிகள் சொல்கிற யோசனையின்மீது ஒரு சட்டம் வந்துவிடக்கூடாது என்பது என்னுடைய பணிவான கருத்தாகும். இன்னொன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பேசுகிறபோது, இந்தச் சபையிலே சொன்னீர்கள். இந்தத் தனி அதிகாரி பற்றிய கருத்து வருகிறபோது



சொன்னீர்கள். நிலங்களெல்லாம் 4–1/2 இலட்சம் ஏக்கர் இருக்கின்றன. அதைக் கணக்கெடுப்பதற்கும் கையகப்படுத்துவதற்கும் என்று சொல்கிறீர்கள். ஆகவே நிலம் கையகப்படுத்துவதற்கு ஒரு அதிகாரி என்று வந்துவிட்டால், அது குத்தகை விவசாயிகளை மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், பேரவை விதி 111–ன்கீழ் தெளிவாக திருத்த அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்துள்ளார்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அதிலே திருத்தம் கொடுத்து அது மாற்றப்பட்டு இருந்தால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதைப்போலவே மலைப் பகுதி பிரச்சினை இருக்கிறது. அதிலும் இந்த அதிகாரிகள் குளறுபடியான காரியத்தையும், ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். ஆகவே மேலும் இப்படி ஒரு Special அதிகாரி வருவது என்பது சிக்கலை ஏற்படுத்தும். இந்தச் சட்டமுன்வடிவை அரசு வாபஸ் பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் ஏதோ புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்று இந்தப் பொறுப்பை புதிதாக அமைத்ததாக இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் செயல் அலுவலர்களின் நிலை திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டது. திருக்கோயில்களின் வருவாய் பெருகும்பொழுது செயல் அலுவலர்களின் நிலை உயர்த்தப்படுகிறது. ஒரு காலகட்டத்தில் இணை ஆணையர் மட்டத்தில் 8 செயல் அலுவலர்களும், துணை ஆணையர் மட்டத்தில் 12 செயல் அலுவலர்களும் செயல்படும் நிலை உருவாகியது. இதனால் ஆணையரின் மேற்பார்வை பளு பெருகியது. தலைமையிடத்திலிருந்த பதவிகள் இதே நிலையில் இருந்ததால் அந்த அலுவலர்கள் இக்கோயில்களில் மேற்பார்வை இடவோ, அலுவலர்மீது விசாரணை நடத்தவோ இயலாத நிலை

[திரு. பி.சி. ராமசாமி] [2002 அக்டோபர் 31

இருந்தாால் நிர்வாகச் சீரமைப்பின் ஓர் அங்கமாக, தலைமையிடத்திலிருந்த ஓர் இணை ஆணையர் பதவியைக் கூடுதல் ஆணையராகவும், ஒரு துணை ஆணையர் பணி இடத்தை இணை ஆணையர் நிலைக்கும் உயர்த்தப்பட்டன. இந்தச் செலவுகள் தொடக்கத்தில் அரசு நிதிப் பொறுப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டாலும், பின்னர் திருக்கோயில்களிலிருந்து பெறப்படும் சகாயத் தொகையின் மூலம் ஈடுசெய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகச் சீரமைப்பிற்காக கூடுதல் ஆணையர் பதவி, அரசு ஆணை எண் 309, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 3-9-1996-ன்படி ஏற்படுத்தப்பட்டு 1997 முதல் இயக்கி வரப்பட்டபோதிலும் இந்து அறநிலையத் துறை சட்டத்தில் தேவையான சட்டத் திருத்தம் செய்யப்படாததால், இந்த முயற்சியின் முழுப் பயன்கள் எய்தப்படவில்லை. ஆகவே 1997-க்குப் பின்னர் உள்ள உண்மை நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் ஆணையருக்குத் தேவையான உதவி அளிப்பதற்காகவும் இச்சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு எந்தவிதமான கூடுதல் செலவும் தற்போது ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகச் சீரமைப்பிற்காக எடுக்கப்படும் நடவடிக்கைக்கு முழு வடிவம் கொடுக்கும் சட்டத் திருத்தத்தை பேரவை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத ஊழியர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, 100 ரூபாய், 200 ரூபாய் என்று இருந்த ஊதியத்தை, அனைத்து ஊழியர்களுக்கும் ஆயிரக்கணக்கிற்கு மேல் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கன்னியாகுமரி மாவட்டத்ினுடைய சட்டமன்ற உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவல். அந்த ஊழியர்களுக்கு 50 ரூபாய் ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும். 1997-லேயிருந்து 2001 வரையுள்ள பணம் கொடுக்கப்படவில்லை என்பதை நானே அதிகாரிகளுக்கு represent பண்ணியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையிலே சொல்கிறேன். கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 அக்டோபர் 31]

*பிற்பகல் 5-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் `ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் `இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் `ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் `இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் `ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் `இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2002).

திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், ஜி.கே. மணி மற்றும் சி. ஞானசேகரன் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:

"2-8-2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2002) இப்பேரவை நிராகரிக்கிறது."

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே,

"2-8-2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2002) இப்பேரவை நிராகரிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2002). மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

@ 25-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மூன்றாவது முறையாக, இந்தச் சட்டம் அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு நான் பேசிகொண்டு இருக்கிறேன். ஆனால் தேர்தல்தான் நடைபெற்றதாக இல்லை. தொடர்ந்து இதுபோன்று தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டேயிருப்பது ஒரு ஜனநாயகப் படுகொலையாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தி, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தலைவராக இருந்து சங்கத்தை நிர்வகிக்கின்ற நேரத்தில்தான் அது சிறப்பான சங்கமாக மக்களுக்குப் பயன்பெறக்கூடிய அளவில் செயலாற்ற முடியும். ஆனால் அந்த நிலை இல்லாமல், தொடர்ந்து இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தாமல், தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை மேலும் நீட்டித்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் 1991 ஆம் ஆண்டிலே கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தினார்கள். மீண்டும் உங்களுடைய ஆட்சி வந்து அவை கலைக்கப்பட்டன. 1996-லே தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வந்து, கூட்டுறவுத் தேர்தல்கள் அப்போது நடத்தப்பட்டன. மீண்டும் உங்களுடைய ஆட்சியிலே கலைக்கப்பட்டது. ஆக, கலைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறதே தவிர, தேர்தல் நடத்துகின்ற எண்ணமே இல்லை என்பதுதான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்ற நிலைமை. அதுசம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு இருக்கிறது என்று இங்கே நீங்கள் சொன்னீர்கள். பழைய உறுப்பினர்களை வைத்து தேர்தலை நடத்த வேண்டுமென்று கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். தடை ஆணை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தேர்தல் நடத்தப்படவில்லை.

இன்றைக்கு காஷ்மீரிலே தீவிரவாதிகள் இருக்கிறார்கள், அங்கே தேர்தல் நடத்த முடியாது என்றுகூட சொன்னார்கள். ஆனால் அங்கே தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. அதேபோல, பாகிஸ்தான் அதிபராக முஷாரப் இருக்கிறார். பாகிஸ்தானிலேகூட தேர்தல் நடைபெற்று இருக்கிறது. இன்றைக்கு குஜராத்திலேகூட தேர்தல் நடைபெறாமல் இருந்து, அது சுப்ரீம் கோர்ட் வரை சென்று, இப்போது தேர்தல் நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு கூட்டுறவுத் தேர்தல் மூன்றரை ஆண்டுகளாக இந்த அரசால் நடத்தப்படாமல் இருப்பது ஒரு ஜனநாயகப் படுகொலையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





குறிப்பாக கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏழை எளிய மக்கள் கடன் பெற முடியாமல் இன்றைக்கு அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை நஷ்டத்திலே சென்றுகொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலை எதனால் ஏற்படுகிறது? ஜனநாயக முறையில் இந்தத் தேர்தலை நடத்துங்கள். யாராக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், வெற்றி பெற்று தலைவர் என்று இருந்தால்தான் அந்தக் கூட்டுறவாளர்களுக்குத் தேவையான கடன்களை வழங்க முடியும் என்பதைக் கருத்திலே கொண்டு, நம்முடைய கூட்டுறவுத் துறை நீதிமன்றத்திலே சொல்லி விரைவிலே அந்த வழக்கை முடிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவில்லை என்பது வேதனை தரக்கூடியதாக இருக்கிறது என்பதையும், ஆகவே இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்காலம் நீட்டிப்பு என்பது ஒரு ஜனநாயகப் படுகொலை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கத் தேர்தலகள் நடைபெறாது என்ற அச்சம் அனைவருடைய மத்தியிலும் இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பைக் கடுமையாக எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 5-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவானது, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்கின்ற கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படை சித்தாந்தத்தையே, அடிப்படை தாத்பரியத்தையே அடியோடு தகர்த்தெறிவதாக இருக்கிறது. சென்ற முறை, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்காக இந்தப் பேரவையிலே மசோதா கொண்டுவந்தபோது, எங்களுடைய கருத்துகளை மிகத் தெளிவாக நாங்கள் பதிவு செய்திருக்கிறோம். 'கால்களுக்கேற்ப காலணிகளை வாங்க வேண்டுமேயன்றி, காலணிக்கேற்ப கால்களை வெட்டிக்கொள்வது' என்பது மடமையாகும். அதைப்போன்று, கூட்டுறவுச் சங்கங்களிலே, ஜனநாயக மரபுகளின்படி, முறையாகத் தேர்தலை நடத்த வேண்டுமேயன்றி, தேர்தலை நடத்தாமல் விட்டுவிட்டு, பின்பு தேர்தலை நடத்தவில்லை என்பதையே காரணமாகக் காட்டி, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பது என்பது, இந்த அரசு ஜனநாயக மரபிலே நம்பிக்கை

இழந்துவிட்டதோ என்ற அச்சத்தை எங்களுக்கு இயற்கையாகவே ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனென்றால், ஒரு ஜனநாயக நாட்டிலே எதற்காக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட வேண்டும், மறைக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஆகவே கூட்டுறவுத் தேர்தல்களைப் புறக்கணிப்பது என்பது, ஜனநாயக உரிமைகளைத் தட்டிப் பறிப்பதற்கு ஒப்பாகும். ஆகவே உடனடியாக இந்தத் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தைத் தொடர்ந்து நீட்டித்துக்கொண்டே செல்வதைத் தவிர்த்துவிட்டு, முறையாக ஜனநாயக மரபுகளின்படி தேர்தலை நடத்த இந்த அரசு முன்வர வேண்டுமென்று நாங்கள் நம்பிக்கையோடு எதிர்நோக்குகின்றோம்.

அதுமட்டுமல்ல, இந்த முறையான elected Board இல்லாத காரணத்தினால், கரும்புக்கு, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், இன்னும் support price வழங்கப்படாத நிலையெல்லாம் இருக்கிறது. அதுமட்டுமல்ல. கூட்டுறவு ஆலைகள் எல்லாம் மிகவும் நலிவுற்ற நிலையிலே, நசிவுற்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே பணி செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் போன்ற உரிய நிவாரணங்கள், உரிய சட்ட சலுகைகள் இன்னும் வழங்கப்படாத நிலை இருக்கிறது. அதைப்பற்றியெல்லாம்கூட நாங்கள் தொழிலாளர் நலத் துறையிலே பேசியபோது எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே இந்த நிலைகள் எல்லாம், இந்தக் குறைபாடுகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், உடனடியாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையான தேர்தலை நடத்த இந்த அரசு முன்வர வேண்டும். அதன் மூலமாக தங்கள் அரசு ஜனநாயகக் கொள்கையிலே ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது; நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை இந்த மக்களுக்கு நீங்கள் புரிய வைக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டு, இந்த மசோதாவை நாங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வன்மையாக ஆட்சேபிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களுடைய பதவிக்காலம் நீட்டிப்பிற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்கான சில காரணங்களை இப்போது கூற விரும்புகிறேன்.



இப்போதுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அலுவலர்கள் எல்லாம், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே, அவர்களுக்கென்று சில நபர்களை நியமித்துக்கொண்டு, அவர்கள் காட்டுகின்ற, அவர்கள் சொல்கின்றவர்களுக்குக் கடன்களைக் கொடுத்துவருகின்றனர். இப்போது கடலூர் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில், வடக்குவிலாசம் கூட்டுறவு சொசைட்டி ஒன்றும், அதேபோல், வீரப்பெருமநல்லூர் கூட்டுறவு சொசைட்டி ஒன்றும், காட்டாம்புலியூர் கூட்டுறவு சொசைட்டி ஆகிய இந்த சொசைட்டிகளிலே இருக்கின்ற தனி அலுவலர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே ஒருகாலத்திலே உறுப்பினர்களாகப் பதிவு செய்து, பதிவு பெற்றவர்களுடைய பெயர்களை வைத்துக்கொண்டு, அவர்கள் இறந்து இப்போது பல ஆண்டுகள் ஆகியும், அவர்கள் பெயரிலேயே பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மோசடி செய்து கடன் பெற்றிருக்கிறார்கள். இது அந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அலுவலர்களின் ஒத்துழைப்போடு நடந்தேறியிருக்கிறது. கடந்த காலத்தில் மட்டும் எங்களுடைய மாவட்டத்தில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. அந்தவகையில், தொடர்ந்து இந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அலுவலர்கள், தங்களுக்கென்று ஒரு தனி இராஜ்ஜியத்தையே அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது, ஆட்சி மாறியிருக்கிறது. பல்வேறு நிலைகளிலே அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற தனி அலுவலர்கள், செயலாளர்கள், இதுவரையில் மாற்றப்பட்டதாகப் பெருமளவில் தெரியவில்லை. அப்படி மாற்றப்படாததன் விளைவு, இப்போது ஏழைகள், பாட்டாளிகள், சாதாரண மக்கள், அந்தக் கடன்களைப் பெறுவதற்கு, அந்தச் சங்கங்களை நாடிச் செல்கிறபோது, அவர்கள் சொல்கின்ற காரணம், எங்களிடத்திலே நிதி இல்லை என்கிறார்கள். அப்படியானால் இருக்கின்ற நிதிகள் எல்லாம் எங்கே சென்றது என்று சொன்னால், ஒருசில தனி நபர்களால், சில அதிகாரிகளால், அந்தப் பொறுப்புகளிலே இருந்தவர்கள் சிலருடைய ஒத்துழைப்போடு கோடிக்கணக்கான ரூபாய் இப்போது கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. அப்படிக் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிற அந்தக் குற்றச்சாட்டுகளைப்பற்றி நம்முடைய அரசு அதிகாரிகளுக்கு நாம் தெரிவிக்கிறபோது, அவர்கள் கூறுகிற காரணம், சட்டத்திலே அவர்களைத் தண்டிப்பதற்கு நமக்கு இடமில்லை, அவர்களை suspend செய்திருக்கிறோம், அவ்வளவுதான் என்கிறார்கள். என்னுடைய பண்ருட்டித் தொகுதியிலே இருக்கின்ற ஒரு கூட்டுறவு சொசைட்டியில் மட்டும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், இது கூட்டுறவு மானியக் கோரிக்கை இல்லை. இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விஷயத்திற்கு வருகிறேன். ஆகவே அவர்கள் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று சொன்னால், இதுபோல கொள்ளையடிக்கின்ற பணம் –விவசாயிகள் திருப்பித் தராததற்கு என்ன காரணம் என்று சொன்னால், தொடர்ந்து ஒருசில அதிகாரிகள், ஒருசில இடங்களில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். அப்படி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நம்முடைய தமிழக அரசு மீண்டும், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிப்புச் செய்வது என்று சொன்னால், மீண்டும் அதில் இதுபோன்ற ஊழல்கள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்பாவி பொதுமக்களுக்கு, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற அடிப்படையில், இந்தச் சித்தாந்தமே இப்போது தகர்க்கப்படுகிறது என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தவகையில் கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்களுடைய கால நீட்டிப்பு வேண்டாம் என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. ஆதலால், இடைத் தேர்தலை நடத்தி வெற்றி கண்டிருக்கிற இந்த அரசு, தமிழக அரசு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலையும் உடனடியாக நடத்தி மக்கள் பிரதிநிதிகள் அதில் பங்கேற்பதற்கான வழிவகை செய்ய வேண்டும். கூட்டுறவே நாட்டுயர்வு என்பது நாட்டுக்கு உணர்த்தப்பட வேண்டுமென்றால் இந்த அரசு உடனடியாக கூட்டுறவுச் சங்கங்களினுடைய தேர்தலை நடத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கருத்தைக் கூறி, இந்தச் சட்டமுன்வடிவை இந்த அரசு திரும்பப் பெற வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 5-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்களுடைய பதவிக்காலம் என்பது 2 வருடம். அவ்வப்போது அவர்களுடைய பதவிக்காலத்தினுடைய ஆயுளை இதுபோன்ற அவசரச் சட்டங்களின் மூலமாக நீட்டித்து நீட்டித்து நீட்டித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகஸ்டு மாதம் 9 ஆம் தேதியோடு நிறைவுபெறுகிற அந்த ஆயுள் காலத்தை, பதவிக்காலத்தை



மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பதற்கான அவசரச் சட்டமுன்வடிவு இங்கே முன்மொழியப்பட்டுள்ளது. அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு அதிலே கொஞ்சம் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் பிரதிநிதிகளாக வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக நான் இங்கே பேசவே இல்லை. தனி அலுவலர்களுடைய சாம்ராஜ்யத்தின்கீழ் கூட்டுறவுத் துறை கொள்ளையடிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது என்பதை நான் அழுத்தமாகப் பதிவுசெய்ய விரும்புகிறேன். அப்படியானால், குறிப்பிட்ட குற்றச்சாட்டு எங்கே இருக்கிறது என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கேட்கக் கூடாது. ஆய்வு செய்யுங்கள், எங்களால் ஏராளமான இடங்களைச் சொல்ல முடியும். கூட்டுறவுத் துறையிலே தனி அலுவலர்கள்தான் உணவுப் பொருட்களை எல்லாம் கொள்முதல் செய்பவர்களாக இருக்கிறார்கள். கொள்முதல் அதிகாரம் என்பது அவர்களுடைய கையிலே கொடுக்கப்பட்டதோடு, ரேஷன் கடைகள் சூறையாடப்படுவதற்கு, அதிலே கொள்ளையும் ஊழலும் நடப்பதற்கு இந்தத் தனி அலுவலர்கள்தான் காரணம். அப்படிப்பட்ட கொள்ளைக்கும் ஊழலுக்கும் இந்தச் சட்டமுன்வடிவு மேலும் அவற்றைப் பலப்படுத்துவதற்கு வகை செய்யும். அந்த அதிகாரிகள் சர்வாதிகாரிகளாக மாறுவதற்கு இது உதவி செய்யும். ஆகவே தயவுசெய்து ஆயுட்காலத்தை நீட்டிக்கக் கூடாது. இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்கள் பதவிக்கான கால நீட்டிப்பு என்பது உண்மையிலேயே ஓர் ஊழலை இந்த அரசு வேண்டுமென்றே வளர்ப்பதற்கு ஒப்பாகத் தோன்றுகிறது. இன்றைக்கு இருக்கிற பொது நிறுவனங்கள் அனைத்திலும், குறிப்பாகச் சொல்லப் போனால், கூட்டுறவு நிறுவனங்களில் மட்டும் ஊழல் மிக சர்வ சாதாரணமாக நடக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ எடுத்துக் கொண்டால் கூட்டுறவுத் துறைகள் அனைத்திலும், பெரும்பாலான கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்திலும் ஊழல் மிகப் பெரிய அளவில் நடைபெற்று இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. அதைப் பொதுமக்கள் மிகப் பெரிய அளவிலே சகித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் மீண்டும் தனி அலுவலர்களை நியமிப்பது என்பதும், அவர்களுடைய

[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2002 அக்டோபர் 31

பதவிக்காலத்தை நீட்டிப்பது என்பதும் உண்மையிலேயே அந்த ஊழலுக்கு நாம் துணை போகின்றோம் என்ற முறையில் அமைந்துவிடும். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்பதைப் போல, அந்தக் கூட்டுறவு நிறுவனங்களில் தேர்தல் இல்லாமல், ஒரு நிருவாகம் செயல்படாமல் தனி அலுவலர்கள் கையிலே ஒப்படைப்பது என்பது அதற்கொப்பாக முடிந்துவிடும். இன்றைக்கு குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தக் கூட்டுறவு தனி அலுவலர்கள் ஒரு தனி சாம்ராஜ்யத்தை நடத்துகிறார்கள். அவர்கள் விருப்பு வெறுப்புகளோடு மக்களுடைய பிரச்சினைகளை அணுகுகிறார்கள். கடன் வழங்குவது, கடன்களைக் கொடுப்பது, நகைக் கடன்களை அடகு பிடிப்பது போன்றவை எல்லாம்கூட அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப நடைபெறுகிறது. அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு அவற்றில் நடைபெற்று இருக்கிற ஊழல்களை மூடி மறைப்பதற்குத் தேவையான அலுவலர்களை மாற்றுவது, தேவையான அலுவலர்களைக் கொண்டுவந்து நியமிப்பது போன்ற முறைகள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர்களை நியமிக்கின்றதையும் அவர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்படுவதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வன்மையாகக் கண்டித்து இதை வாபஸ் பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை ஓராண்டு காலம் நீட்டித்து அறிமுகம் செய்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை எங்கள் இயக்கத்தின் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பேரவை அமைக்கப்பட்டதற்குப் பின்னாலே, முதல் ஆளுநர் உரையிலே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னால், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துகிறோம், அதற்குப் பிறகு 6 மாத காலத்துக்குப் பின்னாலே கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்துவோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதற்குப் பின்னாலே இரண்டாவது ஆளுநர் உரையிலேயும் அதையே சொல்லி இருக்கிறீர்கள். 6 மாத காலத்திற்குள்ளாக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தி, தலைவர்களை அமர்த்தி விடுவோம்



2002 அக்டோபர் 31] [திரு. ப. அரசன்]

என்று சொல்லியிருக்கிறீர்கள். 6 மாத காலத்திற்கு முன்னாலே மீண்டும் தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை நீட்டித்தீர்கள். நீட்டித்து நீங்கள் பேசுகிறபோது, இந்த அரசினுடைய கொள்கையைச் சொல்கிறபோது 6 மாத காலத்திற்குள்ளாக கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலை இந்த அரசு நடத்தி முடிக்கும் என்று சொன்னீர்கள். ஆளுநர் அறிக்கையிலே சொன்னது, இரண்டாவது தடவையாக ஆளுநர் அறிக்கையிலே சொன்னது, மீண்டும் தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை நீட்டிக்கிறபோது நீங்கள் இந்த அவையிலே கொடுத்த உறுதிமொழி எல்லாம் என்ன ஆயிற்று என்பதை நான் உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 6–00*

பொதுவாக, எந்த அமைப்புக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வருவது என்பது ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். அதிலேயும் கூட்டுறவுத் துறை மிக நலிந்து போய் இருக்கிறது. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று சொல்லப்பட்ட பழமொழி மிக மோசமாக இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. 18 மாத காலத்தில் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான எந்த முயற்சியையும் இந்த அரசு எடுக்கவில்லை. அதுமட்டுமல்ல 18 மாத காலத்திலே நிறைய ஊழியர்களை கூட்டுறவிலிருந்து நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்து ஏற்கெனவே அங்கே பணியாற்றுகிற பணியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்காகத்தான் நீங்கள் நீட்டித்தீர்களா என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஓர் அரசாங்கம் Welfare Government என்பது, நல்ல திட்டங்களைத் தருகிற அரசாங்கம் என்பது, எந்த அமைப்புக்கும், எந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்தி, அதிலே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் வேண்டுமானாலும் தலைவர்களாக வந்து நிர்வாகம் செய்வது என்பதுதான் சிறந்த நடைமுறையாக இருக்கும். ஆகவே முதல் ஆளுநர் அறிக்கையிலே சொன்னதை, இரண்டாவது முறை ஆளுநர் அறிக்கையிலே சொன்னதை, மீண்டும் தனி அலுவலர்கள் 6 மாத காலத்திற்கு நியமிக்கப்படுகிறார்கள், இந்த 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னதை நீங்களே தவறி இருக்கிறீர்கள் என்கிற குற்றச்சாட்டைச் சொல்லி, ஒரு ஜனநாயக நாட்டில் கூட்டுறவுச்

[திரு. ப. அரசன்] [2002 அக்டோபர் 31

சங்கத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும், அதுதான் ஒரு நல்ல அரசாங்கத்தை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். இன்னும் 10 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) இன்னும் 10 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. சுருக்கமாக உரையை முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஆகவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பது ஒரு நல்ல காரியம் அல்ல. ஒரு நல்ல செயல் அல்ல. இது ஜனநாயகப் படுகொலை என்பதை எங்களுடைய கட்சியின் சார்பாகச் சொல்லிக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையின் முன்னாலே என்னாலே முன்மொழியப்பட்டு பல மாண்புமிகு உறுப்பினர்களாலே அவரவர்களுடைய கட்சிக்கு உரிய பாணியில் அவரவர்களுடைய யோசனைகளை எல்லாம் சொல்லி அமர்ந்திருக்கிறார்கள். ஆக மொத்தத்திலே எனக்கு ஒரு ஐயம். நாங்கள் கொடுத்த இந்தச் சட்டமுன்வடிவினுடைய நகல்களை சரியான முறையிலே நீங்கள் படித்தீர்களா என்ற ஐயம்தான் நீங்கள் பேசியதிலிருந்து என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தச் சட்டம் இந்த ஆட்சி வந்துதான் கொண்டுவரவில்லை. 1976 ஆம் ஆண்டிலேயே குடியரசுத் தலைவர் ஆட்சி இந்த மாநிலத்திலே அமலில் இருந்தபோது தனி அதிகாரிகளை நியமிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டு, அதற்குப் பின்னாலே 26 முறை இந்த மன்றத்திலே ஒப்புதலைப் பெற்று, 27-வது முறையாக இந்தச் சட்டமுன்வடிவு...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்த சட்டத் திருத்தத்தை படித்துவிட்டுப் பேசுகிறார்கள். கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டுமென்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதைக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி கூடாது என்று சொல்வதை மனதிலே தாங்கிக்கொள்ள முடியாமல் படித்துவிட்டுப் பேசுகிறார்களா என்று எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்களைக் கொச்சைப்படுத்துவது என்பது சரியாக இருக்காது. படித்துவிட்டுத்தான் பேசுகிறோம்.



2002 அக்டோபர் 31]

*பிற்பகல் 6-05*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** இல்லை, இல்லை கொச்சைப் படுத்தவில்லை. சரியான விவரங்களைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். கொச்சைப்படுத்தவில்லை. நீங்கள் எல்லாம் விவரம் தெரிந்தவர்கள்தான் (குறுக்கீடுகள்) அதாவது சட்டமுன்வடிவு – இந்தச் சட்டமுன்வடிவு (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இவ்வளவு ஆத்திரமாக எடுத்துகொள்ள வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** 1976 ஆம் ஆண்டிலிருந்து இந்தச் சட்டமுன்வடிவு, 26 முறை இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டு ஏற்கப்பட்டது. இது 27 ஆம் முறையாக இந்தச் சட்டமுன்வடிவு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இரண்டு முறை தேர்தல் நடத்தியும்கூட இந்தச் சட்டமுன்வடிவிலே கூறப்பட்டு இருக்கிற (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் காஞ்சிபுரம் கூட்டுறவு அச்சகம், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் இராமலிங்கம் கூட்டுறவு பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆணையம், ஆணையங்களின் இணையம், இதற்குத்தான் தனி அதிகாரிகள் வேண்டும் என்ற இந்த bill-ஐ நாங்கள் கொண்டுவந்து இருக்கிறோம். அடுத்து இன்னொரு bill இருக்கிறது. அது மே மாதத்திலே நாங்கள் கொண்டு வந்தது. அதற்கான விளக்கத்தை நான் பின்னாலே தருகிறேன். இந்நேரம் உறுப்பினர்கள் எல்லாம் சொல்லிவிட்டீர்கள். இந்தச் சட்டத்தினுடைய உண்மை நிலை, 26 வருடம் முடிந்து 27 ஆம் ஆண்டு இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. நான் சொல்லியிருக்கிற இந்த நிறுவனங்களுக்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு முறை தேர்தலை நடத்தியபோதும்கூட— கூட்டுறவுத் தேர்தலை— நடத்தியபோதுகூட— பல நிர்வாகக் காரணங்களாலே, இந்த

[திரு. ப. தனபால்] [2002 அக்டோபர் 31

நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த முடியவில்லை. அப்போதும் அந்தப் பதவி, தனி அதிகாரிகள் பதவிக்காலம்தான் நீட்டிக்கப்பட்டு இருந்தது. ஆகவே இப்போதும், அந்த நிறுவனங்களுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலையிலேதான் தனி அதிகாரிகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டுவந்து இருக்கிறோம். ஆக மொத்தத்திலே தனி அதிகாரிகளுக்கான இந்தச் சட்டமுன்வடிவு 27 ஆண்டுகளுக்கு முன்னாலே, கொண்டுவரப்பட்டு, அது தொடர்ந்து நடத்த முடியாத நிலையிலே இருக்கிற காரணத்தால் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. மொத்தத்திலே உறுப்பினர்கள் சொல்கிறபோது ஒரு விவரத்தைச் சொன்னீர்கள். கவர்னருடைய முதல் அறிக்கையிலேயே 6 மாதத்திலேயே தேர்தலை நடத்துவோம் என்று சொன்னீர்களே, ஏன் நடத்தவில்லை, சொன்ன வாக்குறுதியை ஏன் இந்த அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை என்கிற பழியும், நீங்கள் தேர்தல் நடத்துவதற்குப் பயப்படுகிறீர்களா என்றும், ஜனநாயகத்திலே தேர்தல் நடத்துவதுதானே சிறந்தது என்றும் ஒவ்வொருவரும் அவரவருடைய பாணியிலே சொல்லியிருக்கிறீர்கள். எங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, புரட்சித் தலைவி–தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்தவரை, நிச்சயமாக தேர்தலை நடத்த வேண்டும் என்பதிலே மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். அதுவும் ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்த வேண்டும் என்பதிலே நிச்சயம் அக்கறை கொண்டு இருக்கிறவர்கள். ஆகவேதான் நாங்கள் அளித்த முதல் அறிக்கையிலேயே கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தலை நடத்துவோம் என்று கவர்னர் அறிக்கையிலே சொன்னோம். அதற்கான முயற்சியிலே ஈடுபட்டோம். இங்கே இந்த மன்றத்திலே பேசியிருக்கிற பல உறுப்பினர்கள், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, தேர்தலை நடத்தியபோது பல உறுப்பினர்கள் நீக்கப்பட்டார்கள். முறையான தேர்தல் நடத்தப்படவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்படவில்லை என்றெல்லாம் சொன்னீர்கள். இதே திரு. வேல் முருகன் அவரே சொல்கிறார். இறந்தவர்களுக்கு எல்லாம்கூட loan கொடுத்து இருக்கிறார்கள் அந்த நிறுவனத்திலே என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட தவறானவர்களை நீக்குவதற்கும், போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டு, சேர்க்கப்படாமல் இருக்கிற – ஜனநாயக முறைப்படி சேர்க்கப்படாமல் இருக்கிற – முறையான நபர்களை அங்கத்தினர்களாகச் சேர்க்கவும், தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்காகவும், புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்பதற்காகவும்தான் நாங்கள் ஒரு சட்டத்தை போட்டோம். அந்தச் சட்டத்தை. இங்கே பேசுகிற பிச்சாண்டி போன்றவர்கள்,



2002 அக்டோபர் 31] [திரு. ப. தனபால்]

தயவுசெய்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே வந்து தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆனால் நாங்கள் முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தால் அந்தச் சட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே உங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களே வழக்கு போட்டு வழக்குமன்றத்திலே, அந்த வழக்கு இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அது ஒரு பெஞ்சிலே நடந்து இப்போது larger பெஞ்சுக்கு அது போயிருக்கிறது. அதை larger பெஞ்சிலே விரைவாக நடத்தி முடிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் G.P.-க்கும், A.G.P.–க்கும் சரியான.... *(குறுக்கீடுகள்)*

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*பிற்பகல் 6-10*

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தலைவர் அவர்களே, சரியான வழிமுறைகளைக் கொடுத்து இருக்கிறது. ஆகவே அந்த வழிமுறைகள் பிரகாரம் உயர் நீதிமன்றத்திலே விரைவிலே இன்றைக்கு வழக்கினை முடித்து ஜனநாயக முறைப்படி, உரிய உறுப்பினர்களை, நியாயமான முறைப்படி சேர்த்து, தேர்தலை நடத்துவதிலே இந்த அரசாங்கத்திற்கும் இந்த ஆட்சியிலே இருக்கிற தலைநாயகி புரட்சித் தலைவிக்கும் கொஞ்சம்கூட பயம் கிடையாது. தேர்தல் என்றால் எங்கள் புரட்சித் தலைவிக்கு சர்க்கரைப் பொங்கலை சாப்பிடுவதைப் போல. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே ஜனநாயக முறைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) நடத்துகிற தேர்தல் வேண்டும் என்பதற்காகத்தான் எங்களுடைய தலைவி நியாயமான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும், விடுபட்ட உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டும், ஜனநாயக முறைப்படி நடத்த வேண்டும், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவுத் தேர்தலிலே நடந்த முறைகேடுகள், தவறுகள் இல்லாமல் நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் அந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். திரு. பிச்சாண்டி அவர்களுக்கு வேண்டுமானால், யார், என்ன என்ற விவரத்தைச் சொல்கிறேன், என்னிடம் இருக்கிறது. 5, 6, உறுப்பினர்களும் — நித்தியானந்தம் என்பவரும், காஞ்சிபுரம் சங்கத்திலே இருக்கிற அவர்களும், மொத்தம் 5 பேர் வழக்குமன்றத்திலே வழக்கு போட்டிருக்கிறார்கள். ஆகவே உங்களுடைய கட்சி உறுப்பினர்கள்தான் போட்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த வழக்கை முடிப்பதற்கு – ஒருவேளை அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டு– ஒத்துழைப்புத்

[திரு. ப. தனபால்] [2002 அக்டோபர் 31

தந்து, அந்த வழக்கை முடித்துக் கொடுத்தால், நாங்கள் விரைவாக அந்த உறுப்பினர்களை எல்லாம், நல்ல உறுப்பினர்களை, நியாயமான உறுப்பினர்களைச் சேர்த்து, முறைப்படி, ஜனநாயக முறைப்படி, ஜனநாயகம் வாழ்வதற்கு, நீங்கள் கேட்டிருக்கிற அத்தனை முறைப்படியும் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் உறுதியாகவும், தயாராகவும் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, மற்றபடி உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற தனி அதிகாரிகள் தவறுகள் இருக்கும் என்று சொன்னால் அந்தத் தவறுகள்மீது எல்லாம் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. நீங்கள் சொல்லியிருப்பது அவைக் குறிப்பிலே இருக்கிறது. நானும் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். முறையான நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள்மீது உரிய நடவடிக்கைகளும், வழக்குகளும் தொடுக்கப்படும். அதற்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்பதைச் சொல்லி, 27—வது முறையாக—நாங்கள் இந்த அரசாங்கம் பொறுப்பில்லை—தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்திற்கு மேலும் உங்களுடைய ஒத்துழைப்பைக் கொடுத்து, இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, சிலபேர் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறார்கள், வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள், அதனால் தேர்தல் நடத்த முடியவில்லை என்று சொன்னார். அந்தத் தடையாணையை 1—1/2 ஆண்டு காலமாக இந்த அரசு நீக்கவில்லை. அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்பதனைக் குற்றச்சாட்டாக இந்த அவையிலே....

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** வழக்கு ஒரு நீதிமன்றத்திலே நடந்து, அந்த நீதிபதி அதை Larger Bench-க்கு recommend பண்ணிக் கொடுத்திருக்கிறார். அதையும் நடத்துவதற்கு, விரைவாக நடத்த வேண்டுமென்று இப்போது அரசு வழக்குரைஞருக்கு நாங்கள் தாக்கீதுகள் அனுப்பியிருக்கிறோம். விரைவான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே எங்களைப் பொறுத்தவரை முறையான நடவடிக்கைகளை எடுத்து, சரியாக நடந்துகொண்டிருக்கிறோம். விரைவாக தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று சொன்னால், வழக்கு போட்டவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டால், automatic-ஆக நாங்கள் இதை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த உதவியை திரு. பிச்சாண்டி அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.



2002 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஓ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2002) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு சட்டமுன்வடிவுகளும் அவருடையதுதான். இவற்றிலே ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மூன்று Bills இருக்கின்றன. மூன்றையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை முதலில் எடுத்துக் கொள்ளலாம். இதிலே ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு) சரி, சரி.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தம் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

*@ 29-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (ஔ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2002) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (அஅ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சி. ஞானசேகரன் மற்றும் ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை மொழிவார்:

"16—8—2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2002) இப்பேரவை நிராகரிக்கிறது"

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"16—8—2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2002) இப்பேரவை நிராகரிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எச்.எம். ராஜு:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2002). மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 30—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரின் தீர்மானமும், மாண்புமிகு அமைச்சரின் தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அதிகம் பேசுவதற்கு ஏதுமில்லையென்றாலும்கூட, பொதுவாக, வணிக வரிகளாக இருந்தாலும், அல்லது வேறு எந்த வரியாக இருந்தாலும் எளிமையாக இருக்க வேண்டும். சுலபமாக அதை வசூலிப்பதற்கும், கட்டுபவர்களுக்கும் எளிமையாக இருக்க வேண்டும். சட்டங்களை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொண்டே இருக்கக் கூடாது. இப்போது வந்திருக்கிற சட்டம் கொஞ்சம் சிக்கலான சட்டமாகத் தென்படுகிறது. மேலும் பலரை இந்த வரி வளையத்திற்குள் கொண்டு வருகிற சட்டமாக இந்தச் சட்டம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. கடந்த 2,3 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருந்த சட்டம், நல்லவிதமாக செயல்பட்டுக்கொண்டிருந்தது. 1999–2000—லிருந்து Self-assessment என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அது நல்லபடியாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது அதில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், 10% ஒவ்வோர் ஆண்டும் turn-over அதிகரிக்கும்போது இவர்கள் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் வணிக வரி அதிகாரிகள் உள்ளே நுழைந்துவிடுகிறார்கள். அதோடு அவர்கள் நிற்பதில்லை. அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், இரண்டு ஆண்டுகளாக எங்களை கவனிக்கவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து மூன்றாண்டுகளாக கவனித்துவிடுங்கள் என்று அவர்களையெல்லாம் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்த மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும், கோவை மாவட்டத்தை மட்டும் நான் சொல்லவில்லை. எல்லா மாவட்டங்களிலும்கூட கடுமையான தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே turn-over அதிகமாவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு. பல தொழில்களில் turn-over இல்லை, குறைந்துகொண்டிருக்கிறது. குறைந்து கொண்டிருக்கிற நேரத்தில் அதிகமாக turn-over தாருங்கள் என்றால், நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்று சொன்னால், வணிக வரி அதிகாரிகள் மீண்டும் உள்ளே சென்று தொழில் நசிந்து வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள். தவறு இருந்தால், தவறு இருக்கிறது என்று தெரிந்தால் அதை மட்டும் கவனிக்கச் சொல்லுங்கள். அது என்னவென்று



பார்க்கச் சொல்லுங்கள். ஒவ்வொருவரும் 10%—க்குக் குறையாமல் அதிகமான turn-over கொடுக்க வேண்டுமென்று கேட்பது சரியல்ல. சிறிய தொழில் - மாவட்டத்தில் பெரிய தொழில் மட்டுமல்ல - சிறிய தொழில்களும் நிறைய இருக்கின்றன. திருப்பூராக இருந்தாலும், கோயம்புத்தூராக இருந்தாலும், எந்த ஊராக இருந்தாலும் சிறிய தொழில்கள் நிறைய இருக்கின்றன. அந்த சிறிய தொழில்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதை மாற்றி எப்போதும் இருந்ததைப்போல அந்த self-assessment செல்ப் அசெஸ்மென்ட்டுக்கு இடம் கொடுக்க வேண்டும். அதேபோல இந்தச் சட்டத்தையும்கூட கொஞ்சம் மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

*பிற்பகல் 6-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், வணிகப் பெருமகனா? (சிரிப்பு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த விற்பனை வரியிலே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான புதுப்புது சட்டங்களை இன்றைக்கு நாம் போட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கம் வந்த பிறகு பார்ப்போமென்று சொன்னால், இதுவரை வரி கட்டாமல் ஓரளவிற்கு சுமுகமாக இருந்த சூழ்நிலையை மாற்றி இன்றைக்கு மூன்று இலட்சத்திற்கு மேலாக இருந்ததையெல்லாம் மூன்று இலட்சத்திற்குக் கீழே என்று சொல்லி ஒவ்வொரு வகையிலேயும் அதிகாரிகளுடைய பிடியிலே போய் வியாபாரிகளையும் தொழில் செய்பவர்களையுமெல்லாம் கொண்டுபோய் சிக்க வைக்கிறோமேயொழிய, நமக்கு வரி வருவதற்கு எது அதிகமான வழியோ அந்த வழியை நாம் பார்க்கவே இல்லை. நாம் ஏதோ அதிகாரிகள் கொடுத்த கணக்கை மட்டும் வைத்துக்கொண்டு இங்கே கணக்குப் பார்க்கிறோமேயொழிய, வரி எப்படி வரும், எப்படி எளிதாகப் பெறமுடியும் என்ற அந்த வழியை நாம் சிந்திக்க வேண்டும். அதிகாரிகளைக் கேட்போம் என்று சொன்னால், அதிகாரிகள் மூன்று இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் போடுங்கள், ஒரு இலட்சத்திற்குப் போடுங்கள் என்று சொல்லி நம்மைப் போய் வியாபாரிகளிடம் நிற்க வைக்கக்கூடிய சூழ்நிலையைத்தான் அதிகாரிகள் செய்வார்கள். இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் வர வேண்டுமென்று சொன்னால், தொழில்

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்][2002 அக்டோபர் 31

செய்பவர்கள் பணப் பற்றாக்குறையிலே, பணப் புழக்கம் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது. மேலும் மேலும் நாம் சிக்கலாக்காமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இப்படிப்பட்ட புதிய புதிய திட்டங்களைப் போட்டு புதிய புதிய முறையிலே வியாபாரிகளை நசுக்கக்கூடிய இந்த வேலையையெல்லாம் கொஞ்சம் குறைத்துக்கொண்டு எப்போதும் போல இருக்கக்கூடிய சட்டங்களை வைத்துக்கொண்டு அதிகப்படியான வரி வருவாய்களைப் பெறக்கூடிய வாய்ப்புகளை நீங்கள் பெற வேண்டுமென்று சொல்லி, புதிதாகக் கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டங்களை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி விதிப்பைப் பொறுத்தவரையில் வரி ஏய்ப்பைத் தடுக்கவும், மூன்று இலட்சத்திற்குக் கீழ் வரி இல்லாததாக வணிகம் பிரிக்கப்பட்டு வரி செலுத்தாமல் இருந்த நிலைமையை மாற்றிடவும், குறைந்தபட்ச வணிகத் தொகை வரம்பினை நீக்கி, அனைவரும் பதிவு செய்துகொள்ளவும், மூன்று இலட்சம் வரை விற்பனை செய்பவர்கள் செலுத்திடும் இணக்க வரி வெறும் ரூ.4,650 ஆக முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 50 இலட்சத்திற்கு இணக்க முறையில் வரி செலுத்தும் வணிகர்களுக்கு தங்கம், வெள்ளிக் கட்டி விற்பனை வரிமீது மறு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நகைகள் மற்றும் ஆடம்பர நகை வியாபாரிகளுடைய கோரிக்கையை ஏற்று 4 சதவீதம் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இரண்டு சதவீதமாகக் குறைத்தது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை ஏற்று மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2002). திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவார்:

"30–7–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2002) இப்பேரவை நிராகரிக்கிறது"



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"30–7–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2002) இப்பேரவை நிராகரிக்கிறது" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

*பிற்பகல் 6–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2002). மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவுமீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

---

@ 25–10–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நம்முடைய அமைச்சர் அவர்கள், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் நீண்ட காலமாக அரசினுடைய அந்த மாநகராட்சியினுடைய அனுமதி பெறாமல் கட்டடங்கள் கட்டப்பட்டதாகவும், அவ்வாறு கட்டப்பட்ட கட்டடங்களுக்கு அவர்கள் அனுமதி பெறாமல் இதுவரையிலே இருந்ததோடு, மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் இதுவரை கட்டவில்லை என்ற ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது என்றும் அதைப்போலவே தன்னுடைய கட்டுப்பாட்டிலே சொந்த அனுபவத்திலே இருக்கக்கூடிய அனுமதி பெறாத நிலங்களை மேம்படுத்தக்கூடிய வகையிலேயும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்கள், இதனுடன் தொடர்புடைய மற்ற சட்டமுன்வடிவுகளையும் சேர்த்தே நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சேர்த்தே பேசலாம்.

**திரு. ஜி.கே. மணி:** அதை ஒழுங்கு முறைப்படுத்த வேண்டும் என்று.... (குறுக்கீடு) அவரை முன்மொழிந்துவிடச் சொல்லுங்கள். ஏனென்றால் அப்போதுதான் நாங்கள் பேசமுடியும். இல்லையென்றால் அது முறையாக இருக்காது. அவர் முன்மொழிந்துவிட்ட பிறகு பேசினால்தான் முறையாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. (குறுக்கீடு) அது ஒன்றும் இல்லை. பேசுவதில் ஒன்றும் தவறு இல்லை. பேசி பதில் வாங்கிக்கொள்வதில் ஒன்றும் தவறு இல்லை. சேர்த்துப் பேச வேண்டுமென்றால் பேசலாம். (குறுக்கீடு) Move பண்ண வேண்டியதில்லை. (குறுக்கீடு) Move பண்ண வேண்டியதில்லை. Move பண்ணுவது, ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது எல்லாம் மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். திரு. மணி, நீங்கள் பேச வேண்டிய கருத்துகளைச் சேர்த்தே பேசலாம். அமைச்சர் பதிலளிக்கும்போது சேர்த்தே பதில் சொல்லலாம்.

**திரு. ஜி.கே. மணி:** அதற்கான கால அவகாசத்தை ஜூலை திங்கள் 31 ஆம் நாள் வரை இருந்ததை மேலும் 5 மாத காலத்திற்கு நீட்டித்துக் கொடுப்பதற்கு வழிவகை செய்யக்கூடிய வகையில் சட்டத் திருத்தத்தை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இப்படி கால அவகாசத்தை நீட்டித்துக் கொடுக்கக்கூடிய அதேவேளையிலே மாநகராட்சி நிர்ணயித்து இருக்கக்கூடிய கட்டணம் என்பது மிகப் பெரிய சுமையாக



இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தைக் கட்டி அனுபவித்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள் தன்னுடைய நிலத்தைச் சொந்த அனுபவத்திலே வைத்து மேம்பாடு செய்துகொண்டு இருக்கக்கூடியவர்கள் இந்தக் கட்டணத்தைக் கட்ட முடியாத சூழ்நிலையிலே தவித்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் அவர்கள் இங்கே விதிக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டணத்தை மிகவும் குறைக்க வேண்டும் என்றும் குறைத்தாலொழிய, மேலும் 5 மாத காலம் அல்ல, இன்னும் 5 ஆண்டு காலம் நீட்டித்துக் கொடுத்தால்கூட அதைக் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலேதான் இந்தத் தொகையை, விதித்திருக்கக்கூடிய கட்டணத்தை மிக மிகக் கடுமையான அளவிலே இல்லாமல் மிகவும் குறைக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதை வலியுறுத்துகிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற ஊராட்சித் திருத்த அமைப்புச் சட்டம். இதிலே கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி ஆகிய ஊராட்சிகளிலே இதுவரையிலே தேர்தல் நடத்த முடியாமல் அந்த ஊராட்சிகளுக்கான தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று முன்மொழிவு. ஆகவே, இதிலே நாங்கள் வேதனையோடு, வருத்தத்தோடு சொல்லிக்கொள்வது ஒரு சில ஊராட்சிகளிலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியப் பகுதிகள், ஊராட்சிகளுக்கு எல்லாம் தேர்தலை முடித்துவிட்டு, இந்த 3, 4 ஊராட்சிகளுக்கு தேர்தல் நடத்தவில்லை என்பது அங்கே இருக்கக்கூடிய ஜனநாயகப் படுகொலை மாத்திரம் அல்ல. அந்த மக்கள் அடக்குமுறையைக் கையாண்டு அடித்தட்டிலே இருக்கக்கூடிய, உழைக்கக்கூடிய மக்களுக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே தேர்தல் நடத்தவில்லை என்ற கேள்விக்குறி தமிழ்நாடு எங்கும் பரவலாக வந்திருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் எப்பாடுபட்டாவது இந்தத் தேர்தலை கட்டாயம் நடத்தியாக வேண்டும். இது ஒரு சவாலாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு இந்தத் தனி அலுவலர்கள் பதவிக் காலத்தை நீட்டிக்காமல் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்று இங்கே வற்புறுத்துகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2002 அக்டோபர் 31

*பிற்பகல் 6-30*

அடுத்து ஊராட்சிகள் திருத்தச் சட்டத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தச் சட்டத்திலே கோரியிருப்பது—அடுத்த ஒன்றும் திருத்தச் சட்டம். இந்த இரண்டு திருத்தச் சட்டங்களிலே கோரியிருப்பது மாநகராட்சியினுடைய மேயர், மாநகராட்சியினுடைய துணை மேயர், உறுப்பினர்கள், அதைப் போலவே நகராட்சி, பேரூராட்சியினுடைய தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள். அடுத்து மாவட்ட ஊராட்சியினுடைய தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர், துணைத் தலைவர் உறுப்பினர்கள். அதைப் போலவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், இவர்களெல்லாம் அரசு அனுமதி பெறாமல் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் தண்டனை விதிக்கப்படும் என்று சொல்லி இதற்கு முன்பே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, 10000 ரூபாய் தண்டனையும், சிறைத் தண்டனையும் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்தச் சட்டத்தைக் கடுமையாக்கக்கூடிய வகையிலே இன்னும் இவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு இப்போது புதியதாக ஒரு சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகச் சொல்லவில்லை. யாராக இருந்தாலும் சரி, சாதாரண ஊராட்சியிலே ஒரு வார்டு உறுப்பினரிலேயிருந்து மாநகராட்சி மேயர் வரையிலே இருக்கக்கூடிய உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு எதிரான ஒரு சட்டம், அது எந்த இயக்கமாக இருந்தாலும் சரி. ஆகவே சில நேரங்களிலே அரசு அலுவல் காரணமாகச் செல்கிறார்கள். சில நேரங்களிலே சொந்த விஷயத்திற்கு வெளிநாடுகளிலே உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திருமணத்திற்குச் செல்கிறார்கள். இறப்பு என்று சொன்னால், அவசரமாகச் செல்லக்கூடிய சூழ்நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட அரசு அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டுமென்று சொன்னால், இது நிச்சயமாக முடியாத காரியம். இப்படிப்பட்ட சட்டம் என்பது தேவையில்லாத சட்டம். வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடியவர்கள் தவறு செய்ய வைக்கிறார்கள், அங்கிருந்து வருகின்ற நேரத்திலே தவறு செய்துவிட்டு வருகிறார்கள் என்று சொன்னால், அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் அந்த உள்ளாட்சி மன்றத்திலே வெற்றி பெற்ற பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும். அப்படியில்லையென்றால் 50 ஆயிரம் ரூபாய் வரையிலே தண்டனை விதிக்கப்படும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்ற



2002 அக்டோபர் 31] [திரு. ஜி.கே. மணி]

இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லாத சட்டம். இது கொடூரமான சட்டம். கடுமையான சட்டம். இந்தச் சட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அரசு திரும்பப் பெற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றத் தொடர்க்கூட்டம் மே மாதம் 10 ஆம் தேதி நடைபெற்றபோது 23 சட்டமுன்வடிவுகள் ஒரே நாளில் கொண்டுவரப்பட்டன. அப்படிக் கொண்டுவரப்பட்டபோது எண் 17/2002 என்ற ஒரு சட்டமுன்வடிவுதான் அங்கீகாரம் இல்லாமல் கட்டப்பட்ட அல்லது வரம்புமீறி கட்டப்பட்ட மனைகளை முறைப்படுத்துவதற்கான சட்டமுன்வடிவாகும். முறைப்படுத்தப்படுகின்ற அந்தச் சட்டத்திற்குண்டான வரைமுறைக் கட்டணத்தைக் கட்டுகின்ற அந்தத் தேதியை ஜூலை மாதம் 31 ஆம் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்கு நீட்டித்துக் கொடுப்பதற்குண்டான ஒரு சட்டமுன்வடிவுதான் இன்றைக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனுடைய பின்னணி என்ன என்று சொன்னால், கோவை போன்ற நகரங்களிலே மிக அதிகமான அளவிலே அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் இருக்கின்றன. அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே கட்டப்படுகின்ற கட்டடங்கள் எவ்வளவுதான் சிறந்த பொறியாளர்களால் கட்டப்பட்டாலும் அந்தக் கட்டடங்கள் முழுவதுமே deviation என்று சொல்லப்படுகின்றது. ஆகையினால், அவற்றிற்கு மிக அதிகமான வரைமுறைக் கட்டணம் விதிக்கப்படுகின்றது. சென்ற முறை நடைபெற்ற கூட்டத்திலே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டபோது, அதிலே விவரமாக எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படும் என்று சொல்லப்படவில்லை. ஒட்டுமொத்தமாக Not exceeding 20,000 rupees per square metre என்று ஒரு வரி மட்டுமே இருந்ததேயொழிய, அதற்கு மேலே எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், அதற்குப் பின்னாலே இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாகி, அந்தச் சட்டத்திற்கு விதிகள் தயாரிக்கப்பட்ட பின்புதான், ஒவ்வொரு மாநகராட்சியிலேயும் மதுரையிலே, சேலத்திலே, திருநெல்வேலியிலே, திருச்சியிலே, கோவையிலே, அங்கீகரிக்கப்பட்ட மனைக்கட்டுகள் எவ்வளவு, அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் எவ்வளவு என்று கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்படுகின்றபோதுதான் கோவையிலே அங்கீகரிக்கப்பட்ட மனைக்கட்டுகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு 300 ரூபாய் என்றும்,

அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு 500 ரூபாய் என்றும் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளதைப் பார்த்தோம். இது தெரிந்த பின்னாலே, நானும், நம்முடைய மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும், கோவை தங்கம் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களை அவருடைய இல்லத்திலே நேரிலே பார்த்து இந்தக் கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது, இதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். கேட்டுக்கொண்டது மட்டுமல்ல, காலக்கெடுவை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டோம்.

பிற்பகல் 6-35

அதுமட்டுமல்ல. அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே இந்த வரன்முறை என்பது இதோடு நிற்பதில்லை. இது நான்கு அம்சங்களைக் கொண்டது. ஒன்று, வரன்முறைக் கட்டணம். இன்னொன்று 'Open Space Reserve' என்று சொல்லப்படுகிற பொது இடத்தைப் பற்றிய பிரச்சினை. அடுத்தது, அதற்குச் செலுத்துகிற காலக் கட்டணம். இன்னொன்று, - Development Charges - வளர்ச்சிக் கட்டணம். கோவை போன்ற நகரங்களிலே, கிராமத்திலே இருந்து வருகின்ற சாதாரண ஏழையெளிய மக்களுக்கு இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தெரியாது. அவர்கள் கோவைக்கு வந்து வீட்டுக்காரர்களிடமிருந்து நிலத்தை வாங்கி வீடுகளைக் கட்டுகிறபோது அவர்களுக்கு அங்கே D.C. Rules தெரியாது. F.S.I. என்று சொன்னால் என்னவென்று தெரியாது. அவர்களுக்கு Flat coverage என்று சொன்னால் என்னவென்று தெரியாது. எதுவும் தெரியாது. இன்னும் சொல்லப்போனால், சென்னையிலே எப்படி D.C. Rules விலைக்கு விற்கப்படுகிறதோ, அதுபோல கோவையிலே D.C. Rules விலைக்கு யாருக்கும் விற்கப்படுவதில்லை. இந்த நிலையிலே இவற்றையெல்லாம் செய்திருக்க வேண்டியது அதிகாரிகள். ஒரு வீட்டைக் கட்டுகிறபோது அந்த வீடு வரன்முறைகளுக்கு உட்பட்டு கட்டப்படுகிறதா இல்லையா என்பதைக் கவனித்து, அப்போதே தடுத்திருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. ஆனால், அப்போது அதிகாரிகள் கையூட்டு பெற்றுக்கொண்டு கட்ட விட்டுவிடுவதனாலே கட்டி முடிந்த பின்னாலே, இதற்கு விதிவிலக்கு கேட்கிறார்கள். அதிலும் குறிப்பாக, அங்கீகரிக்கப்பட்ட மனைக்கட்டுகளிலே ஏதோ ஒரு sun-shade கொஞ்சம் நீட்டிக்கொண்டிருக்கும். அதற்கு மட்டும்தான் deviation என்று போடப்படும். ஆனால் அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே அந்தக் கட்டடம் முழுவதுமே deviation என்று சொல்லப்படுகிற காரணத்தினாலே அதற்கு மிக அதிகமான வரன்முறைக் கட்டணம்



கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆக, வரன்முறைக் கட்டணம் ஒரு புறம். Development charges —வளர்ச்சிக்கட்டணம்—ஒரு பக்கம். இன்னொருபுறம் சில இடங்களில் இந்த O.S.R. என்று சொல்லப்படுகிற Open Space Reserve அது கட்டப்படாததனாலே அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால், இன்றைய வழிகாட்டு விலையிலே பாதிப் பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். கோவை போன்ற நகரங்களிலே இன்றைக்கு வழி காட்டு விலை என்று சொன்னால் 10 சதவிகிதம் O.S.R. விட வேண்டும். ஒரு ஏக்கரிலே ஒரு Lay out போட்டிருந்தால் 10 சதவிகிதம் என்று சொன்னால் 10 சென்ட். 10 சென்ட்டுக்கு குறைந்தது 20 இலட்சம் ரூபாய் ஆகும். ஆக, அந்த 20 இலட்சம் ரூபாயை அங்கே இருக்கிற மக்கள் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் 1 ஏக்கரில் 13 வீடுகள் கட்டலாம். அவ்வளவுதான். அது எவ்வளவு வருமென்று யோசித்துப் பாருங்கள். ஆக, அவ்வளவு அதிகமான தொகையை இன்றைக்கு மக்கள் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். குழம்புகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆக, இன்றைக்கு இந்தச் சட்டத்தை இப்படியே அமலாக்கினோம் என்று சொன்னால் அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ரூ.75,000-லிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை கட்ட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகையால் இந்தச் சட்டத்திற்குக் கால நீட்டிப்பு கொடுத்தால் மட்டும் போதாது. வரன்முறைக் கட்டணத்தை கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொடுக்க வேண்டும். அதேபோல, இந்த O.S.R. என்று சொல்லப்படுகிற Open Space Reserve-க்கு நீங்கள் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தின்மீது இந்த ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? இவ்வளவு பேசி இன்னுமா மிச்சம் இருக்கிறது? ரொம்ப அமைதியானவர். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நீலகிரி மாவட்டத்திலே Master Plan-க்கு உட்பட்டு வீடுகள் கட்டப்படுவதற்கு வனத் துறை, மாசுக் கட்டுப்பாட்டு

வாரியம், கனிம வளத் துறை வாரியம் போன்ற சில வாரியங்களிலிருந்து சான்றிதழ் பெற்றால்தான் கட்டமுடியும் என்ற நிலைமை இருக்கிறது. இதனாலே வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகையினால் இதற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி சம்பந்தமான ஊரமைப்பு திருத்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிற நோக்கமும் சரியல்ல. காரணமும் சரியல்ல. விளக்கமும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. ஆகவே, 2002 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு முறைப்படுத்துகைக் கட்டணம் ஒன்றை வசூலிப்பதன் மூலம் அத்தகைய நிலத்தை அல்லது கட்டடத்தை முறைப்படுத்துகிற முறையிலே ஜூலை மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் என்று இருந்ததை இப்போது மீண்டும் டிசம்பர் மாதம் வரைக்கும் extend பண்ணுவதற்கான முறையில் ஒரு சட்டத் திருத்த முன்வடிவு வந்திருக்கிறது. கேள்வி என்ன எழுகிறது என்றால் எதற்காக இது ஜூலை வரையில் வைத்தது? இப்போது ஏன் 6 மாதம் நீட்டிக்கப்படுகிறது என்றால், கால வரம்பு ஏன் நீட்டிக்கலாம் என்று கருதப்படுவதற்கு இங்கே சொல்லப்படுகிற நோக்கம் என்னவென்று சொன்னால், அவ்வாறு முறைப்படுத்துகை விண்ணப்பத்தைச் செய்துகொள்ள வேண்டிய நபர்கள் பெற இயல்பிக்கும் வகையில், அப்படி என்று சொன்னால், இயலவில்லை என்று அர்த்தம். ஏற்கெனவே திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் சொன்னதைப்போல், கட்டடங்கள் வரன்முறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய திருத்தம் இருக்கிறதே, அது ஒரு சென்ட், 2 சென்ட் இடத்திலே ஆயிரம் சதுர அடியில் ஒருவர் வீடு கட்டியிருந்தால், அவர் மொத்தமே 2—1/2 இலட்சம் ரூபாய்க்குள்ளே வீடு கட்டியிருந்தால், அவர் 85,000 ரூபாய் பணம் கட்டி, அதை வரைமுறைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதாவது, 7 நிலைகளிலே அமைச்சரவைக்கு இதுபற்றிய விவரங்கள் தெரியுமா? உள்ளாட்சித் துறை அமைச்சருக்குத் தெரியுமா? மாநகராட்சியினுடைய MAWS அமைப்புகள் அல்லது உள்ளாட்சி மன்ற அமைப்புகள், அவர்களாகக் கூடி திட்டம் போடுகிறார்கள். ஒரு சதுர அடிக்கு 50 ரூபாய் அபிவிருத்திக் கட்டணம் என்று அவர்கள் நிர்ணயிக்கிறார்கள். ஆயிரம்



சதுர அடிக்கு 50,000 ரூபாய் ஆயிற்று. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுப் பகுதிகளிலே, இது தவிர, இதர development charges எல்லாம், இதரக் கட்டணங்கள் எல்லாம் சேருகிறபோது, 85 ஆயிரம் ரூபாய் வருகிறது. கோவை கொந்தளித்தது. எதற்காக? ஒருவர்கூட மனு போட்டது கிடையாது.

*பிற்பகல் 6-40*

இந்தச் சட்டம் 6 மாநகராட்சிக்கு உட்பட்டு வருகிறது. எந்த மாநகராட்சியிலும் நிறைவேறவில்லை. ஆகையினாலே இது நீட்டிக்கப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையிலே 6 மாதம் அல்ல; இந்த மசோதாவை நான் ஏற்றுக் கொள்கிறேன். மூன்றரை வருடத்திற்கு நீட்டியுங்கள். இந்த ஆட்சி நீடிக்கிற வரை நீட்டியுங்கள். ஆட்சேபணை இல்லை. ஆனால், இதற்கான மூலச் சட்டத்தைத் திருத்தி, அபிவிருத்திக் கட்டணங்களையோ, இதர விதிகளையோ, கட்டணங்களையோ 10 சதவிகிதமாகக் குறைத்தால் இது நிறைவேறும்.

இரண்டாவது, இரண்டு ஏக்கராவிலே வீடுகளைப் பிரித்து வீடு கட்டியிருந்தார்கள் என்று சொன்னால், 20 சென்ட் இடம் reserve site விட வேண்டும். விடவேண்டியது யார்? Real Estate-காரர்கள். அவர்கள் விற்றுவிட்டுப் போய்விடுகிறார்கள். சாதாரண ஜனங்கள், 2 சென்ட், 3 சென்ட் வாங்கி வீடு கட்டுகிறார்கள், கடன் வாங்கி. அந்த 20 சென்டுக்கு உண்டான 20 இலட்சம் ரூபாய் பணத்தை 100 பேர் 200 பேர், குடியிருக்கிற ஜனங்கள் பங்கு போட்டுக் கட்ட வேண்டும் என்பது என்ன ஜனநாயகம்? சர்வாதிகாரமான ஏற்பாடு அல்லவா? இது அமைச்சருக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். அதிகாரிகள் பாழடித்த முனைப்பான நடவடிக்கைகளிலே ஈடுபடுகிறார்கள். ஒருவரும் வரி கட்ட மாட்டார்கள். MAWS Secretary -யிடம் பேசுகிறபோது, அந்த அம்மாவிற்கும் எனக்கும் சண்டை நடந்தது. நீங்கள் என்ன வரியே கட்ட வேண்டாம் என்று சொல்கிறீர்களா என்று என்னை அவர்கள் கேட்கிறார். வரி கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. முறைப்படுத்த வேண்டாம் என்றும் நான் சொல்லவில்லை. இது இப்படி கண்மூடித்தனமாகப் போடப்பட்டிருப்பது ஒட்டுமொத்த அமைச்சரவைக்குத் தெரியுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை ஒருபோதும் ஏற்க முடியாது. ஆகவே, இந்த மூலச் சட்டத்தைத் திருத்திவிட்டு, இதை மூன்றரை ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்பது ஒன்று. இதை வெறுமனே கால extension செய்வதில் யாதொரு பயனும் இல்லை.

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 அக்டோபர் 31

அடுத்தது, நாட்டார்மங்கலம், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி ஏற்கெனவே தோழமை நண்பர்கள் சொன்னதுதான். அங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கத்திற்கும், நம்முடைய காவல் துறைக்கும் ஒட்டுமொத்த ஜனநாயக நெறிமுறைகளுக்கும் சவால் விட்டுக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அங்கு தேர்தல் நடத்துவதற்கு உண்டான வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு ஒரு சட்டத் திருத்தம் தேவையில்லை என்பது இதிலே வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

அப்புறம், இந்தக் கீழ்நிலை மெம்பர்களிலேயிருந்து மேயர் வரைக்கும் இருக்கக்கூடியவர்கள், உங்களுக்கும் பொருந்தும். வெளிநாடு போவது என்கிறபோது அனுமதி பெற வேண்டும் என்று சொல்லப்படுவதற்கான ஒரு சட்டத் திருத்தம் இது. இவை அப்பட்டமாக உள்ளாட்சி மன்றங்கள், கீழ்மன்றங்கள் அமைப்பினுடைய ஜனநாயகத்திலே ஒரு மாநில அரசாங்கம் நேரடியாகத் தலையீடு செலுத்துவதற்குச் சமமாகும். மத்திய, மாநில உறவுகளில் கூட்டாட்சித் தத்துவத்தைப் பாதுகாப்பதற்காக நிற்கும் கொள்கை உடைய நாம் அனைவரும் உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் அதிகார வரம்பிற்குள் காலடி வைப்பது என்பதோ அல்லது அதைப் பறிப்பது என்பதோ ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதைத் திரும்பப் பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை, கால நீட்டிப்புச் செய்து கொண்டு வந்திருக்கின்ற இந்த நிலை பலமுறை கால நீட்டிப்புச் செய்தாலும் கோவை போன்ற மாநகரங்களில் இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிக அளவில் அதற்கான அபராதத் தொகை விதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், கட்ட முடியாது என்று ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே இதே நிலையிலே கால நீட்டிப்புச் செய்வது இந்தச் சட்டம் ஒரு வெற்றிகரமான சட்டமாக வருவதற்கு வாய்ப்பு இருக்காது. இங்கே நம்முடைய கோவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசுகின்ற நேரத்திலே சொன்னதைப்போல், அதனுடைய கட்டண விகிதத்தைக் குறைக்க வேண்டும்; அதுவும் சென்னை மாநகராட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆந்திர மாநிலத்திலே வெற்றிகரமாக அவர்கள் அங்கே வசூல்



2002 அக்டோபர் 31] [திரு. கு. பிச்சாண்டி]

செய்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பின்பற்றி இந்த அரசு சென்று, குழுவாகப் பார்த்து ஒரு குறைந்த கட்டணத்தைக் கொண்டுவந்தால்தான் இது வெற்றிகரமாக அமையும் என்ற வகையில் இந்த அரசு நினைக்கின்ற அந்தநிலை, காலநீட்டிப்புத் தந்தாலும், அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து அந்தக் கட்டணத்தை 10 சதவிகிதம் அளவிற்குக் குறைக்க வேண்டும் என்று நானும் இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6–45*

அதேபோல, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களிலே எல்லாம் தேர்தல் நடைபெறாமல் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டிருப்பது ஒரு மிகப் பெரிய ஜனநாயக விரோதமாக இருக்கிறது. ஆகவே அவற்றுக்கு விரைவிலே அப்படிப்பட்ட நிலைகளைக் களைவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்து தேர்தலை நடத்தவேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அனுமதி பெற்று வெளிநாடு செல்லவேண்டும் என்றால் உள்ளாட்சித் துறையில் பல நேரங்களில் விரைந்து அனுமதி கிடைக்காமல், பல முக்கிய அலுவல்களுக்கு அவர்கள் பல நேரங்களிலே செல்லவேண்டியிருக்கின்ற காரணத்தால் அதையும் இந்த அரசாங்கம் எண்ணிப் பார்த்து, இந்தச் சட்டங்களிலே அதற்கான தகுந்த மாற்றங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமே தவிர, அப்படியே நிறைவேற்றக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அங்கீகரிக்கப்படாத மனைகளுக்கு 6 மாநகராட்சிகளுக்காகக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை மீண்டும் நம்முடைய அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால், இதற்கு முன்பு இந்தச் சட்டமுன்வடிவைக்கொண்டு வந்ததற்குப் பின்னால் அங்கீகரிக்கப்படாத மனைக்கு என்று இருக்கிற எந்த ஒரு வரியையும் இதுவரையில் வசூல் செய்ய முடியவில்லை. கோவையில் மிகப் பெரிய

கிளர்ச்சி, சேலத்திலே மிகப் பெரிய ஹர்த்தால். அநேகமாக மாநகராட்சியில் மிகப் பெரிய இயக்கங்கள் எல்லாம் நடத்தி அதற்குப் பின்னால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று சொன்னால், அதிகாரிகள் தங்களுடைய மனப்போக்குக்குத் தயாரித்திருக்கின்ற நிலைதான். மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் சொன்னதுபோன்று, மாண்புமிகு அமைச்சராவது, அல்லது அதிகாரிகளைக் கொண்ட குழுவை அமைத்து, அந்த மக்களிடத்திலே, மாநகராட்சியிலே நேரடியாகக் கேட்டு செய்திருக்க வேண்டும். 5 மாத காலம் நீட்டித்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடமுடியாது. பொதுமக்களே நேரடியாக மனு கொடுத்து, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திரும்பவும் அங்கீகரிக்கப்படாத மனைகளுக்கு நீங்கள் அனுமதி பெறவேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக 5 மாத காலத்திற்கு நீட்டிப்பதால் எந்தவித பலனும் உங்களுக்கு வரப்போவது இல்லை. மாநகராட்சிகளுக்கு எந்த வருவாயும் கிடைக்கப் போவதும் இல்லை. அதனால் அரசாங்கமே தடை செய்கிறது என்றுதான் பொருள். அதனால் இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நீங்கள் கண்டிப்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். இல்லை என்று சென்னால், இந்தச் சட்டம் முற்றிலுமாகப் பலன் அளிக்காத வகையிலே, இது அவர்களுக்கும் பலன் அளிக்கப் போவதில்லை, மாநகராட்சியினுடைய அமைப்புகளுக்கும் பலன் அளிக்கப்போவதில்லை. அதனால் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, மாநகராட்சியினுடைய தலைவர், துணைத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், துணைத் தலைவர், பிறகு சிற்றூராட்சித் தலைவர்; இந்தச் சட்டத்தைப் பார்த்தால் உண்மையிலேயே ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது. 'இம் என்றால் வனவாசம், ஏனென்றால் சிறைவாசமா?' என்ன சட்டம் இது? உங்களுக்கு என்ன? ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர்களாக நீங்களும் நிறைய பேர் இருக்கிறீர்கள். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் இருக்கிறீர்கள். பர்மிஷன் யாரிடம் வாங்க வேண்டும்? அங்கேயிருந்து வந்து எல்லோரும் தலைமைச் செயலகத்தில் நிற்க முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, பல பேர்கள் வெளிநாடுகளிலே பிழைப்பைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். உறவினர்கள் இருக்கிறார்கள். திடீர் விபத்தில் இறந்துவிட்டால் செல்வதற்கு அவசியம் ஏற்படுகிறது. அப்படி யாராவது ஒரு மாநகராட்சி உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்



யாரும் போய் அவர்களைப் பார்க்க முடியாத அளவுக்கு இந்தச் சட்டத்தினுடைய வடிவம் இருக்கிறது. அப்படிப் போக முடியுமா? அதிலே உறுப்பினராக இருப்பவர்கூட போக முடியாது. அப்படிப்பட்ட கருத்து சட்டமுன்வடிவில் இருக்கிறது. மாநகராட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நகராட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதுகூட யாரிடத்தில் வந்து permission வாங்க வேண்டும்? (குறுக்கீடு) அண்ணா திமுக. வில் அதிகமானவர்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். இந்தச் சட்டம் எதற்குத் தேவை? அரசாங்கத்திற்கு என்ன நன்மை? சட்டம் எதை ஒழுங்குபடுத்துகிறது? எந்த வகையிலும் இல்லை. எந்த ஒரு நன்மையும் இல்லாமல் இப்படி ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு அவசியமே இல்லை. இந்தச் சட்டத்தையும் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் நான்காம் திருத்தச் சட்டமுன்வடிவின்மீது ஒருசில கருத்துகளை இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகிறேன்.

இங்கே சொல்லப்பட்டிருக்கிற சில ஊராட்சிகளில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருப்பது, தீவிரவாதிகளைவிட, மதவாதிகளைவிட, சாதியவாதிகள் சக்தி வாய்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதாக அமைந்திருக்கிறது. காஷ்மீரில் தீவிரவாதிகள் இருக்கின்ற இடத்திலே தேர்தல் நடத்தப்படுகின்றது. குஜராத்திலேகூட மதவாதிகள் இருந்தாலும், அங்கேயும் தேர்தல் நடத்துகின்ற நிலை உருவாகி தேர்தல் நடத்தப் போகிறார்கள். ஆனால் இங்கே தமிழகத்தில் இருக்கிற ஒருசில ஊராட்சிகளில் தேர்தல் நடத்த முடியாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு ஒத்துக்கொள்கிறது என்பதைத்தான் இந்தச் சட்டமுன்வடிவு எடுத்துக்காட்டுகிறது. சாதியவாதிகளை மீறி தேர்தல் நடத்தினால் அது இயலாத ஒன்றாக இருக்கும் என்பதுதான் இங்கே நிர்ணயிக்கப்படுகிறது. இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இதை நீங்கள் அனுமதித்தால், இதைத் தொடர்ந்துவிட்டால், இந்தப் பிணியானது மற்ற இடங்களிலும் தொற்றிக்கொள்ளும் என்பதை இந்த அரசு சற்று கவனித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. ஜெயக்குமார்] [2002 அக்டோபர் 31

*பிற்பகல் 6-50*

முதலிலே அறிய வேண்டியது, பலவிதமான சட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொள்ளலாம். எது எதற்காகவோ எல்லாச் சட்டங்களும் பாயும் என்று சொல்கின்ற இந்த அரசு எல்லாச் சட்டங்களையும் பயன்படுத்தி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்; சட்டரீதியான முறையிலே எது எது நடக்க வேண்டுமோ அதை இந்த அரசு நடத்தியே தீரும் என்று சொல்கின்ற நிலை இருக்கின்றபொழுது, சட்ட ரீதியிலே நடத்தப்பட வேண்டிய இந்தத் தேர்தலை மட்டும் நடத்த முடியாமல் இருப்பதனுடைய காரணம் மட்டும் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆக, ஒருசில ஆலோசனைகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த உள்ளாட்சி, ஊராட்சிகளில் எல்லாம் தேர்தலை நடத்த முடியவில்லையோ, அந்த இடங்களுக்கெல்லாம் இந்த அரசு நிதியைக் கொடுக்காமல் தடுத்து நிறுத்தலாம். அதுமட்டுமல்ல, பொது வசதிகளைக்கூடத் தடை செய்யலாம். ஏன் என்றால், மத்திய அரசானது, தமிழக அரசு ஒருமுறை இந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்த முடியாதிருந்த காலகட்டத்திலே, தேர்தலை நடத்தினால்தான் நிதி கொடுப்போம் என்று நிதியை நிறுத்திவைத்த காலம் உண்டு என்பதை இந்த அரசு அறியும். எனவே இந்த அரசை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தப் பிணியை வளரவிடாதீர்கள். இந்தப் பிணி தொற்றிக்கொண்டால் அது விரட்ட முடியாத ஒரு பிணியாக இருக்கும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் ஒப்புதல் பெறாமலும், விதிமுறைக்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், மனைப் பிரிவுகளையும் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்; வரன்முறைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தமிழக அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கேற்ப, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அதற்குண்டான கட்டணத்தைச் செலுத்தி



2002 அக்டோபர் 31] [திரு. எம்.சி. சம்பத்]

முறைப்படுத்திக்கொள்ளும் திட்டத்தைச் செயலாக்க மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிகளின் சட்டம் மற்றும் நகர ஊரமைப்புத் திட்ட சட்டங்களுக்குத் திருத்தங்கள் 4-6-2002 அன்று கொண்டு வரப்பட்டு, மனு செய்ய வேண்டிய கடைசி நாள் 31-7-2002 என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மேலும், பொதுமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் கோரிக்கைகளை ஏற்று, அவர்கள் மனுக்கள் மூலமாகவும் மற்றும் கோரிக்கைகளின் மூலமாகவும் கொடுக்கப்பட்டதனாலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், மேலும் வரன்முறைப்படுத்த நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைத் தளர்வு செய்தும், விண்ணப்பம் செய்ய வேண்டிய கால அவகாசம் மேலும் நீட்டிக்கப்பட்டும், தற்சமயம் மறுபரிசீலனை செய்து வரன்முறைப்படுத்திக் கொள்ள விண்ணப்பம் கொடுக்க வேண்டிய கடைசி நாள் 31-12-2002 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விதிமுறையில், விதிக்குப் புறம்பாகவும் கட்டிய கட்டடங்களுக்குக் கட்டணத்தைக் குறைத்தும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டங்கள் மற்றும் தமிழ்நாடு நகர ஊரமைப்புத் திட்டம், சட்டம் ஆகியவற்றுக்குத் திருத்தம் கொண்டு வர இயற்றப்பட்ட அவசரச் சட்டம்தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டம் பொதுமக்களுக்கு, அவர்களுடைய வருங்காலத்தை எதிர்நோக்கும்போது, மிகவும் தொலைநோக்குப் பார்வையில், இனி வருங்காலங்களில் வளரும் சமுதாயமும், வருங்காலச் சந்ததியினரும் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும், சுகாதாரச் சீர்கேடுகள் வரக்கூடாது; அதைத் தடுக்கும்பொருட்டும், மேலும் இட நெருக்கடியையும், போக்குவரத்து நெருக்கடியையும் தவிர்க்கும் பொருட்டும், மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளைக் கருத்தில் கொண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக முதல்வர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

அன்பிற்கினிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கே.சி. கருணாகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல அல்ல. வரன்முறைப்படுத்தாத மனைகள் 2400 சதுர அடிக்கு தற்சமயம் 46,711 ரூபாய்தான் உத்தேசிக்கப்பட்ட மதிப்பு, உத்தேசிக்கப்பட்ட மதிப்பளவு.

அதோடுமட்டுமல்லாமல், தற்சமயம் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு 250 ரூபாய் என்றும் கல்வி மற்றும் மருத்துவத் தொண்டு நிறுவனம் போன்ற கட்டடங்களுக்கு ஒரு சதுர மீட்டருக்கு 250 ரூபாய் என்றும், தனியார் குடியிருப்புக்கு 250 ரூபாய் என்றும் மறுபரிசீலனை செய்து தற்சமயம் கட்டணத்தைத் தளர்வு செய்துள்ளார்கள். எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளில் அக்கறை கொண்டும், பொதுமக்களுடைய வருங்காலத்தையும், இனி வருகின்ற எதிர்காலத்தையும் எதிர்நோக்கி, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும், இட நெருக்கடிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை ஏற்று, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 6–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லுங்கள். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி இவற்றிற்கு பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சதுர மீட்டருக்கு. சதுர மீட்டருக்கு. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த நிலத்தை வாங்கிப் போட்டபோது மொத்த விலையே 10,000, 20,000 ரூபாய்க்கு வாங்கியிருப்பார்கள். மிகவும் சிரமப்பட்டு 1000 சதுர அடிக்கு வீடு கட்டியிருக்கிறார்கள். அதற்குக் கடன் வாங்கியிருப்பார்கள். கடன் வாங்கியவர்களைப் போய் நீங்கள் தேவையே இல்லாமல் reserved site என்று சொல்லி, அதற்குப் பணம் கேட்பது நியாயம் இல்லை. அதேபோல், சதுர மீட்டருக்கு 200 ரூபாய், 500 ரூபாய் என்பது அவர்களால் கட்டமுடியாது. சதுர மீட்டருக்கு 500 ரூபாய் என்பது யாராலும் கட்டமுடியாது. 200 ரூபாய் அதிகம். குறைத்துச் செய்யலாம். நீங்கள் 300 ரூபாய் என்று போட்டிருப்பதை 5 ரூபாய்க்கு, 50 ரூபாய்க்குக் கொண்டு வாருங்கள். கொஞ்சம் குறைக்கவேண்டும், குறையுங்கள். அதேபோல், 500 ரூபாய் என்று போட்டிருப்பதை நீங்கள் குறைத்து 10 ரூபாய்க்குக் கொண்டுவாருங்கள். (குறுக்கீடு) நிச்சயமாகக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் கருத்தைப் பதிவு பண்ணிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி பற்றி பதில் சொல்லுங்கள். மற்றவற்றிற்கும் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோவையைப் பொறுத்தவரையில் தற்சமயம் (குறுக்கீடு) மீண்டும் மறுபரிசீலனை செய்து மாண்புமிகு எஸ்.ஆர்.பி. கூட மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து மனு கொடுத்தபிறகு மறுபரிசீலனை செய்துதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டணத் தளர்வு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இது ஒரு சதுர மீட்டருக்கு. ஒரு சதுர மீட்டருக்கான விலை விவரங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற பிரச்சினைகளுக்கு மொத்தமாக பதில் சொல்லிவிடுங்கள். மொத்தமாக எடுத்து முடித்து விடுவோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73–வது இந்திய அரசமைப்பு திருத்தச் சட்டத்தின்படி 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் ஏப்ரல் மாதம் 22 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி மதுரை மாவட்டத்திலுள்ள கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள கொட்டகாச்சியேந்தல் ஆகிய சிற்றூராட்சிகளில் முதன்முதலில் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலும் மற்றும் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலும் நடைபெற்ற சிற்றூராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கு எவரும் போட்டியிடவில்லை. எனவே, தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களது பதவிக் காலம் 24–10–2002–ல் முடிவடைந்தது. 7–10–2002 ஆம் நாளன்று நடைபெற்ற தேர்தலிலும் கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகாச்சியேந்தலிலும், ஊராட்சித் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு நடைபெற்ற தேர்தல்களில் எவரும் போட்டியிட முன்வராத காரணத்தால், தனி அலுவலர் பதவிக் காலத்தை 25–10–2002 முதல் நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறாததால், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மேலும் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி ஆகிய பகுதிகளில் தேர்தல் நடைபெற்று அவர்கள் தலைவர் பதவியை ராஜினாமா

[திரு. எம்.சி. சம்பத்] [2002 அக்டோபர் 31

செய்துவிட்டார்கள். மீண்டும் தமிழக அரசின் மூலமாக, மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டதற்கிணங்க மீண்டும் அவர்கள் மனு தாக்கல் செய்து, அந்த மனுக்களை வாபஸ் பெற்றுவிட்டார்கள். எனவேதான், இந்த தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அவசரச் சட்டத்தை சட்டமாக்க வேண்டியுள்ளதால் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு பேரவையின் ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின்.*(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி. பழனிசாமி:** காஷ்மீரிலேயே தேர்தல் நடந்து முடிந்தாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்லிவிட்டீர்கள். பதில் சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*



2002 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.

*பிற்பகல் 7-00*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லவேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒவ்வொன்றாகச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2002), மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2002),* மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

*@ 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உஉ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்து) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/2002), மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.





***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊஊ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/2002), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.





பிற்பகல் 7-05

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/2002) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 30-10-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முனனவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு மற்றும் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (எஎ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/2002).*

திருவாளர்கள் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சி. ஞானசேகரன், ஜி.கே. மணி, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானங்களை முன்மொழிவார்:

"7–8–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2002) இப்பேரவை நிராகரிக்கிறது."

"5–9–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) செயல்முறை நிறுத்திவைத்தல் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2002) இப்பேரவை நிராகரிக்கின்றது."

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"7–8–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2002) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழி :ன்றேன்.



அடுத்து,

"5–9–2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு (திருத்த) செயல்முறை நிறுத்தி வைத்தல் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2002) இப்பேரவை நிராகரிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களால் முன்மொழியப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் நான் வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/2002), மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு உறுப்பினருடைய தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

---

@ 31–10–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகி விட்ட காரணத்தினாலே சுருக்கமாகப் பேசுகிறேன். இந்த சட்டமுன்வடிவுகளைப் பொறுத்தவரையில் பல்வேறு கேள்விகள் எழுகின்றன. அவசரச் சட்டம் எண் 4–ம், அதை நிறுத்தி வைப்பதற்கான அவசரச் சட்டம் எண் 7–ம் ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை விளக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் பேரிலேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் சில கேள்விகள் எழுகின்றன. சட்ட ஆணையம் எப்பொழுது அந்தப் பரிந்துரையை அரசுக்கு அளித்தது? கட்டணங்களை உயர்த்துவது குறித்து சட்ட ஆணையம் அரசுக்குப் பரிந்துரை வழங்க முடியுமா? உயர்நீதிமன்றம் அந்தப் பரிந்துரையின்மீது என்ன கருத்து கூறியிருக்கிறது? உச்ச நீதிமன்றத்திலேயும் மற்ற உயர்நீதிமன்றங்களிலேயும் மாநிலங்களிலே வசூலிக்கப்படும் கட்டணங்களின் அளவிற்கு ஏற்ப இங்கும் கட்டண உயர்வுகள் அமைந்திருக்கின்றனவா? நீதி வழங்கப்படுவதில் இலாப–நஷ்டம் பார்ப்பது ஏற்றுக்கொள்ளத்தக்க அணுகுமுறைதானா என்ற கேள்விகளுக்கு அரசாங்கம் விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, பேருந்துகளில் வரி விகிதங்களை உயர்த்தும்போது, கட்டணங்களை உயர்த்தும்போது, பொது மக்களுடைய கருத்துகளைக் கேட்டு அறிந்துகொள்ள வேண்டுமென்றுதான் போக்குவரத்து வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதைக் கேட்டுவிட்டுத்தான் உயர்த்த வேண்டும்.

*பிற்பகல் 7–10*

அதேபோல மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் அதிகாரம் பெற்றிருக்கிறது. அவர்களும் கட்டணத்தை உயர்த்தும்போது, பொதுமக்களின் கருத்துகளையும், உபயோகிப்பாளர்களின் கருத்துகளையும் கேட்டபிறகே உயர்த்தவேண்டும், உயர்த்தமுடியும். அதேபோல, கட்டடங்களுடைய வாடகையை நிர்ணயிக்கும்போதுகூட, வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் ஒரு வரைமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் செக்ஷன்–4, விதியில் குறிப்பிட்டுள்ளபடிதான் வீட்டு வாடகையை அரசு நிர்ணயிக்க முடியும். அதற்கு மாறாக, தான் நினைத்தபடியெல்லாம்



ஒருதலைபட்சமாக யாரும் வீட்டு வாடகையை நிர்ணயிக்க முடியாது. ஆனால், அண்மையிலே தமிழக அரசினுடைய வீட்டு வசதி வாரியம் அதனுடைய குடியிருப்புகளுக்கான வாடகையை 600 சதவிகிதம், 700 சதவிகிதம் என்று விண்முட்ட உயர்த்தி தனது வானளாவிய அதிகாரத்தை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது. இது எப்படி நடந்தது என்று சொன்னால், யாருடைய கருத்தும் இல்லாமல் வீட்டு வசதித் துறையினுடைய செயலாளர் அவர்கள் விவரம் இல்லாமலேயே அதிலே கையெழுத்திட்டு இருக்கிறார். அவ்வளவு உயர்த்திச் செய்ய முடியுமா? அதற்கு இன்றையதினம் தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. முதலிலே ஒரு single judgc–ஆல் தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மீண்டும் அதற்கு மேல் முறையீடு செய்து, இன்றைக்கு First Division Bench அதற்குத் தடையாணை பிறப்பித்திருக்கிறது. நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஆக, இதே நிலையில்தான் தற்போது இந்த நீதிமன்றக் கட்டணத்தை உயர்த்த அவசரச் சட்டம் அவசரக் கோலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடத்திலே பேசிக் கொண்டிருந்தேன். முன்னர் ஒரு application-க்கு இரண்டே கால் ரூபாய், இப்போது 100 ரூபாய். முன்னர் ஒரு Order copy வாங்க வேண்டுமென்று சொன்னால் ஒரு பக்கத்திற்கு 75 காசு. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமேயானால், 125 ரூபாய். ஒரு judgement என்பது, நீங்கள் பத்திரிகைகளிலே படிக்கிறீர்கள்; 58 பக்கம், 78 பக்கம், 356 பக்கம், 400 பக்கம் என்று தீர்ப்புகள் எழுதப்படுகின்றன. 400 பக்கத் தீர்ப்பை ஒரு சாதாரண குடிமகன், ஒரு பக்கத்திற்கு 125 ரூபாய் கொடுத்து அதைப் பெற முடியுமா? இது ஏழைகளுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு சட்டமே தவிர, வேறு அல்ல. இதை எப்படிப் பிறப்பித்தார்கள், யார் இதற்குக் காரணமானவர்கள் என்பதை நிச்சயமாகப் பார்க்கவேண்டும். இதற்கு எதிராக பொதுமக்களும் இருக்கிறார்கள்; வழக்குரைஞர்களும் களமிறங்கிப் போராடினார்கள். அவர்கள் போராடியதற்குப் பிறகு, இன்றையதினம் இந்த அவசரச் சட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, சட்டத் துறை அமைச்சர் அவர்களை மட்டுமல்ல, நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஓர் அவசரச் சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறதா? அரசியல் சட்டத்திலே இடமிருக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஏனென்று சொன்னால், அவசரச் சட்டத்தைப் பற்றிய பிரிவு, Article 213. அதனைப்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 அக்டோபர் 31

பொறுத்தவரையிலே, Article 213(2) - 'An ordinance promulgated under this Article shall have the same force and effect as an Act of Legislature of the State assented to by the Governor'. ஆகவே இது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டத்தைப் போலவே அதிகாரம் பெற்றது.

அதுமட்டுமல்ல. சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம், நாளைக்குக் காலையிலேயே சட்டம் ஆகாது. அது ஆளுநரிடத்திலே போய், கையெழுத்தாகி, பிறகு வேறு ஏதாவது பாக்கியிருந்தால் அது ஜனாதிபதிக்குப் போய்விட்டு வந்த பிறகுதான் சட்டமாகும். ஆக, இதைப் பொறுத்தவரைக்கும் உடனடியாகச் சட்டம் ஆகிறது. இப்படி சட்டம் ஆவதை நிறுத்தி வைக்க முடியுமா என்று சொன்னால், நிறுத்தி வைக்க முடியாது. என்ன செய்யலாம்? ஒன்று, 'that can be allowed to lapse' - that will cease to exist. எப்பொழுது? இந்தச் சட்டமன்றம் கூடிய ஆறு வாரத்திற்குள்ளாக சட்டமன்றத்தின் முன்னாலே வைக்காமல் விட்டுவிட்டால் அது தானாகவே செயலிழந்து போய்விடுகிறது. அப்படியில்லை என்று சொன்னால், நான் இப்போது கொடுத்திருக்கிறேனே, 'disapproval', நிராகரிக்க வேண்டுமென்ற தீர்மானம், அந்த நிராகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அந்தச் சட்டம் செயலிழந்து போய்விடும். இல்லையென்று சொன்னால், 'may be withdrawn at any time by the Governor. It can be withdrawn by the Governor. It cannot be suspended by the Governor. எப்படி suspend பண்ணீர்கள்? எப்படி இதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தீர்கள்? அது தேவையில்லை. அந்தச் சட்டத்திற்கு எதிராக வழக்குரைஞர்கள் போராடினார்கள்; மக்கள் போராடினார்கள். அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறபடி மிக அதிகமான கட்டணத்தை யாராலும் கட்ட முடியாது. இப்போது அதற்காக ஒரு கமிட்டி போட்டிருக்கிறீர்கள். கமிட்டியிலே எல்லோரும் இருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை விசாரித்து முடிவாகிற வரை, அந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டியதுதானே. ஏன் அந்தச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதுபற்றி நீங்கள் ஓர் அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டும்? அந்தத் தவறான அவசரச் சட்டத்தை ஏன் இங்கே கொண்டுவந்து மீண்டும் அதை வைக்க வேண்டும்? சட்டத் துறை என்று ஒன்று இருக்கிறதா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அந்தச் சட்டத் துறை பல குழப்பங்களை இங்கே செய்து கொண்டிருக்கிறது. இங்கே உங்களுக்கு அது துணையாக நிற்கிறது என்று தயவுசெய்து நீங்கள் கருதாதீர்கள். இங்கே இருக்கிற நம்முடைய தமிழ்நாடு சட்டத் துறை என்பது, நிச்சயமாக அரசுக்குத் துணையாக இல்லை.



2002 அக்டோபர் 31] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

குழப்பங்களுக்குத்தான் அது வித்திட்டுக் கொண்டிருக்கிறது. எனவே தெளிவான பதில் எனக்கு வேண்டும். கண்டிப்பாக 'may be withdrawn at any time by the Governor' என்று இருக்கிறதே தவிர, 'may be suspended at any time by the Governor' என்று இதிலே சொல்லப்படவில்லை. இதிலே சொல்லப்படாதது எதையும் செய்ய முடியாது.

*பிற்பகல் 7-15*

அரசமைப்புச் சட்டம் என்பது பவித்திரமானது. அவசரச் சட்டத்திலே ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றால், நீங்கள் அதற்கு amendment-தான் கொண்டுவர வேண்டுமே தவிர, நாமாக எதுவும் செய்துகொள்ள முடியாது. It cannot be suspended. அப்படியொரு முன்னுதாரணமே இருக்க முடியாது. அப்படியொரு முன்னுதாரணம் இருந்தாலும், அது தவறான முன்னுதாரணம். நான் அதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இதிலே கௌரவம் பார்க்காதீர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு நாளையதினம் நீங்கள் செயல்பட முடியாது. எனவே இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, ஏற்கெனவே அங்கே குழு இருக்கிறது. அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்யட்டும். பேச்சுவார்த்தை நடத்துங்கள். வழக்குரைஞர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்துங்கள். Litigants, public-இடத்திலே பேச்சுவார்த்தை நடத்துங்கள். பொதுமக்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்துங்கள். நியாயமான தொகை எது? 75 பைசாவை தயவு செய்து 125 ரூபாய் எனச் செய்யாதீர்கள். இரண்டே கால் ரூபாயை 100 ரூபாய் எனச் செய்யாதீர்கள். ரிட் பெட்டிஷனுக்கு 100 ரூபாய். ஒரு ஆள் போட்டாலும் ஒரு ரிட் பெட்டிஷனுக்கு 100 ரூபாய். 5 பேர் போட்டாலும் ஒரு ரிட் பெட்டிஷனுக்கு 100 ரூபாய். 100 பேர் ஓரே ரிட் பெட்டிஷன் போட்டாலும் 100 ரூபாய். இன்றைக்கு எவ்வளவு தெரியுமா? ஒரு ரிட் பெட்டிஷனுக்கு 500 ரூபாய். ஒரு ரிட் பெட்டிஷன், ஓரேயொரு ரிட் பெட்டிஷன். நார்மலாக ஒரு ரிட் யாரும் போடமாட்டார்கள். என்ன கேட்பார்கள்? Prayer என்னவாக இருக்கும்? A Writ of certiorari or mandamus or any other appropriate writ the Court may deem fit, இதுதான் prayer. Prayer என்பது, நான் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்கிறோமே, அது அப்படித்தான் வரும். அந்த இரண்டோடு, ரிட்டோடுகூட நிறுத்தமாட்டார்கள். Or any other appropriate writ or any order which the court deem fit என்று போடுவார்கள். ஆக, இரண்டு ரிட், எல்லாவற்றிலுமே Mandamus - எந்த ரிட்டாக இருந்தாலும் Certiorari இது எல்லாம்

சேர்ந்துதான் வரும். இரண்டும் சேர்ந்து வரும்போது, ஒரு நபர் போட்டால் *500-ம் 500-ம் 1000/- ரூபாய். இரண்டு நபர் போட்டால் 2000/- ரூபாய். 50 நபர் போட்டால் எவ்வளவு? 100 நபர் போட்டால் என்ன ஆச்சு?* இன்றைக்கு Public Interest Litigation *போடுகிறார்கள். ரிட் பெட்டிஷன் போடுகிறார்கள். 10 பேர் போடுகிறார்கள்; 20 பேர் போடுகிறார்கள்; 100 பேர் போடுகிறார்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** *500/- ரூபாய்தான். (குறுக்கீடு)* No, No. *(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிட் என்பது, ஒரு ரிட்டிற்கு நீங்கள் (குறுக்கீடு) நான் பேசி முடிக்கிறேன்.* Prayer *என்பது,* you may have a different prayer - writ of certiorari or writ of mandamus. We are not asking for Rs.1000/-. We are only asking for Rs.500/-. So my request is.... - *நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு ரிட் பெட்டிஷனுக்கு 500 ரூபாய்தான். அதிலே நீங்கள் கீழே, எத்தனை* prayer *வேண்டுமானாலும் யாரும் கொடுக்கலாம்.* Prayer No.1, Prayer No.2, Prayer No.3 *என்று இருக்கிறது. ஒவ்வொரு* prayer-*க்கும் நீதிமன்றத்திலே எந்தக் காலத்திலும் கட்டணம் வசூலித்தது கிடையாது.* I am very sorry.

**THIRU S.R. BALASUBRAMONIYAN**: My interpretation is, if it is a prayer for a writ of certiorari and ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. என்னுடைய prayer என்னவென்றால், கொஞ்சம் சுருக்கமாக எல்லாவற்றையும் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். அது இரண்டு ரிட்டாகக் கருதப்பட்டு, இரண்டு ரிட்டாகத்தான் பணம் கட்டவேண்டும். ஒரு நபருக்கு மேலே அதிலே இருந்தால், ஒவ்வொரு நபருக்கும் பணம் கட்ட வேண்டும். அத்தனைக்கும் மேலே, இந்த அவை முன்னால் நான் வைப்பது, நிச்சயமாக ஆளுநருக்கு, ஓர் அவசரச் சட்டத்தை, தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் கிடையாது. இந்த அரசுக்கு அதிகாரம் கிடையாது. இதை திரும்பப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். எனவே அரசியல் சட்டத்திற்கு விரோதமான இந்தச் சட்டத்தை, இந்தக் கட்டத்திலேயாவது திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன், வணக்கம்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசாணையைப் போட்டுவிட்டு, அரசாணையைத் திரும்பப் பெறவேண்டுமென்றால், ஓர் அரசாணையின் மூலம்தான் செய்ய முடியும். அதேபோன்று, ஓர் அவசரச் சட்டம்* promulgate — *பிரகடனப்படுத்தப்படுகிறது என்றால், ஓர் அவசரச் சட்டத்தின் மூலம்தான் அதை நிறுத்தி வைக்க முடியும். இது* Constitution-*லே தெளிவாக இருக்கிறது. இதற்கு கடந்த காலங்களிலே* Municipal Act-*லேகூட போடப்பட்ட அந்தச் சட்டங்களெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டதற்கான உதாரணங்கள் இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. தயவுசெய்து, ஒரு வார்த்தை. Constitution-ஐப் படித்துக் காண்பித்தேன். Constitution-லே மூன்றையும் நான் படித்துக் காண்பித்தேன்.

1) shall be laid before the Legislative Assembly of the State, or where there is a Legislative Council in the State, before both the Houses and shall cease to operate at the expiration of six weeks from the reassembly of the Legislature

2) or if before the expiration of that period a resolution disapproving it is passed by the Legislative Assembly and

3) agreed to by the Legislative Council, if any, upon the passing of the resolution or, as the case may be, on the resolution being agreed to by the Council, and 'may be withdrawn at any time by the Governor'. So...

ஒன்று கவர்னர் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால், இந்த அவையே நிராகரிக்கலாம். இல்லையென்று சொன்னால், இந்த அவைக்கு முன்னாலே வைக்காமல், தானாகவே அது காலாவதியாகலாமே தவிர, நிச்சயமாக தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு இந்த அரசுக்கு, ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 7—20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறியிருக்கின்றவாறு, the ordinance may be withdrawn at any time by the Governor. That is absolutely allright. But there is no express provision prohibiting the Governor to promulgate an ordinance suspending an earlier ordinance. அந்த அடிப்படையிலே இது செல்லும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The article is exhaustive. மூன்று வகையிலே அது எப்படி செயலிழக்கும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒன்று ஆறு வாரங்களுக்கு உள்ளாக சபையின் முன்னாலே வைக்காவிட்டால் அது செயலிழந்து போய் விடுகிறது. Ceases to exist. இரண்டு, If it is disapproved by the House. மூன்று, It can be withdrawn by the Governor. It shall either be withdrawn or be suspended என்று இருக்குமே தவிர, it can be withdrawn என்று சொல்லிவிட்டு அதையே நான் suspension-க்கு எடுத்துக்கொள்வேன் என்று சொன்னால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அது தவறான விளக்கம். எனவே, அரசாங்கம் கௌரவம் பார்க்காமல் இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற்றுக்கொண்டு மீண்டும் அந்தக் குழு தனது பரிந்துரையை வைக்கட்டும், உங்களுடைய ஆட்கள்தான் அதிலே இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்திய பிறகு அந்தச் சட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

An ordinance that is already promulgated is suspended. Suspension is not by any other mode other than by way of another ordinance. An ordinance is suspended by another ordinance. Governor is empowered constitutionally to promulgate an ordinance, the ordinance may be for any purpose which is falling within the purview of the provisions of the Constitution. Suspension is one of the provisions that can be falling within the purview of the Governor when it is an ordinance. So ordinance for suspension is valid in law.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவுதான் சொன்னாலும் ஒன்றுதான். சறுக்கல் சறுக்கல்தான், வழுக்கல் வழுக்கல்தான். திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் உரிமையியல் வழக்குகள் மதிப்பீடு அவசரச் சட்ட எண் 4/2002 மற்றும் அவசரச் சட்ட எண் 7/2002 ஆகியவற்றின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவசரச் சட்டம் வருவதாக அறிவிப்பு வந்தவுடனே, சென்னை உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் பல்வேறு வழக்கறிஞர்கள் எல்லாம், போராட்டக் களத்திலே ஈடுபட்டதையெல்லாம் நாம் அறிவோம். ஆகவே, வழக்கறிஞர்கள் தமிழ்நாட்டிலே போராடினார்கள் என்று சொன்னால் வழக்கறிஞர்கள் மாத்திரம் அல்ல, தமிழ்நாட்டிலே இருக்கிற பொதுமக்களுக்காகப் போராடினார்கள் என்ற அந்தக் கூற்று வலுப்பெற்ற காரணத்தினால்தான் இப்பொழுது இந்த அவசரச் சட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்ற அறிவிப்பு வந்திருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது, சட்டத் துறை ஆணையம் பரிந்துரை செய்தது என்று. சட்டத் துறை ஆணையம் பரிந்துரை செய்வதற்கு முன்பு மக்கள் மத்தியிலே கருத்துக் கணிப்பினைப் பெற்றிருக்க வேண்டும். கருத்துகளைக் கேளாமலே ஆணையம் கொண்டுவந்தது என்று சொல்வது தவறான முன்னுதாரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு மற்றொரு காரணம் சொல்லப்பட்டது.நீதிமன்றங்களிலே நீதிபரிபாலனச் செலவுகளை ஈடுசெய்வதற்காக இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்படுவதாகச் சொல்லப்பட்டது. அப்படி இந்த அவசரச் சட்டம் நிதி நெருக்கடியைச் சீரமைப்பதற்கு என்று சொன்னால், இந்தக் கட்டண விகிதாச்சாரத்தை நாம் பார்க்க வேண்டும். இன்று நீதிமன்றத்திலே வழக்கு பதிவு செய்கின்ற நேரமாக இருந்தாலும் சரி அல்லது நீதிமன்றத்திலே தீர்ப்பு என்று சொன்னால், அந்தத் தீர்ப்புகளின் நகலைப் பெறுவதற்கு கட்டணம், இதற்கு முன்னால் இருக்கக்கூடிய கட்டணத்தைவிட 100 மடங்கு, 150 மடங்கு, 200 மடங்கு கூடுதலான கட்டணம் இப்போது விதிக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் சொல்ல வேண்டுமென்றால் காலதாமதமாகும். அதேமாதிரி ஸ்டாம்ப் கட்டணம். மனு கொடுக்கின்ற நேரமாக இருந்தாலும் சரி, புகார் கொடுக்கின்ற நேரத்திலும்கூட இருக்கக்கூடிய ஸ்டாம்ப் கட்டணத்தினுடைய மதிப்பும் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு சாதாரண ஏழையெளியவன், தன்மீது அவதூறாக ஒரு வழக்கு பதிவு செய்யப்படுகிறது என்று சொ[illegible] அந்த

வழக்கிலேயிருந்து நிரபராதி என்று விடுதலைபெற்று தீர்ப்பு பெற்ற பிறகும்கூட, அந்தக் கட்டணத்தைச் செலுத்தி அந்த நகலைப் பெறுவதற்கு அவனால் இயலாத சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படுகின்ற காரணத்தினாலே இப்படி சாதாரண மக்களுக்கு இந்தக் கட்டணம் கூடுதலாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. உணர்ந்த காரணத்தினாலே இந்த அவசரச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் தற்காலிக நிறுத்தம் என்பது போதாது. இந்தச் சட்டத்தை நிச்சயமாக அரசு திரும்பப் பெற வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒட்டுமொத்த வழக்கறிஞர்களுடைய எதிர்ப்பு மேலோங்கியிருக்கிறது. பொது மக்களுடைய எதிர்ப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தமிழக அரசை வற்புறுத்த விரும்புவது இந்தச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்காதீர்கள். திரும்பப் பெறுங்கள். திரும்பப் பெறுங்கள் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, கண்டனத்தையும் தெரிவித்து, அமர்கிறேன்.

*பிற்பகல் 7—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் சூழ்நிலையைக் கருதி நானும் சுருக்கமாகப் பேசி முடிக்க விரும்புகிறேன். ஆனால் இந்தச் சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? இந்தச் சட்டத்தைத் தற்காலிகமாக மீண்டும் நிறுத்தக்கூடிய சூழ்நிலைக்குக் காரணம் என்ன? 7 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டு, 8—8—2002 அன்று அரசு Gazette-ல் வெளியிடப்பட்டு, it was communicated to High Court on 21-8-2002. 21 ஆம் தேதி நீதிமன்றத்தினுடைய பார்வைக்குச் சென்று எந்த நீதிமன்றம் இதை நிறைவேற்ற வேண்டுமோ, அந்த நீதிமன்றத்தினுடைய பார்வைக்கு 21 ஆம் தேதி சென்று, பிறகு வழக்கறிஞர்கள் அனைவரும் கூடி, Bar Association meeting போட்டு, பிறகு அதற்கான முடிவினை எடுத்து, 22 ஆம் தேதி Public Interest Litigation - வழக்கு- ஒன்று போடப்பட்டது. 23 ஆம் தேதி அமல்படுத்தப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது. 26 ஆம் தேதி நாடு முழுக்க வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நீதிமன்றம் ஸ்தம்பித்தது. பணிகள் நின்றன. பொதுமக்கள், மற்றவர்கள், ஏழையெளியோர்கள் கடினப்பட்டார்கள். அதற்குப்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக 22 ஆம் தேதியே lunch motion எடுக்கப்பட்டு, அரசுக்கு நோட்டீஸ் கொடுத்து, அட்வகேட் ஜெனரலிடம் நீதிமன்றம் ஒப்படைத்தது. அதற்குப்பிறகு 29—8—2002 அன்று மாண்புமிகு முதலமைச்சரை



வழக்கறிஞர்கள் சந்திக்கிறார்கள். வழக்கறிஞர்கள் சந்தித்துவிட்டுப் போனதற்குப் பிறகு 30 ஆம் தேதி நடைபெறுகின்ற அந்த argument அதற்குப்பிறகு ஒத்திவைக்கப்பட்டு, 2—9—2002—ல் counter போடுகிறார்கள். அப்போது நீதிபதி தெளிவாகக் கேட்கிறார்கள், உயர் நீதிமன்றத்தில். நிறைவேற்ற இருக்கிற உயர் நீதிமன்றத்திற்கு நீங்கள் தாமதமாகத் தெரிவித்தது ஒன்று. அடுத்ததாக, இவ்வளவு கட்டணங்கள் உயர்த்தியிருப்பதற்கான காரணங்கள் என்ன என்று கேட்கிறபோது, இவர்கள் குறிப்பிட்டது, உயர் நீதிமன்றத்திலேயிருந்து மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாவட்ட நீதிமன்றங்கள், சிறு நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் அத்தனையும் சேர்த்து செலவுத் தொகை அதிகமாகிறது. ஊழியர்களுக்கான சம்பளத் தொகை அதிகமாகிறது. ஏன், உயர் நீதிமன்றத்திலேகூட, amenities அவர்களுக்காக கார் வசதியும் மற்ற வசதிகளும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, சுருக்கமாகச் சட்டமுன்வடிவில் பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அதன் காரணமாகத்தான் நாங்கள் கட்டண உயர்வினைக் கொண்டுவருகிறோம் என்றவுடன், உயர் நீதிமன்றத்திலே உடனடியாக நிறுத்தி —எல்லா பத்திரிகைகளிலும் வந்தது— நாங்கள் அனைத்தையும் ஒப்படைத்துவிடுகிறோம். எங்களுக்கு என்ன செலவானதோ, அதற்கான குறிப்புகளை இன்று கொண்டு வர வேண்டும் என்றவுடன் அவசரமாக A.G. வந்தார். பிறகு முடிவு எடுக்கப்பட்டது. மதியம் 2—15—க்குச் சென்று நாங்களே இதை suspend செய்துகொள்கிறோம். தற்காலிகமாக அன்றைக்கு முடிவெடுத்ததை அங்கே தெரிவித்துவிட்டு வந்தார்கள். அதற்குப்பிறகு இன்றைக்கு இந்த bill இங்கே கொண்டுவரப்பட்டுள்ளது. தற்காலிகமாக நிறுத்துவது என்கிறபோது ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாக நீதிமன்றக் கட்டணங்கள் பத்து மடங்கு, இருபது மடங்கு முதல் பல மடங்கு உயர்த்துவது என்பது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்யும் வாய்ப்பினைத் தடை செய்யும். இது ஜனநாயக முறையிலிருந்து மக்களை வேறு வகைகளில் வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு முயற்சியில் ஈடுபட வைக்கும். சட்டம்—ஒழுங்கு அமைதி கெடும் என்று 1996—S.C. -வழக்கில் 345—வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த நீதிபதியினுடைய கருத்தில், இந்தக் கருத்து வருகிறது. ஆகவே உயர் நீதிமன்றத்திலே சொல்லப்பட்டதும், உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டதும் மட்டுமல்லாது, உச்ச நீதிமன்றத்திலே [illegible]னொரு

கருத்தையும் சொன்னார்கள். தெளிவாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இல்லை ஒன்றுமேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையில்லை. சட்டமுன்வடிவிலே என்ன கருத்து என்று சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** ஒரு நிமிடம். ஒன்றும் அதிகம் இல்லை. அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், 'The fees in Court cannot be equated to taxes. The Court has further held that the State cannot make the citizens and the litigant public contribute to the increase of public revenue.' இது tax ஆக இருக்கக் கூடாது. இது கட்டணமாக இருக்க வேண்டுமே தவிர, வரி வருவாயை உயர்த்துவதற்காக இதைப் பயன்படுத்துவது தவறு, இது கூடாது. ஏனென்றால், நீதிமன்றத்திற்கு வரக்கூடியவர்கள் ஏழையெளிய மக்கள். இங்கே மற்றைய உறுப்பினர்களெல்லாம் மற்றைய கருத்துகளை, எப்படி உயர்த்தப்பட்டது என்று சொன்னார்கள். ஹேபியஸ் கார்ப்பஸ் என்பது ஆளைக் கொணருகின்ற சட்டம். அது சாதாரணமாக ஏழையெளிய குடும்பங்களிலே, மற்ற இடங்களிலே நடக்கக்கூடியதாகும். ஹேபியஸ் கார்ப்பஸ் என்ற அந்த ரிட் மனுவிற்கு 2 ரூபாய்தானே கட்டணம் இருந்தது.

*பிற்பகல் 7—30*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Writ Petition Stamp duty 100 ரூபாய் (குறுக்கீடு) High Court-லே 100 ரூபாய் இருந்தது.

**திரு. இ. புகழேந்தி:** Writ Petition-னுக்கா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** Writ Petition-க்குத்தான். High Court-லே அதனுடைய charge 100 ரூபாய்தான்.

**திரு. இ. புகழேந்தி:** Writ Petition —ஆக வந்தாலும், இப்போது இருக்கின்ற நிலைமை?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இப்போது இருக்கிற நிலைமையும் அந்த 100 ரூபாய்தான் இருக்கிறது.

**திரு. இ. புகழேந்தி:** இப்போது இருக்கின்ற அந்த நிலைமையும் அதோடு சேர்ந்த Writ Petition-களிலே 100 ரூபாய், 500 ரூபாய் ஆகி இருக்கிறது. இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நான் அதிகமாகச் சொல்லவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, சட்டமுன்வடிவின் மீது சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இந்தக் கட்டண உயர்வுகள் என்பது (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் ஆண்ட அந்த 5 ஆண்டுகால ஆட்சியிலே (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். உங்களுடைய அரசாங்கத்திலிருந்து 5 தடவை தலைமை நீதிபதி அவர்களுக்கு இதை உயர்த்த வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். தலைமை நீதிபதி அவர்கள், இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உயர்த்த வேண்டுமென்று கேட்பதற்கான அந்தச் சூழ்நிலைகள் மட்டுமல்ல, நீங்கள் இன்றைக்கு உயர்த்தியிருக்கிறீர்களே பல மடங்கு, இவைகூட உயர் நீதிமன்றத்தைக் கலக்காமல் உயர்த்தப்பட்டு, வழக்கறிஞர்களையும் மற்றவர்களையும் கலக்காமல் உயர்த்தப்பட்டு இருக்கிறது. கலந்து, உயர்த்த வேண்டுமென்றுதான் கேட்டோம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** உயர் நீதிமன்றத்தைக் கலந்துகொள்வதற்காக கேட்டோம். (குறுக்கீடு) நான் கூறி முடித்துவிடுகிறேன். உயர் நீதிமன்றத்தைக் கலந்துகொள்வதற்காகத்தான் கேட்டோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் என்னுடைய பதிலில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, சட்டமுன்வடிவில் பேசுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** நான் சொல்லிவிடுகிறேன். உயர் நீதிமன்றத்தில் இவர்கள் எந்தவிதமான வகையிலேயும் அவர்களை கலந்துகொள்ளாமலும், Bar Association மற்றவர்களையும் கேட்காததால்தான் இந்த வினை வந்தது. ஆகவே இந்தச் சட்டத்தையே இவர்கள் தற்காலிகமாக (குறுக்கீடு)

[2002 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் கூறுகின்ற ஒரு கருத்து தவறு. உயர் நீதிமன்றத்தை சட்டரீதியாகக் கலந்து இதுகுறித்து அரசு ஆய வேண்டிய தேவையே இல்லை. This is the executive right. Executive power of the provincial Government under the Constitution.

**திரு. இ. புகழேந்தி:** Executive என்பது உயர் நீதிமன்றம்தான் என்று நீதிபதியே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்தானே அதைச் செய்ய வேண்டும். ஏன் எங்களைக் கேட்கவில்லை என்று உயர் நீதிமன்ற நீதிபதியே சொல்லி, அது பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. அதை நீங்கள் கோர்ட்டிலேயே சொல்லலாம். ஆனால் உயர் நீதிமன்றத்தை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அதைத்தான் சொல்லுகிறேன். This has been explained to the High Court in vivid by the Advocate General. Hon. Chief Justice has also agreed, that the High Court has no power to decide what quantum of tax should be levied and fees should be levied in this regard.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு கட்டணம் எவ்வளவு என்பதை நிர்ணயிக்கின்ற அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதை நிறைவேற்றக்கூடிய இடத்திலே அவர்கள் இருப்பதால்தான், அந்தக் கமிட்டி போட வேண்டுமென்று அவர்கள் பரிந்துரை பண்ணினார்கள். வழக்கறிஞர்களோ, அரசுத் துறை அலுவலர்களோ, அமைச்சர்களோ, மற்றவர்களோ, judge-களோ இருந்து அதில் முடிவெடுக்க வேண்டும். ஆகவே பொது மக்கள் பாதிக்காத வண்ணம், வழக்கறிஞர்கள் எந்தவகையிலும் பாதிக்காத அளவுக்கு நாட்டிலே நல்ல நீதி கிடைக்க வேண்டுமென்றால் முறையாக இருக்க [illegible], இந்தக் கட்டண உயர்வு அதிகம். இதை தற்காலிகமாக என்பதைவிட, திரும்பப் பெறுதல் என்பதே நியாயமான ஒன்று என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



2002 அக்டோபர் 31]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை suspend பண்ண வேண்டுமென்பதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற வாதத்தை நான் இங்கே வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன். இந்த நேரத்திலே இந்தச் சட்டத்தை திரும்ப வாபஸ் பெற வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன். அதற்கான சில விளக்கங்களைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், இல்லை, இதுவே போதுமே, இதுவே திருக்குறள் மாதிரி இருக்கிறதே. (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. அதற்கான காரணங்களை நாங்கள் சொல்ல வேண்டும் இல்லையா? ஒன்று, nowadays executive என்பது மக்களுடைய உரிமைகளின் மேலே கடுமையான தாக்குதல்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிற நேரம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அதை ஏற்றுக்கொள்வார்கள். இன்று காவல் துறை, பல்வேறு விஷயங்களிலே மக்களைத் தாக்கினால் அதை எதிர்த்துப்போக மக்களுக்கு இருக்கிற ஒரேயொரு பாதுகாப்பு, நீதிமன்றத்திற்குப் போவதுதான். நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு அவர்களுக்கு இருக்கிற அந்த வாய்ப்பு அடைக்கப்படக்கூடிய அளவில் executive இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைதான் இந்தக் கட்டண உயர்வு.

*பிற்பகல் 7—35*

இன்று பல்வேறு முறைகளில், அதாவது Criminal action மட்டுமல்ல, பல இடங்களில் சாலையோரங்களில் தங்கியிருக்கிற மக்களை பொதுப் பணித் துறையினர், வருவாய்த் துறையினர் வெளியேற்றுகிறார்கள். அந்த நேரத்திலே அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் — Munsif Court அல்லது District Court—க்குப் போய் தற்காலிக stay வாங்கி, தங்களைப் பாதுகாத்துக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நீதிமன்றத்திற்குப் போக வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைக்கு மக்கள் தள்ளிவிடப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதுதான் இந்தச் சட்டம். இந்தச் சட்டப்படி பல மடங்கு நீதிமன்றக் கட்டண உயர்வு ஏற்படுகிறது. இது மக்களைக் கடினமாகத் தாக்கும் என்பது என்னுடைய கருத்து. பல நேரங்களில் தமிழக அரசே அவசரம் அவசரமாக சில சட்டங்களை நிறைவேற்றுகிறது.

அது கோர்ட்டில் போய் struck down ஆகிறது. உதாரணமாக, ஒருவருக்கு ஒரு பதவிச் சட்டம். அந்தச் சட்டத்தைப்பற்றி நாங்கள் சொன்னோம். இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற நாங்கள் சொன்னோம். Retrospective effect-ல் போடாதீர்கள் என்று சொன்னோம். கேட்கவில்லை. நிறைவேற்றினீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை இதோடு முடியுங்கள். இது எல்லாம் வேண்டாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான சட்டம். மக்களைக் கடினமாகத் தாக்குகிற சட்டம். அதுசம்பந்தமாக கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதி தரவில்லை என்று சொன்னால், பின்னர் மக்களால் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே எதற்கு வர வேண்டும்? ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால், இதை Law Commission recommend செய்தது. ஆகவே, இங்கே கொண்டு வருகிறோம் என்று நீங்கள் சொன்னீர்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இதோடு பேசி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தொடர்பு இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, Statement of Objects and Reasons says that 'various Advocate Associations have represented for reconsideration of the enhancement of the Court fees' என்று சொல்லப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் பத்திரிகைகளில் வந்த செய்தி. உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, இந்தக் கட்டண உயர்வுக்கு, நீதிபதிகளுடைய செலவும் ஒரு காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுவது நியாயமல்ல. இது சரியல்ல. அப்படியென்றால் நாங்கள் வாபஸ் பண்ணுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர் சொன்னதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் உள்ளடக்கியிருக்கிற இந்தச் சட்டம் என்பதை வாபஸ் பண்ண வேண்டும். வாபஸ் பண்ணுவதற்கு அரசு முன்வரவில்லை என்றால், இது கடினமாக மக்களைத் தாக்குகிற ஒரு சட்டம் என்ற முறையில் இதை ஒரு Select Committee-க்காவது விட்டு பரிசீலித்ததற்குப் பிறகுதான் இதை அமல்படுத்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அவசரம் அவசரமாகக் கொண்டு வந்தது தவறு என்று தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு).

*பிற்பகல் 7—40*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையைக் கூறுவதற்கு முன்னால் ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசும்போது, சட்ட அமைச்சகம் சரியாகச் செயல்படுவதேயில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை அவையில் கூறியிருக்கின்றார்கள். அது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. அதோடு அவர் கூறியது, இந்த Ordinance—ஐப் பொறுத்தவரைக்கும் ஆளுநருக்கு withdrawing செய்வதற்குத்தான் Article 213(2)(B)—ல் அதிகாரம் இருக்கிறதேயொழிய சஸ்பெண்ட் பண்ணுவதற்கு அதிகாரம் இல்லையெனறு கூறினார். Withdrawing an Ordinance is an executive power of the Governor. Suspension of an ordinance is also an executive power of the Governor. But Governor has not exercised his executive power to suspend this மாறாக அவர் ஒரு Ordinance மூலமாக அதை suspend செய்திருக்கிறார். Ordinance சரியா, இல்லையா அல்லது ஏற்கலாமா, வேண்டாமா என்று முடிவு செய்கிற அதிகாரம் அவைக்கு எப்போதுமே சட்ட ரீதியாக இருக்கிறது. இதை நீதிமன்றத்திலேகூட ஒரு தீர்ப்பாகக் கூறியிருக்கிறார்கள். Sub Clause (b): Sub Clause gives the special power to the Governor to withdraw an ordinance. nodoubt by an Order, without having recourse to promulgate another repealing Ordinance." என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே சொல்லியிருப்பது " It does not however prevent him from formally repealing or amending one Ordinance by another Ordinance" என்று KABARAK Vs. The Province of Bihar என்ற வழக்கிலே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சட்ட ரீதியாக இந்த suspension Ordinance செல்லுபடியான ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறியது சட்டத்திற்குட்பட்டதல்ல, அது தவறானது என்பதை நான் கூறி, சட்டத் துறை இதில் சட்ட ரீதியாக, legal—ஆக சரியாகச் செயல்பட்டிருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் (குறுக்கீடு)

[2002 அக்டோபர் 31

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போதும், போதும். விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தடவையும் மாமன்றம் நடக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், தங்களுடைய தொகுதிக்கு, தங்களுடைய மாவட்டத்திற்கு புதிதாக நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும், நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் எல்லாம் கட்டித் தரப்பட வேண்டும் என்கின்ற கருத்து, ஒவ்வொரு தடவையும் இந்த மாமன்றத்தில் வலியுறுத்தப்படுகின்றது. எனவே அப்படிப்பட்ட செயல்களை நாம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்றால், நிதி தேவை. நிதி எப்படி வரும்? 46 வருடங்களாக இந்தக் கட்டணம் திருத்தியமைக்கப்படவில்லை. எனவேதான் திருத்தியமைக்கப்படாத இந்தச் சூழ்நிலையில், இந்தக் கட்டணம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலை ஏற்பட்டது. அதுவும் எப்போது ஏற்பட்டது என்றால், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள், 'பெரிய பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல' உண்மையை மறைத்துவிட்டுப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. அப்போது மாநிலச் சட்ட ஆணையம் ஜஸ்டிஸ் இஸ்மாயில் தலைமையிலே இயங்கியபோது, அந்தச் சட்ட ஆணையம் Bar Association Advocates மற்றும் Senior Advocates —க்கு எல்லாம் கடிதம் எழுதி, அவர்களுடைய கருத்தைப் பெற்றுதான், இந்தக் கட்டணத்தை அப்போது பரிந்துரை செய்தது, தேதிகூட—அன்றைக்கு ஏறக்குறைய—அதை வாசிக்கிறேன். அன்றைக்கு திரு. லூர்துசாமி அவர்கள் State Law Commission—உடைய Member Secretary-ஆக இருந்திருக்கிறார். "Tamil Nadu State Law Commission is presently reviewing the Tamil Nadu Court Fees and Suits Evaluation Act 1955. If the Members of the Bar wish to express any views on the different provisions of the above Act as well as the Court fee provisions in other special Statutes, they may do so either by sending their views in writing addressed to the undersigned or by coming in person to the Law Commission Office between 12 Noon and 4 PM from 12-7-1999 to 30-7-1999 on any working day." 1999 ஆம் ஆண்டு. எனவே அன்றைக்கு அவர்கள் வித்திட்ட அந்த விதையை தொடர் நடவடிக்கையாக, மாநிலத்தினுடைய நீதிமன்றங்களுக்கு நாம் அதிக நிதி, 170 கோடி ரூபாய் ஒவ்வொரு வருடமும்



2002 அக்டோபர் 31] [திரு. டி. ஜெயக்குமார்]

நாம் செலவு செய்கின்ற சூழ்நிலையிலே, இருக்கின்ற நிதிச் சூழலிலே, இதை revise செய்தால், ஒரு வலுவாக இருக்கும் என்கின்ற சூழ்நிலையிலே, அந்தக் கருத்து ஏற்கப்பட்டது. அதன் அடிப்படையில், பல்வேறு பிரச்சினைகளிலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், கடந்த காலத்திலே நிகழ்ந்த சம்பவங்களையெல்லாம் சொன்னார்கள். உடனடியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைவரையும் அழைத்துப் பேசினார்கள். ஒருமித்த கருத்து ஏற்பட்டது. ஏற்பட்டதன் அடிப்படையிலே, ஒரு குழு, அதாவது, நம்முடைய உள் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழுவிலே, நிதித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் மற்றும் Commissioner for Revenue Administration-Special Commissioner for Revenue Administration மற்றும் Registrar General, High Court, one senior advocate to be nominated by the Advocate General, High Court ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு உள் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட அந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இவர்கள் இயங்குவார்கள். இவர்கள், "To examine the question of revision of court fees to be prescribed after considering the various factors like increase in the cost of administration of justice, inflationary trends, rate of Court fees prevailing in the neighbouring States etc. and make necessary recommendations" பரிந்துரையின் அடிப்படையிலே, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத்தை நீங்கள் ஆதரித்து, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம்.

தீர்மானம் தோல்வியுற்றது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 21 மற்றும் இணைப்புப் பட்டியல் வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2002 அக்டோபர் 31] [திரு. டி. ஜெயக்குமார்]

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏஏ) தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/2002) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் அண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@31—10—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட, கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை சட்டமுன்வடிவின்மீது சில கருத்துகளை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சூழ்நிலை, விவசாயிகளினுடைய வாழ்க்கைத்தரம் மிகக் கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கக்கூடிய காலகட்டம். "உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மீதி இல்லை" என்ற நிலை நிலவிக்கொண்டிருக்கிறது. கடுமையான வறட்சி ஒரு பக்கம் இருக்கின்ற சூழ்நிலையிலே, பாசனத்திற்கு தண்ணீர் முழுமையாகக் கிடைக்காத சூழ்நிலை. அதேநேரத்திலே, எந்தப் பொருளை உற்பத்திச் செய்தாலும்கூட, உற்பத்திச் செய்கின்றவனே விலையை நிர்ணயிக்கக்கூடிய காலம். ஆனால் விவசாயி மட்டும், தான் உற்பத்திச் செய்யக்கூடிய தண்ணீர் விளைபொருளுக்கு, விலை நிர்ணயிக்க முடியாமல் அல்லல்படுகிற சூழ்நிலை. உற்பத்திச் செலவைக் கணக்கிலே கொண்டு பார்த்தால், அவனுக்கு, அடக்கமான விலை, கட்டுப்படியான விலை கிடைக்காத காலகட்டம். இப்படி ஒரு பக்கம் இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, கூடுதல் வரி என்று சொல்லி, பாசன வரியை, தண்ணீர்த்தீர்வை வரியைக் கூடுதலாக்குவோம் என்று சொன்னால், விவசாயி மேலும் மேலும் கடனாளியாக ஆகக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இப்படி விவசாயிகளின்மீது திணிக்கக்கூடிய இந்த வரிச் சுமையினால் அவன் விவசாயத்தை விட்டே ஓடக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவான். நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாத் துறைகளிலேயும் இருக்கக்கூடியவர்களுக்குச் சலுகைகள் இருக்கின்றன. ஆனால் விவசாயிக்குச் சலுகையே இல்லாத ஓர் அவல நிலை இருக்கின்ற காலகட்டத்திலே, இந்தக் கூடுதல் வரி என்பது, தண்ணீர்த் தீர்வை கூடுதலாக்கப்படுவது என்பது, தேவையில்லாத ஒரு சட்டம். ஆகவே இந்தச் சட்டத்தை விவசாயிகளினுடைய நலனைக் கருதி, விவசாயிகள் நமக்கெல்லாம் உணவு அளிக்கக்கூடியவர்கள் என்ற காரணத்தினாலே, விவசாயிகள் நாளடைவிலே தொடர்ந்து நலிவடைந்து இருக்கின்ற காரணத்தினாலே—அதிலும் குறிப்பாக, கரும்புக்குச் சொல்லப்பட்டிருக்கிறது இந்தச் சட்டமுன்வடிவிலே; நெல், கரும்பு போன்ற





பயிர்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கரும்பு விவசாயிகளினுடைய நிலை என்ன? ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி, இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை. கரும்பு விவசாயி, நெல் பயிரிடக்கூடியவன், எல்லா விளைபொருள்களையும் உற்பத்திச் செய்யக்கூடியவன், கடனாளியாக இருக்கின்ற காரணத்தினாலே— விவசாயிகளினுடைய நலனிலே அக்கறை கொண்டு, நம்முடைய அரசு, இந்தச் சட்டமுன்வடிவை, திரும்பப் பெற வேண்டும், திரும்பப் பெற வேண்டும், இது ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற, தண்ணீர்த் தீர்வையை அதிகப்படுத்துகின்ற சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கின்றோம். ஏற்கெனவே விவசாயிகளினுடைய நிலைமை எந்த அளவுக்கு இப்போது இருக்கிறது என்பது தெரியும். இந்த நிகழ்வு 'வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதைப் போல' இருக்கிறது. விவசாயிகள் ஏற்கெனவே இருக்கின்ற வரிகளை இரத்து செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், தண்ணீர்த் தீர்வையை அதிகப்படுத்துவது என்பது இன்றைக்கு விவசாயிகளை மிகவும் பாதிக்கக்கூடிய செயல் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விவசாயிகளை, விவசாயம் செய்யும் தொழிலிலிருந்து விரட்டுவதுபோல இருக்கிறது. எம்.ஜி.ஆர். பெயரைச் சொல்கிற இந்த ஆட்சி நம்முடைய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட, 'காடு வெளஞ்சென்ன மச்சான், நம்ம கையும் காலும்தானே மிச்சம்' என்று பாடியிருக்கிறார்கள். அப்படிப் பாடியவர்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய இந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு இதுபோன்ற வரி என்பது இன்றைக்கு மேலும் சுமையை ஏற்றக்கூடியதாக இருக்கிறது. எனவே இந்த அரசு இந்தச் சட்டமுன்வடிவை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

*பிற்பகல் 7—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2002 அக்டோபர் 31

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது வறட்சி பல மாவட்டங்களிலே நிலவிக் கொண்டிருப்பதை நாடு அறியும். நீங்களேகூட வறட்சி நிதியை மத்திய அரசிடம் கேட்டு, குழு எல்லாம் வந்து பார்வையிட்டுப்போய் இன்னும் பணம் வந்து சேர்ந்தபாடில்லை. இப்போது இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் கால்வாயிலே தண்ணீரே கிடையாது. தண்ணீரே இல்லாமல் பயிரே விளையாமல் இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம்—ஏற்கெனவே வரியை நீங்கள் இரத்து செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு சில சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதை விட்டுவிட்டு நன்செய் நிலம் ஏற்கெனவே 70 ரூபாய் என்பதை ரூ.175 என்று மாற்றுகிறோம்; அதே புன்செய் நிலத்தில் 60 ரூபாய் ஒரு ஏக்கருக்கு என்று இருப்பதை ஒரு ஹெக்டேருக்கு 50 ரூபாய் என்று அதிகரிக்கிறோம் என்று நீங்கள் போட்டிருப்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது— இந்த நேரத்தில் விவசாயிகள் கரத்தை வலுப்படுத்துவதற்கு, உதவி செய்வதற்குத்தான் நீங்கள் முன்வர வேண்டுமேயொழிய, உபத்திரவம் செய்யாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்பதுதான் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய கருத்தாக நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார், நெல் கரும்பு என்று. கரும்புக்கு இப்போது support price கூட இந்த அரசு இன்னும் கொடுக்காமல் இருக்கிறது. டன்னுக்கு வெறும் 722 ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு விவசாயிகள் பாவம் இன்றைக்கு செத்து சுண்ணாம்பாக மடிந்துகொண்டிருக்கிறார்கள். அதுபோல நெல்லுக்கு கொள்முதலே இல்லை என்று சொல்லிவிட்டதால் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், தண்ணீரே இல்லாத இடத்திற்கு தண்ணீருக்கு வரி என்று போட்டு அவன் உயிரை எடுப்பதைவிட தயவுசெய்து இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்குங்கள் என்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரே இல்லாத நேரத்தில் தண்ணீருக்கு ஒரு வரி போடுவது என்பது ஓர் தவறாகத் தெரிகிறது. ஆகவே அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.



2002 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதே கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். இந்தச் சட்டத்தை அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வைச் சட்டம் பிரிவு 5—ன்கீழ் இன்றையதினம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தத்திலே, ஏற்கெனவே முதலாவது திருத்தத்திலே நன்செய் பயிர் என்பதற்கு நெல், கரும்பு, வெற்றிலை, வாழை, மஞ்சள், கருணைக்கிழங்கு, பாக்கு, எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை ஆகிய பயிர் வகைகளையும் முறைப்படி நீர்ப்பாசனம் செய்யப்படுகிற பிறவகைப் பயிர் எத்தனை உள்ளடங்குமோ, அத்தனையையும் இந்தத் திருத்தத்திலே கொண்டுவந்திருக்கிறோம். அடுத்தபடியாக பிரிவு 1—ன் கீழாக முதலாம் அல்லது இரண்டாம் வகையான நீர்ப்பாசன வரியை ஏற்றியிருப்பதாக இங்கே கூறினீர்கள். 1963—லே Land under first and second class source of irrigation, Land under third and fourth and fifth class of irrigation என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. 8—லிருந்து 12 மாதங்கள் எங்கேயெல்லாம் வாய்க்கால் பாய்கிறதோ அல்லது 5—லிருந்து 8 மாத காலத்திற்குள்ளாக எங்கேயெல்லாம் வாய்க்கால் பாய்கிறதோ, அந்த இடத்தில் மட்டும்தான் இந்த வரியை ஏற்றியிருக்கிறோம். குறிப்பாக, 3, 4 ,5 ஆகிய இடங்களிலே இந்த வரியை ஏற்றவில்லை. குறிப்பாக இந்த வரியை இந்த இரண்டு பகுதிகளுக்குத்தான் ஏற்றியிருக்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/2002) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

*பிற்பகல் 7—55*

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன் படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2002 மீதான ஆய்வுக் குழுவின் காலவரையினை நீட்டித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். ஆய்வுக் குழுவின் காலவரையினை மேலும் 6 மாதத்திற்கு நீட்டிப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 156 உள் விதி (1)—ஐ தளர்த்தி, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் (விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனை தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2002) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினை பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையினை மேலும் ஆறு மாதத்திற்கு இப்பேரவை நீட்டிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) ஓய்வுபெறும் சட்டமன்றப் பேரவை அலுவலர்களுக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்செயலகத்தில் 32 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய இணைச் செயலாளர் திரு. சா. கணேசன் அவர்கள் இன்று (31—10—2002) பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இச்செயலகத்தில் 34 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய குழு அலுவலர் திருமதி வீ.நா. உமா அவர்களும் இன்று (31—10—2002) பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெறுகிறார். அவருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு வேண்டுகோள்.



2002 அக்டோபர் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்தப் பேரவை கூட்டத்தினுடைய கடைசி நேரத்திற்கு நாம் வந்திருக்கின்றோம். இந்த நேரத்திலே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு வேண்டுகோள் அரசுக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் போராட்டத்திலே இருந்து கொண்டிருக்கிற...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சி காலையிலேயிருந்து வெளியே போகாமல் உள்ளேயே இருந்ததற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுபோல் என்றும் வாழ்க என்று தெரிவித்துக்கொண்டு, அனைவருக்கும் வாழ்த்துகளைக் கூறிக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை 7—57 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

[2002 அக்டோபர் 31

# 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

63. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 27—6—2002 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

64. எச்.டி.ப்பி.இ. (H.D.P.E.) மற்றும் பாலிதீன் நெசவுச் சாக்குகள் (PP Woven sacks) உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் கொண்டு வரப்படும் நிலையில் அவற்றிற்கு 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதற்கான வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் நான்கு சதவீதம் என்ற வீதத்தில் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிப்பது குறித்தும், யாதொரு பணிதொடர்பாக பயன்படுத்துவதற்கு அல்லது உபயோகிப்பதற்காக, ஆனால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் ஏனைய மாநிலங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுபவையாக இருக்கும் யாதொரு உள்ளூர் பகுதிக்கு அலுமினியம் சோடா ஆஷ் (Soda ash) ஆகியவற்றைக் கொண்டுவரும் யாதொரு நபர், மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் விலக்களிப்பது குறித்தும் மற்றும் மறு விற்பனைக்கு அல்லது விற்பனைக்குரிய ஏனைய பொருட்களை உற்பத்தி செய்வதில் பயன்படுத்த அல்லது உபயோகிக்க அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை, இறக்குமதி செய்வதைப் பொறுத்தமட்டில், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கீழ் வணிகராக பதிவு பெற்றுள்ள யாதொரு இறக்குமதியாளர், மூன்று சதவீதத்துக்கு மேல் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் விலக்களிப்பது குறித்தும் வணிகவரிகள் துறையின் 1—7—2002 ஆம் நாளிட்ட 81 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களைக் கொண்டு வருவதற்கான வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)



2002 அக்டோபர் 31]

65. விண்ணப்பதாரர் ஒருவர் நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பிடம், நான்காம் பிரிவின் நோக்கத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான தேதியினை 31—10—2002 அல்லது அதற்கு முன்னர் என குறிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 30—9—2002 ஆம் நாளிட்ட 119 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/2002) 15(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

66. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நிதித் துறையின் 23—3—2002 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

67. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மைச் சட்டத்தின் 16—வது பிரிவின்கீழ் காவல் துறையின் சீருடைத் துணி கொள்முதலுக்காக நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்—ஐ அறிவிப்பது குறித்து நிதித் துறையின் 17—5—2002 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

68. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நிதித் துறையின் 13—8—2002 ஆம் நாளிட்ட 286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் ஒளிவு—மறைவு இன்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

69. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 21—8—2002 ஆம் நாளிட்ட 185 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச்

சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

70. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 17—7—2002 ஆம் நாளிட்ட 618 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

71. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் துறையின் 25—7—2002 ஆம் நாளிட்ட 648 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

72. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், சில வணிகர்கள் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 26—4—2002 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

73. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகள் இயற்றியது குறித்து வணிக வரிகள் துறையின் 27—6—2002 ஆம் நாளிட்ட 76 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

74. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும், 27—3—2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் 1(1)/வவ/18(பி—19)/2002 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்தும் மற்றும் ஆண்டொன்றுக்கு குருணை உட்பட அரிசியின் மொத்த வியாபாரத் தொகை ரூபாய் இரண்டு கோடிக்கு மேற்படுகின்ற யாதொரு வணிகரும், குருணை உட்பட அரிசியின் விற்பனைமீது, 1959



ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய வரி வீதத்தை, இரண்டு சதவீதமாக குறைப்பது குறித்தும் வணிக வரிகள் துறையின் 13—8—2002 ஆம் நாளிட்ட 97 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

75. 2000—2001 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

76. 2001—2002 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

77. தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 2000—2001 ஆம் ஆண்டின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1996) 89(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

78. தமிழ்நாடு அரசின் 2001—2002 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

79. தமிழ்நாடு அரசின் 2001—2002 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள். (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

80. சென்னையில் 12—8—2001 அன்று தி.மு.க. கட்சியினரால் நடத்தப்பட்ட ஊர்வலத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் மற்றும் அந்தச் சம்பவங்களின்போது ஊர்வலத்தினர் மீது காவல் துறையினர் பலப்பிரயோகத்தைப் பயன்படுத்தியது குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட, நீதியரசர் திரு. கே.எஸ். பக்தவத்சலம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

81. 28—9—2001 ஆம் நாளன்று சென்னை, பூக்கடை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்திலிருந்து திரும்பி வந்தவுடன் தீக்குளித்த, மாரியம்மாள் என்கிற திருமதி சின்னபாப்பாவின் மகள் செல்வி கௌரி என்பவரின் இறப்பு குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட, திரு. கே. சுப்பிரமணியன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

82. 6—8—2001 ஆம் நாளன்று இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், ஏர்வாடி கிராமத்தைச் சேர்ந்த ஏர்வாடி தர்காவில் உள்ள ஒரு தனியார் மனநலக் காப்பகமான பாதுஷா மனநலக் காப்பகத்தில் தீ விபத்து ஏற்பட்டதற்கான சூழ்நிலைகள் குறித்தும் அதற்குப் பொறுப்பான நபர்கள் குறித்தும் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட, திரு. என். ராமதாஸ், விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினான்காவது அறிக்கை. (2001—2003)

48. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினைந்தாவது அறிக்கை. (2001—2003)

49. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினாறாவது அறிக்கை. (2001—2003)

50. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினேழாவது அறிக்கை. (2001—2003)

51. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினெட்டாவது அறிக்கை. (2001—2003)





52. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பத்தொன்பதாவது அறிக்கை. (2001—2003)

53. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2001—2003)

54. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை. (2002—2003)

55. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை. (2002—2003)

56. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஐந்தாவது அறிக்கை. (2002—2003)

57. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஆறாவது அறிக்கை. (2002—2003)

58. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஏழாவது அறிக்கை. (2002—2003)

59. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி எட்டாவது அறிக்கை. (2002—2003)

60. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தி ஒன்பதாவது அறிக்கை. (2002—2003)

61. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது அறிக்கை (2001—2003)

62. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை (2001—2003)

63. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை (2001—2003)

64. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை (2001—2003)

65. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை (2001—2003)

66. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை (2001—2003)

67. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

68. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

69. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55—ன்கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின்மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் (வரிசை எண்கள் 1 முதல் 4 வரை)

D V 24,5,102 802.37,1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 225508 சென்னை-600 008